படிவம்

தமிழ்நாடு சட்டப் பேரவை

நடவடிக்கைக் குறிப்புகள்

தொகுதி 86 (எண் 2), நாள்: 5–5–2010

பிழைத் திருத்தச் சீட்டு

வரிசை எண்	பக்க எண்	பிழை	திருத்தம்
1.	*579* *2-வது வரி*	*(413 ஆம்*	*(412 ஆம்*
2.	*400*	*அடிக்குறிப்பு விடுபட்டுள்ளது*	*அடிக்குறிப்பு :* *** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

11-288

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

5–5–2010

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. **தகவல் கோரல்—**

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது — 395-400

திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 396

திரு. ஓ. பன்னீர்செல்வம் — 398-399

*மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி — 400

(ஆ) வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது — 397

திரு. சி. ஞானசேகரன் — 397

2. **மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

— 400-455

மாண்புமிகு திரு. உ. மதிவாணன் — 401-417,444-446

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி — 417-425,446-448

*மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி — 425-434,453

பக்கங்கள்

2. மானியக் கோரிக்கைகள், 2010-2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

—தொடர்ச்சி

திரு. டி. ஜெயக்குமார் 435

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 436

திரு. வே. செந்தில் பாலாஜி 437

*திருமதி டி. யசோதா 437-438

திரு. சி. ஞானசேகரன் 438-439

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 440

திரு. ஜி.கே. மணி 440-441

திரு. தி. வேல்முருகன் 441-442

செல்வி கே. பாலபாரதி 442-443

திரு. வை. சிவபுண்ணியம் 443-444

திரு. ஓ. பன்னீர்செல்வம் 448-451

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி 451

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி 451-452

	பக்கங்கள்
2. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி	
(ஈ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	455-576
மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்	455, 480-481, 541-572, 574-575
*திரு. சி. துரைராஜ்	481-489
திரு. இ.ஏ.பி. சிவாஜி	489-495
திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்	495-502
திரு. கோ. எதிரொலி மணியன்	460, 503-509
*திரு. ஞா. ஜாண் ஜோசப்	463, 510-514
திரு. சு. குணசேகரன்	471-472 515-519, 520
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	519-520
திரு. ரா. வரதராஜன்	476, 520-524
*திரு. எஸ். ராஜகுமார்	477-478, 524-531
திரு. ஆர். சிவானந்தம்	531-534
*திரு. செ. பொன்னுதுரை	475,535-541
திரு. ஓ. பன்னீர்செல்வம்	552, 553, 555, 573-574
*மாண்புமிகு திரு. துரைமுருகன்	558-559
3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	576-577

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 22

2010 மே 5, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

[குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

[2010 மே 5

திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சாலை சம்பந்தமாக பதில் சொல்ல சம்பந்தப்பட்ட அமைச்சர் யாரும் அவையில் இல்லை. (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *இங்கு பதில் சொல்ல அமைச்சர்கள் யாரும் இல்லை என்று சொன்னீர்கள். அப்படியென்றால் zero hour முடிந்த பிறகு, அமைச்சருடைய பதிலுரைக்குப் பின்பு எடுக்க வாய்ப்பிருக்கிறதா? இதனை நீங்கள் consider செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு matter-க்குப் போய்விட்டால் எடுக்க முடியாது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: வேறு matter-க்குப் போய்விட்டால் எடுக்க முடியாது என்று சொன்னால் எப்படி? நாங்கள் mention பண்ணிவிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Mention பண்ண வேண்டுமென்றால் mention பண்ணுங்கள். இப்போது நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் நேற்றைக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து என்னுடைய முடிவை நான் சொல்லிவிடுகிறேன்.

கோவையில் உள்ள கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. துணைத் தலைவர் மற்றும் திரு. கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் உறுப்பினர்கள், அதேபோல்

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அதோடு நான் நேற்றைய தினம் கோரியவாறு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் நீதிமன்ற இடைக்கால ஆணையின் நகல் ஒன்றையும் எனக்கு அளித்துள்ளார். பேரவை விதி *56* மற்றும் *65* (xi)—ன்படி நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் ஒத்திவைப்புத் தீர்மானம் இருத்தல் கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அதேபோல், பேரவை விதி *92* (i)—ன்படி, நீதி விசாரணையில் உள்ள எப்பொருள் மீதும் தம் கருத்தினைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாதெனத் தெளிவாக உள்ளது. எனவே, இப்பொருள் இன்னும் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் உள்ளதால் இப்பொருள்பற்றிப் பேரவையில் விவாதிக்க முடியாது என்று எனது முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்தவர்கள், பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இதுகுறித்துத் தெரியும். (குறுக்கீடுகள்) சட்டப் பேரவை விதி 65–இன்படி, ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவுமே நீதிமன்றத்தில் இருப்பது குறித்து எடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதேமாதிரி, விதி 92–இன்கீழ் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எந்தப் பிரச்சினையையும் எழுப்பக் கூடாது; பேசக் கூடாது என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் விதியை மீறி அதை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(ஆ) வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது அங்கே விஷ வாயு தாக்கி 5 பேர் 3 நாட்களுக்கு முன்னாலே இறந்துவிட்டார்கள். அவர்கள் மாண்டது குறித்து ஏற்பட்டிருக்கக்கூடிய சாலை மறியல், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலை குறித்து நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வரோ, துணை முதல்வரோ மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சரோ இல்லாததனால், இதுசம்பந்தமாக நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Mention பண்ணுங்கள்; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளர், திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் முறைப்படி இயங்கி வந்திருந்தது. **

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர்நீதிமன்றத்தில் இல்லை. நான் order-ஐயே பார்த்துவிட்டேன். Please don't give false information. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முடித்துக்கொள்கிறேன் நான். முடித்துக்கொள்கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நான் சொல்கிறேன் கேளுங்கள். Case-இன் facts உள்ளே போகாமல் . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: போகவில்லை. போகவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். ** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 மே 5]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நாங்கள் அந்த சங்கக் கட்டடத்தில் முறையாகச் செயல்பட வேண்டும். எங்களுக்கு உரிய பாதுகாப்பு தரவேண்டுமென்று அவர்கள் முறையீடு செய்தார்கள். மாவட்ட, மாநகரக் காவல் துறையும் ஒரு நாள் அவகாசம் கொடுங்கள்; உரிய நடவடிக்கைக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். இந்த நிலையில், மே 1 ஆம் தேதி திருப்பூர் துரைசாமியும், அவர்களுடைய கட்சியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட நிருவாகிகளும், அலுவலகத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது திருப்பூர் துரைசாமி அவர்களையும், அவரோடு சேர்ந்த 500 பேர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அதாவது, மாவட்டக் காவல் துறையிடம், "தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது; எங்களுக்கு முறையாக நீங்கள் பாதுகாப்பு தரவேண்டும்" என்று போன அவர்களையே காவல் துறை கைது செய்திருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொழிற்சங்கங்களையும், தொழிலாளர்களையும் அவர்களுடைய அடிப்படையையே சம்மட்டி கொண்டு அடிக்கின்ற செயலாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, காவல் துறை முறையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள். திரு. O.P.S., நான் சொல்கிறேன், கேளுங்கள். காவல் துறை எடுத்த நடவடிக்கைகள் குறித்து கூறியது மாத்திரம்தான் அவைக்குறிப்பில் இருக்கும். நீங்கள் சொன்ன மற்றவை அவைக்குறிப்பில் ஏறாது; நீக்கப்படுகிறது. காவல் துறை நடவடிக்கையைப் பற்றிக் கூறினீர்கள் அல்லவா? அது மட்டும் அவைக்குறிப்பில் இருக்கும். அதற்கு முன்னாலே வழக்கு சம்பந்தமாக மற்றும் மற்ற விஷயங்கள் பற்றி நீங்கள் பேசியவை அவைக்குறிப்பில் இருக்காது; நீக்கப்படுகிறது; சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை தன் கையில் வைத்திருக்கின்ற இந்த அரசு, முறையாக காவல் துறையினருக்கு அறிவுரையையும், ஆலோசனையையும் வழங்கி, தீர்ப்பு யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுடைய தொழிற்சங்கமான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் இருக்கின்றவரிடம் சங்கக் கட்டடத்தையும், நிருவாகத்தையும் ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சபையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒருவர் சொல்லிவிட்டார். உங்கள் சார்பாகத்தான் அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 9–40

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கைப் பற்றி அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஓர் உண்மை நிலையை மட்டும் சபையிலே உள்ளவர்களுக்கு விளங்க வைக்க விரும்புகின்றேன். ** . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அந்த issue-வை நாம் இப்போது எடுக்கவில்லை. அதாவது, காவல் துறையினுடைய அத்துமீறல் என்று அவர் சொல்கிறார். அது மாத்திரம்தான் அவைக்குறிப்பிலே இருக்கும். மற்றவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவர் சொன்னதும் நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் நீக்கப்படுகிறது. காவல் துறையின் அத்துமீறல் என்பது மாத்திரம் அவைக் குறிப்பில் இருக்கும். அடுத்த அலுவல் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். *4–5–2010*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 மே 5] [பேரவைத் தலைவர்]

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அதோடு நான் நேற்றைய தினம் கோரியவாறு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் நீதிமன்ற இடைக்கால ஆணையின் நகல் ஒன்றையும் எனக்கு அளித்துள்ளார். பேரவை விதி *56* மற்றும் *65* (xi)—ன்படி நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் ஒத்திவைப்புத் தீர்மானம் இருத்தல் கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அதேபோல், பேரவை விதி *92* (i)—ன்படி, நீதி விசாரணையில் உள்ள எப்பொருள் மீதும் தம் கருத்தினைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாதெனத் தெளிவாக உள்ளது. எனவே, இப்பொருள் இன்னும் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் உள்ளதால் இப்பொருள்பற்றிப் பேரவையில் விவாதிக்க முடியாது என்று எனது முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்தவர்கள், பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இதுகுறித்துத் தெரியும். (குறுக்கீடுகள்) சட்டப் பேரவை விதி *65*—இன்படி, ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவுமே நீதிமன்றத்தில் இருப்பது குறித்து எடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதேமாதிரி, விதி *92*—இன்கீழ் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எந்தப் பிரச்சினையையும் எழுப்பக் கூடாது; பேசக் கூடாது என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் விதியை மீறி அதை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(ஆ) வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது அங்கே விஷ வாயு தாக்கி *5* பேர் *3* நாட்களுக்கு முன்னாலே இறந்துவிட்டார்கள். அவர்கள் மாண்டது குறித்து ஏற்பட்டிருக்கக்கூடிய சாலை மறியல், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலை குறித்து நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வரோ, துணை முதல்வரோ மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சரோ இல்லாததனால், இதுசம்பந்தமாக நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Mention பண்ணுங்கள்; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளர், திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் முறைப்படி இயங்கி வந்திருந்தது. **

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர்நீதிமன்றத்தில் இல்லை. நான் order-ஐயே பார்த்துவிட்டேன். Please don't give false information. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முடித்துக்கொள்கிறேன் நான். முடித்துக்கொள்கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நான் சொல்கிறேன் கேளுங்கள். Case-இன் facts உள்ளே போகாமல் . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: போகவில்லை. போகவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். ** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2010 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒருவர் சொல்லிவிட்டார். உங்கள் சார்பாகத்தான் அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 9–40

* **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கைப் பற்றி அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஓர் உண்மை நிலையை மட்டும் சபையிலே உள்ளவர்களுக்கு விளங்க வைக்க விரும்புகின்றேன். ** . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அந்த issue-வை நாம் இப்போது எடுக்கவில்லை. அதாவது, காவல் துறையினுடைய அத்துமீறல் என்று அவர் சொல்கிறார். அது மாத்திரம்தான் அவைக்குறிப்பிலே இருக்கும். மற்றவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவர் சொன்னதும் நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் நீக்கப்படுகிறது. காவல் துறையின் அத்துமீறல் என்பது மாத்திரம் அவைக் குறிப்பில் இருக்கும். அடுத்த அலுவல் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். *4–5–2010*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை), மானியக் கோரிக்கை எண் 7–மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் ஒரு கற்றறிந்த வழக்கறிஞர். உங்களுடைய அனுபவ முதிர்ச்சியால் இன்றைக்கு அவையை அலங்கரிக்கிற நேரத்தில், ஒரு நல்ல நீதியரசரைப்போல் பணியாற்றக்கூடிய உங்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று சொன்ன வள்ளலார், "அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க" என்று சொன்னார். தலைவர் கலைஞர் போன்றவர்கள் இந்த நாட்டை ஆளுவார்கள் என்ற எண்ணத்தில்தான் வள்ளலாரே, "அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க" என்று சொன்னார்.

நேன்றையதினம் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்—தந்தை பெரியாரினுடைய கொள்கையை திராவிட நாட்டிலே பரவச் செய்வதற்கு ஏற்பட்ட சிரமங்களையெல்லாம் பார்த்த தலைவர் கலைஞர் அவர்கள்தான்—டெல்லிப் பட்டணத்திற்குச் சென்று தந்தை பெரியாருடைய கொள்கையை மையம் கொள்ளச் செய்திருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே,

திருக்குவளை தந்த திருமுகமே,
தெவிட்டாத தமிழ்ப் பேசும் எங்கள் இனமுகமே,

நீங்கள் அவைக்கு வரும்போது

புது மண மாப்பிள்ளையின் குதூகுல வேகம்

"ஐயா, ஐயா" என அண்ணன் சண்முகநாதன் ஒருபுறம்;

ஆடை சரி செய்து அழகுபடுத்தி அமர வைக்க அன்புத் தம்பி நித்தியா மற்றொருபுறம்;

நீங்கள் அவைக்கு வரும்போது புதுமண மாப்பிள்ளையின் குதூகுல வேகம்;

"ஐயா, ஐயா" என அண்ணன் சண்முகநாதன் ஒருபுறம்;

ஆடை சரி செய்து அழகுபடுத்தி அமர வைக்க அன்புத் தம்பி நித்தியா மற்றொருபுறம்.

மரபுக்கும், மாண்பிற்கும் மரியாதை செலுத்தும் தலைவர் கலைஞர் அவர்களே, மாண்புமிகு அவைத் தலைவர் அவைக்கு வருகிற நேரத்தில், உங்களால் எழ முடியாவிட்டாலும் எழ வேண்டுமென்ற எண்ணத்தோடு எழ உந்துவது, எங்கள் உள்ளத்தை உலுக்கி எடுக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒலி பெருக்கியைக் கரம் பிடித்தால், வாளெடுத்துப் போருக்குப் புறப்படுதல்போலன்றோ!

எமக்காக—தலைவர் கலைஞர் அவர்களே, எமக்காக சுமந்த சுமை, ஏசு பிரான் ஜெருசலம் நகர் தெருவில் சிலுவையைச் சுமந்ததற்கு ஒப்பாகும்.

தலைவர் அவர்களே, எமக்காக நீங்கள் சுமந்த சுமை, ஏசுபிரான் ஜெருசலம் நகர் தெருவில் சிலுவையைச் சுமந்ததற்கு ஒப்பாகும்.

நீங்கள் நடந்த வீர நடை, மா.சே. துங்கின் நீண்ட நெடிய பயணத்திற்கு ஒப்பாகும். நீங்கள் எழுப்பிய கூக்குரல், எம் இன எதிரிகளின் சிரத்தினைத் தொடும். ஆக்கிய சட்டங்கள்தான் எங்களுக்கு அரசியல் சாசனம். நீங்கள் ஆற்றிய உரைகள்தான் எங்களுக்குப் புதுப் புறநானூறு,

நீங்கள் ஏற்றிய கொடிகள், இந்த நாட்டில் பல நானூறு;

நீங்கள் தாங்கிய இடிகள்தான், தமிழரின் தல வரலாறு;

உமது உழைப்பு, ஆழ உழும் கலப்பையின் கூர் முனைக்கு ஒப்பாகும்.

முற்பகல் 9–45

பெற்றோரை தினம் வணங்கிப் புறப்படும் பண்பாளன் நீ;
பெற்றோரோ, இளஞ்சிங்கம் உழைப்பதற்குப் புறப்பட்டது என்பார்கள்.

அதனால்தான் உழைக்கின்றாய் இன்றும் இளைஞனாய் நீ.

ஐயா! பெரியாரின் அறிவொளியே! பேரறிஞர் அண்ணாவின் இளந்தளிரே!

ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திட வேண்டும் நீ.
ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திட வேண்டும் நீ;
அது ஒன்றும் பெரிதல்ல;
மருந்து தந்த சித்தர்களே வாழ்ந்தார்கள் பல்லாண்டு;
இலவச மருத்துவம் தந்த நீ, வாழ்ந்திடல் வேண்டும் ஐயா!

வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கு வணக்கம்.
அண்ணாவின் வழி நின்று, ஐயா பெரியாரின் கொள்கை கொண்டு,
களம் காணும் தமிழ் அறிவே, எங்கள் இனமானப் பேரொளியே.
பேராசிரியர் அவர்களே, உங்களுக்கு மட்டிலும்தான் இரண்டு முதல்வர்.
உங்களுக்கு மட்டிலும்தான் இரண்டு முதல்வர்;
அண்ணா வழியில் தொடர்ந்து பணியாற்றும் தலைவர் கலைஞர் ஒரு முதல்வர்.
இனியும் பணியாற்ற இன்னொரு முதல்வர் துணை முதல்வர்.
உங்களுக்கு மட்டிலும்தான் இரண்டு முதல்வர்;
அண்ணா வழியில் தொடர்ந்து பணியாற்றும் தலைவர் கலைஞர் ஒரு முதல்வர்;
இனியும் பணியாற்ற இன்னொரு முதல்வர் துணை முதல்வர்.
அவையினிலே நீங்கள்தான் அகவை மூப்பு.
அவையினிலே நீங்கள்தான் அகவை மூப்பு;
அதுதானே எங்களுக்கு அரிய வாய்ப்பு.

நிதிநிலை அறிக்கையிலே உங்கள் பேச்சு;
நிதிநிலை அறிக்கையிலே உங்கள் பேச்சு;
தமிழன் வீர விளையாட்டாம் சிலம்பத்தின் படைவீச்சு.
தலைவர்கள் என்றோ ஒரு நாள்தான் கலந்துரையாடுவார்கள்;
இங்கேதான் நம் குலத் தலைவர் உங்களோடு கொள்கைக் குடையில் எப்போதும்.
கொடுத்து வைத்தவர்கள் நாங்கள்;
வணங்குகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களே,
அழகு முகம், சிவப்பு மேனி, எளிய நடை, வீரத் தடந்தோள், வெற்றியின் வேங்கை நீ.
ஏழைத் தமிழனின் இணையிலா புன்சிரிப்பு;
ஏங்கிடும் மக்களுக்கு நீதானே அரிய வாய்ப்பு.
போற்றுகின்ற போதும், தூற்றுகின்ற போதும் தன்னிலை மாறாத தளபதி நீ;
நீ ஒரு ஸ்திரப்பிரஞ்சன்.
அவமானத்தைத் தரும் அபத்த வர்ணாசிரமத்தை அடக்கிய கலைஞரின் அற்புதப் புதல்வன் நீ; அனைவருக்கும் நல்லவன் நீ.
அவமானத்தைத் தரும் அபத்த வர்ணாசிரமத்தை அடக்கிய கலைஞரின் அற்புதப் புதல்வன் நீ; அனைவருக்கும் நல்லவன் நீ;
எமை ஆளப் பிறந்தவன் நீ.
உமக்கொரு ஒப்பீடு என்று சொன்னால்,
அது ஓய்வறியா உழைப்பு.
தாங்கள், ஸ்டாலின் என்றால்
உழைப்பு என்று பொருள் போலும் உங்கள் அகராதியில்.
அணி திரட்டும் ஆற்றல்,
அரவணைத்துப் போகும் நல்ல குணம்.
உரையாற்றும் போதும், பணியாற்றும் போதும்
உயிரோட்டம் உண்டு உம்மில்.

என்றும் இளைஞன் நீ, எதிர்காலத் தமிழருக்குக் களம் காணும் தலைவன் நீ.

தலைவர் கலைஞர் தான்பெற்ற உழைப்பு நிரம்பிய அமுதசுரபி நீ.

உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று புலரும்பொழுதில் ஒரு கனா கண்டேன்;
இன்று புலரும்பொழுதில் ஒரு கனா கண்டேன்.
தலைவர் கலைஞரின் இணையில்லா பெருங்கோயில் இருக்கும்
காட்டூர் தோட்டம். அங்கே சென்றேன்,
கொய்யாக்காய் ஒன்றைப் பறித்துத் தின்றேன்.
"யாரய்யா அங்கே?" என்று பொக்கைவாய்த் தமிழ்க்
குரல் ஒன்று வந்தது அருவிபோல;
அது தலைவரைக் கொஞ்சிய அஞ்சுகப் பாட்டி.
திருட்டை மறைக்க,
"நேற்றுதான் திருக்குவளை சென்று
தாத்தா முத்துவேலர் கவிஞரைக் கண்டேன்" என்றேன்.
"அப்படியா, சரி. தளபதி நலமா" என்றார்.
"நலம், நலம். அவர் மக்கள் நலம்" என்றேன்.
பிறகு "உங்களுக்கும் அண்ணன் தளபதியா" என்றேன்.
அவரோ, "நான் பெற்றெடுத்த தங்கம் கலைஞருக்கு அவர் மகன் தளபதி,
எனக்கோ அவர் பேரன் தளபதி" என்றார்.
"பனியிலும் பணி செய்ய வேண்டாம்.
என் குலக்கொழுந்தை உடல் பேணச் சொல்" என்றார்.
"திருவெண்காடு சென்று திரும்பும்போது
இங்கு வரச்சொல், பார்க்க ஆசை" என்றார், வாஞ்சையோடு.
விழித்துப் பார்த்தேன், விடிஞ்சு போச்சு.
தளபதி அவர்கள், நீங்கள் தென்னிந்திய ஜீவஜோதி.
இன்று சொல்கிறேன், இந்த அவையில் நான் நின்று சொல்கிறேன்.
இந்த பாரத தேசம் உங்களை ஒரு நாள் ஏற்கும்.
பிரதேசங்கள், மற்ற தேசங்கள் உங்களின் கரம்பிடிக்கும்.
இது நிச்சயம், சத்தியம் என்று அவையிலே கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஐயா ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களுடைய சோழ மண்டலத்தினுடைய தளபதி ஐயா கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், எனது அன்பிற்குரிய அமைச்சர் சகோதர சகோதரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிற இந்த நேரத்தில், எங்களுடைய மாவட்டக் கழகத்தினுடைய மறைந்த செயலாளர்,

"என்னை மட்டும் கரை சேர்த்து ஆளாக்கி,
தன்னைக் கைநழுவிப் போனவன் நீ.
உன்னைக் காப்பாற்ற முடியவில்லை.
கருணைக்கும் இடமில்லை; கைப்பற்ற ஆளுமில்லை;
கைம்பெண்ணாய் ஆனேன் நான்"

என்று எங்களுடைய மறைந்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் பூண்டி கலைச் செல்வம் அவர்களை வணங்கி, என்னுடைய மானியத்தின் மீதான கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

முற்பகல் 9–50

இந்தப் பால் வளத் துறையினைப் பொறுத்தவரை, 1958–லே இந்தத் துறை தொடங்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறை தொடங்கப்பட்ட காலம் இருக்கிறதே, அது தமிழகத்தில் மிகச் சிறந்த ஒரு பொன்னான காலம். 1958 வாக்கிலேதான் தமிழகத்தினுடைய முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் உதயசூரியன் என்ற நாடகத்தை, தமிழ்நாடு முழுவதும் எடுத்துச் சென்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் கொள்கைகளை நிறைவேற்றி வந்த காலம். அந்தக் காலம்தான் உதயசூரியன் நாடகம் நடந்து கொண்டிருந்த காலம். 1–3–1958, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உதயசூரியன் சின்னம் கிடைக்கப் பெற்ற ஒரு அற்புதமான நாள். அந்தச் சின்னம் கிடைத்தது 1–3–1958–இல். நம்முடைய தளபதி, அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 1–3–1953–லே பிறந்தார். ஒரு குழந்தை பிறந்து, உலகத்தைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு கிடைப்பது, பள்ளிக்குச் செல்கிற நேரம்தான். அவருக்கு 5 வயது முடிந்து, 6–வது பிறந்த நாள் நடக்கிற நேரத்தில்தான் உதயசூரியன் என்ற சின்னம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 1–3–1958–லே

கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சிறப்பான பொருத்தங்களைப் பெற்றிருக்கிற அந்த நேரத்தில்தான் இந்தத் துறை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளும் நேரத்தில், இந்தப் பால் வளத் துறையைப் பொறுத்தவரை, பால் வளத் துறையினுடைய உற்பத்தியாளர்கள், பணியாளர்கள், நுகர்வோர் இதுபோன்று பல்வித நிலையிலே நாம் வைத்துப் பார்க்கிறோம்.

இந்தத் துறையினைப் பொறுத்த அளவில் 'International Standard Organisation 9001 2008" போன்ற உலகத் தரம் வாய்ந்த ஒரு பெயரினை இது பெற்றிருக்கிறது. அதைப்போல, 'I.S.O. 14001' என்ற சுற்றுச்சூழலுக்கான சான்றிதழையும் இந்தத் துறை பெற்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையினைப் பொறுத்த அளவில், தமிழகத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் 50 சதவிகிதத்தை உள்ளடக்கிய ஏறத்தாழ 8,246 பால் உற்பத்தியாளர் சங்கங்களை உள்ளடக்கி, அதிலே 22 இலட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்களும், அவர்கள்மூலமாக நாள் ஒன்றுக்கு சராசரியாக 26 இலட்சத்து 34 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 17 ஒன்றியங்கள்மூலமாக இந்தப் பால் கொள்முதல் செய்யப்படுகிற இதேநேரத்தில் பால் உற்பத்தியாளர்களைப் பொறுத்த அளவில், ஒரு நாளைக்கு 4 கோடி ரூபாய் வீதம், ஒரு வருடத்திற்கு 1,446 கோடி ரூபாயை வருமானமாகப் பெறுகிறார்கள்.

2009–2010 கணக்குப்படி பார்க்கிறபோது, பால் உற்பத்தியினுடைய உயர்வு 2.87 சதவிகிதத்திலிருந்து 5 முதல் 6 சதவிகிதம் வரை உயர்வு பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற காலத்தில், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகிற நேரத்தில், நிருவாகத்தைப் பொறுத்த அளவில், 336 கோடியே 72 இலட்சம் ரூபாய் குவிந்த நட்டமாக வைத்திருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த நேரத்தில் 290.04 கோடி ரூபாய் என்ற அளவிற்குக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதேபோல, ஒன்றியங்களிலிருந்து பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை 51 கோடியே 3 ஆயிரம் ரூபாயாக இருந்ததை, இன்றைக்கு 19.38 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். பால் உற்பத்தியாளர்களைப் பொறுத்த அளவில் பணப் பட்டுவாடா செய்வதில் வாரத்திற்கு ஒரு முறை, 10 நாட்களுக்கு ஒரு முறை

என்று இருந்ததை, இன்றைய நிலையிலே, இந்தத் தேதியில் ஒரு சங்கத்தில் உள்ள ஒரு உறுப்பினருக்குக்கூட, ஒரு ரூபாய்கூட பாக்கியில்லாமல் இந்த நிருவாகத்தை நாங்கள் நடத்திக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தமிழகத்தினுடைய அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, இந்தத் துறைக்காக 4 ஆண்டுக் காலத்தில் 103 கோடி ரூபாய் வரை இன்றைக்கு ஒதுக்கீடு செய்து இருக்கிறது. சென்ற ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, 4 மடங்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த நிதி ஒதுக்கீடு மட்டுமல்லாமல், மத்திய அரசினுடைய நிதியைக் கோர வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய தலைமையிலே, 6–10–2009 ஆம் நாளன்று நடைபெற்ற உணவுப் பதப்படுத்துதல் மாநாட்டிலே மாண்புமிகு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர், ஐயா வீரபாண்டியார் அவர்களோடு கலந்துகொண்டு, தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்காகவும், உணவுப் பதப்படுத்தலுக்காகவும் அங்கு நாம் நிதியைக் கோரியிருக்கிறோம்.

அதேபோல, 20–1–2010 ஆம் நாளன்று மத்திய உணவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சரத்பவார் அவர்களுடைய தலைமையில் நடந்த பால் பெருக்குதல் மாநாட்டில் கலந்துக்கொண்டு 100 கோடி ரூபாய் வரை நிதியுதவி தேவைப்படுகிறது என்ற கோரிக்கையையும் நாங்கள் வைத்திருக்கிறோம். அதேபோல, இந்தத் துறையினைப் பொறுத்த அளவு, 4 ஆண்டுக் காலத்தில் 115 அறிவிப்புகளை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். அந்த 115 அறிவிப்புகளிலே, 87 அறிவிப்புகளுக்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. மீதமுள்ள 28 அறிவிப்புகளுக்கான பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நிருவாகம் இந்த அளவிற்குச் செயல்படுகிறது.

முற்பகல் 9–55

உற்பத்தியாளர்களைப் பொறுத்த அளவில், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பாலுக்குத் தகுந்த நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டும். சென்ற ஆட்சிக் காலத்தில், ஐந்து ஆண்டுக் காலங்களில், எருமைப் பாலுக்கு 1 ரூபாய் 56 காசும், பசும்பாலுக்கு 1 ரூபாய் 50

காசும்தான் உயர்த்திக் கொடுத்திருந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே, இந்த நான்கு ஆண்டுகளிலே மூன்று முறை, வருடத்திற்கு ஒரு முறை பால் விலையை உயர்த்திக் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக் காலத்தில், மூன்று முறை பசும்பாலுக்கு 5 ரூபாய் 50 காசும், எருமைப் பாலுக்கு 10 ரூபாய் 50 காசும் உயர்த்திக் கொடுத்து, பால் உற்பத்தியாளர்களுடைய நலனை நாங்கள் பாதுகாத்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதோடு, சென்ற ஆட்சிக் காலத்தில், குறைந்தபட்ச தரம் மூன்று சதவீதம் கொழுப்புச் சத்தும், 7.7 சதவீதம் இதர சத்துக்களும் உள்ள பாலுக்கு 1 ரூபாய் 74 காசு மட்டும்தான் வழங்கப்பட்டது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்த ஏழை விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒரு லிட்டர் 12 ரூபாய் 68 காசுக்கு இன்றைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது.

அதைப்போல, பால் உற்பத்தியாளர்கள், அந்தந்தச் சங்கங்களுடைய உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தால், ஒரு சங்கம் இலாபம் அடைகிறபோது, அந்தச் சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு அந்த இலாபம் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே, சென்ற ஆண்டு 12 கோடியே 64 இலட்சம் ரூபாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. வரும் ஆண்டிலே 1,58,760 உற்பத்தியாளர்களுக்கு 17 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கவிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, உற்பத்தியாளர்களுடைய நலன் கருதி, சென்ற நான்கு ஆண்டுகளில் பகுதி–2 திட்டத்திலே 14,000 துருவுறா எஃகு பால் கொள்கலன்கள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொடுத்திருக்கிறோம். தூய பால் உற்பத்தியினை ஊக்கப்படுத்தும் நோக்கில், நடப்பாண்டில் 400 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2,000 துருவுறா எஃகு கேன்களும், 150 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 150 துருவுறா எஃகு பால் சேகரிப்பு உபகரணங்களும், 100 புல் வெட்டும் கருவிகளும் ஏறத்தாழ ரூபாய் 127 இலட்சம் செலவில் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுபோல, பால் குளிர்விப்பான்கள். பாலினுடைய தன்மை மாறாமல், கறந்த நிலையிலேயே, பாக்டீரியாக்கள், நுண்ணுயிரிகள் அதிகம் கலந்து கெட்டுவிடக்கூடாது என்பதற்காக, மொத்த பாலையும் குளிர்விப்பதற்கான குளிர்விப்பான்களை நிறுவியிருக்கிறோம். இந்த ஆட்சி வந்த பிறகு, 166 குளிர்விப்பான்கள் அமைத்து 6,59,000 லிட்டர் பாலை நல்ல விதமாக நுகர்வோருக்கு அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இம்மாமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள், அண்ணன் ஜி.கே. மணி போன்றவர்களெல்லாம் குளிர்விப்பான்கள் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதையெல்லாம் பரிசீலித்து, வருகிற ஆண்டிலே இன்னும் 20 பால் குளிர்விப்பான்களை வழங்கவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, சேதுபாவாசத்திரம் பகுதியிலே 300 நபர்களுக்கு 600 கறவை மாடுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுபோல, சுனாமி நிவாரண திட்டங்களின் பலனாக, பல்வேறு நலன்களைப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய பணியினைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுக்கு தீவனங்களைக் குறைந்த விலையிலே, மானிய விலையிலே வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். மற்ற தனியார் விற்பனை செய்கிற அந்த விலையைவிட குறைவான விலையில்தான் நாம் விற்றுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் 12 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று சொன்னால், நாம் 8 ரூபாய் 10 காசுக்குத்தான் விற்கிறோம். அவர்களுக்கு 8 ரூபாய் 10 காசுக்கும், 8 ரூபாய் 30 காசுக்கும் விற்பனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, உறைவிந்துக் குச்சிகள். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் போன்றவர்கள் உரையாற்றுகிறபோது உறைவிந்துக் குச்சிகள் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இன்றைக்கு 81,96,000 ஊறைவிந்துக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் தேவையான அளவிற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக குஜராத், கர்நாடகா போன்ற பல்வேறு மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணிகளையும் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, பணியாளர்கள். ஆவின் பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஆறாவது ஊதியக் குழுவின் மூலமாக ஊதிய உயர்வு வழங்குவதற்கு வாய்ப்பில்லாத நேரத்திலும்கூட, அந்த ஊதியத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்காக இந்த ஆண்டு ஏற்பட்ட செலவினம் 55.71 கோடி ரூபாய் ஆகும்.

முற்பகல் 10–00

பால் உற்பத்தியாளர் சங்கத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கு ரூ.200–லிருந்து ரூ.850 வரை தகுதிக்கேற்ப சம்பளத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே, 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எல்லாம் இந்தத் துறைமூலம் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நுகர்வோர் நலனைப் பொறுத்தவரையில் மற்ற தனியார் பால் விற்பனையாளர்களைவிட சிறப்பான ஒரு திட்டத்தை வழங்கிக்கொண்டிருக்கிறோம். உடனடியாக காலத்திலே அவர்களுக்குத் தூய்மையான பால் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். சென்னையைப் பொறுத்தவரையில், 10,38,000 லிட்டர் வரை இன்றைக்கு பாலினை Card-தாரர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். பாலின் உபபொருட்களைப் பொறுத்தவரையில் 108 வகையான பால் உபபொருட்களை, ஐஸ்கிரீம் போன்ற பொருட்களை எல்லாம், நாங்கள் நுகர்வோர்களுக்கு தேவையானவற்றை வழங்கிக் கொண்டிருக்கிறோம். சென்ற 30 ஆம் தேதி அன்று மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் Lassi ஒன்றை அறிமுகப்படுத்தினார்கள். (Probiotic Lassi) ஆக, இதுபோன்று ஆண்டிற்கு ஒரு முறை நாங்கள் நல்ல பால் உபபொருட்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அதுபோல, நுகர்வோர்களைப் பொறுத்தவரையில், Card-களில் பால் வாங்குவதற்கு 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒருமுறை அவர்கள் Card-களை வாங்க வேண்டியதொரு நிலை இருக்கிறது. அதற்குத் தொடர்ந்து அவ்வப்போது சென்று மனு செய்ய வேண்டிய ஒரு சிரமம் இருக்கிற காரணத்தினால் அந்த முறையை இலகுவாக்குவதற்கு Smart Card System என்பதை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஒரு Card கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், அந்த Card-ஐ வைத்துக்கொண்டு மாதம் ஒரு முறையோ, 15 நாட்களுக்கு ஒருமுறையோ பணம் செலுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதற்காக அதை கோயம்புத்தூரிலே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அது காலப்போக்கிலே மற்ற பகுதிகளுக்கும் விரிவடைந்து செல்லும். நிச்சயமாக அதைச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பால் உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அது நியாயம். இந்த ஆண்டில் ஒன்பதாவது மாதத்தில்தான் விலையை உயர்த்தியிருக்கிறோம். ஐந்து மாதம்தான் ஆகிறது. இன்னும் அந்தக் காலம் வருகிறபோது நிச்சயமாக அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அதற்கான விலை நிர்ணயித்து அறிவிப்பு வெளியிடப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்தாலும்கூட, அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் இரண்டு மூன்று அறிவிப்புகளை மட்டும் சொல்லி மற்ற அறிவிப்புகளை@ அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதல் அறிவிப்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, தமிழகத்தில் அதிகமாக பால் கொடுக்கக்கூடிய 10 உற்பத்தியாளர்களைத் தேர்வு செய்து, அதில் முதல் மூன்று உறுப்பினர்களுக்கு, பால் ஊற்றக்கூடிய மூன்று, உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயராலே தங்கப் பதக்கமும் பண முடிப்பும் வழங்கப்படும்.

@ 579 முதல் 584 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அதைப்போல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்காகத் தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அத்துறையினைத் தன்வசம் வைத்துக்கொண்டு அந்த ஏழைகளுக்கு, எளியவர்களுக்கு இயலாதவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நோக்கத்தில் அவர்கள் செயலாற்றுகிற அந்தக் காரணத்தினால், இந்தத் துறையின்மூலமும் அதைச் செய்ய வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு பால் உற்பத்தியாளர்கள், பணியாளர்கள் போன்றவர்களுடைய குழந்தைகளுக்கு ப்ளஸ் 2 தேர்வில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு படிக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கு, 17 நபர்களுக்கு, ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு Lap-Top வழங்கப்படும் என்று நாங்கள் அறிவித்துக்கொள்கிறோம்.

அதைப்போல, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் மாற்றுத் திறன் கொண்ட பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அளித்துள்ள போக்குவரத்துப் படி அவர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பார்ந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். அவர் குறிப்பிட்டுச் சொன்னார். இந்த நாடு விடுதலைப் பெறுவதற்கு முன்பாக, இந்திய நாட்டில் ஆங்கிலேய வைஸ்ராய் இருக்கக்கூடிய இடம் அந்த இடம்; அந்தக் கட்டடம் இந்த நாடு விடுதலை பெற்ற பிறகு ஏழையெளியவர்களுக்கு அது மருத்துவமனையாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அது ஒரு பொது இடம். அரசுக்குச் சொந்தமான இடத்தை ஆங்கிலேய வைஸ்ராய் அவர்கள் தங்குமிடமாக வைத்துக்கொண்டிருந்தாலும்கூட, எதிர்காலத்தில் அதை ஒரு மருத்துவமனையாக ஆக்கிட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் தங்களுடைய சொந்த வீட்டை, தன்னுடைய உழைப்பால், தன்னுடைய உத்தியோகத்தால், மிச்சப்படுத்தி சிறுகச் சிறுக சேர்த்து, உருவாக்கிய இல்லம் அந்த இல்லம். அது எப்படிப்பட்ட இல்லம்? இந்தச் சட்டமன்றம் மட்டுமல்ல; அவர் ஐந்தாறு முறை, பத்து முறை அவர்கள் பணியாற்றிய காலத்தில் கொண்டு வந்த சட்டங்கள் திட்டங்கள் இவற்றையெல்லாம் உருவாக்குவதற்கு அந்த இல்லம்தான் அவருக்கு இடம் கொடுத்தது.

முற்பகல் 10–05

அவர் நடக்கும்போது ஒரு சிந்தனை; நிற்கும்போது ஒரு சிந்தனை; படுத்து உறங்கும்போது கனவிலே வரக்கூடிய

கருத்தைக்கூட மறு நாள் அதைச் சிந்தனையிலே வெளிப்படுத்தக்கூடியவர். அப்படி அந்த ஏழை எளிய மக்களுக்காக, சாதாரணமானவர்களுக்காக திட்டங்கள் பல தீட்டுவதற்கு கருப்பொருள் உருவாக எந்த இல்லம் இடம் கொடுத்ததோ, அந்த இல்லத்தை மருத்துவமனையாக ஆக்குகிறேன் என்று சொல்லி, தன் சொந்த இடத்தைக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைவரை நாம் வாழ்த்த வேண்டும். அப்படிப்பட்ட தலைவரை, இன்றைக்கு மகாத்மா காந்தியடிகள் அவர்கள் உயிரோடு இருந்திருப்பாரேயானால், அவர் குஜராத்திலோ அல்லது வேறு மாநிலத்திலோ இருந்திருக்க மாட்டார், ஓடோடி வந்து என்னுடைய தலைவருடைய உச்சி முகர்ந்திருப்பார். அப்படிப்பட்ட திட்டத்தை வெளிப்படுத்திய தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருமுறை நபிகள் நாயகம் சல்லல்லாஹு அவர்கள், ஆண்டவனை தொழுது கொண்டிருந்தார். எப்போதுமே நின்று கொண்டே ஆண்டவனைத் தொழக்கூடிய நபிகள் நாயகம் அவர்கள், அன்றைக்கு அமர்ந்து, குனிந்து வணங்கிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவருடைய தோழர் ஒருவர் வந்தார். அவர் இறை வணக்கத்தில் இருக்கிறாரே என்று இருந்துவிட்டு, அவர் எழுந்த பிறகு கேட்டார்; "எப்பொழுதும் நின்று கொண்டே தொழுது கொண்டிருப்பீர்களே, இன்றைக்கு அமர்ந்து, குனிந்துகொண்டே தொழுகிறீர்களே, என்ன?" என்று கேட்டார். ஒரு எளிமையான வாழ்கை வாழக்கூடிய நபிகள் நாயகம் அவர்கள் சொன்னார்கள்; "என்னைப் பசிப் பிணி வாட்டுகிறது. நான் பசியினுடைய கொடுமையினால் நிமிர்ந்து ஆண்டவனைக்கூட தொழுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறேன். அதனால்தான், குனிந்துகொண்டே நான் தொழுகிறேன்" என்று சொன்னார். "ஏழையினுடைய சிரிப்பில், இறைவனைக் காண்போம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிறவர்கள், நபிகள் நாயகம் போன்றவர்களெல்லாம்கூட பசியினுடைய கொடுமையை அனுபவித்திருக்கிறார்கள். இந்த நாட்டில் பசியிருக்கிறதே, அது இருக்கிறவனுக்கும் வரும், இல்லாதவனுக்கும் வரும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசி இருக்கிறதே, அது எல்லோருக்கும் வரும். ஆனால், பட்டினிதான் இல்லாதவனுக்கு வரும். அந்தப் பட்டினிச் சாவுகளைக் குறைத்து, பட்டினி இல்லாத ஒரு சமுதாயத்தை, ஏழை எளியவர்களுக்கு உதவிட வேண்டுமென்று—பேரறிஞர் அண்ணா அவர்களாலே தொடர

முடியாவிட்டாலும்கூட—தான் ஆட்சி செய்கிற காலத்தில், தான் வாழ்கிற காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தத் திட்டங்களைக் கொண்டு வந்தார்களோ, அவற்றை நிறைவேற்றிட வேண்டுமென்பது மாத்திரமல்ல; தான் வாழ்கிற காலத்தில் இந்த நாட்டில் பசியுள்ளவன் எவனும் இருக்கக்கூடாது, பட்டினியாக எவனும் இருக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில், பசிப் பிணியைப் போக்கி, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு என்று அறிவித்து, அதனைச் செயல்படுத்திய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை நான் வணங்குகிறேன்.

ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன்; அண்ணன் தளபதி அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். சகோதரிகளைப் பொறுத்து, பெண்களைப் பொறுத்து, ஆலயங்களுக்குச் செல்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் அதிகமாக வணங்கக்கூடியது எந்த தெய்வமோ, அந்த ஆலயங்களுக்குத்தான் அதிகமாகச் செல்வார்கள். ஒரு திருமண நிகழ்ச்சி என்று சொன்னால், ஒரு நல்ல நிகழ்ச்சி என்று சொன்னால், உறவுக்காரர்கள் யார் அதிகமாக இருக்கிறார்களோ, அங்கேதான் அதிகமாகச் செல்வார்கள். ஆனால், சமயத்தை மறந்து, சமூகத்தை மறந்து, குலத்தை மறந்து, கோத்திரத்தை மறந்து, எல்லாச் சமுதாயப் பெண்களும் ஒரே அணியில், ஒரே இடத்தில் அமர்ந்து, ஒத்த கருத்தோடு இருந்து, ஒரே ஒரு தலைவர் பேசுகிற, அண்ணன் தளபதி அவர்கள் பேசுகிற ஒற்றைக் கருத்தை உள்வாங்குவதற்கு ஒன்றாக அமர்ந்து, ஒரு பேரியக்கமாக இருந்திருக்கிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை— தந்தை பெரியார் அவர்கள் 1929-ல் தீர்மானங்களாகக் கொண்டு வந்த அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை— 60 ஆண்டுகளுக்குப் பிறகு 1989-ல் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். அண்ணன் தளபதி அவர்கள் ஒரு பேரியக்கமாக இந்த சுய உதவிக் குழுக்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்கள், அன்றைக்கு உரையாற்றுகிறபோது மூன்று கோடி தமிழ்ப் பெண்கள் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இல்லையில்லை; எதிர்காலத்தில் இந்தியாவில் இருக்கக்கூடிய சரி பாதி பெண்கள் சமுதாயமும் உங்களைப் பின்பற்றுமென்ற நம்பிக்கையிருக்கிறது. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் நான். எனக்குக் கிடைத்த வாய்ப்பு பெருமையெல்லாம் எங்கள்

இனத்தினுடைய தலைவர், ஐயா கலைஞர் அவர்கள் பிறந்த மண்ணிலே பிறந்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேச எனக்கு வாய்ப்பு கொடுத்திருக்கக்கூடிய தலைவர் அவர்களை வணங்குகிற நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லவேண்டும்.

முற்பகல் 10–10

என்னுடைய மாவட்டத்தில் நான் ஒரு சட்டப் பேரவை உறுப்பினராக, அமைச்சராக இருக்கிற நேரத்தில்தான், மருத்துவக் கல்லூரி, மத்திய பல்கலைக்கழகம், இன்னும் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பெருமை சேர்க்கிற இதே நேரத்தில்தான், நானும் இங்கு ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கிற பெருமை, எனக்கும் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட எங்களுடைய தலைவர் அவர்களையும், அண்ணன் தளபதி அவர்களையும், அவர்களுடைய பாத மலர்களில் என் கண் மலர்களை வைக்கிறேன். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற நண்பர்களுக்கு ஓரளவிற்குச் சரியான பதிலை நான் கொடுத்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களுக்கேற்ப— நம்முடைய திரு. செந்தில் பாலாஜி அவர்கள் சொன்னார்கள். திரு. செந்தில் பாலாஜி அவர்கள் உரையாற்றுகிறபோது அவர்களுடைய கருத்துகளை இங்கே சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சங்கங்களைப் பொறுத்த அளவில் 7,431 சங்கங்கள்தான் அன்றைக்கு இருந்தன. அவர், நடைமுறையில் இல்லாத சங்கங்களையும் சேர்த்து சொன்னார்கள். அதற்கு மாறாக, அவர்களுடைய மானியக் கோரிக்கைப் புத்தகத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதைப்போல, சென்னை மாநகரிலே பால் அன்றைக்கு 7,60,000 லிட்டர்தான் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு 10,32,000 லிட்டர் நாங்கள் விற்பனை செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பால் குளிர்விப்பான்கள் அமைக்க வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். தீவனங்களை மானிய விலையிலே கொடுக்க வேண்டுமென்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய

முதல்வர் ஐயா கலைஞர் அவர்களிடம் இந்தக் கருத்துகளைத் தெரிவித்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று என்னிடம் சொன்னார்கள். ஆண்டுக்கு ஒருமுறை பாலினுடைய கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், ஆண்டுக்கொரு முறை அழைத்துப் பேசி, இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுடன் பால் உற்பத்தியாளர் சங்கத்தினுடைய தலைவர் செங்கோட்டுவேல் அவர்களை அழைத்துப் பேசச் சொன்னபோது, தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், என்னுடைய தொலைபேசி எண்ணைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். என்னிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள் என்று சொன்னார். (மணியடிக்கப் பெற்றது) அப்படிக் கருணை மிகுந்த தலைவர் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதிலுரை சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: என்று கூறிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) Clarification–கேட்க மூன்று அமைச்சர்களும் பதிலுரை அளித்த பிறகு நான் வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த வணக்கங்கள். தமிழகம், தமிழுக்கு உயர்வளிக்கும் தலைவனையெண்ணி தவம் கிடக்கையில், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா தோன்றினார். அவர் வழியில் தமிழ் மட்டுமல்ல; தமிழரும், தமிழ்ச் சமுதாயமும், தமிழகமும் தலைநிமிரத் தோன்றிய

தனிப் பெரும் தலைவர் நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள்.

'சென்னை நகரிலே ஜோரு,
அண்ணா அறிவாலயம் பாரு,
கட்டினது யாரு,
நம்ம ஐயா கலைஞரைப் பாரு'

என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் பாடல் கேட்டிருக்கின்றேன். ஆனால் இந்த மாபெரும் சட்டப் பேரவை வளாகத்தினைப் பார்க்கின்றபோது,

'இந்தியத் திருநாட்டிலே ஜோரு,
தமிழக புதிய சட்டமன்றத்தைப் பாரு,
கட்டினது யாரு,
நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞரெனக் கூறு'

எனப் பாடத் தோன்றுகிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழன் கங்கையைக் கொண்டான், கடாரத்தை வென்றான், இமயத்திலே புலிக்கொடி ஏற்றினான் என்ற சரித்திரப் புகழ் தமிழனுக்கு உண்டு. அவ்வழியில் நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவிற்கு அறிவாலயம், ஐயன் வள்ளுவருக்கு சென்னையிலே கோட்டம், குமரியிலே வானுயரச் சிலை, கற்புக்கரசி கண்ணகிக்கு பூம்புகாரிலே கவின்மிகு கலைக்கூடம், வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு நினைவு இல்லம், இன்று உலகத்தவர் வியக்கின்ற வகையில் தமிழரின் புகழ்பாடும் புதிய சட்டப் பேரவை வளாகத்தை உருவாக்கி, "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்று அனைவரும் வியக்கின்ற வகையில் புதிய சட்டமன்ற வளாகத்தை உருவாக்கி, தமிழருக்கு ஒரு வரலாற்றுச் சின்னத்தை ஏற்படுத்தியுள்ள தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, எல்லோருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 25 ஆயிரம் ரூபாய்,

அனைவருக்கும் உயர் கல்வி வரை இலவசக் கல்வி, மாற்றுத் திறனாளிகளுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் என ஏராளமான திட்டங்களைத் தந்த ஏழைகளின் ஏந்தல், நமது வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், ஏழை விவசாயி, ஆலைத் தொழிலாளி, ஆடை நெய்யும் நெசவாளி, கட்டுமானத் தொழிலாளி, தூய்மைப் பணிபுரிவோர், ஆட்டோ ஓட்டும் பாட்டாளி எனப் பல்வேறு மக்களின் பாதுகாவலராய் விளங்கும் நம் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், உலகத்திலுள்ள இனங்களெல்லாம் இயற்கையை ஒட்டி வாழ்பவர்களாக உள்ளார்கள்; ஆனால், கடல் வளத்தை நாட்டு மக்களுக்காகக் கரை சேர்க்கும் மீனவர் மட்டுமே இயற்கையை எதிர்த்து வாழ்கிறார்கள் என்பதை அறிந்து, மீனவ மக்களுக்குப் பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகிறார்கள்.

மீனவ நல வாரியத்தை உருவாக்கி, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, அவர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றிய ஈடு இணையில்லா முதல்வர், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை எளிய மக்களுக்காக உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தந்த முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், ஏழை மக்களின் உயிர் மூச்சாகத் திகழ்கிறார். கலைஞர் வீட்டு வசதித் திட்டம் தந்து குடிசை இல்லாத் தமிழகம் படைக்கும் கோவேந்தர்.

ஜூன் திங்களில் கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு காணும் நம் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், வாழ்க பல்லாண்டு, ஆள்க நூறாண்டு என வாழ்த்தி ஐயாவை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐயா கலைஞரின் தனிப் பெரும் தோழராக, கழகக் கொள்கைகளைப் பரப்பி, கட்சியையும், ஆட்சியையும் காப்பதில் வல்லவராக, தமிழக நிதியமைச்சராக, கழகப் பொதுச் செயலாளராகத் திகழும் இனமானப் பேராசிரியர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்1
கருமமே கண்ணா யினர்"

என்று நீதிநெறி விளக்கம் கூறுகிறது. அதுபோல, முடிப்பதை நினைப்பவராக, நினைத்ததை முடிப்பவராக, எடுத்த காரியத்தை முடித்து, அடுத்த காரியம் எது எனக் கேட்கும் ஆற்றல் அரசர்; (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முடித்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் குறித்த காலத்திற்கு முன்பே நிறைவேற்றுவேன் எனச் சபதமிட்டுச் செயலாற்றும் எங்கள் வெற்றித் தளபதி, இளைஞர் சமுதாயத்தின் உந்து சக்தி, எங்கள் வழிகாட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில், உணர்வில் கலந்த உறவு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒன்றும் இல்லை, இப்பொழுது உடனே பேசிவிடுவார்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: அ.தி.மு.க. ஆட்சியின்போது சுனாமி ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு மத்திய அரசுமூலம் தமிழக மக்களின் நலனுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களையே அன்றைய ஆட்சியாளர்கள் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். குறிப்பாக, பாரதப் பிரதமரின் படிப்புத் தொகைத் திட்டத்தின்கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மீனவ பள்ளிக் குழந்தைகளுக்கு மாதம் தலா 300 ரூபாய் வீதம் வருடத்திற்கு 3,600 ரூபாய் வழங்கும் திட்டம் இருந்தும், அன்றைய ஆட்சியாளர்கள் அதனை மீனவ மக்களுக்கு வழங்காமல் விட்டுவிட்டார்கள். நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தி, கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரை உள்ள 13 கடற்கரை மாவட்டங்களில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு 121 கோடியே, 93 இலட்சத்து 47 ஆயிரத்து 600 ரூபாய் நம்முடைய வரலாற்று முதல்வர், மாணவப் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கும் திட்டத்தைச் சீரமைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை நான் இந்த மாபெரும் அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

2006—இலே முதல்வராகப் பொறுப்பேற்ற நம் முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள், கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரை 13 மாவட்ட கடற்கரை ஆட்சியாளர்கள் மற்றும் சுனாமி நிவாரண பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்களை அழைத்து ஆய்வு செய்து,

அன்றைய ஆட்சியாளர்கள் செய்யத் தவறியப் பணிகளை நிறைவேற்றியும், மீனவ மக்களுக்கு பல அடிப்படைத் தேவைகளை புதிதாக உருவாக்கியும், விரைந்து நிறைவேற்றி வருகிறார்.

ஒவ்வொரு மீனவக் கிராமத்திலும் மீனவ இளைஞர்களை ஊக்கப்படுத்த 60 லட்சம் ரூபாய் செலவில் விளையாட்டுச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூபாய் 110 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் மீனவ மக்களுக்கு மீன்பிடி உபகரணப் பொருட்களான வலைகள், சைக்கிள்கள், ஐஸ் பாக்ஸ்கள், விளக்குகள், உயிர் காக்கும் கவச உடைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, தமிழக கடற்கரை மாவட்டங்களில் பத்து இடங்களில் மீன்பிடி இறங்குதளங்கள் ஒவ்வொன்றும் 5 கோடி ரூபாய் செலவில் அமைத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி தடை செய்யப்பட்ட 45 நாட்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி, மீனவர்கள் முந்தைய அரசிடம் பல கோரிக்கைகளை வைத்தும்கூட அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. தமிழக முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 500 ரூபாய் வீதம் 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்த மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவர்களை மகிழ்வித்தவர் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக வரலாற்றில், கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம், இராசாக்கமங்கலம்துறை, குளச்சல் மற்றும் தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாகை மாவட்டம், பூம்புகாரில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிக்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகக் கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுத்து நிறுத்த, மத்திய அரசிடமிருந்து ரூபாய் 200 கோடியைப் பெற்று, கடலோர மீனவ மக்களைப் பாதுகாக்க முயற்சி எடுத்துக்கொண்டிருப்பவர் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தேசிய கடல் மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த 1,200 ரூபாயை 1,800 ரூபாயாக உயர்த்தி வழங்கியதில் மீனவ மகளிர்க்கு மத்திய அரசின் பங்களிப்பு இல்லாத நிலையிலும், மாநில அரசே இத்திட்டத்தை நம்முடைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் தாய் உள்ளத்தோடு ஏற்று, நம்முடைய தமிழக மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கும், ஆண்களுக்கு இணையாகவே ரூ.1,200 என்பதை 1,800 ரூபாயாக உயர்த்தி வழங்கி தமிழக மீனவ மக்களை, மீனவ மகளிரை மகிழ்வித்தவர் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள்.

மத்திய அரசு அறிமுகம் செய்ய இருந்த கடல் மீன்பிடிப்பு (ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை) சட்டம், 2009 தமிழக மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்தியத் திருநாட்டிலேயே இச்சட்டத்தை எதிர்த்து முதல் குரல் கொடுத்த முதல்வர் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள். அய்யா கலைஞர் அவர்கள், 19–11–2009 அன்று மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு விரிவான கடிதம் எழுதியதன் காரணத்தால், மத்திய அரசு இந்தச் சட்டத்தைக் கடலோர மாநில அரசுகளின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னரே அறிமுகம் செய்வோம் என அறிவித்துள்ளது.

உள்நாட்டு மீன் வளத்தில் 26 நீர்த்தேக்கங்களில் உயர் இரகக் கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல், நீர்த்தேக்க மீனவர்களுக்குப் பரிசல் மற்றும் மீன்பிடி வலைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

மீன் குஞ்சுகள் வளர்ப்பிடங்களைச் சீர் செய்யவும், தனியார் அலங்கார மீன் வளர்ப்போருக்கு மீன் பண்ணை அமைக்க மானிய உதவியும் செய்து வருகிறோம்.

முற்பகல் 10–25

உவர்நீர் மீன் பண்ணை அமைக்க முன்வரும் தனியாருக்கு அதிகபட்ச மானியமாக 3 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் மீன் குஞ்சு உற்பத்தியாளர்களுக்கு மீன் பண்ணை அமைக்க 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மீன் குஞ்சு வளர்க்கும் தனியாருக்கு அதிகபட்ச மானியமாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் எழுதிய திரைப்பட வசனமாக இருந்தாலும், திரைப்படப் பாடல்களாக இருந்தாலும், எழுதுகிற கவிதை வரிகளாக இருந்தாலும், பல இடங்களில் மீனவர்களையும், மீனவர்கள் படுகின்ற இன்னல்களையும் நினைவுகூராத வரிகளே இல்லை என்று நம்மால் சொல்ல முடியும். 'மறக்க முடியுமா' என்ற திரைப்படத்தில் 'காகித ஓடம் கடல் அலை மேலே, போவது போலே மூவரும் போவோம்' என்று நெஞ்சுருகும் பாடலையும், 'பராசக்தி' திரைப்படத்தில், 'ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டுவிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன்' என்ற அனல் தெறிக்கும் வசனத்தையும், கலைஞர் தொலைக்காட்சியில், 'தமிழர்களே, தமிழர்களே என்னைக் கடலிலே நீங்கள் தூக்கிப் போட்டாலும் கட்டுமரமாகத்தான் மிதப்பேன், அதில் நீங்கள் ஏறி சவாரி செய்யலாம், கவிழ்ந்துவிட மாட்டேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று பல்வேறு தருணங்களில் மீனவ மக்களை நினைவுகூர்ந்து பல்வேறு சரித்திரத் திட்டங்களை மீனவ மக்களுக்கு அளித்த நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு மீனவ மக்களுக்கு மிக மகிழ்ச்சிகரமான திட்டங்களை புதிய அறிவிப்புகளாகத் தந்திருக்கின்றார்கள்.

புதிய அறிவிப்புகள். **அறிவிப்பு** 1. மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்தில் மீனவ மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.500/– குறித்து இந்த மாமன்றத்திலேகூட நம்முடைய நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜன் அவர்கள், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் உதயம் சண்முகம் அவர்கள், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயபால் அவர்கள் மற்றும் திரு. விடியல் எஸ். சேகர் போன்ற இன்னும் பல உறுப்பினர்கள் எல்லாம் இந்த மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்திற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் முதன்முதலாக ரூ.500/– என்று அறிவித்த முதல்வர், நம்முடைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள். இந்த ஆண்டு முதல் கூடுதலாக ரூ.300/– உயர்த்தி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 800/– ஆக வழங்கப்படும் என்று நம்முடைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 2. கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களுக்கு

வழங்கப்படும் உதவித் தொகை ரூ.1,800/– கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் ரொக்கமாக வழங்கப்படும்.

அறிவிப்பு 3. மீனவ மக்களின் பயன்பாட்டிற்கு இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதியில் உள்ள மூக்கையூர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த ஒரு திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கடலாடி தொகுதியில் உள்ள மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் புதிதாக அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 4. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழில் புரியும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.20,000/–, சென்ற ஆண்டு 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.30,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் மத்திய அரசு மற்றும் மாநில அரசு பங்குத் தொகையாக 150 இலட்சம் ரூபாய், 150 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு, அது தமிழகக் கடற்கரையில் உள்ள மீனவர்களுக்கு 1,000 இன்ஜின்கள் மட்டுமே வழங்கப்படுகின்ற நிலையில், நம்முடைய மாமன்ற உறுப்பினர்களும், பல்வேறு மீனவர் தலைவர் அவர்களும் வைத்த கோரிக்கையின்பேரில் இந்த ஆண்டிலிருந்து நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்களும், துணை முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களும் மீனவ மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே இந்த ஆண்டிலிருந்து 3,000 உட்பொருத்தும் இன்ஜின்களை மீனவ மக்களுக்கு வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இன்னும் ஓரிரு அறிவிப்புகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்கிறோம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்பட்டு வந்த விற்பனை வரி நீக்கப்பட்ட டீசல், மாதம் ஒன்றுக்கு 250 லிட்டரிலிருந்து 300 லிட்டராக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது சிறு தொழில் புரிகின்ற மீனவர்களுக்கும், கட்டுமரம், வல்லம் மற்றும் நாட்டுப் படகு, கண்ணாடி இழைப்

படகுகள் போன்றவற்றில் மீன்பிடிக்கின்ற, சிறு தொழில் புரிகின்ற மீனவர்களுக்குப் பெரும் பயனாக அமையும் என்பதை நான் இந்த அறிவிப்பில் கூறிக்கொண்டு, மற்ற அறிவிப்புகள் @ அனைத்தையும் நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 227 வெட்டுத் தீர்மானங்களை, மீன்வளத் துறைக்கு ஆலோசனை வழங்கக்கூடிய வகையிலும், மீனவ மக்கள் பல்வேறு உதவிகள் பெறுகின்ற வகையிலும் கொடுத்துள்ளீர்கள். அதற்கு முடிந்த அளவில் என்னுடைய பதிலுரையில் நான் பதில் அளித்து இருக்கிறேன். வருங்காலங்களிலே இன்னும் நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்த ஆலோசனைகளை நிச்சயமாக நம்முடைய தமிழகத்தினுடைய வரலாற்று முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதனை இந்த சந்தர்ப்பத்திலே கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

@ மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையை இந்த மாமன்றத்திலே நிகழ்த்த வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தினைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மொழியே! தேன் மொழியே! தொன் மொழியே! என் மொழியே! தமிழ் மொழியே! ஏன் பிறந்தாய், இந்த நாட்டில்? இங்கிலாந்து நாட்டில் நீ பிறந்திருந்தால், ஏழு கண்டமும் ஆண்டிருப்பாய்; அமெரிக்க நாட்டில் நீ பிறந்திருந்தால், அவனி முழுவதும் பவனி செய்திருப்பாய்; (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு வந்து ஏன் பிறந்தாய் இனிய தமிழ் மொழியே? தொல் காப்பியன் தோன்றியதால், உன் தொன்மை தெரிந்தது; திருமூலர் தோன்றியதால்

@ 585 முதல் 589 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

உன் திறம் புரிந்தது; வள்ளுவன் வாழ்ந்ததால், உன் வளமெலாம் அறிந்தோம்; சங்கப் பாக்களால், உன் சரிதம் அறிந்தோம்; ஆனால், ஆயிரம் ஆண்டுகள் உன் அருமை பெருமைகளை அடக்கி வைத்தனர் அந்நியர்; உன் அழகைக் குலைத்தனர்; கண்ணை மறைத்துக் கலப்படம் செய்தனர்; கடவுளைக் கூடக் காட்ட மறுத்தனர்; நீண்ட காலம் உன்னை நித்திரையில் ஆழ்த்தினர்; பாரதி தோன்றினார், உனக்குப் பட்டாடை அணிவித்தார்; அண்ணா தோன்றினார், உனக்கு அணிமணி அணிவித்து அழகு சேர்த்தார்; நம் கலைஞர் தோன்றினார், உன்னிடம் உள்ள எண்ணிலாக் கலைகளை எடுத்துக் காட்டுகிறார்; (மேசையைத் தட்டும் ஒலி) இயல் இசை கூத்து எழுச்சி பெற்றது; ஏற்றம் பெற்றது; நானிலம் புகழ உனக்கு நல்வாழ்வு எடுக்கிறார்; குமணன் வாழ்ந்த கோவை மாநகரில், உலகச் செம்மொழி மாநாடு உயர்தனிச் சிறப்போடு நடத்தவுள்ளார்; இது நான் பெற்ற பேறு. வாழ்க தலைவா! பல்லாண்டு வாழும் வரை எனை ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிடத்தின் திசை விளக்கு, தமிழகத்தின் ஒளி விளக்கு இனமானப் பேராசிரியருக்கு வணக்கம்.

உழைப்பின் உருவமே, உண்மையின் சின்னமே, இயக்கத்தின் இதயமே, எங்கள் எதிர்காலமே, துணை முதல்வர் அவர்களே உங்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அவையோருக்கு வணக்கம்.

118 ஆண்டுகள் பழைமையானத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை. பாரம்பரியமிக்க இந்தத் துறை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. சில பருவங்களில் ஏற்படுகின்ற இயற்கை மாறுபாட்டால் விவசாயம் பொய்த்துப் போகும்போது கால்நடை வளர்ப்பு, அவர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய தொழிலாக விளங்குகிறது. உலகக் கால்நடை எண்ணிக்கையில் மிக அதிகமாக உள்ள நாடு இந்திய நாடு. ஆனால் பால் உற்பத்தியில், இறைச்சி உற்பத்தியில் மற்றும் தோல் உற்பத்தியினை ஒப்பிடும்போது குறைவாகத்தான் உள்ளது.. ஆகவேதான், மத்திய அரசும், மாநில அரசும் இதனை முன்னேற்றும்பொருட்டு பல்வேறு நிதி உதவிகளைக் கொடுத்து வருகின்றன. தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கே வழி காட்டும் வகையில் பல முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றிகண்டு வருகிறது.

கால்நடை பராமரிப்புத் துறை, மேலை நாடு, கீழை நாடுகளுக்கு ஒப்பாக கால்நடைகளின் தரத்தை உயர்த்த பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறது. இந்தத் துறையில் 6 பன்முக மருத்துவமனைகள், 22 பிரதான மருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள், 1,207 கால்நடை மருந்தகங்கள், 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள், 444 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள், 1,385 கால்நடை கிளை நிலையங்கள். 55 பார்வைக் கிளை நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கும், கால்நடைகளுக்கும் மிகவும் சிறப்பாகச் சேவைகளைச் செய்து வருகிறது.

முற்பகல் 10–35

கடந்த ஆட்சியில் பணி நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தால், காலிப் பணியிடங்கள் ஏராளமாக இருந்தன. கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில் 495 கால்நடை உதவி மருத்துவர்கள், 412 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள், 386 கால்நடை ஆய்வாளர்கள், 68 சுருக்கெழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள், 164 இளநிலை உதவியாளர்கள், 10 ஊர்தி ஓட்டுநர்கள், 30 ஆய்வுக்கூட உதவியாளர்கள், 959 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் என மொத்தம் 2,524 நபர்கள் வெவ்வேறு இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். இருப்பினும் காலிப் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம்: 1989 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவக் கல்விக்கென ஆசியாவிலேயே முதன்முதலாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையில் உதித்ததாகும். இப்பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, சென்னை, கொடுவள்ளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகிய கல்லூரிகளைக் கொண்டுள்ளது. மேலும், 2 உயர் கல்வி மையங்கள், ஓர் உயராய்வு மையம், 6 ஆராய்ச்சிப் பண்ணைகள், 16 பயிற்சி மையங்கள், ஒரு மண்டல ஆராய்ச்சி மையம், 2 மீன்வளப் பயிற்சி

மற்றும் ஆராய்ச்சி மையங்கள், 2 கோழியின நோய் ஆய்வுக் கூடங்கள், 10 ஆய்வகங்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கல்லூரிகளில் B.V.Sc., M.V.Sc., & M.Tech. போன்ற படிப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் நடப்பு நிதியாண்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. அவற்றில் ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றவாறு கால்நடைகளின்மூலமாக பால் உற்பத்தியை அதிகரிக்க, தானுவாஸ் ஸ்மார்ட் என்ற தாது உப்புக் கலவை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பசு மற்றும் எருமைகளின் மரபுத் தன்மையை உயர்த்தும்பொருட்டு, மலடு மாடுகள் சினை பிடிக்கக்கூடிய வகையில், சினைப் பருவ ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பத்தின்மூலம் 15 ஆயிரம் பசுக்களின் பால் உற்பத்தி மற்றும் இனப் பெருக்கம் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆடுகளின் நீல நாக்கு நோயைத் தடுக்கும்பொருட்டு, 5 வகை நச்சுயிரி கலந்த நீல நாக்கு நோய்த் தடுப்பூசி வெளியிடப்பட்டுள்ளது. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கும் அடைப்பான் நோயைக் கட்டுப்படுத்த மாண்டனைட் தாவர எண்ணையைக் கொண்டு ஆந்த்ராக்ஸ் என்ற தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது. கோழிகளைத் தாக்கும் இராணிக்கெட் என்ற கோழிக் கழிச்சல் நோய்க்கு வாய் வழியாக கொடுக்கக்கூடிய தடுப்பூசி, வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்ய கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்படும் தடுப்பூசிகளை அகில உலக அளவில் உபயோகப்படுத்த, வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யும்பொருட்டு, இங்கிலாந்திலுள்ள கால்வ்மெட் என்ற நிறுவனத்துடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. பாரம்பரிய கால்நடை மருத்துவத்தில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு, பெங்களூருவிலுள்ள பாரம்பரிய மருத்துவ புத்தாக்க அறக்கட்டளையுடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சியை உலகத் தர அளவில் மேம்படுத்தும்பொருட்டு, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடனும், நமது நாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 50 இலட்சம் பருவமடைந்த பசுக்கள் மற்றும் எருமைகள் உள்ளன. இவற்றில் 30 சதவிகித மாடுகளுக்கு மலட்டுத் தன்மை இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட சுமார் 15 இலட்சம் மாடுகள் அடிமாட்டு விலைக்கு, அதாவது உண்பதற்கு விற்கப்பட்டால் அவற்றின் மதிப்பு சுமார் 900 கோடி ரூபாயாக இருக்கும். இதே மாடுகள் மலட்டுத் தன்மை நீக்கப்பட்டு, சினையாகுமானால், இவற்றின் மதிப்பு 3,000 கோடி ரூபாயாக உயரும். விவசாயிகளுக்கு ஏற்படும் இந்த நட்டத்தை நிவர்த்தி செய்யும்முகமாக, முதற்கட்டமாக 2 இலட்சம் மாடுகளை, சினைப் பிடிக்க வைக்கும் முயற்சியில் கலைஞருடைய அரசாங்கம் இறங்கியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹார்மோன் கருவி மற்றும் சிகிச்சை முறைகள்மூலம் ஒரு மாட்டிற்கு ரூ.1,250 செலவில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு "மாடுகளில் மலடு நீக்கத் திட்டத்தை" அமல்படுத்த உள்ளது.

முற்பகல் 10-40

மத்திய அரசு உதவியுடன் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. நமது அரசின் தலைமைச் செயலாளரும், கால்நடை பராமரிப்புத் துறை செயலாளரும், மத்திய அரசு கால்நடை பராமரிப்புத் துறை செயலாளருடன் முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். இதன்மூலம், பரீட்சார்த்தமாக இப்போது ரூ.2 இலட்சம் கால்நடைகளிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 1.10 இலட்சம் மாடுகள் சினையாவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடை பாதுகாப்புத் திட்டம். கால்நடைகளின் நலம் மற்றும் அபிவிருத்தியுடன் இணைந்த பாதுகாப்பை விவசாயிகளின் இல்லத்திற்கே சென்று வழங்கும் நோக்கத்துடன், கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற முன்னோடித் திட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலே 2000 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில் 5,500 முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 70 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனால் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். 2010-2011 ஆம் ஆண்டும் 5,500 முகாம்கள் நடத்தவும், முகாமிற்கு ரூ.4,200/- செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் உற்பத்தி. கால்நடை பராமரிப்புத் துறை மேற்கொண்ட ஒருங்கிணைந்த முயற்சியின் காரணமாக 2006–2007–ல் 55.6 இலட்சமாக பால் உற்பத்தி இருந்தது. 2009–2010–ல், அது 57.78 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. 2009–2010 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு தனி நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய பாலின் அளவானது 236 கிராமாக உள்ளது.

W.H.O.- உலக சுகாதார நிறுவனத்தினுடைய நிர்ணயம் 250 கிராமாகும். ஏறத்தாழ, நாம் அந்த நிலையை எட்டிக்கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு, இந்திய நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 5.2 சதவீதமாகவும் 9–வது இடத்தையும் கொண்டுள்ளோம்.

செயற்கை முறை கருவூட்டல். கால்நடை பராமரிப்புத் துறையில் 2009–2010 ஆம் ஆண்டில் 38.05 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் பணி நடைபெற்றுள்ளது. 2010–2011 ஆம் ஆண்டில் 39 இலட்சம் செயற்கை கருவூட்டல் முறை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்த கால்நடை எண்ணிக்கையில் நாட்டினம் 43.77 சதவீதமாகவும், அயல்நாட்டுக் கலப்பினம் 56.23 சதவீதமாகவும் உள்ளது.

உள்நாட்டு இனத்தைக் காக்கும் அடிப்படையில் 2009–2010 ஆம் ஆண்டில் காங்கேயம் இனத்தைப் பாதுகாக்கும்பொருட்டு ஒசூர் மாவட்டக் கால்நடை பண்ணையில் 1.98 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்திச் செய்யப்பட்டு, செயற்கை முறை கருவூட்டல்மூலம் 57,000 காங்கேயம் இனக் கன்றுகள் பிறந்துள்ளன.

அதைப்போல, திருவாரூர், நாகப்பட்டினம் பாரம்பரிய இனமான உம்பளாச்சேரி இனத்தை பாதுகாக்கும்பொருட்டு, தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை அயலினப் பெருக்குப் பண்ணையில் 2,734 எண்ணிக்கையில் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 1,281 கன்றுகள் இப்போது பிறந்துள்ளன. 2010–2011 ஆம் ஆண்டில், கால்நடை உறைவிந்துக் குச்சிகளைப் பயன்படுத்தி, 2 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. செயற்கைமுறை கருவூட்டல் கட்டணத்தை இந்த அரசு, கலைஞருடைய அரசு, ரூபாய் 15/–ல் இருந்து ரூபாய் 10/– ஆகக் குறைத்துள்ளது. இது ஏழைகளுக்கு மிகவும் வாய்ப்பாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி).

செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு அபிவிருத்தி. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் முக்கிய உபதொழிலாக நமது மாநிலத்தில் உள்ளது. பெரும்பாலான நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் மற்றும் குறு, சிறு விவசாயிகளின் வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. மனிதர்களுக்குத் தேவையான, பால் மற்றும் இறைச்சி வழங்குவதுடன், கம்பளி, தோல் பொருட்களையும் வழங்குகிறது. தோல் பொருட்களின் ஏற்றுமதிமூலம் இந்த ஆண்டு அந்நியச் செலாவணியாக ரூபாய் 5,827.51 கோடியை ஈட்டித் தந்துள்ளது. 17–வது கால்நடை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 55.93 இலட்சம் செம்மறி ஆடுகளும், 81.77 இலட்சம் வெள்ளாடுகளும் உள்ளன.

தமிழக அரசின் புதிய பண்ணைக் கொள்கையின்படி, இராமநாதபுரம் வெள்ளை ஆடு, மேச்சேரி, திருச்சி கருப்பு, வேம்பூர், சென்னை சிகப்பு, கீழக்கரிசல் ஆகிய செம்மறி ஆடுகளும், ஜமுனாபாரி, கொடியாடு, தலைச்சேரி, கன்னி, சேலம் கருப்பு ஆகிய வெள்ளாடுகளும், இத்துறையினால் அரசுப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு, ஆடுகளின் தரத்தை உயர்த்த, விவசாயிகளின் தேவைக்கேற்ப மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10–45

தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் சில மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 சதவிகித மானியத்தில் செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோழி வளர்ப்பு—தமிழகத்தில் சுமார் 10 கோடி கோழிகள் உள்ளன. 2006–2007 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தி அளவானது, 804 கோடியிலிருந்து 2009–2010 ஆம் ஆண்டில் 1,085 கோடியாக உயர்ந்துள்ளது. இதுகாறும் குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. முட்டை உற்பத்திப் பொருட்கள் மற்றும் உறைய வைத்த கோழி இறைச்சி ஆகியவை நமது மாநிலத்திலிருந்து வளைகுடா நாடுகள், ரஷ்யா போன்ற அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற சிறந்த சூழ்நிலை நிலவுகிறது. இந்திய நாட்டின் கோழிப் பொருட்கள் ஏற்றுமதியில் 16.5 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காக உள்ளது. இந்திய நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு 15.83 சதவிகிதமாகவும், இது இரண்டாவது இடத்தையும்

கொண்டுள்ளது. ஒரு மனிதனுக்கு ஆண்டுக்குக் கிடைக்கும் முட்டையின் அளவு 2006–2007 ஆம் ஆண்டு 123 ஆக இருந்தது. இப்பொழுது 2009–2010 ஆம் ஆண்டு இது 162 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. உலக சுகாதார நிறுவனம் -W.H.O.- நிர்ணயித்தது 180 முட்டைகள். ஏறத்தாழ நாம் அந்த நிலையை எட்டிக் கொண்டிருக்கின்றோம்.

மத்திய அரசு நிதியுதவியுடன் மாநிலத்திலுள்ள மாவட்டக் கோழிப் பண்ணைகளை தரம் உயர்த்த ஓசூர், காட்டுப்பாக்கம், ஒரத்தநாடு, செட்டிநாடு ஆகிய கால்நடைப் பண்ணைகளுக்கு இதுவரை ரூபாய் 263.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. காட்டுப்பாக்கம், அபிஷேகப்பட்டிப் பண்ணைகளில் வான் கோழி வளர்க்க முதல் கட்டமாக ரூபாய் 68 இலட்சம் பெறப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம், ஆண்டலூர்கேட் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோழியின ஆராய்ச்சி நிலையங்களை— B.S.L. II — Bio Safety Level II தரத்திற்கு உயர்த்த 44 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. உலகத் தரம் வாய்ந்த Bio Safety Level IV ஆய்வுக் கூடத்தை சுமார் 5 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கருகே படப்பையில் அமைக்க, 30 ஏக்கர் நிலம் மைய அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது நமது மாநிலத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்களுடைய சீரிய முயற்சியால் கிடைத்தது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆய்வுக் கூடம், தமிழகத்திற்கு வந்த பின்பு, பறவைக் காய்ச்சல் சம்பந்தமான பல்வேறு ஆய்வுகளை, மாதிரிப் பொருட்களை இனிமேல் மத்தியப் பிரதேசத்திலுள்ள போபாலுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் எழாது. பறவைக் காய்ச்சல் இல்லாத கோழிப் பண்ணைப் பகுதிகளாக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வல்லுநர் குழு அமைக்கப்பட்டு பண்ணைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கோழிக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கால்நடை நிலையங்களிலும் குறிப்பாக வாரத்தில் சில நாட்களில் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

நோய்ப் புலனாய்வுப் பிரிவு—தமிழ்நாட்டில், மொத்தம் 20 மாவட்டங்களில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதற்காக இந்த ஆண்டு ரூபாய் 2½ இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை நோய்த் தடுப்பு நிலையம், இராணிப்பேட்டை— கால்நடை மற்றும் கோழி இனங்களைக் காக்க, தடுப்பூசி மற்றும் உயிர் காக்கும் மருந்துகள், வேலூர் மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2009–2010 ஆம் ஆண்டில் இந்நிலையத்தால், 210.13 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி முகமை—தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் 2009–2010 ஆம் ஆண்டில் சிறந்த மரபியல் கொண்ட பொலிக் காளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 7.99 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் கால்நடை பராமரிப்புத் துறைக்குக் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது. 2009–2010 ஆம் ஆண்டில் இத்திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2006–2007 முதல் 2009–2010 வரை இறந்த 9,078 கால்நடைகளுக்கு ரூபாய் 11 இலட்சத்து 29 ஆயிரம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. காப்பீடு செய்ய தேவையான தொகையில், 50 விழுக்காடு அரசு மானியமாகவும், மீதி 50 விழுக்காடு கால்நடை வளர்ப்போரிடமும் பெறப்படுகிறது.

அறிவிப்புகளுக்கு வரும் முன்னால், உறுப்பினர்கள் சிலர் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் எனது உரையிலே பதில் இருக்கும் என்று நினைக்கின்றேன். அறிவிப்புகளை ஒருசிலவற்றை மட்டும் சொல்லி மற்ற அறிவிப்புகளை@ நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளாக பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய ஊர்களுக்குக் கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இதை எடுத்துச் சொல்லி, அவர் பெருமனது வைத்து இந்த ஆண்டு புதிதாக 100 கால்நடைக் கிளை நிலையங்களைத் தமிழ்நாட்டில் துவக்குவதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள். அதேபோல, 200 கால்நடைக் கிளை நிலையங்கள் நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்.(மேசையைத் தட்டும் ஒலி)

@ 590 மற்றும் 591 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10–50

புதிதாக 200 இளநிலை கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். 200 கால்நடை ஆய்வாளர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நிறைவாக, ஒரு சிறிய செய்தியை மட்டும் சொல்லி எனது உரையை முடிக்க விரும்புகின்றேன்.

1996 ஆம் ஆண்டு ஒரு நாள் நான் அமைச்சராக இருந்தபோது, என்னை நமது முதல்வர் அவர்கள் அழைத்து, "என்னுடைய இயக்குநர் எஸ்.ஏ. சாமி அவர்கள் கோவையிலே இருப்பதாகக் கேள்விப்பட்டேன்; அவரிடம் சென்று உடல்நலம் விசாரித்து வா" என்று சொன்னார்கள். 'இராஜகுமாரி' படத்திற்குத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் வசனம் முழுவதையும் எழுதினார். ஆனால், அவருடைய பெயர் வராமல், எஸ்.ஏ. சாமி அவர்களுடைய பெயர்தான் அதிலே வந்தது. அந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். அந்த நிகழ்ச்சியை நான் எஸ்.ஏ. சாமி அவர்களிடம் சென்று பக்குவமாகக் கேட்டேன், எப்படி ஐயா இது நிகழ்ந்தது என்று. உடனடியாக அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்: "கலைஞர் என்னிடம் வந்தார்; என்னிடம் நின்றார்; என்னையே வென்றார்; தனிவழி சென்றார்; தரணியை வென்றார்" என்று நான்கே வரிகளில் பதில் சொன்னார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த நிகழ்ச்சி இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லி சென்றார், தலைவர்களைப் பார்த்தார், தமிழ்நாட்டுக்குப் பெருந்தொகையைப் பெற்று வென்றார்; வணங்குகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 284 வெட்டுத் தீர்மானங்களை நமது உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அனைத்தையும் நான் படித்து, அதிகாரிகளோடு கலந்து, அவற்றில் உள்ள நல்ல செயல்களை எல்லாம் எதிர்காலத்திலே நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை எடுத்துக் கூறி இந்த மானியக் கோரிக்கையை உறுப்பினர்கள் அத்துணை பேரும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபொழுது, மாண்புமிகு அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையிலே, மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்கின்ற வகையில் மானியம் வழங்கி கடனுதவியும் வழங்கப்பட்டது. அப்படிக் கடனுதவி, கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் வங்கிகளில் இருக்கின்ற ஒரு நிலையில், அது அரசின் கவனத்திற்கு வந்து, நம்முடைய மீனவர்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் குரல் கொடுத்ததன் அடிப்படையிலும், தற்போது அது தள்ளுபடி செய்யப்பெற்றுவிட்ட நிலையில், சென்னையைச் சேர்ந்த மீனவர்கள் 17 பேர், கடலூர் 34 பேர், காஞ்சிபுரம் 13 பேர், விழுப்புரம் 3, இராமநாதபுரம் 25, நாகப்பட்டினம் 27, புதுக்கோட்டை 8, கன்னியாகுமரி 3 எனக் கிட்டத்தட்ட 128 மீனவர்களுக்கு இன்னும் 10 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படவில்லை. இதிலே நம்முடைய மீனவர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கடன், தள்ளுபடி செய்யப்படவில்லை என்று சொல்லி, கடந்த 4 ஆண்டுக் காலமாகப் போராடி, அதிலே 3 மீனவர்கள் இறந்திருக்கின்றார்கள். 2 படகுகளை இழந்த மீனவர்களில் ஒருவர், மன நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றார். அந்த மனுவை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் நான் கொடுக்கவிருக்கின்றேன்.

அதேபோன்று, சுனாமி என்று சொல்லும்போது கடந்த முறை விவாதிக்கப்பட்டு, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர்கூட இங்கே விவாதத்திற்குப் பதில் சொல்லும்பொழுது, "உங்களுடைய ஆட்சியிலே செய்தீர்கள், எங்களுடைய ஆட்சியில் செய்து கொண்டிருக்கின்றோம்; இதிலே விவாதம் தேவையில்லை, முற்றுப்புள்ளி வைப்போம்" என்று சொன்னார்கள். இப்பொழுதுகூட சொல்லுகின்றேன், எங்களுடைய ஆட்சியிலே என்னென்ன அரசாணைகள் போடப்பட்டன; நிலங்கள் வழங்கப்பட்டன; கட்டடங்கள் கட்டப்பட்டன என்கின்ற விவரமெல்லாம் விவரங்கள் அடங்கிய அறிக்கையாகக் கொடுங்கள். அதேபோன்று உங்களுடைய ஆட்சியிலே செய்யப்பட்ட விவரங்களையெல்லாம் வெள்ளை அறிக்கையாகக் கொடுங்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஒரு நாளைக் குறிப்பிட்டு விவாதத்தை நீங்கள் தொடங்குவதற்கு முன்வந்தால், நாங்களும் வந்து சந்திப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். நீங்கள் தயாரா என்பதைக் கேட்க விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு). ஒரு கட்சியில் ஒருவருக்குதான் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கால்நடை உதவி மருத்துவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் களப் பணிக்குச் செல்கின்றபோது, கால்நடை உதவி மருத்துவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றபோது ஆராய்ச்சி உதவியாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால், ஆராய்ச்சி உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட அவர்கள், அந்த ஆராய்ச்சிக்குள்ள ஆர்வமும், ஆராய்ச்சியிலே ஈடுபட வேண்டும் என்கிற தூண்டுதலும் இல்லாத சூழ்நிலையிலே தொடர்ந்து அங்கே இருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்ற அதே வேளையில், கால்நடை மருத்துவர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் M.V.Sc. போன்ற முதுகலைப் பட்டப் படிப்பு படித்து தாங்கள் ஆராய்ச்சியிலே ஈடுபட வேண்டும் என்கிற ஆர்வம் இருந்தாலும்கூட, அவர்கள் அங்கே போக முடியாமலும் இவர்கள் இங்கே வர முடியாமலும், ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சிகள் நடக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறேன். இந்தச் சூழ்நிலையிலே ஒரே தலைமையிடத்திலே பணியமர்த்தப்பட்டவர்கள், ஆராய்ச்சி நிலையத்திலே பணியாற்றுகின்ற கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுவதற்கான அந்த ஆர்வம் இல்லையென்று சொன்னால், அவர்கள் கால்நடை மருத்துவராகப் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மேலும், டெல்லிக்குச் சென்று ஏறக்குறைய 21,000 கோடி ரூபாயைப் பெற்றுத் தந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்து, வெற்றி வீரராக வந்திருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, பாலினுடைய கொள்முதல் விலையை நாங்கள் ஒவ்வோராண்டும் உயர்த்திக் கொடுக்கிறோம் என்கின்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே கொள்முதல் விலை 1 ரூபாய் 56 பைசாவாக உயர்த்தப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், விற்பனை விலை என்பது உயர்த்தப்படவே இல்லை. இன்றைய ஆட்சியைப் பற்றி ஒரு கருத்தை எடுத்துச் சொல்கிறேன். அரசியலுக்காக இதைச் சொல்லவில்லை. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே 12 ரூபாய் 50 பைசாவிற்கு விற்கப்பட்ட பாலினுடைய விற்பனை விலை, இன்று ஒரு லிட்டர் 22 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல தீவனத்தினுடைய விற்பனை விலை என்பது 3.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது, இன்று 650 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல தயிர் போன்ற அனைத்துப் பொருட்களின் விற்பனை விலையும் இரண்டு மடங்காகக் கூடியிருக்கின்ற நிலையில் பால் உற்பத்தியாளர்களினுடைய கோரிக்கையினை ஏற்று, அந்தப் பாலின் விற்பனை விலையை உயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று ஜல்லிக்கட்டைப் பற்றி பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அரசு ஆய்வு செய்து அந்த இரண்டு இலட்சம் ரூபாய் என்பதைக் குறைத்து அல்லது அதைத் தள்ளுபடி செய்து ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல ஆவினுடைய ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான பென்ஷன் தொகையை வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி சென்று ஜனாதிபதி, மாண்புமிகு எங்கள் அகில இந்திய

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அருமை அன்னை சோனியா காந்தி, பிரதமர், திட்டக் குழுத் தலைவர் உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து வெற்றிமீது வெற்றி வந்து, அதனைப் பெற்றுத் தமிழக மக்களுக்குத் தந்த, சாதனைத் தலைவர் கலைஞர் அவர்களை நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல வெற்றிகளை நீங்கள் தமிழகத்திற்குப் பெற்று வந்திருக்கின்றீர்கள் என்பதை நினைக்கின்றபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்ற அதேநேரத்திலே, பால் வளத் துறை அமைச்சர் அவர்களை நான் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவது, 12 ரூபாய் 80 காசிற்கு ஒரு லிட்டர் பாலை கொள்முதல் செய்கின்றீர்கள். அதனை 14 ரூபாய் 55 காசுகளுக்கு நீங்கள் விற்கிறீர்கள். ஆக, விற்பனை விலை நீங்கள் வாங்குகின்ற அந்தக் கொள்முதல் விலையைவிடக் கூடுதலாகத்தான் இருக்கிறது. ஆகவே, எத்தனையோ மானியங்களை நம்முடைய அரசு கொடுக்கின்றபோது, பயனீட்டாளர்களுக்கு இந்தப் பாலை விற்கின்றபோது, அதற்கு மானியம் தந்தாவது அந்த விலையைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) உங்களைத்தான் கூப்பிட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–00

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு ஜல்லிக்கட்டு முறைப்படுத்துதல் சட்டம்' 2009 ஆம் ஆண்டு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையில் முன்மொழியப்பட்டு இந்த அவையால் அது சட்டமாக இயற்றப்பட்டது. 'தமிழ்நாடு ஜல்லிக்கட்டு முறைப்படுத்துதல் சட்டம்' என்பது, தமிழகத்தினுடைய வீர விளையாட்டாக இருக்கிற ஜல்லிக்கட்டு நிகழ்வுகள், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து அது செயல்படுவதற்கும், அது அழிந்து போகாமல் இருப்பதற்காகவும் முறைப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது. ஆகவே, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கக்கூடிய நிலையில், தமிழக அரசின் காவல் துறையிடம் பல இடங்களிலே பல ஊர்களிலே இந்த ஜல்லிக்கட்டை நடத்துவதற்கான அனுமதியைக் கேட்டால், அவர்கள் அனுமதியே அளிப்பதில்லை.

காரணம், நீங்கள் 5 ஆண்டுகள் தொடர்ந்து நடத்த வேண்டுமென்கிற ஒரு condition-ஐப் போடுகிறார்கள். Deposit 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்றெல்லாம் சொல்லி இன்று அந்த நிகழ்வுகளையே நடத்த முடியாத நிலை. பல இடங்களிலே 5 இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள். சில இடங்களிலே 10 இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள், இப்போதுகூட நாம் வாகனங்களில் போகிறோம். வாகனம் இடித்து ஒருவர் இறந்துவிடுகிறார். அதற்கு இன்சூரன்ஸ் இருக்கிறது. அதைப்போன்ற ஒரு வழிமுறையையாவது நாம் கடைப்பிடிக்க வேண்டும். Accident என்பது எப்போதும் நிகழக்கூடிய ஒன்றுதான். ஆகவே, தமிழகத்தினுடைய வீர விளையாட்டாம் இந்த ஜல்லிக்கட்டை முறைப்படுத்துகிற இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிறபோது நான் தமிழகத்தினுடைய முதலமைச்சரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்,— நேற்று பல உறுப்பினர்கள் தமிழகத்து மக்களுடைய உணர்வுகளையெல்லாம் இந்த அவையிலே பிரதிபலித்திருக்கிறார்கள்—அதிலே அந்த deposit தொகையைக் குறைக்க வேண்டும். அதேபோல 5 ஆண்டுகள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதைத் தளர்த்த வேண்டும். நம்முடைய திருவாடானை சட்டமன்ற உறுப்பினர், கோயில் கட்டிக்கொண்டிருக்கிறார். கோயில் கட்டுகிறபோது சில நேரங்களில் மாடுவிட முடியாது. காப்புக் கட்ட வேண்டும். ஆகவே, ஒரு வருடம் தடைபட்டுப் போனால், அடுத்த ஆண்டு இல்லை என்று காவல் துறை மறுக்கிறது. இப்படிப் பல்வேறு சிறு, சிறு நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்டி, அனுமதி மறுப்பதைத் தவிர்த்து, தயவுசெய்து இதுபோன்ற இந்த நிபந்தனைகளைத் தளர்த்தி, வீர விளையாட்டாம் இந்த ஜல்லிக்கட்டை, எருதுவிடும் திருவிழாக்களை தமிழக மண்ணில் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி அளிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் வலியுறுத்துகிறார். அவர் தொடர்ந்து இதுபற்றி இந்த அவையிலே கேட்டுக்கொண்டு வருகின்றார். "வீர விளையாட்டு" என்றும் அதைப் புகழ்ந்துரைக்கின்றார். எனக்குள்ள ஓர் ஆசை, நாங்கள் மீண்டும் ஜல்லிக்கட்டு தொடரும் என்று ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு, முதல் ஜல்லிக்கட்டில் – அந்த வீர விளையாட்டில் ஈடுபட்டு ஞானசேகரன் அவர்கள் வெற்றிவாகை சூட (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) முன்வருவாரா என்பதுதான் என்னுடைய கேள்வி. அப்படியானால், அவர் அதை எழுதித் தந்தால், அதை நம்பி, முதல் ஜல்லிக்கட்டில் அவரை ஈடுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. ஞானசேகரன்? திரு. ஜி.கே. மணி சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் தலைநகர் டெல்லிக்குச் சென்று, கடந்த முறை நடுவண் அரசின் திட்டக் குழுவில் ரூபாய் 17,000 கோடிகளைப் பெற்று, நடப்பாண்டில், இந்த ஆண்டு நிதியாக திட்டக் குழுவிடம் 21,000 கோடியை தமிழக வளர்ச்சிக்குப் பெற்றுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது ஆவின் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெறக்கூடிய அந்தப் பணியாளர்களுக்கு ஓய்வூதியமாக வெறும் 1,200 ரூபாயிலிருந்து 1,500 ரூபாய் வரை மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வுபெறக்கூடியவர்களுக்கு, மின் வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் பெறக்கூடிய அந்த ஓய்வூதியம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, குறைந்தபட்ச ஓய்வூதியத்தையாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில், ஆவின் நிறுவனத்தில் பணியாற்றக்கூடியவர்களுக்கு Star Health Insurance என்கின்ற அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில்

சிகிச்சை பெற முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. எல்லா அரசு ஊழியர்களுக்கும் அந்தச் சலுகை இருக்கின்ற காரணத்தினால், அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனடைவதற்கு வாய்ப்பை அவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மீனவப் பெண்கள், கூட்டுறவுச் சங்கங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ள முடியவில்லை; உறுப்பினர் சேர்க்கை மறுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, பெண்களையும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் தவிர்க்காமல், வேண்டி வரக்கூடியவர்களை எல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நம்முடைய தமிழகத்து மீனவர்களை இலங்கை இராணுவம் அடித்து நொறுக்குவதும், வலைகளைச் சேதப்படுத்துவதும், படகுகளை அடித்து நொறுக்கி அவர்களைத் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாக்குகின்ற கொடுமை நடந்தேறி வருகின்றது. மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பல்வேறு சாதனைகளாக நிதியைப் பெற்று வருகை தந்திருக்கிறார்கள். ஆனால், இந்த மீனவர்களினுடைய துயரைத் துடைக்கின்றவகையில் தலைவர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் ஒரு கண்டிப்பான உத்தரவோடு தமிழக மீனவர்கள் அந்தப் பாதிப்பிலிருந்து காப்பாற்றப்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எங்கள் சின்ன அய்யா அவர்கள் தலைமையில் பிரதமர் அவர்களையும், ஆலோசகராக இருந்த திரு. நாராயணன் அவர்களையும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தபோது, நிச்சயமாக தமிழகத்தின் மீனவர்கள் இனி இலங்கை இராணுவத்தால் துன்புறுத்தப்படமாட்டார்கள்; வலைகள் அறுக்கப்படமாட்டாது; அவர்களின் படகுகள் சேதப்படுத்தப்படமாட்டாது; அதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அரசோடு நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற தகவலை எங்களுக்குத் தந்தார்கள். அதற்கு பிரதமர் அவர்களும் எங்களுக்கு

உறுதியளித்தார்கள். 18 சட்டப் பேரவை உறுப்பினர்களிடத்திலும் உறுதியளித்தார்கள். ஆனால், தொடர்ந்து அந்த துன்பவியல் சம்பவம் நடந்தேறி வருகிறது. ஆதலால், அதற்கு இறுதி முடிவு எடுப்பதற்கான ஒரு நல்ல அறிவிப்பு இந்த மீன் வளத் துறை பதிலுரையிலே வரும் என்று எதிர்பார்த்தோம்; வரவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தயவுசெய்து அதற்கு சரியான நடவடிக்கையை இப்போது இருக்கிற நல்ல சூழ்நிலையில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

தொடர்ந்து 10 ஆண்டுக்காலமாக என்னுடைய சொந்தக் கிராமமான புலியூர் காட்டுச் சாலையில் ஒரு கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகம் சிறப்பாக இயங்கி வந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய உறவினர் திரு. பூவராகன் அமைச்சராக இருந்த காலத்திலிருந்தும், என்னுடைய தாத்தா திரு. கோவிந்தசாமி படையாச்சி அவர்கள் எம்.பி., யாக இருந்தபோதும், இன்னொருவர் திரு. பண்ருட்டியார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதும் தொடர்ந்து என்னுடைய ஊரிலே இயங்கிவந்த அந்தக் கால்நடை மருத்துவமனை மற்றும் அந்த மருந்தகத்தில் இன்றைக்கு எதுவுமே இல்லை. 3 நாளைக்கு ஒரு முறை டாக்டர் வருகிறார்கள். நான்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். ஏற்கெனவே 10 ஆண்டுக் காலமாக எல்லா அமைச்சர்களுக்கும் கடிதம் கொடுத்தேன். ஆனால், இதுவரைக்கும் நடக்கவில்லை. தயவுசெய்து அமைச்சர் அவர்கள், அந்த '100 மருத்துவமனை' என்ற அறிவிப்பில், என்னுடைய சொந்த கிராமத்திலேயும், விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற அந்தக் கிராமத்தினுடைய கால்நடைகளுக்குப் பயன்படுகின்ற வகையில், மருத்துவமனையாக நீங்கள் அறிவிப்பீர்களா என்பதையும் இந்த நேரத்திலே கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களுக்கு வழங்கப்படக்கூடிய நிவாரணத் தொகையை, ரூபாய் 500–இலிருந்து 800 ரூபாயாக உயர்த்தியிருக்கக்கூடிய தமிழக அரசுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இன்று 300 ரூபாய் உயர்வு என்பது போதுமானதல்ல. ரூ.1,000–ஆக உயர்த்தித்

தருவதற்குப் பரிசீலிக்கக் கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு மட்டும்தான் இது வழங்கப்படுகிறது. மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களில் அந்த மீனை வாங்கி விற்பனை செய்யக்கூடிய, கணவனால் கைவிடப்பட்ட மீனவப் பெண்கள் அல்லது விதவை மீனவப் பெண்கள் அல்லது மீனவர்களுடைய மனைவி, மீனவப் பெண்கள் இவர்களுக்கெல்லாம் வழங்கப்படுவதில்லை. அவர்களும் மீன் சார்ந்த தொழில் செய்கிறார்கள். ஆகவே, அந்த மீனவப் பெண்களையும் பதிவு செய்து, மீன் தடை செய்யப்பட்ட காலத்தில் அவர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும். இந்தக் கோரிக்கை என்பது பல இடங்களிலிருந்து, 13 மாவட்டங்களிலுள்ள மீனவப் பெண்களிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.

அதேபோன்று ஆவின் ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்க வேண்டும். இறுதியாக I.P.L. கிரிக்கெட்டில், அதுவே நாடாளுமன்றத்தில் ஒரு ஜல்லிக்கட்டாக மாறிவிட்டதன் காரணமாக, ஒரு அமைச்சரையே Out செய்த ஒரு கிரிக்கெட்டாக போய்விட்டதனால், மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் நல்ல விளையாட்டான தமிழர்களினுடைய வீர விளையாட்டு ஜல்லிக்கட்டாவது தமிழகத்திலே தொடரட்டுமே என்றுதான் கேட்கிறார் என்று நான் கருதுகின்றேன். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நம்முடைய மண் சார்ந்த அந்த வீர விளையாட்டிற்கு 2 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என்பதையெல்லாம் தளர்த்துவதற்கு கூடுதலாக முயற்சி செய்ய வேண்டும். நேர்மையான விளையாட்டு அந்த விளையாட்டு. வீரம் சார்ந்த ஒரு நேர்மையான நல்ல விளையாட்டு. அதை ஊக்கப்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சார் போதும், clarification கட்சிக்கு ஒருவர்தான் கேட்க வேண்டும். நீங்கள் கையைத் தூக்கிக் கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறிக் கோழி நிறுவனங்கள், பல மாவட்டங்களிலே

விவசாயிகளை ஊக்கப்படுத்தி உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுத்து, வங்கிகள் மூலமாகக் கடன் பெறச் செய்து, ரூபாய் 10 இலட்சம், 20 இலட்சம் அவர்கள் கடன் பெற்று, அந்த உற்பத்தியைத் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுத்தன. அவர்கள் கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதற்காகக் கொடுப்பதென்று முடிவு செய்துவிட்டு அதை நிறுத்திவிட்டார்கள். கடன் பெற்ற விவசாயிகள் மிகப் பெரிய இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். திரும்பவும் அதை மறுபரிசீலனை செய்து அவர்களை வாழ்விப்பதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே, நமது சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர்கூட கோரிக்கையை வைத்திருக்கிறார். இது மாநிலம் முழுவதும் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அந்த முன்னணி நிறுவனங்கள் செய்திருக்கிற அந்தக் காரியங்களை மறுபரிசீலனை செய்து விவசாயிகளுக்கு அந்தப் பணம் கிடைப்பதற்கும், அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குமுரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், what is this? No, No. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. ரவிக்குமார். அடுத்த Demand-ஐ எடுக்க வேண்டும்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களும், மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும், பால் உற்பத்தியாளர்களுக்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 7–3–2007–ல் பசும் பாலுக்கு 1 ரூபாய் 50 காசும், எருமைப் பாலுக்கு 1 ரூபாய் 50 காசும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். 10–3–2008–இல் பசும் பாலுக்கு 2 ரூபாயும், எருமைப் பாலுக்கு 4 ரூபாயும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். 1–9–2009–ல் பசும் பாலுக்கு 2 ரூபாயும், எருமைப் பாலுக்கு 5 ரூபாயும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். பசும் பால் விலையை 32 சதவீதத்திற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம், எருமைப் பாலுக்கு 100 சதவீதம் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். 9–வது மாதத்தில்தான் முடிவு செய்து,

தற்போது 7 மாதங்கள்தான் ஆகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை கடந்த ஆட்சிக் காலத்தில் பால் விலையை உயர்த்திக் கொடுக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்களும், மற்ற பொருட்கள் விலை உயர்ந்திருக்கிறது; இதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார். அவருடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும்கூட, ஆண்டுக்கு ஒரு முறை உயர்த்திக் கொடுத்ததே, திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஏழு மாத காலத்தில் உயர்த்திக் கொடுப்பதற்கு தற்போது எப்படி முடியும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். ஆக, வரக்கூடிய காலங்களில் இந்தக் காரணங்கள் வருகிறபொழுது, உற்பத்தியாளர்களுடைய சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி, அதை முடிவு செய்வதற்கு நிச்சயமாக தலைவர் கலைஞர் அவர்கள் முடிவெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று; பணியாளர்களுக்கு pension system கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்பொழுது போக்குவரத்துத் துறையில் இருப்பதைப் போலவோ அல்லது மின்சாரத் துறையில் இருப்பதைப் போலவோ இதில் கொண்டு வருவதில் சிரமம் இருக்கிறது. கொண்டு வரவேண்டும் என்றால், அதற்காக ஒரு நிதி ஒதுக்கீடு செய்து, அரசாங்கத்தின்மூலமாக 300 கோடி ரூபாய் வரைக்கும் பெற்று, பிறகு துறை மூலமாகப் பெற்று, இன்ஷூரன்ஸ் மூலமாக அதிலிருந்து வரக்கூடிய வட்டியை வைத்துக் கொண்டுதான் செய்ய முடியும். தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் என்னிடம் வந்து பேசுகிறபோது, அவர்களிடமே சொல்லியிருக்கிறேன். ஒரு நல்ல கருத்துரு கொண்டு வாருங்கள்; ஒரு வழக்கறிஞரை வைத்து நல்ல கருத்துருவினைக் கொண்டு வருகிறபோது, தலைவர் கலைஞர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று முடிவு செய்வோம் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்தச் சங்கத் தலைவர்கள் வருகிறபொழுது கோரிக்கையை மாத்திரம் கொடுக்கிறார்களே தவிர, அதற்கான கருப்பொருளை யாரும் இதுவரை வந்து கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்ற கருத்துகள் வருகிறபோது மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களிடம், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சென்று, அதற்கான முடிவு எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, Star Health. Star Health–ஐப் பொறுத்த அளவு, காலத்தோடு பணியாளர்கள் அதற்கான மனுக்களைச் செய்யாமல்

இருந்ததால், நம்முடைய செயலாளர், எங்களுடைய M.D. அவர்கள் எல்லாம், நம்முடைய Finance Secretary–யைப் பார்த்துப் பேசி இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி ஒய்வூதியம், பால் விலை உயர்வு ஆகியவற்றில் அவ்வளவுதான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மற்ற நடவடிக்கையின்படி இந்தத் துறை சரியாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சிக் கட்டுப்பாட்டிலே இருங்கள். உட்காருங்கள்,*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், சுனாமியின்போது அப்போது ஆட்சியில் இருந்த அவர்கள், எல்லாக் காரியங்களையும் செய்ததாக இங்கே சொல்லியிருக்கின்றார்கள். சுனாமியின்போது அன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் இன்றைய முதல்வராக இருக்கக்கூடிய ஐயா கலைஞர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி பல்லாயிரம் கோடி ரூபாய் அதாவது 4,800 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசுக்கு சுனாமி நிவாரண நிதியாக வழங்குவதற்கு மத்திய அரசு உத்தரவிட்டது. ஆனால், அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் சரியான முறையிலே செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.*

அதிலும், இன்றைக்குக்கூட நான் இந்த அவையிலே படிக்கும்போதுகூட சொன்னேன்; 1 ஆம் வகுப்பிலே இருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மீனவப் பிள்ளைகளுக்கு மாதம் 300 ரூபாய், அதாவது ஆண்டிற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் 3,600 ரூபாய் வழங்க வேண்டும் என்கின்ற பிரதம மந்திரியின் கல்வி ஊக்கத் தொகை திட்டம் இருந்தும்கூட, அ.தி.மு.க. ஆட்சியில் மீனவப் பிள்ளைகளுக்கு அந்தப் பணம் வழங்கப்படாதது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள்மீது உங்களுக்கு அக்கறை இல்லாமல் போனதால்தானே நீங்கள் வழங்காமல் இருந்தீர்கள்.

அதைப்போலவே, சுனாமி ஏற்பட்டபொழுது அன்றைக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்குத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகத்தான் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது.

அரசின் சார்பாக, இன்றைக்கு நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், நான் குறிப்பிட்டதைப்போல 13 கடற்கரை மாவட்ட ஆட்சியாளர்களை, கன்னியாகுமரியிலிருந்து திருவள்ளூர் வரை இருக்கக்கூடிய கடற்கரை மாவட்ட ஆட்சியாளர்களை அழைத்து, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்த அந்த அதிகாரிகளை அழைத்து. ஆய்வு நடத்தி, அதில் என்னென்ன குறைபாடுகளை, அந்த ஆட்சியாளர்கள் செய்திருக்கிறார்கள், என்னென்ன செய்யத் தவறியிருக்கின்றார்கள் என்பதனைக் கண்டறிந்து, 1,000 கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கீடு செய்து, மீனவ மக்கள், ஒவ்வொருவருக்கும் 2,30,000/–, 2,40,000/, மற்றும் 2,50,000/ – என்ற அளவில் அந்த விலை ஏற்றத்தின் காரணமாக உயர்த்தி, 40,000 வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் மாண்புமிகு முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–15

உங்களுடைய அரசினுடைய திட்டமாக, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுனாமி காலத்தில் ஒரு வீடாவது, நிதி ஒதுக்கீடு செய்து கட்டிக் கொடுத்தீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதேபோல, அன்றைக்கு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சுனாமி ஏற்பட்டபோது மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதிதான் விசைப் படகு உரிமையாளர்களுக்கு (குறுக்கீடுகள்) இருபது இலட்சம் ரூபாய் என வழங்கப்பட்டது. அதில், 5 இலட்சம் ரூபாய் மானியமாகவும், (குறுக்கீடுகள்) 15 இலட்சம் ரூபாய் வங்கிக் கடனாகவும் அன்றைக்கு அந்த நிதி வழங்கப்பட்டது. (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: உண்மையைச் சொன்னால் ஏன் இப்படிக் கோபப்படுகிறீர்கள்? ஆதாரத்தோடு என்னால் சொல்ல முடியும். நான் ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். ஏன் இப்படிக் கோபப்படுகிறீர்கள்? நண்பர் திரு. ஜெயக்குமார் பேசும்போது நான் அமைதியாக அமர்ந்திருக்கவில்லையா? நான் பேசும்போது உட்காருங்கள். நான் பேசிய பிறகு உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள், நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் இப்படி அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை. (குறுக்கீடு)

நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்.

சுனாமியால் மீனவர்கள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று மீனவத் தலைவர்களும், மீனவ மக்களும் நம்முடைய முதல்வர் கலைஞர் ஐயா அவர்களிடத்தில், மத்திய அரசுக்கு 80 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்து மனு கொடுத்தார்கள். ஆனால், மத்திய அரசுக்கு அந்த மனுவைப் பரிந்துரை செய்யாமல், நம்முடைய முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், தமிழக மீனவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக, பாசத்தின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசே அந்த 80 கோடி ரூபாயை ஏற்கும் என்று அறிவித்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விடுபட்ட ஒரு சிலர் என்னிடம்கூட மனுக்களைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதனையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணன் திரு. கோ.க. மணி அவர்கள், இங்கே மீனவ கூட்டுறவுச் சங்கத்தில் மகளிரை உறுப்பினராகச் சேர்க்கும் பணி சரியாக நடைபெறவில்லை என்று சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறாத காரணத்தால், புதிதாக உறுப்பினர்களைச் சேர்ப்பது தடையாக உள்ளது. இருந்தாலும், அதிலே இணை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான அரசினுடைய ஆணை பிறப்பிக்கப்பட்டு, இணை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணன் திரு. கோ.க. மணி அவர்கள் எந்தப் பகுதியிலே சேர்க்கப்படவில்லை என்று என்னிடம் தகவல் தெரிவித்தால், அந்த மகளிர் கூட்டுறவுச் சங்கத்திலே அந்த மகளிரைச் சேர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் ஒவ்வொரு மானியத்தினுடைய பதிலுரையிலும் குற்றச்சாட்டாகவே,

உண்மைக்குப் புறம்பான தகவலை இங்கே பதியவைத்துக் கொண்டிருக்கிறார். சுனாமி 2004–ல் ஏற்பட்டபொழுது, உடனடி நிவாரணமாக . . . (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் ஒன்றியம், முள்ளிப்பாடி ஊராட்சி அருகில் உள்ள சந்தனவர்த்தினி ஆற்றைக் கடந்து செல்வதற்கு, பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,055,86,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,400,54,09,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13473, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து கிராமப்புறச் சாலைகளில் மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாகவும், பழுதடைந்த ஆடுதுறை முதல் திருப்பனந்தாள் சாலையைச் சீர் செய்யவும், தற்போது பழுதுபார்க்கப்படும் சாலையைப் புதிய சாலையாகவும் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,055,86,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,400,54,09,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13495, திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார்கோயில் வழியாக சிதம்பரம் முதல் திருச்சி வரை அறிவிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலையை முழுமையாக அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,055,86,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,400,54,09,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13546, திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதி, கோயம்பள்ளி–மேலப்பாளையம் இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,055,86,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,400,54,09,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே

@ 592 முதல் 746 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையின் இறுதியில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை மீது விவாதம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

***திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 முதல் 2006 வரை 5 ஆண்டுக் காலம் தமிழகத்தில் ஒட்டுக்காக ஆட்சி நடத்தாமல், நாட்டு நலனுக்காக, எதிர்கால சந்ததியினரின் தேவைகளை அறிந்து (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையோடு, நிருவாகத்தில் அரசியல் தலையீடு இல்லாமல், நேர்மை, நியாயம், சிக்கனம் ஆகியவற்றினைக் கடைப்பிடித்து, மக்களுக்கான ஆட்சியை நடத்திய எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 2010–2011 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துகளை எடுத்து வைக்கின்றேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது, அந்த நாட்டின் உட்கட்டமைப்புகள் எப்படி அமைந்துள்ளனவோ அவற்றைப் பொறுத்துதான் அமையும்.

நல்ல சாலைகள் உள்ள இடங்களில் வசிக்கும் மக்களின் நாகரிகம், தொழில், பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் மேம்பட்டிருப்பதாகவும், தரமற்ற சாலைகள் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும், சாலைகள் குறித்த உலக ஆய்வு ஒன்று கூறுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான், 2001–இல் ஆட்சிப் பொறுப்பேற்ற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலை மேம்பாடு குறித்து கலந்தாய்வு செய்து, சிறந்த சாலைகள் தமிழகத்தில் அமைக்க முனைப்போடு பாடுபட்டார்கள் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–35

கடந்த 2009–2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ரூபாய் 1,024 கோடி நிதிப் பற்றாக்குறை இருக்கும் என்று கூறியிருந்தார்கள்.

அது ஆண்டு முடிவில், ரூபாய் 5,019 கோடி ரூபாயாக உயர்ந்தது. இதை எப்படிச் சரி செய்தார்கள் என்று பார்த்தால், 3,000 கோடி ரூபாய் கடன் வாங்கியும், சில துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து 1,380 கோடி ரூபாயை அரசு திரும்பப் பெற்றும் சரி செய்துள்ளது. அதில் குறிப்பாக, கடந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கிய தொகையிலிருந்து ரூபாய் 400 கோடியைத் திரும்பப் பெற்றுள்ளது. எனவேதான் சாலைகள் அமைப்பதும், பராமரிக்கப்படுவதும் சரியாக நடக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

'தாருக்கு நீர் எதிரி' என்பார்கள். பெரும்பாலும் வெயில் காலங்களில் முன்னெச்சரிக்கையாக சாலைகள் செப்பனிடப்பட வேண்டும். ஆனால், இந்த ஆட்சியில் மழைக்காலங்களில்தான் ஓரிரு சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்படுவதைக் காண முடிகிறது. தார், ஜல்லி, கிராவல், ஊழியர்களின் கூலி மற்றும் சாலைப் பணிகளின் ஒப்பந்தம் பெற, என அனைத்தும் உயர்ந்துவிட்டது. சாலைப் பணிகளின் ஒப்பந்தத்தைப் பெற மட்டும், திட்ட மதிப்பீட்டில் 30, 40 சதவிகிதம் தொகை போய்விடுவதாக ஒப்பந்தக்காரர்கள் கூறுகிறார்கள். மீதமுள்ள பணத்தைக்கொண்டு போடப்படும் சாலையின் தரம் எப்படித் தரமாக இருக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான், இந்த ஆட்சியில் செப்பனிடப்பட்ட தார்ச் சாலைகள் தூரம் கூடிக்கொண்டே போகிறது. தரம் குறைந்துகொண்டே வருகிறது என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கை காரணமாக, சாலைகளில் வாகனப் போக்குவரத்து கணிசமாக உயர்ந்து, அதன் காரணமாக, சாலை குறிப்பிட்ட கால அளவிற்கு முன்னதாகவே பழுதடைந்துவிடுகிறது. விரைவில் செப்பனிடப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் சாலைகள் பராமரிப்புச் செலவு அதிகரிக்கிறது. ஆனால், இந்த அரசு பராமரிப்புச் செலவிற்குக் கூடுதலாக நிதியொதுக்க முன்வருவதில்லை. எனவேதான், அடிக்கடி பழுதடைந்துவிடுகிறது. ரோடு நன்றாக இருந்தால் நாடு நன்றாக இருக்கும் என்பார்கள். ஆனால், இங்கு ரோடும் நன்றாக இல்லை; நாடும் நன்றாக இல்லை. எனவேதான், சாலை விபத்துகள் மூலமும், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு மூலமும், மக்களின் சாவு எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29–4–2010 அன்று வெளியான 'தினமலர்' பத்திரிகையில், '19 பேர் பலி – ஒரே நாளில் தமிழகத்தில் அடுத்தடுத்து விபத்து' எனச் செய்தி வந்துள்ளது. பெரிய நகரங்களில் பகல் நேர வாகனப் போக்குவரத்தைக் காரணம் காட்டி, இரவு நேரத்தில் தார்ச் சாலைப் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்நேரத்தில், துறை சார்ந்த தொழில்நுட்ப அலுவலர்கள் அல்லது துறையின் பொறுப்புள்ள அலுவலர்கள் யாரும் இருப்பதில்லை. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் விருப்பப்படி, குறைந்த அளவு தார் கலந்த ஜல்லி, கலவையின் உயரத்தைக் குறைத்து, ரோடு ரோலர் இயந்திரத்தை வைத்து, சரியாக ஜல்லி கலவையை நசுக்காமல், சாலைப் பணி நடைபெறுவதால் குறுகிய காலத்தில் சாலைகளில் ஜல்லி பெயர்ந்து, பழுது ஏற்பட்டு, வாகனப் போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, இரவு நேரங்களில் சாலைப் பணிகள் செய்வதையும், துறை அலுவலர்கள் இல்லாத நேரத்தில் தார்ச் சாலையை அமைக்கும் பணி மற்றும் சிமென்ட் கலவை கலந்த கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாடோடி மன்னன் திரைப்படத்தில் 'பொறுப்புள்ள மனிதர்களின் தூக்கத்தினால் பல பொன்னான வேலைகளெல்லாம் தூங்குதப்பா' என்று பாடுவதைப்போல, இந்த அரசின் நான்கு ஆண்டுக் கால ஆட்சியில், 2006–2007 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பல பணிகள் தூங்கிக் கிடப்பதன் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு, உசிலம்பட்டி நகரில் சுற்றுச் சாலை வரும் என்று அறிவிக்கப்பட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. ஆண்டிப்பட்டி நகருக்குச் சுற்றுச் சாலை வரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முற்பகல் 11–40

தேசிய நெடுஞ்சாலை எண் 208–இல் திருமங்கலம் ஆலப்பட்டி அருகே பெரிய பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதேபோல, மதுரை தத்தனேரி செல்லூர் இரயிவே மேம்பாலம் கட்டும் பணி

முடங்கிக் கிடக்கிறது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மதுரை, தேனி மாவட்டங்களில் மட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் முடங்கிக் கிடப்பதற்கு என்ன காரணம் என அறிய விரும்புகிறேன். இந்த அரசு, மதுரை, தேனி மாவட்டங்களை ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் புறக்கணிப்பதாக மக்கள் எண்ணுகிறார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 49 நீட்டிப்பில், உசிலம்பட்டி தாலுகா அலுவலகம் அமைந்துள்ள இடத்திலிருந்து மலையாண்டி தியேட்டர்வரை சுமார் 500 மீட்டர் தூரம் 30 அடி அகலம் கொண்ட சாலையாக இருக்கிறது. சாலையின் இருபுறங்களிலும் வியாபார நிறுவனங்கள், குடியிருப்புகள், தியேட்டர்கள், கோயில், மருத்துவமனை என இருப்பதால், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியாக இருக்கிறது. இச்சாலையில் காலை மாலை நேரங்களில் போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்படுவதால், உசிலம்பட்டி நகருக்கு ஒரு சுற்றுச் சாலை அமைப்பது மிகவும் அவசியம். உசிலம்பட்டிக்கு 2006–2007 இல் அறிவிக்கப்பட்டு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அங்கு சுற்றுப் பாதையை விரைவில் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அமைக்கப்படும் சுற்றுப் பாதையை உசிலம்பட்டி பசும்பொன் தேவர் கல்லூரியிலிருந்து தெற்குப் பகுதியில் பேரையூர் சாலை பண்ணைப்பட்டி ஆற்றின் பாலம் அருகில் இணைத்து மாதரைக் கிராமத்தின் அருகே தேனிச் சாலையில் இணைத்து, உசிலம்பட்டி நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கலாம் என்பது பொது மக்களுடைய கருத்து என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பேரையூர்–உசிலம்பட்டி சாலையில், உசிலம்பட்டிக்குத் தெற்குப் பகுதியிலிருந்து வரக்கூடிய தூத்துக்குடி, திருநெல்வேலி, இராஜபாளையம் மற்றும் குற்றாலம் போன்ற நகரங்களிலேயிருந்து தேனிக்கு வரக்கூடிய வாகனங்கள் உசிலம்பட்டி நகரின் உட்பகுதியில் செல்லாமல் மாற்றுப் பாதையில் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர், கன்னியாகுமரி நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7–இல் திருமங்கலத்திற்கு அருகே உசிலம்பட்டி–திருமங்கலம் சாலை இணையும் இடத்தில் சரியாக திட்டமிடாததன் காரணமாக, ஆறு

மாத காலத்திற்குள் 13 விபத்துகள் நடந்துள்ளன. அந்த விபத்துகளில் 12 பேர் மரணமடைந்துள்ளனர். கடைசியாக, விருதுநகர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் வாகனம் விபத்துக்குள்ளாகி, அவரின் பாதுகாவலர் மரணமடைந்துவிட்டார். காவல் துறைக் கண்காணிப்பாளரும் அவரது ஓட்டுனரும் படுகாயம் அடைந்துள்ளனர். சரியாக திட்டமிடாமல் உசிலம்பட்டி–திருமங்கலம் சாலை சந்திப்பில் வாகனங்களைப் போக்குவரத்திற்கு அனுமதித்தது, மிகப் பெரிய தவறு. தற்பொழுது மாற்று ஏற்பாடாக பக்கத்திலே இருக்கக்கூடிய மழை நீர் செல்லும் ஆற்றின்கீழே உள்ள பாதையில் போக்குவரத்து வாகனங்கள் விடப்பட்டிருக்கின்றன. அதிலே பேருந்துகள் மட்டும்தான் செல்லுகின்ற அளவிற்கு உயரம் இருக்கிறது. கனரக வாகனங்களான கன்டெய்னர்கள், சரக்கேற்றிய வாகனங்கள் போன்றவை எல்லாம் செல்ல முடியாமல் பல்வேறு சிரமத்திற்குள்ளாகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 12 பேர் விபத்துகளிலே உயிரிழந்ததற்குப் பின்பும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு காவல் துறை அதிகாரி அவர்கள், விபத்திலே காயமுற்றார்; அவருடன் வந்த பாதுகாவலர் இறந்துவிட்டார் என்றவுடன் போக்குவரத்தைச் சீர் செய்ய காவல் துறையும் , நெடுஞ்சாலைத் துறையும் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கின்றன. ஆக, பொதுமக்கள் 12 பேர் உயிரிழந்ததைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து சாலைகள் அமைக்கும்போதும், பாலங்கள் கட்டும்போதும், முன்கூட்டியே இந்த விபத்துகளையெல்லாம் தடுக்கின்ற வகையிலே, திட்டமிட்டிருந்தால் இவ்வளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்காது என்பது அந்தப் பகுதி மக்களுடைய கருத்தாக இருக்கிறது.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களிலே குறிப்பாக எனது தொகுதியில், நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சாலைகள் குடியிருப்புப் பகுதியின் நடுவே செல்கின்றன. சாலைகளை ஆண்டுக்காண்டு பராமரிக்கின்ற காரணத்தினால், சாலையின் உயரம் கூடிக்கொண்டே செல்வதால், சாலையின் அருகில் உள்ள வீடுகளின் வாசல் தாழ்ந்துவிடுகிறது. அதன் காரணமாக, சாலையில் விழும் மழைநீர் வீட்டின் வாசல் வழியாக உள்ளே செல்கிறது.

இப்படிப்பட்ட அவல நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளையெல்லாம், குடியிருப்புப் பகுதிகளிலே செல்கின்ற சாலைகளையெல்லாம் சிமெண்ட் சாலைகளாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக, எனது தொகுதியிலுள்ள உத்தபுரம், அத்திப்பட்டி, பாப்பிநாயக்கன்பட்டி, சாப்டூர் போன்ற ஊர்களுக்குள் செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கின்றபொழுது, 10, 15 ஆண்டுக் காலத்திற்குச் சாலைகளைச் செப்பனிட வேண்டிய அவசியமிருக்காது. இதன் காரணமாக மக்களும் நிம்மதியாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலைகள் அமைந்திருக்கின்றன. இந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பு செய்வதற்கு, ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான சாலைப் பணியாளர்கள் அல்லது நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தினால், ஊராட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளெல்லாம் படுமோசமான நிலையிலே இருக்கின்றன. புதர் மண்டி, குண்டுங்குழியுமாக உள்ளன. இதனால், போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்படுவதுபோல, ஒவ்வோர் ஆண்டும் 100 கிலோ மீட்டர் வரை ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை எடுத்து, பராமரிப்பு செய்து அவர்களுடைய கட்டுப்பாட்டிலே தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான்கு வழிச் சாலைகள், ஆறு வழிச் சாலைகளிலெல்லாம் சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டிருப்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். நான்கு வழிச் சாலைகளாக அமைக்கப்பட்டு, போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ள இந்தச் சாலைகளில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் பணியில் உள்ளவர்கள், தங்களது கைகளிலே கம்பு, இரும்பு போன்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டு வண்டிகளை நிறுத்தி, “எடு, பணத்தை” என அதிகாரத் தோரணையில் பேசுவது, வாகனத்தில் செல்லும் குடும்பப் பெண்களுக்கு பய உணர்வை

ஏற்படுத்துகிறது. மேலும், வாகனக் கட்டணத்தை அதிகமாக, அதாவது 50 ரூபாய், 60 ரூபாய் என நிர்ணயம் செய்து, வசூல் செய்கிறார்கள். இந்தக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, எங்கள் மதுரை மாவட்டத்தில் மேலூர் பகுதியில் கார் வைத்துள்ள விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு காலையிலும், மாலையிலும் தங்களது சொந்த விவசாய நிலங்களில் நடைபெறுகின்ற பணிகளைப் பார்ப்பதற்குச் செல்வதற்கு, அந்த சுங்கச் சாவடியைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவ்வாறு செல்கின்றபோது, சுங்கச் சாவடியிலே காலையிலே 50 ரூபாய், மதிய உணவிற்கு வரும்போது 50 ரூபாய் என்று, இரண்டு, மூன்று முறை போகின்றபொழுதும், வருகின்றபொழுதும் பணம் கேட்டு, அடிக்கடி தகராறு செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு, அந்தக் காரின் உரிமையாளர்களுக்கு, உள்ளூரிலே வசிப்பவர்களுக்கு ஏதாவது ஓர் அடையாள அட்டை கொடுத்து, அவர்களும் பயன்பெறத்தக்க வகையில், பிரச்சினை இல்லாமல் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக நாங்கள் சென்னையிலேயிருந்து மதுரை செல்வதற்குக் காரிலே பயணம் செய்வதாக இருந்தால், சுமார் 10, 15 சுங்கச் சாவடிகளைக் கடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் இலவசமாக அனுமதித்துவிடுகிறார்கள். ஆனால், சாதாரண குடும்பஸ்தர்கள் செல்கின்ற காருக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்று சொல்லி, 8, 10 சுங்கச் சாவடிகளில் 500, 600 ரூபாய் வரை கட்டணம் செலுத்த வேண்டிய ஒரு பரிதாப நிலை ஏற்படுகிறது. இதை அரசு கவனமாகப் பரிசீலித்து, சுங்கச் சாவடிகளிலே பணம் வசூலிக்கும்போது குறைந்த கட்டணமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் கட்டப்பட்டுவரும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் பூமிக்குள் புதைவதாகச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. அதேபோல, எங்கள் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி—வத்தலக்குண்டு விரிவாக்கச் சாலையில் வெள்ளைமலைப்பட்டி என்ற கிராமத்தின் அருகே, ஓடையில் சுமார் 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவந்த பாலம், பயன்பாட்டிற்கு வரும்முன்னரே பூமிக்குள்

புதைந்து கொண்டிருக்கிறது; இதற்குக் காரணம் தரமற்ற வேலை என்று பத்திரிகைகளிலே படத்துடன் செய்தி வந்திருக்கிறது. எனவே, இந்த ஆட்சியில் தரச்சான்று பெறாமலேயே ஒப்பந்தக்காரர்களுக்குப் பணப் பட்டுவாடா செய்யப்படுவதே இதுபோன்ற தரமற்ற பாலங்கள் கட்டப்படுவதற்குக் காரணம் என அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. துரைராஜ், பேசி முடியுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. அந்த 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. சி. துரைராஜ்: ஒருசில கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

முற்பகல் 11–50

திரு. சி. துரைராஜ்: எனது தொகுதியில் ஒரு சில கோரிக்கைகள். மாநில நெடுஞ்சாலை எண் 154 வத்தலகுண்டு, பேரையூர், கே. கல்லுப்பட்டி, கள்ளிக்குடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலை எண் 208–இல் தே. கல்லுப்பட்டி, அம்மாப்பட்டி அருகிலுள்ள குறுகிய வளைவுச் சாலையை நேர்படுத்தி சாலை அமைத்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தையும், தேனி மாவட்டத்தையும் இணைக்கும் மல்லப்புறம்–மயிலாடும்பாறை சாலையை விரிவுபடுத்தி சீர்செய்ய வனத் துறையின்மூலம் மத்திய அரசு அனுமதியைப் பெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாவட்டம், சாப்டூர், சந்தையூர் சாலைக்கும் வனத் துறையின் அனுமதி பெற்றுத் தரவேண்டும்.

அதேபோல, தேனி, விருதுநகர் மாவட்டங்களை இணைக்கும் வரசநாடு, கிளவண்கோவில், வத்றாப்பட்டி, கூமாபட்டி சாலைக்கும் வனத் துறையின் அனுமதி பெற்று, அந்தச் சாலையை விரைவாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரையூர் நகரில், பேரையூர் பேரூராட்சிக்குச் சொந்தமான சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள தாலுகா ஆபீஸ் சாலையை, நெடுஞ்சாலைத் துறை தன்னுடைய வசத்திற்கு, கட்டுப்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எழுமலை—உசிலம்பட்டி, தும்மங்கோடு—உலைப்பட்டி ஆகிய இரு சாலைகளும் மாவட்ட முக்கிய சாலைகளாகும். வாகனப் போக்குவரத்து அதிகமாக இருப்பதால் இந்த ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள பேரையூர், தாலுகா அந்தஸ்து பெற்று சுமார் 18 ஆண்டுகளாகிவிட்டது. இங்கே ஒரு புதிய நீதிமன்றம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சம்பவத்திற்கும் நிகழ்விற்கும் ஒரு முன்னோட்டம் இருக்கும். கார்மேகம் சூழ்கிறது என்றால், மழை வரப் போகிறது என்று அர்த்தம். காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவானால், புயல் வரப்போகிறது என்று அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைராஜ், கோரிக்கையை மாத்திரம் வையுங்கள். காற்று வருகிறது, மழை வருகிறது என்கிறீர்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்கள், (குறுக்கீடு) உட்காருங்கள் போதும்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி.

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே, ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மாநகர் உளானே"

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்க மாநகரிலே இருக்கின்ற திருமாலை நோக்கிப் பாடுகிறார்.

முத்தமிழறிஞர், முதல்வர் கலைஞர் அவர்களே, அதே உணர்வோடு இந்திரலோகத்தை ஆளுகின்ற அந்தப் பதவியையும் வேண்டாமென்று உங்களோடு இருப்பதுதான் நாங்கள் பெறுகின்ற பேறு, பெருமை, உங்களிடம் கற்ற தமிழில், நீங்கள் கட்டிய

கட்டடத்திலே பேசுகின்ற வாய்ப்பே எங்களுக்குப் பிறவியிலே பெற்ற பயன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "பசி வந்திட பத்தும் பறந்து போகும்" என்று சொல்வார்கள். என்ன, அந்த பத்து?

"மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை

தானம் தவம், உயர்ச்சி தாளாண்மை – தேனின்

கசி வந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந் திடப் பறந்து போம்"

என்று சொல்வார்கள். அந்த 'பத்து' தமிழனின் பண்பாட்டுச் சின்னங்கள். பசி வந்தால், தமிழன் அந்தப் பத்துப் பண்பாடுகளையும் இழந்துவிடக் கூடாது என்பதற்காக, அந்தப் பத்துப் பண்புகளையும் பாதுகாத்து, பசியைப் பறக்கடித்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை அறிக்கையின் மூலமாகக்கூட, தொடர்ந்து ஐந்தாவது முறையும் வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையை வழங்க முடியும்; நிதிநிலை அறிக்கையின் மூலமாக சமூக நீதியையும் நிலைநாட்ட முடியும் என்று நிரூபணம் செய்துள்ளவர், மாண்புமிகு நிதியமைச்சர், இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்கள்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது திருநாவுக்கரசரின் முதுமொழி. 'என் கடன் பணி செய்து முடிப்பதே' என்பது நமது துணை முதல்வர் தளபதி அவர்களின் புதுமொழி. (மேசையைத் தட்டும் ஒலி) திருநாவுக்கரசர் மேலும் ஒரு விண்ணப்பம் தருகிறார்; உன் கடன் அடியேனைக் காப்பது என்று. இறைவனிடம் நினைவுபடுத்துகிறார்; விண்ணப்பம் கொடுக்கிறார். ஆனால், நாங்கள் வேண்டுகோள் வைக்காமலேயே, விண்ணப்பம் செய்யாமலேயே, எங்கள் தேவைகளை, கோரிக்கைகளை முடித்து வைக்கிற மாண்புமிகு தமிழகத் துணை முதல்வர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியால் வல்லாட்சியை உருவாக்க முடியும் என்று நிரூபித்தவர் நம்முடைய துணை முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11–55

80,000 மகளிர் சுய உதவிக் குழுக்களை இன்று இரண்டு இலட்சமாக வளர்த்து, இந்தியாவிலேயே அதிகமான மகளிர் சுய

உதவிக் குழுக்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு என உயர்த்தியவர் நம்முடைய தளபதி. (மேசையைத் தட்டும் ஒலி) சுழன்று, சுழன்று வந்து சுழல் நிதியும் வழங்கியவர் நம்முடைய தளபதி. அனைத்துப் பெண்களும் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்பதற்காக, மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் தன்னுடைய காலிலே நின்று, சுழல் நிதி மற்றும் நல உதவிகளைக் கொடுத்து, அவர்கள் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டியிருக்கும் நம் துணை முதல்வர் தளபதி அவர்களைப் பார்த்து மகளிர் உலகமே வாழ்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உலகமே உற்று நோக்கும் இந்த எழிலார்ந்த பேரவைக் கட்டடத்தை, மணி மாளிகையை உருவாக்கிய நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை இராஜராஜ சோழனோடும், கரிகால் பெருவளத்தானோடும் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் ஒப்பிட்டுப் பேசினார்கள். உண்மைதான். தஞ்சைப் பெருவுடையான் கோயிலை உருவாக்கி, ஆயிரம் ஆண்டுகள் நிறைவுபெறுகின்ற இந்த நாளிலும், அந்தப் பெரிய கோயிலின் ஆலய மணி ஒலிக்கின்றபோதெல்லாம், இன்றும் 'இராஜராஜ சோழன், இராஜராஜ சோழன்' என்று இசைப்பதைப்போல, பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் 'நடந்தாய் வாழி காவேரி' என்று பாராட்டப்படுகிற காவிரி ஆற்றிலே, கரிகால் பெருவளத்தான் கட்டிய கல்லணையிலிருந்து பாய்கின்ற நீரலைகளும் 'கரிகாலன், கரிகாலன்' என்று என்றும் எதிரொலிப்பதைப்போல, முதல்வர் கலைஞர் எழுப்பிய இந்தப் பசுமைக் கட்டடத்தில், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வீசும் காற்றிலும் கலைஞரின் வாசம் வீசும். (மேசையைத் தட்டும் ஒலி) 'கலைஞர், கலைஞர்' எனக் காற்றும் கவி பாடும் என்பதிலே ஐயமில்லை.

முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்டத் தலைநகரான திருவள்ளூரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, திருமழிசை–சத்தியவேடு சாலையில் மணவாளநகரிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை புறவழிச் சாலைக்கான நில எடுப்புப் பணிகள் தயார் நிலையில் உள்ளன. அரசு உத்தரவு வழங்கி, இந்த நிதி ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து, புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர்–ஊத்துக்கோட்டை சாலை ஆரணி ஆறு கடக்கும் இடத்தில், உயர்மட்ட பாலம் அமைக்க, ரூ.18 கோடி திட்ட மதிப்பீட்டில் பொருளாதார முக்கியத்துவம் மற்றும் அண்டை மாநில இணைப்புச் சாலை திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலைமூலமாக பாலம் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கோருகிறேன்.

கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர்–கலியனூர் இடையே ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஒன்றியச் சாலைப் பணிகள் நபார்டு கிராமச் சாலைகள் திட்டத்தின்மூலமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் முழுமைபெற, இந்த ஊராட்சியைச் சுற்றியுள்ள 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றிட, கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அகூர்–நத்தம் வழியாக திருத்தணிக்குப் புதிய புறவழிச் சாலையையும், அய்யனேரி–வீராணத்தூர் வழியாக சோளிங்கருக்குப் புதிய புறவழிச் சாலையையும் இந்த நிதி ஆண்டிலேயே அமைத்துத் தர வேண்டுகிறேன்.

கடந்த கால ஆட்சியில் திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் இரும்புப் பாலம் உடைந்து, உடைந்த அந்தப் பாலத்தைச் சேதாரமே இல்லாமல் ஐந்து ஆண்டுகள் அப்படியே பாதுகாத்து அ.தி.மு.க. அரசு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே ஒப்படைத்தது. முதல்வர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்று, பாலத்தைக் கட்டி முடித்தார், திறப்பு விழாவிற்குத் தயாராகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கொல்கத்தா நெடுஞ்சாலை, காரனோடை பெரிய பாலம் கடந்த கால ஆட்சியின்போது உடைந்துவிட்டது. ஐந்து ஆண்டுகள் கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டது அ.தி.மு.க. அரசு. முதல்வர் கலைஞர் வந்தார், விரைந்து செயல்பட்டதன் விளைவு, ஓரிரு மாதங்களில் பாலம் திறக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வரவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு ஆண்டுகளில் நெடுஞ்சாலைத் துறைமூலமாக ரூ.12,094 கோடி செலவில் 57,787 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், பாலங்கள் மேம்படுத்தப்பட்டு இருவழிச் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக, நான்கு வழிச் சாலைகள் ஆறு வழிச் சாலைகளாக மாறி, பயண நேரம், பயண தூரம் குறைந்து, நெடுஞ்சாலைகளெல்லாம்

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் காலத்திலே குறுஞ்சாலைகளாக மாறியுள்ளன. சென்னையிலிருந்து குமரி முனையைக் கூட கூப்பிடும் தூரத்திலே கொண்டு வந்து நிறுத்தியவர், நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பார்க்கும் இடமெல்லாம் பாலங்கள் அமைத்து, நான்கு ஆண்டுகளில் ரூபாய் 881 கோடி செலவில் 1,046 பாலங்களை விண்முட்ட எழுப்பி, வானம்கூட கைக்கு எட்டிய தூரம்தான் என்ற வரலாற்றை உருவாக்கியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவாஜி, உரையை முடியுங்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: 20 நிமிடம் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு உரையாற்றுவதற்கு 8 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: 'யாம் பசித்த போதெல்லாம் தாம் பசித்ததாக' என்ற வள்ளலாரைப்போல, இந்தத் தமிழ் மண்ணிலே தனி ஒருவனுக்குப் பசி என்றால், தனக்கு வந்த பசியாக வருந்திய காரணத்தினால், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி, பசிப் பிணியை விரட்டியவர் முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளி, வீடுகள்தோறும் கலையின் விளக்கம்' என்றான் புரட்சிக் கவிஞன் பாரதி. வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளி என்றால், வீதிகள்தோறும் இரண்டொரு பல்கலைக்கழகங்களை உருவாக்குகின்றவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆனால், வீடுகள்தோறும் கலையின் விளக்கம் என்று பாரதிதாசன் சொன்னான் என்றால், அதனுடைய உட்பொருள் நம்முடைய முதல்வர் கலைஞர் ஒருவருக்கு மட்டுமே தெரிந்த காரணத்தினால்தான் தமிழகம் முழுவதும் வீடுகள்தோறும் கலையை வளர்க்க வீட்டுக்கு வீட்டு இலவச கலர் டி.வி. கொடுத்து, பாரதிதாசன் கனவை நனவாக்கியவர் நம்முடைய தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.

நண்பகல் 12–00

"கலைஞர் என்ன கடவுளா?" என்று யாரோ விமர்சனம் செய்ததை நேற்று நான் படித்தேன். "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்று நம்முடைய முன்னோர்கள் சொன்னார்கள். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு என்று உண்டி கொடுத்து பசி போக்கிய கலைஞர், கடவுள்தானே? கல்லுக்குள் தேரைக்கும் கடவுள் உணவு அளிப்பவர் என்று சொல்கிறார்கள். கருவறைக்குள் உள்ள குழந்தைக்கும் ஆறாயிரம் ரூபாய் கொடுத்து உணவு அளிக்கும் கலைஞர் கடவுள்தானே, "குப்பை மேட்டினிலே மலர் கொஞ்சும் குருகத்து கொடி வளராதோ நன்னெஞ்சே" என்று பாடிய பாரதி, "பகை நடுவே பண்பே உருவான பரமன் வாழ்கிறான்" என்று பாடினான். அதுதான் எங்கள் தலைவர் முதல்வர் கலைஞர் என்பதைக் கூறி எத்தனையோ மக்கள் நலத் திட்டங்கள், மனித நேயத் திட்டங்களை கலைஞர் அவர்கள் தமிழகத்திலே அறிமுகப்படுத்தினாலும், சாதனைகளுக்கெல்லாம் அகரமாக, சிகரமாக அமைந்து இருப்பது தலைவர் கலைஞர் அவர்களின் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்தான். இந்தத் திட்டம் அறிமுகமான ஐந்து மாதத்தில் சிகிச்சை முடிந்து பயனடைந்தவர்கள் இதுவரை 85,612 பேர் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தனது மானியக் கோரிக்கையிலே அறிவித்தார்கள். இந்த, 85,612 பேர் மரணத்தின் வாசலிலே நின்று கொண்டிருந்தவர்கள். இவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்து காப்பாற்றியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்.

அதேபோல, 108 என்பது வைணவத் திருத்தலங்களை நினைவுப்படுத்துவதைப் போல, அவசர மருத்துவ உதவிக்கு ஆம்புலன்ஸ் தொலைபேசி எண் 108 சேவை அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம், இதுவரை எத்தனையோ ஆயிரம் பேர் குணமடைந்து மறுவாழ்வு பெற்றுள்ளார்கள். தொடர்ந்து பெறுவார்கள். இவர்களும் மரணத்தின் வாசலில் நின்றவர்கள்தான்; மறுவாழ்வு பெற்றவர்கள்தான் என்பதைக்கூறி, ஆக, மரணத்தின் வாசலில் நிற்பவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு கொடுத்த நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பார்த்து, இந்த நிதிநிலை அறிக்கைமூலமாக மரண வாசலுக்கு அழைத்துச் செல்கிறார் கலைஞர் என்று விமர்சனம் செய்தார்கள். ஆனால், யார் மரண வாசலில் நிற்கிறார்கள் என்பதற்குக் காலம் பதில் சொல்லும்.

எனக்குக்கூட இங்கு பேசுகின்ற நேரத்தில், நேரம் முடிந்துவிட்டதை அறிவித்திட மூன்று முறை மணி அடிப்பார், நம்முடைய பேரவைத் தலைவர். அதேபோல, தமிழகத்தில் முதல் மணி அடித்தாகிவிட்டது. இரண்டாவது மணி அடித்தாகிவிட்டது. மூன்றாவது மணியும் அடித்தாகிவிட்டது. 11–வது மணியும் இடைத்தேர்தலிலே பெண்ணாகரத்திலே அடித்துவிட்டார்கள். 2011–இலும் தமிழக மக்கள் இறுதியாக மணி அடிக்கப் போகிறார்கள். மரண வாசலிலே நிற்பது யார்; மன நோய் காப்பகத்தின் வாசலில் நிற்பது யார் என்பதை 2011–இலே நாடு சொல்லும். நாட்டு மக்கள் தீர்ப்பு வழங்குவார்கள் என்று கூறி உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடங்கள்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் குறித்த இந்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த அகிலம் போற்றும் அன்னை தியாகத் தலைவி சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வரும் பிற்படுத்தப்பட்டோரின் பாதுகாவலருமான முத்தமிழறிஞரும் தமிழகத்தின் வரலாற்றுத் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் மக்கள் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் ஆற்றல் அரசர் அண்ணன் திரு. மு.க. அழகிரி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றக் கட்சித் தலைவர் நயினா அவர்களுக்கும், எங்களுடைய கொறடா அண்ணன் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் துறையின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு சாலைகளை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதை உணர்ந்த நம்முடைய

அரசு, சாலைகளின் பராமரிப்புக்கும், மேம்பாட்டிற்கும், தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் கிராமங்களை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளின் (Other District Roads) மொத்த நீளம் 42,748 கிலோ மீட்டர் ஆகும். இவற்றில் கடந்த நான்கு ஆண்டுகளாக ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 6,652 கிலோ மீட்டர் நீளம் உள்ள மாவட்ட இதர சாலைகள் மட்டுமே மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறிகிறேன். இது மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளத்தில் 19 சதவிகிதம் மட்டுமே. மீதம் உள்ள 36,096 கிலோ மீட்டர் சாலைப் பணிகளையும் வேகமாக முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட இதர சாலைகள் பெரும்பாலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகவும், 10 ஆண்டுகள் கால இடைவெளியிலும் சீர் செய்யப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ளன. மாவட்ட இதர சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாவட்ட இதர சாலைகள் மற்றும் பெரும்பான்மையான சாலைகள் ஒருவழித் தடச் சாலைகளாகவே உள்ளன. இவற்றில் கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்லும் சாலைகளையும், கனிம சுரங்கங்கள் உள்ள சாலைப் பகுதிகளையும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழகத்தில், மாநில நெடுஞ்சாலைகளில் ஒருவழித் தடமே இல்லையென்ற நிலையை நமது அரசு உருவாக்கிட வேண்டும்.

பிற்பகல் 12–05

2007–2008 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில், நெடுஞ்சாலைத் துறையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடைமுறைகள் இரண்டு கட்டமாக கொண்டுவரப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக (I phase) 1–7–2007 முதல் ஒப்பந்த மதிப்புத் தொகை ரூ.10 இலட்சத்திற்கும் மேல் உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நமுனாக்களை tender schedule-ஐ இணைய தளத்தின்மூலம் பெற்றுக்கொண்டு ஒப்பந்தம் கோரலாம்.

இரண்டாம் கட்டமாக (II phase), 1–7–2007 முதல் ஒப்பந்தப்புள்ளிகள் இணைய தளத்தின் (On line) மூலமே செலுத்தும் நடைமுறை அமலாக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இவற்றில் இரண்டாம் கட்ட நடைமுறை நெடுஞ்சாலைத் துறையில் இன்றைய நாள் வரை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் உள்ளது.

இந்த நடைமுறையைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வர நமது அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையில், ஒப்பந்தக்காரர்களுக்கு contract profit என்ற நிலையை மத்திய அரசு உருவாக்கியது. ஆகையால், தேசிய நெடுஞ்சாலைகள் தரமாகவே இருக்கின்றன. இவற்றைப் பின்பற்றி, மாநில அரசு செயல்படுமானால், மாநில அரசின் நெடுஞ்சாலைகள் தரமாகவே இருக்கும்.

வாகனப் போக்குவரத்து அதிகமுள்ள நெடுஞ்சாலைகளைக் கண்டறிந்து அவற்றை தேசிய நெடுஞ்சாலைகளாகவே மாற்றி, தரத்தினை உயர்த்த வேண்டும். இதனால், மாநில அரசின் சாலைப் பராமரிப்புச் செலவினைக் குறைக்கலாம். மத்திய அரசு நிதியை நமது அரசு அதிகம் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டாகும். மேலும், சாலை அமைத்த காலத்தைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் சாலைப் பணிக்கு நிதி ஒதுக்கி பணி செய்யும் முறையை அரசு பின்பற்ற வேண்டுகின்றேன்.

சாலை மேம்பாட்டிற்காக SMEC International Pvt. Ltd., வழங்கிய ஆலோசனைகளான தரக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல், சாலை பயன்பாட்டாளர் பாதுகாப்பு, துறைக்கான நிதி, திட்டமிடுதல் ஆகியவை அரசால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும் அனைத்து கிராமப்புறச் சாலைகளையும் இருவழிச் சாலைகளாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையே ஏற்று நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் 20008 ஆம் ஆண்டு வரையிலான புள்ளிவிவர கணக்கின்படி, வாகனங்களின் எண்ணிக்கை 78 விழுக்காடு உயர்ந்துள்ளபோதிலும், உயிரிழப்புகள் ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு 10,000 வாகனங்களுக்கும் 19 ஆக இருந்த நிலை மாறி, தற்போது 12 ஆக குறைந்துள்ளது என்று தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்த உலக வங்கிக் குழு பாராட்டியுள்ளது என்பதை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன்.

தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளில் வேகத் தடைகள் வேகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்திட, மனித உயிர்பலிகளைத் தடுத்திட, நமது அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுகின்றேன். அதிக இடங்களில் Service Road-களையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நகர எல்லை சாலை நீளம் அதிகமாக உள்ளது. எனவே, சாலையில் போக்குவரத்துச் செறிவு கூடுதலாக உள்ளதால், சாலையின் தரம் அடிக்கடி உயர்த்தப்பட வேண்டியுள்ளது. சாலைகளை 5 வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டியுள்ளது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருப்பதால் சாலைகள் அடிக்கடி பழுதடைந்து வருகின்றன. எனவே, 5 வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டியவற்றை 3 வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்க அரசு ஆவன செய்தால் சாலையின் தரம் நன்கு உயர்த்தப்படும்.

மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தற்போது Paver Finisher இயந்திரம்மூலம் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரன்மூலம் மாவட்டத்தின் இதர சாலைகளுக்கும் சாலைகளைப் போட்டால், சாலைகளெல்லாம் தரமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளின் ஆயுட்காலம் அதிகரித்திட, தண்ணீர் நிற்காமல் வடிந்து செல்லும் இரப்பர் சாலைகளை உருவாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள தரைப் பாலங்கள், மேம்பாலங்களாக அமைக்க திட்டம் உருவாக்கப்பட வேண்டும். தமிழகத்தில் நான்கு வழிச் சாலைகளை விரிவுபடுத்தி, பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிமென்டு, கம்பி மற்றும் மணல் போன்ற பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், பாலங்கள், கட்டடங்களைக் கட்ட டெண்டர் எடுக்க யாரும் முன்வருவதில்லை. ஆகையால், மறு மதிப்பீடு செய்து தொகையை விரைந்து உயர்த்திக் கொடுத்தீர்களேயானால், பாலங்களையும், கட்டடங்களையும் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்கு வழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றபொழுது, பயணிகளின் மகிழ்விற்காகவும், ஓட்டுநர்களின் பாதுகாப்பிற்காகவும் ஒவ்வொரு 200 கிலோ மீட்டர் தொலைவிலும் ஓய்வு அறை, உணவு விடுதி, கழிப்பறை வசதி, வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–10

நெடுஞ்சாலைத் துறையில் ஒரே ஏரியாவில் பல பிரிவுகளைச் சார்ந்த பொறியாளர்களும், பணியாளர்களும் சென்று பணியாற்றி வருகின்றார்கள், R.R Project, Regular National Highway என்று. இதனால் அரசுக்குக் கூடுதலாக அதிகாரிகளின் பயணச் செலவு அதிகரிக்கின்றது. இதோடு மேற்பார்வையாளர்களுடைய அளவும் குறைகின்றது. இதைத் தவிர்க்க அதிகாரிகள் பார்வையிடும் எல்லைகளைக் குறைத்து ஒரே பகுதிக்குள் அனைத்து நெடுஞ்சாலை சம்பந்தப்பட்டப் பணிகளையும் ஒரே பொறியாளர் பிரிவுகளே கவனிக்குமாறு செய்தால் அரசுக்குச் செலவினமும் குறையும்; அதிக கண்காணிப்புப் பணியும் குறையுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையில் பயன்பாட்டில் உள்ள விதிகள் அடங்கிய கைப்புத்தகம் பல வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், தற்போது நடைமுறைக்கேற்றவாறு திருத்தம் செய்து வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரிந்துவரும் இளநிலை வரை தொழில் அலுவலர்கள் இருபது முதல் இருபத்து ஐந்து வருடங்களாக ஒரே பணியில் பதவி உயர்வு இல்லாமல் பணியாற்றி வருகின்றார்கள். இளநிலை வரை தொழில் அலுவலர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் வேலைப் பளுவைக் குறைத்தல் மற்றும் நிருவாகம் செம்மையாக நடைபெறும் நடவடிக்கையாக பொதுப் பணித் துறை, மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற துறைகளில் நடைமுறையில் உள்ள மண்டலத் தலைமைப் பொறியாளர் – Regional Chief Engineer— அலுவலகம் ஒன்று மதுரை, திருச்சி, திருநெல்வேலி வட்டங்களை உள்ளடக்கி மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் இராஜா முத்தையா மன்றம் வரையில் சாலையின் மையப் பகுதியில் மையச் சுவர் அமைத்து, சாலையின் போக்குவரத்தினைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன். மதுரையில் முக்கிய பகுதியான காளவாசல் நான்கு ரோடு சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைப் போக்க Fly over பறக்கும் பாலம் கட்ட அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரையில் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் வாகனங்கள் அதிகரித்து மிகப் பெரிய சிக்கல் ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகவே, இதனைத் தவிர்க்க, வைகையாற்றின் இரு கரையோரமாக அமைக்கப்பட்டிருக்கும் சர்வீஸ் ரோடு திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாததால், இந்தச் சாலையை விரிவுபடுத்தி, சீரமைத்து, பாத்திமா கல்லூரி அருகிலிருந்து விரகனூர் அருகே ரிங் ரோட்டில் இணையும் வகையில் அமைக்கப்பட வேண்டும். மேலும் மதுரையில் இன்னும் போக்குவரத்து இரட்டிப்பாகும் நிலையில் காமராஜர் சாலை, பைபாஸ் ரோடு, வெளி வீதிகள், திருப்பரங்குன்றம் சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளில் போக்குவரத்து அதிகரித்துள்ளது. எனவே சாலைகளை (மணியடிக்கப் பெற்றது) சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்தி போக்குவரத்து நெருக்கடியைப் போக்க அரசு விரைந்து செயல்பட வேண்டும்.

மதுரையைச் சுற்றிலும் ஆரச் சாலைகளைப் போர்க்கால அடிப்படையில் விரைவில் முடித்துத் தர வேண்டுகின்றேன். மதுரை கோரிப்பாளையம், செயின்ட் மேரிஸ் சர்ச், பெரியார் பேருந்து நிலையம் பகுதிகளில் சுழல் மேம்பாலங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன். மதுரையில் முக்கிய சாலைகளின் ஓரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களைப் பெரியார் பேருந்து நிலைய Shopping Complex பகுதியிலும், காலி செய்யப்படவிருக்கும் Central Market பகுதியிலும், நவீன முறையில் பல அடுக்குகளுடன்கூடிய வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட அரசு இராஜாஜி மருத்துவமனை அருகில் உள்ள சுரங்க நடைபாதை மற்றும் பெரியார் பேருந்து நிலைய மேம்பாலத்தையும் நவீன முறையில் மாற்றி அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியிலுள்ள செல்லூர் தத்தனேரி இரயில்வே மேம்பாலப் பணிகள் சுமார்

8 ஆண்டுகளாக நடைபெறுகின்றன. அந்தப் பாலத்தின் பணிகளை விரைந்து முடித்துத் தர வேண்டுகின்றேன். மேலும், மதுரை மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் தொடங்கி வெகுகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தை விரைவிலேயே முடித்து, மதுரை மக்களின் பயன்பாட்டிற்கு உதவி புரியுமாறு அரசை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) செல்லூர் பகுதியில் மழைவெள்ளக் காலங்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற, செல்லூர் கண்மாயை ஆழப்படுத்திப் புதிய வாய்க்கால்மூலம் வைகையாற்றில் தண்ணீர் சேரும் வகையில் திட்டம் தீட்டப்பட்டு அதற்கு நிதியும் ஒதுக்கி அறிவித்தது நமது அரசு. அந்தத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், உரையை முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மதுரை தேனி சாலையில் காளவாசல் முதல் நாகமலை புதுக்கோட்டை வரையிலான சாலை வளைவாகவும், குறுகலாகவும் விபத்துகளை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே மதுரை நகர் பைபாஸ் ரோட்டிலிருந்து மாடக்குளம் கண்மாய்க்கரை வழியாக, நாகமலை புதுக்கோட்டைக்கு 5 கிலோ மீட்டர் தூரத்தில் புதிய சாலையை அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும். அப்படிப் புதிய சாலை அமைகின்றபொழுது, அங்கே உருவாகும் தகவல் தொழில் நுட்பப் பூங்காவிற்கு இந்தச் சாலை பெரிதும் உதவிகரமாகயிருக்கும் என்று கூறிக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–15

மதுரையில் ஏற்கெனவே போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உள்வட்ட சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலை முழுமையாக நிறைவு பெறுவதற்கு உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை ஒரு ரிங் ரோடு அமைத்தால்தான், அந்த உள்வட்ட சாலை முழுமையாக நிறைவுபெறும். ஆகவே இந்தச் சாலையை அமைத்துத் தரவேண்டுகின்றேன். இதையும் தாண்டி நகரம் விரிவடைந்துள்ளது.

ஆகையால், திருமங்கலம், மேலூர், வாடிப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய நகரங்களோடு இணைக்கின்ற வகையில் புதிய வெளி வட்டச் சாலைகள் அமைக்கப்பட வேண்டும். மதுரை வைகை ஆற்றின் குறுக்கே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த கால ஆட்சியில் 3 தரைப் பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தற்போது அந்த 3 பாலங்களும் சீரமைக்கப்படாமல் உள்ளன. ஆரப்பாளையம், தைக்கால் தெரு, ஆழ்வார்புரம் ஆகிய தரைப் பாலங்களை குருவிக்காரன் சாலைபோல் மேம்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேந்திரன், உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது இல்லையா? இன்னும் மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும், அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். நேரமில்லை உரையை முடியுங்கள். மற்ற recommendations எல்லாம் இருக்கட்டும்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் இந்த நல்ல வேளையில், 28 ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்த உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம், மதுரையில் கட்டப்பட உள்ளது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றார்கள். அதற்காக மதுரைவாழ் மக்கள் மற்றும் உலகத் தமிழ் மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் எப்பொழுது கட்டப்படும், இதனுடைய செயல்பாடுகள் என்ன, இதன் அலுவலர்கள், அதிகாரிகள் நியமனம் எப்போது என்பதை அறிய விரும்புகின்றேன்.

ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டத்தை இணைக்கும் காவிரி ஆற்றின் குறுக்கே பள்ளிப்பாளையத்தில் கூடுதல் பாலம் அமைத்திட வேண்டுகின்றேன். ஈரோடு மாநகராட்சி வளர்ந்து வரும் மாநகராட்சி. இங்கு சுற்று வட்டச் சாலை அமைத்திட வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேந்திரன், உலகையே சுற்றாதீர்கள். விஷயத்தைச் சொல்லிவிட்டு உரையை முடியுங்கள்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இத்தனை நேரம் பொறுமையாகக் கேட்ட அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

திரு. கோ. எதிரொலி மணியன்: 15 நிமிடங்கள் கொடுங்கள் பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, 10 நிமிடங்கள்தான்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அகில இந்திய இதர பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் தலைவரும், மத்திய அரசிலே இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவிகித இட ஒதுக்கீட்டை வாதாடிப் பெற்றுத் தந்தவரும், தமிழகத்தின் அனைத்து சாதி மக்களுக்கும் அவரவர் எண்ணிக்கைக்கேற்ப அண்டை மாநிலங்களில் உள்ளதைப்போல தொகுப்புவாரி இட ஒதுக்கீடு வழங்கிடக் கோரி வரும் சமூக நீதிக் காவலரும், வட மாவட்டங்களிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே சமூக ஒற்றுமையை ஏற்படுத்த தொடர்ந்து 30 ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருகின்ற சமூக அமைதிக்கான நோபல் பரிசுக்கே தகுதியையுடைய, தாழ்த்தப்பட்டவரல்லாத ஒரு தலைவரான மக்கள் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைய வயதிலேயே ஏற்றமிகு அமைச்சராகி, எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, சுகாதாரத் துறையிலே சாதனைப் படைத்திட்ட எங்கள் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், நம்முடைய இயக்கத் தலைவர், ஓய்வறியா உழைப்பாளி அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இதே அவையில் மாண்புமிகு தமிழகத்தின் துணை முதல்வர் அவர்கள் தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போதுகூட, 'ஒரு நாட்டின் தொழில் வளம் பெருக வேண்டுமானால், அந்த நாட்டின் போக்குவரத்திற்கான அமைப்பு சரியாக இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். அந்த வகையிலே சாலைப் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து என்று நான்கு வகையான போக்குவரத்தையும் குறிப்பிட்டார்கள். அந்த நான்கு

வகையான போக்குவரத்திலே மிக முக்கியமானதும், மக்கள் அதிகம் பயன்படுத்தக்கூடியதும், குறிப்பாக, கிராமப்புற சாமானிய மக்கள் அதிகம் பயன்படுத்துவதுமான சாலைப் போக்குவரத்தே முதன்மையானது என்றால் மிகையாகாது. எனவே, அந்தச் சாலைப் போக்குவரத்தின்மூலம்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பெருமளவில் அதிகரிக்க முடியும் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. எனவே, ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது, குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சி என்பது, பெரும்பாலும் சாலையை நம்பியே உள்ளது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில், இது முழுக்க முழுக்க கிராமங்களை உள்ளடக்கிய நாடு. அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு, விவசாயம் சார்ந்த மற்றும் வளர்ந்து வரும் தொழில் சார்ந்த கிராமப்புறங்களை உள்ளடக்கியது என்றால் மிகையாகாது. எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது முழுக்க முழுக்க கிராமங்களையே சார்ந்தது என்பதை நாம் மறுத்துவிட முடியாது. அப்படிப்பட்ட கிராமங்களின் அடிப்படைத் தேவைகளில் சாலைகளே மிக முக்கியமானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு நாட்டின் தரம், அதன் சாலைகளின் தரத்தை வைத்தே கணக்கிடுவதாக அறிஞர்கள் சொல்கிறார்கள்.

நீங்கள் கொடுத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலேகூட, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகளின் மொத்த நீளம், 25,545 கிலோ மீட்டர் என்றும், மாவட்ட இதர சாலைகள் மட்டும் 36,096 கிலோ மீட்டர் என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். நெடுஞ்சாலைத் துறையிலேயே R.R. என்று குறிப்பிடுகின்ற கிராமப்புற சாலைகளின் நீளத்தின் எண்ணிக்கை இல்லாமலேயே 36,096 கிலோ மீட்டர் என்றால், அவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், சுமார் 75 சதவிகிதம் சாலைகள் கிராமப்புறங்களிலேதான் இருக்கின்றன என்பதை நம்மால் அறிய முடிகிறது. ஆனால் அப்படிப்பட்ட கிராமப்புறச் சாலைகளின் இன்றைய நிலையை நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டங்களின் முக்கிய சாலைகள் மட்டும் paver work மூலம் தரமாக, மேடு பள்ளமில்லாமல் போடப்படுகின்றன. ஆனால் O.D.R சாலைகளும், R.R சாலைகளும், இன்னும் சொல்லப்போனால், ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் போடப்படும் விதம் போக்குவரத்துக்கு உகந்ததாக இருக்கிறதா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12–20

O.D.R மற்றும் R.R சாலைகளைப் போடும்போது, அது எப்படி இருந்ததோ, அப்படி அப்படியே மேடு மேடாகவும், பள்ளம் பள்ளமாகவும் அப்படியே சாலைகளைப் போடுவது என்பது, ஏதோ ஒப்புக்குப் போடுவதுபோல ஒப்பந்தக்காரர்கள் பணி செய்வது என்பது, வருத்தப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. எனவே, அவற்றையும் மற்ற சாலைகளுக்கு இணையாக, paver work மூலம் போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஒரு காலத்தில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, நெடுஞ்சாலைத் துறையின் ஒரு பிரிவான R.R அலுவலகம்மூலம் எடுத்து மேம்பாடு செய்து, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கும் நிலை 1996 வரை இருந்தது. இப்போது அது இல்லாததால், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஒரு முறைப் போடப்பட்டால் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட புதுப்பிக்கப்படுவதில்லை; இடையில் பராமரிக்கப்படுவதுமில்லை. கேட்டால் நிதியில்லையென்று சொல்கிறார்கள். இதனால், அவை குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு இலாயக்கற்றதாகவே காலம் காலமாக இருந்து வருகின்றன. எனவே, கிராமச் சாலைகள் அனைத்தையும் நெடுஞ்சாலைத் துறையே தன்வசம் எடுத்துக்கொண்டு, பணிகளைச் செய்ய வேண்டுமென நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி அனைத்து சாலைகளும் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் வருமேயானால், குறிப்பாக ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் குறுக்கே செல்லும் ஆறுகள்மீது, நதிகள்மீது மேம்பாலம் கட்டுவதோ அல்லது தரைப் பாலம் கட்டுவதோ போன்ற பணிகளை நாம் செய்திட வழிவகையாவது கிடைக்கும் அல்லவா?

குறிப்பாக, எனது தொகுதியிலே உள்ள பெரிய கொழப்பலூர் to வினாயாகபுரம் செல்லும் ஊராட்சிச் சாலையின் குறுக்கே செய்யாறு ஆறு ஓடுகிறது. அதன்மீது மேம்பாலம்கூட அல்ல, தரைப் பாலம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சரால் அதைச் செய்ய இயலவில்லை. நான்கு வருடங்களாக நபார்டு வங்கியை எதிர்நோக்குவதாகக் கூறுகிறார். ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால்

என் வேண்டுகோள்தான் நிறைவேறவில்லை. எனவேதான் இப்படிப்பட்ட சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையே தன்வசம் எடுத்துக்கொண்டால், இந்த நிலை மாறுமல்லவா என்பதை எனது கருத்தாக முன்வைக்க விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வரோடு கலந்து பேசி, இந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அனைத்தையுமோ அல்லது போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளை மட்டுமாவது, R.R அல்லது நெடுஞ்சாலைத் துறையின்வசம் எடுக்கச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எப்படிப்பட்ட தரமான சாலைகள் போடப்பட்டாலும், அவற்றைப் பராமரிக்கும் பணி என்பது மிகமிக முக்கியமானதாகும். எனவேதான் 10,000 சாலைப் பணியாளர்களை நியமித்தார் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். இருந்தாலும், இடையிலே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். மீண்டும் தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்ததும், மீண்டும் அவர்களை பணியமர்த்தியதோடு, காலமுறை ஊதியத்தையும் வழங்கி அவர்கள் வயிற்றிலே பால் வார்த்தார்கள் என்றால் அது மிகையாகாது. பால் வார்த்த மாண்புமிகு கலைஞர் அவர்களிடம் "நாங்கள் கடந்த ஆட்சியிலே பழிவாங்கப்பட்டு கிடந்த 41 மாதங்களையும் எங்களது பணிக் காலமாக எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கோரி வருகின்றனர். அவர்களது கோரிக்கையை அரசு கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்ட சாலைப் பணியாளர்களுடைய பணிகளை ஆய்வு செய்ய போதுமான சாலை ஆய்வாளர்கள் பணியிடம் தற்போது இல்லையென்று கூறப்படுகிறது. இதனால் சாலைப் பணிகளைக் கண்காணிக்க முடியாத நிலையும் உள்ளது. எனவே, அவர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். தேவைப்பட்டால் சாலைப் பணியாளர்களிலேயே பத்தாம் வகுப்பிற்கு மேல் படித்தவர்களை நியமித்துக்கொள்ளலாம் என்பதையும் எனது கருத்தாக முன்வைக்க விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் Clerical பணியாகவுள்ள Superintendent-களுக்கு அதிக சம்பளமும் Techinical பணியாகவுள்ள AE, AD போன்றவர்களுக்குக் குறைந்த சம்பளமும் வழங்கப்படுகிறது. இதனை மாற்றி அவர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கி ஒரே துறையிலுள்ள ஏற்றத்தாழ்வை நீக்கிட வேண்டுகிறேன்.

MDR, ODR சாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, அந்தச் சாலைகளை முழுமையாகப் போட இயலாத சூழ்நிலையில் உள்ளது. அதையும் முழுமையாக வழங்க வேண்டுமென்று கோருகிறேன். NH, SH சாலைகள் அமைக்கப்படும்போது சாலைகளை அகலப்படுத்துவதற்காக விளைநிலங்களும், பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பல கிணறுகளும் மூடப்படுகின்றன. இழப்பீடு தருகிறீர்கள்; இல்லையென்று சொல்லவில்லை. இழப்பீட்டுத் தொகையை வாங்கி மீண்டும் விளைநிலங்களை வாங்கிவிடலாம். ஆனால், வளமான கிணற்றைத் திரும்பப் பெற முடியுமா? அப்படித் திரும்பப் பெற முடியாத பல விவசாயிகள் பாதிக்கப்பட்ட அவல நிலையும் இங்கே உள்ளது. அதற்கான இழப்பீட்டை எப்படிச் சரி செய்வது என்று தெரியாமல் பல விவசாயிகள் இன்றுவரை கலங்கித் தவிப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

NH, SH சாலைகளில் தேவையுள்ள பல இடங்களில் பாலங்கள் கட்டப்படாமல் உள்ளன. சாலை அகலப்படுத்தியுள்ள நிலையில் பாலம் மட்டும் அகலப்படுத்தப்படாமல் உள்ளதால், இரவில் வேகமாக வரும் வாகனங்கள் விபத்திற்குள்ளாகின்றன. குறுகிய பாலம் உள்ளது என்கிற அறிவிப்போ, அல்லது வேகத் தடையோகூட அங்கு இருப்பதில்லை. குறிப்பாக செய்யூர்–போளூர் SH சாலையில் மேல்மருவத்தூர்–ராமபுரம் சாலையிலுள்ள இரண்டு பாலங்களில் அடிக்கடி விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதேபோல, மாநிலமெங்கும் விபத்துப் பகுதி (Accident Zone) என்று 200 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினா–விடை நேரத்திலே குறிப்பிட்டார்கள். இப்போது அந்த இடங்களிலே எல்லாம் விபத்து நேராவண்ணம் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன; அல்லது, அதற்கான சிறப்புக் கூறு திட்டம் ஏதேனும் இந்தத் துறையால் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

சாலைகளும், பாலங்களும் கட்டிச் சரித்திரம் படைக்கும் இந்த ஆட்சியிலே சென்னை to கன்னியாகுமரி செல்லும் நீண்ட நெடிய சாலையிலே, சென்னை to திருச்சி வரையிலான சாலையும், கன்னியாகுமரி to மதுரை வரையிலான சாலையும் மிக நேர்த்தியாகப் போடப்பட்டு, பயணிகளுக்கு உதவுகின்ற

அதேவேளையில், இடைப்பட்ட திருச்சி–மதுரை சாலை மட்டும் விரிவாக்கப்படாமல் இருவழிப் பாதையாகவே உள்ளதால் ஏராளமான வாகனங்கள் விபத்திற்குள்ளாவதும், அதனால் பல உயிரிழப்புகள் ஏற்படுவதும் தொடர் கதையாகவே உள்ளது. எனவே, அந்தச் சாலையை உடனடியாக விரிவாக்கம் செய்திட வேண்டுகிறேன்.

பிற்பகல். 12–25

அதேபோல E.C.R. சாலையையும், இருவழிப் பாதையாக உள்ளதை நான்கு வழிப் பாதையாக மாற்றிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் மட்டும் 35–க்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், முடியாது என்று கூறப்பட்ட பெரம்பூர் பாலத்தையே கட்டி முடித்துள்ள நிலையில், கோயம்பேடு மேம்பாலப் பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மெட்ரோ இரயில் பணிகள் தொடங்கியுள்ள இந்த வேளையில் அந்தச் சாலைகளில் ஏற்கெனவே இருந்த போக்குவரத்து நெரிசல் இப்போது இருமடங்காகிவிட்டது. பாதைகள் குறுகலாகிவிட்டதால், அவற்றை ஒருவழிப் பாதையாக மாற்றிட வேண்டுகிறேன்.

கர்நாடக அரசு தேவைப்படும் இடங்களில் எல்லாம் இரயில்வே மேம்பாலங்கள் கட்ட மாநிலப் பங்குத் தொகையான 50 சதவிகிதப் பங்குகளை உடனடியாக வழங்கி முன்மாதிரி மாநிலமாக திகழ்வதுபோல, தமிழக அரசும் தேவைப்படும் இடங்களைக் கண்டறிந்து இரயில்வே மேம்பாலங்கள் கட்டிட ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். மேலும் இந்த ஆண்டு இப்படிப்பட்ட மேம்பாலங்கள் எத்தனை கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதையும், அதற்கான திட்டங்கள் ஏதேனும் துறைமூலம் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, எனது தொகுதியிலே வருகின்ற சடத்தாங்கல்–கோழிப்புலியூர் கூட்டுரோடு வரை உள்ள 12 கிலோ மீட்டர் சாலையில் 8 கிலோ மீட்டர் தூரம் மட்டும் CRIDP திட்டத்தின்கீழ் மிக அற்புதமாக சாலை அமைத்துத் தந்த மாண்புமிகு

நெடுஞ்சாலைத் துறை அமைச்சரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையில் மீதமுள்ள 4 கிலோ மீட்டர் தூரத்தையும் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியின் முக்கிய சாலைகளான தெள்ளாறு—மழையூர் சாலை, ஆவணியாபுரம்—பெரியகொழப்பலூர் சாலைகளையும் அகலப்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி—ஆரணி சாலையை அகலப்படுத்திப் புதுப்பிக்கும் பணியில் 30 கிலோ மீட்டர் வரை 7 மீட்டர் அகலத்திற்கும், மீதமுள்ள 12 கிலோ மீட்டர் தூரத்தை மட்டும் ஐந்தரை மீட்டர் அகலத்திற்கும் புதுப்பித்துள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எதிரொலி மணியன், நேரமாகிவிட்டது. மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டும். (குறுக்கீடு) தயவுசெய்து உரையை முடியுங்கள்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மீதமுள்ள 12 கிலோ மீட்டர் தூரத்தையும் 7 மீட்டர் அகலத்திற்கே அகலப்படுத்திப் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியின் மிக முக்கியமான கிராமங்களில் ஒன்றான பெரியகொழப்பலூர் கிராமத்தில் உள்ள பெரணமல்லூர் வட்டாரத் தலைமை மருத்துவமனை, இதுவரையிலும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படாமலே இருக்கிறது. ஆனால், இதனுடைய கட்டுப்பாட்டில் உள்ள பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு இரண்டு ஆண்டுக் காலமாகிறது. எனவே, அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், அதனைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அதே கிராமத்திலுள்ள மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

'கேட்டதையெல்லாம் கொடுத்தான் கீதையிலே கண்ணன்' என்பதைப்போல, கேட்ட பாதையில் எல்லாம் பேருந்து வசதி கொடுக்கிற நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலையிலிருந்து ஆரணிக்குச் செல்ல மங்கலம், மன்சுராபாத், தேவிகாபுரம் வழியாக ஒரு புறநகர் பேருந்து இயக்கிட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சேத்துப்பட்டிலே தொடங்குவதாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எதிரொலி மணியன், உட்காருங்கள். நேரமில்லை very sorry இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். திரும்பத் திரும்பச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேல் 2 நிமிடம் கூடுதலாகப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) Very sorry, உட்காருங்கள். திரு. ஜாண் ஜோசப். (குறுக்கீடு) திரு. எதிரொலி மணியன், உட்காருங்கள். No, I request you, please, உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) நேரம் இல்லை. திரு. ஜாண் ஜோசப், பேசுகிறீர்களா, உட்காருகிறீர்களா?

***திரு. ஜா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே என்னுடைய தொகுதி சார்ந்த இரண்டு பிரச்சினைகளை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வழங்கப்பட்டு இசைவு மறுக்கப்பட்ட நிலையில், மிக முக்கிய பிரச்சினை என்ற முறையில் இந்த மானியக் கோரிக்கையின்மூலமாக இதைக் கொண்டு வர விரும்புகிறேன். ஒன்று, வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது, இன்னொன்று பள்ளிக் கல்வித் துறை சம்பந்தப்பட்டது.

எனது தொகுதியில் சமீபத்தில் மணல், ரேஷன் அரிசி, எரிசாராயம் கடத்தப்படுவதைத் தடுக்க 30-க்கும் அதிகமான செக் போஸ்ட்டுகள் அமைக்கப்பட்டன. விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட 4 பேரூராட்சிகளும், 8 ஊராட்சிகளும் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ளன. செக் போஸ்ட்டுகள் அமைக்கப்பட்டதால் எல்லையோர ஊராட்சிகளில் மணல் கொண்டு வர, காவல் துறையும், வருவாய்த் துறையும் பெரும் இடையூறு செய்கின்றன. புகைப்படம், வரைபட அனுமதி, ஊராட்சித் தலைவரின் பரிந்துரை, Village Officer-ன் பரிந்துரை, வட்டாட்சியரின் அனுமதி, கனிம வளத் துறை உதவி இயக்குநரின் அனுமதி, 8, 10 சோதனைச் சாவடிகளின் அனுமதி, கடைசியாக மணல் லாரியை காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு நடத்தி, அதன்பின் போலீஸ் பாதுகாப்புடன் வேலை நடக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஒவ்வொரு லோடு மணலுக்கும் இப்படி 15 நாட்கள் வரையிலும் மக்கள் அலை கழிக்கப்படுகிறார்கள். அரசின் பணிகளுக்கும், Hollow-Bricks Company-களுக்கும், மணல், பாறைப் பொடி, ஜல்லி, செங்கல் போன்றவற்றைக் கொண்டு வருவதற்கும் இதேமாதிரியான

இடையூறு உள்ளது. மணல் கடத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டும்; அதேநேரத்தில் நம்முடைய மக்களுக்கு மணல் தடையின்றிக் கிடைக்கவும் வேண்டும். எனவே, இவ்விஷயத்தில் நல்ல தீர்வை ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிடுமாறு அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

இன்னொன்று, கட்டாயத் தமிழ்ச் சட்டம் பற்றியது. கட்டாயத் தமிழ்ச் சட்டம்மூலம் உருது, மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற சிறுபான்மை மொழிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இச்சட்டத்தின்மூலம் Part-1-ல் தமிழ் கட்டாயம் ஆக்கப்பட்டு மலையாளம் உள்ளிட்ட சிறுபான்மை மொழிகளுக்காக Part-4 என்று ஒரு புதிய தாய்மொழிப் பிரிவு துவக்கப்பட்டு அது விருப்பப் பாடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திற்கான மதிப்பெண்கள், மதிப்பெண் பட்டியலில் இடம் பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் Part-4 விருப்பப் பாடங்களை, அதாவது இந்தச் சிறுபான்மை மொழிகளைக் கற்றுக்கொடுக்க அரசு ஆசிரியர்களை நியமனம் செய்யுமா? Part–3 பாடங்களுக்கு மலையாளம், கன்னடம், உருது, தெலுங்கு medium இப்போது இருப்பதைப் போன்று தொடருமா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். மலையாளத்தை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தமிழ் படிப்பதை எதிர்க்கவில்லை. இது தொடர்பாக குமரி மாவட்ட மலையாள சமாஜ தீர்மானத்தின் ஒரு பகுதி இவ்வாறு குறிப்பிடுகிறது.

(உறுப்பினர், அந்தப் பகுதியை மலையாளத்தில் படித்தார்.)

அதாவது, தமிழ் படிப்பதை நாங்கள் யாரும் எதிர்க்கவில்லை. தமிழ் படிக்க தமிழக அரசு தந்துள்ள இந்த வாய்ப்பை ஒரு அதிர்ஷ்டமாகவே நாங்கள் கருதுகிறோம். ஆனால், நம்முடைய தாய் மொழியான மலையாள மொழியின் எதிர்காலம் கட்டாயத் தமிழ்ச் சட்டம்மூலம் சிக்கல் ஆகுமோ என்பதுதான் எங்களுடைய கவலை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கட்டாய தமிழ்ச் சட்டத்தின்மூலம் மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது உள்ளிட்ட சிறுபான்மை மொழிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு போக்க வேண்டும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைக்கு வருகிறேன். இந்தத் துறை சம்பந்தமான சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். ஆண்டுதோறும் ரூ.3,000 கோடி செலவு செய்யும் நெடுஞ்சாலைத் துறைக்கு, தலைநகரில் தனியாக ஒரு அலுவலகம் இல்லை. "எலி வளை ஆனாலும் தனி வளை வேண்டும்" என்பதற்கிணங்க, சென்னையிலே ஒரு தனி அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 151-ல் ஒரு புது சாலை போடப்பட்டு 5 வருடங்களுக்குள்ளேயே அது பழுதடைவதற்கான காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மண்ணின் தாங்கு திறன் குறைவு, அதிக சுமை ஏற்றிய கனரக வாகனங்கள், நீர்ப்பிடிப்புப் பகுதி என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சாலைகள் எளிதில் சேதம் அடைவதற்கு இவை சிறு காரணங்கள் மட்டுமே. சாலைப் பணிகளின் தரம்தான் முக்கியமான காரணமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு பணியின் மதிப்பீட்டுத் தொகையிலிருந்து சுமார் 30 சதவிகிதம் வரை குறைத்து சில ஒப்பந்ததாரர்கள் வேலை எடுக்கின்றனர். இதற்குமேலே கையூட்டு, கமிஷன் போக அவர்களுக்கு இலாபம் வருகிறது என்றால் எப்படி அந்தச் சாலை தரமானதாக இருக்க முடியும்? தார்க் கலவையைத் தயாரிக்கும் Central Mixing Plant முதல் கலவையைக் கொண்டு கொட்டப்படும் சாலை வரை கண்காணிப்பு மிக மிகக் குறைவு. இதற்குப் போதிய அலுவலர்களும் இல்லை. தரக் கட்டுப்பாடு அமைப்பு எங்கோ கட்டுப்பட்டுக் கிடக்கிறது. அவை போதிய எண்ணிக்கையில் இல்லை. கோடிக் கணக்கில் செலவு செய்து சாலைகளைப் போடும்போது, அவற்றின் தரத்தை உறுதிப்படுவதற்கான நிருவாக ஏற்பாடு வேண்டும். தரக்குறைவாக போட்டபின், sample எடுத்து ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு செய்வதனால், அந்தச் சாலையின் தரம் உயர்வதில்லை. சாலைகள் தரக் குறைவாகப் போடப்பட்டால், முதலில் பாதிப்புக்கு உள்ளாவது வேறு யாரும் அல்ல; நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்தான். நகரப் பேருந்துகளின் ஆயுள் குறைவதற்கும், உடைந்து கிடக்கும் சாலைகளே முக்கிய காரணம். எனவே, சாலைகளின் தரத்தை உறுதிப்படுத்த துணிச்சலான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. சாலைப் பணியாளர்களுக்குத் தேவையான தார் மற்றும் ஜல்லியைக் கொடுத்து சாலைகளில் ஏற்படும் குண்டு குழிகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குளச்சல் துறைமுகம் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசாங்கத்திடம் உதவி கோரியபோது, மத்திய அரசு இதை மாநில அரசே செயல்படுத்துமாறு தெரிவித்ததாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. எந்தத் தொழில் வளர்ச்சியும் இல்லாத குமரி மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வாக்குறுதி அளிக்கப்பட்ட திட்டம் இது. மத்திய அரசு முடிவை மறுபரிசீலனை செய்ய, மத்திய அரசில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கினைப் பயன்படுத்துமாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பணிவோடு கேட்டுக்கொள்கிறது.

கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை தற்போது இயங்கும் இடத்திலேயே தொடரச் செய்ய வலியுறுத்துகிறோம். சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தைப் பணிக் காலமாக அறிவிக்க வேண்டும். அவர்களின் மாத ஊதியம் வேலை நிதியிலிருந்து வழங்கும் முறையைக் கைவிட்டு, அரசின் நேரடி நிதியிலிருந்து வழங்கவும், அவர்களின் சிக்கன நாணய சங்கக் கடன்களில் பணி நீக்கக் காலத்திற்கான வட்டி, மற்றும் அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்யவும் கேட்டுக்கொள்கிறோம். 30 ஆண்டுகளாகப் பதவி உயர்வு கிடைக்காத நெடுஞ்சாலைத் துறை அமைச்சுப் பணி பதிவறை எழுத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதுடன், 100 backlog பணியிடங்களை நிரப்பவும், 7 வருடமாக முடங்கிக் கிடக்கும் பணி விதி திருத்தத்தினை அமலாக்கி, கோட்டக் கணக்கர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவும் வேண்டுகிறேன். 1978 முதல் 1997 வரை N.M.R.–ஆகப் பணிபுரிந்து வந்த 764 சாலைப் பணியாளர்கள் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளனர். இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும்.

பிற்பகல் 12–35

எனது தொகுதிக்குட்பட்ட சுமார் 20 சாலைகளில் 70 கிலோ மீட்டர் தூரம் சேதமடைந்து உருக்குலைந்து கிடக்கிறது. அதன் பட்டியலை மாண்புமிகு அமைச்சரிடமும், அதிகாரிகளிடமும் கொடுத்துள்ளேன். அவற்றைச் செப்பனிட துரித நடவடிக்கை தேவை. எனது தொகுதி தேசிய நெடுஞ்சாலை எண் 47–ன் துயரமாக மாறியுள்ள (மணியடிக்கப்பெற்றது) மார்த்தாண்டம் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, புறவழிச் சாலை அமைக்க வேண்டும்.

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே முலமூட்டுக்கடவு என்ற இடத்தில் பாலம் கட்டப்படாததால், பொதுமக்களும் வாகனங்களும் ஆற்றைக் கடக்க, சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் சுற்றிப் போகவேண்டியிருக்கிறது. எனவே, இப்பகுதியில் பாலம் அமைக்க வேண்டும்.

காப்பிக்காடு, விளாத்திவிளை, கொடுவனந்தோட்டம், அய்ரேனிபுரம், சடையங்குழி, நெடுவிளை உட்பட 33 சாலைகளில் சுமார் 64 கிலோ மீட்டர் தூரம் குழாய் அமைக்க, குடிநீர் வடிகால் வாரியத்தால் உடைக்கப்பட்ட வகையில், இத்துறை நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகை ரூ.617.45 இலட்சம் வழங்கி உதவிட, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சென்னையைப்போல், திருப்பூரிலும் தேவையான இடங்களில் மேம்பாலங்கள் அமைக்கவும், நாகை மாவட்டம், எட்டுக்குடி—தஞ்சை இடையே புறவழிச் சாலை ஏற்படுத்தவும், நாகை, திருக்குவளை துறைமுகம், இராமநாதபுரம் தொண்டி துறைமுகம் ஆகியன நிறுவிடவும் வேண்டுவதுடன், திருவட்டாறு, கூத்தவிளாகம் பகுதியில் பாலம் கட்ட ரூ.2 கோடிக்கான அறிவிப்பு வெளியிட்டு ஒன்றரை வருடங்கள் ஆகியும், தொடங்கப்படாமல் உள்ள பணியைத் துரிதப்படுத்த வேண்டுகிறேன். குடியாத்தம் தொகுதியில் மோர்தானா அணைப் பகுதியில் ராஹிமானிப்பள்ளியையும், ஜங்கலாபள்ளியையும் இணைக்க பாலம் கட்ட வேண்டும்.

தமிழகத்தின் சாலைகளை rubberised சாலைகளாக மாற்ற வேண்டும். குமரி மாவட்டத்தில் 1998—ல் நடத்திய இந்தச் சோதனை, அங்கே நல்ல பலனைத் தந்துள்ளது. எனது தொகுதிக்குட்பட்ட நடைக்காவு—தூத்தூர் சாலையையும், நீரோடி—இரயுமன்துறை கடற்கரைச் சாலையையும் இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். பேசுவதற்கு உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 6. நிமிடங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு அனுமதியளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறை, நமது மாநிலத்தில் சிறப்பான முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. பல வகை வடிவங்களில் பிரிக்கப்பட்டுள்ள சாலைகள், அதன் அடிப்படையான நோக்கம், மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்குப் பாதுகாப்பாகவும், விரைவாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும், சிரமமில்லாமலும் பயணம் செய்யும் வகையில் உருவாக்கப்பட வேண்டும். மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என்ற வகையில் கிராமங்கள் மற்றும் பேரூராட்சி, சிறு நகரங்கள், நகராட்சிகளில், உள்ளாட்சி அமைப்புகளின் சார்பிலும் சாலைகள் அமைப்பதும், பராமரிப்பும் செய்யப்படுகின்றன. இதில் எந்தச் சாலையாக இருந்தாலும், அகலத்தில் வேறுபாடுகள் இருக்கலாமே தவிர, தரத்தில் வேறுபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அடுத்த தரத்தில் மாநில சாலைகளும், அதற்கு அடுத்த தரத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகளும் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது; உணர முடிகிறது. அதற்கு அடிப்படையான காரணம், தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு விலைப்புள்ளி ஒப்பந்தமும், மாநில சாலைகளுக்கு அதற்கு அடுத்த நிலையிலும், உள்ளாட்சி அமைப்புகளில் கடை நிலையிலும் விலைப்புள்ளிகள் ஒப்பந்தம் செய்யப்படுவதுதான் இந்தத் தர வேறுபாடுகளுக்கு அடிப்படையான காரணம் என்று சொல்லப்படுகிறது. எனவே, விலைப்புள்ளிகளுக்கான வேறுபாடுகளைச் சீராக்கி, தரத்தைச் சமப்படுத்த வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருகிற நேரத்தில், புதுக்கோட்டை மாவட்டம் உட்பட, பல்வேறு

மாவட்டங்களில் 37 சதவிகிதத்திற்குக் குறைவான அளவிலே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அவ்வாறு செய்யும்போது, பணிகள் எப்படிச் சிறப்பாக, தரமாக இருக்கும் என்பதைத் துறை ஆய்வு செய்து, அதற்கான வரைமுறை ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பெருகிவரும் வாகனங்கள், தொழிற்சாலைகளுக்கான கனரக வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், இரு சக்கர வாகனங்கள், நாம் கட்டுப்படுத்த முடியாத அளவில் நாள்தோறும் பெருகிவருகின்றன. எனவே, புதிய சாலைகளை உருவாக்குவது என்பதும், பராமரிப்பு, செய்வது என்பதும், வாகனப் பெருக்கத்தில் சுமார் 10 ஆண்டுகள் எதிர்காலத்தைக் கணக்கிட்டுச் சாலைகளை உருவாக்க வேண்டும். தமிழகத்தில் சாலைகள் மேம்பாடு அதிகரித்திருந்தாலும், பெரு நகரங்கள் மட்டுமல்லாது, சிறுநகரங்களில்கூட போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதும், அதனால் விபத்துகள் ஏற்படுவதும், விலை மதிக்க முடியாத உயிர்கள் பலியாவதும், ஒவ்வொரு மணி நேரமும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைக் கவலையோடு பார்க்க வேண்டும். தமிழகத்தில் சாலை விபத்துகளால் ஏற்படும் சாவுகள் அதிகரித்திருப்பதை நாம் கவலையோடு பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12–40

தற்போது, உருவாக்கப்படும் அதிவேக வாகனங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சாலைகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். சமவெளிப் பகுதிகளில், மலைப் பகுதிகளைவிட மோசமான வளைவுகளைக் கொண்ட சாலைகள், வளர்ந்து வரும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதாக இல்லை. விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விபத்துகள் பெரும்பாலும் வளைவுகளிலும், சாலைகள் சந்திப்புகளிலும் நடைபெறுகின்றன. எனவே, உடனடியாக வளைவுகளை நிமிர்த்தவும் அல்லது வளைவுகளைக் கூடுதலாக அகலப்படுத்தவும் மற்றும் இணைப்புச் சாலைகள் உள்ள இடங்களில் நவீன முறையில் எச்சரிக்கை செய்யவும், இணைப்புப் பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

தமிழகத்தின் எதிர்கால நன்மையைக் கருதி, நான்கு வழிச் சாலைகளை, ஆறு வழிச் சாலைகளாக மாற்ற வேண்டும். சாலைகளின் முக்கிய பகுதிகளில், விபத்து சிகிச்சை மையம்

ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு 100 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில் விபத்து சிகிச்சை மையத்தை உருவாக்கிட வேண்டும். மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மொத்த சாலைகளின் நீளம் தேசிய சாலைகள் உட்பட சுமார் 62,000 கிலோ மீட்டர் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருக்கிறார்கள். இதில் கிட்டத்தட்ட 42,000 கிலோ மீட்டர் சாலைகள் 3.75 மீட்டர் அகலத்தில்தான் உள்ளன. இது எப்படிச் சரியாக இருக்கும் என்பதை உணர்ந்து, உடனடியாக சாலைகளைக் குறைந்தபட்சம் 7 மீட்டர் அகலச் சாலைகளாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட இதர சாலைகள் 42,748 கிலோ மீட்டர் இருந்தது, வேறு வகைப்பாட்டால் 36,096 கிலோ மீட்டராகக் குறைந்துள்ளது. எனவே, இந்த நீளத்தைக் குறைக்காமல் பார்த்துக்கொள்ளும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள முக்கிய சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக மாற்றித் தரம் உயர்த்துகிற நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

நான்கு வழி தேசிய நெடுஞ்சாலைகளில் பாதசாரிகள் கடந்து செல்வதற்கு, அதிக அளவில் போக்குவரத்து பாதிப்பில்லாத வழிமுறைகளை உருவாக்க வேண்டும். நான்கு வழிச் சாலைகளில் வாகனங்களின் ஒளி ஊடுருவாமல் தடுக்க, நடுவில் சவுக்கு போன்ற கிளைகள் இல்லாத மரங்களை நட்டுப் பராமரிக்கலாம். சாலையோரங்களில் வைக்கப்பட்டுள்ள மரங்கள் பராமரிப்பின்றி அழிந்துவிட்டன, மரங்களை வளர்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்குப்பின், தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த காலமான 17 மாதம் 8 நாள்களுக்கான ஊதியத்தை வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பணி நீக்கம் செய்யப்பட்ட காலமான 24 மாதங்களையும் மேல்முறையீட்டுக் காலமான 17 மாதங்களையும் அவர்களுடைய பணிக் காலமாக எடுத்து, அவர்களுக்கு ஓய்வு காலத்தில் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிடக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறை தினக் கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய W.P. No.1260/2008 நாள் 11–12–2009 தனி நீதிபதித் தீர்ப்பும், பிறகு உயர் நீதிமன்றத் தீர்ப்பையும் ஏற்று அரசு, 900 தினக் கூலிப் பணியாளர்களை பணி நிரந்தரம்

செய்ய வேண்டும். அரசு, அவர்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஏற்பட்டுவரும், பெரும் தொழில் வளர்ச்சி, அதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சாலைகள்மூலம் மட்டும் சரி செய்திட முடியாது. எதிர்கால தொலைநோக்குத் திட்டமாக கடல்வழிப் பயணத்தைத் திட்டமிட வேண்டும். நீண்ட கடல் எல்லையைக் கொண்ட தமிழகத்தில் வடக்கிலுள்ள சென்னை, தெற்கிலுள்ள தூத்துக்குடி பெரிய துறைமுகங்களை இணைக்கக் கூடுதலாக சிறு துறைமுகங்களை உருவாக்கி நவீனப்படுத்த வேண்டும். இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட வளர்ச்சிக்கு அடிப்படையாக, தொண்டி துறைமுகத்தை உருவாக்க வேண்டும்.

தொண்டி-சிவகங்கை வழியாக மதுரை சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்தும் நடவடிக்கை இல்லை. அச்சாலையை உடனடியாக தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தி பணிகளைத் தொடங்க வேண்டும்.

சிவகங்கையில் அனைத்துச் சாலைகளும் நகருக்குள் வந்து செல்வதாலும், நகர் சாலைகள் அகலம் குறைவாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், உயிர் இழப்பும் ஏற்படுகிறது. எனவே, சிவகங்கையில் வட்டச் சாலை அல்லது புறவழிச் சாலை இந்த ஆண்டே அமைக்க வேண்டும்.

இரயில்வே மேம்பாலங்களுக்கு உள்ள நிபந்தனைகளை மாற்றி மேம்பாலங்கள் கட்ட வேண்டும். சிவகங்கை தொண்டிமேடு, இளையான்குடி சாலைகளில் இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டும். இளையான்குடி சாலையில் தரைப் பாலத்தை மாற்றிடவும், காளையார் கோவில் ஒன்றியம் முடிக்கரையில் தரைப் பாலத்தை மாற்றி மேம்பாலம் கட்டவும் வேண்டும்.

கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும். மதுரை நான்கு வழிச் சாலையில், மேலூர் அருகில்,, சிவகங்கை தலைநகருக்கு, இணைப்புச் சாலை உருவாக்கிட வேண்டும்.

அதைப்போல, சுங்கவரி வசூல் மிகவும் (மணியடிக்கப்பெற்றது) கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மதுரை-சென்னை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிக்கிரம் சொல்லுங்கள்.

திரு. சு. குணசேகரன்: சுங்க வரி ரூபாய் 350 வசூலிக்கப்படுகிறது. சுங்க வரியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போல, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்பூங்கா மற்றும் ஆலோசனை மையம் கேட்டு சட்டப் பேரவையில் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், தொழில் மானியக் கோரிக்கையில் அறிவிப்பை வெளியிடுவார்கள் என்று நானும், சிவகங்கை மாவட்ட மக்களும் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் சிவகங்கை மாவட்டத் தொழில் வளர்ச்சியைக் கணக்கிலெடுத்து, சிவகங்கையிலே கிராஃபைட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்து அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனி, விருதுநகர் மாவட்டத்தை இணைக்கும் வருஷநாடு, வத்திராயிருப்பு, இராஜபாளையம் வழியாக வனத் துறை அனுமதிபெற்று உடனடியாக சாலை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரா. வரதராஜன், ஒதுக்கப்பட்ட நேரம் 6 நிமிடங்கள்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்சாலை அமைப்பது குறித்து, ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். 2007–2008 ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக தொழில்முனைவோரிடமிருந்து விருப்புணர்வு விண்ணப்பம் Expression of Interest, அதாவது உலகளாவிய அளவிலே அந்த ஒப்பந்தம் கோரப்பட்டது.

8 தொழில்முனைவோர்கள் அதிலே பங்கேற்றார்கள். அதிலே 5 தொழில்முனைவோர்கள் தகுதியுடையவர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய ஆவணமும் வழங்கப்பட்டது. அதில் ஒரு தொழில்முனைவோர் மட்டும் பங்கெடுத்து ஒரு டன் தாதுவின் விலை ரூபாய் 500 எனக் குறிப்பிட்டு விலைப்புள்ளி அளித்தார். இது கனிம நிறுவனம் நிர்ணயித்தத் தொகையான டன்னுக்கு ரூபாய் 3000 என்பதைவிடக் குறைவாக இருந்தமையால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது. அதனால் இப்பொழுது உப தொழில் தொடங்க ஆர்வமிருக்கக்கூடிய நிறுவனங்களைத் தேர்வு செய்வதற்காக தொழில்முனைவோர்களிடமிருந்து விருப்புணர்வு விண்ணப்பம் கோரி, கடந்த 1-4-2010 அன்று நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராஃபைட் உப தொழில்கள் தொடங்குவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எடுத்ததற்காக சிவகங்கை மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு ஒரு வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் திரு. குணசேகரன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஏழை விவசாயக் கூலி வேலை செய்யும் குடும்பத்தில் பிறந்த என்னை விருதுநகர் தொகுதியில் நிறுத்தி இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்து மனமகிழும் மனித நேயத்தின் தலைவர், மக்கள் தலைவர், தமிழினக் காவலர், புரட்சிப் புயல் வை.கோ. அவர்களுக்கு நன்றியைக் கூறி, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி கூறி, இந்த நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராஜன், 6 நிமிடங்கள்தான். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை என்பது, நாட்டின் சிறந்த பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான ஓர் அம்சமாகும். சாலை நன்றாக இருக்கிறது; 4 வழிச் சாலையை 6 வழிச் சாலையாகவும் அமைத்திருக்கிறார்கள்; ஆனால், அந்தச் சாலையில் நமது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் துரைராஜ் அவர்கள் கூறியதுபோல், 10 toll-gate–கள் வரை போட்டு, அதிகமாக வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். விருதுநகரிலிருந்து சென்னைக்கு ஒரு லாரி லோடு ஏற்றி வரவேண்டுமென்றால் 6,500 ரூபாயிலிருந்து 7 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. திரும்பிச் செல்லும்போது 8 ஆயிரம், 9 ஆயிரத்திற்குச் செல்கிறார்கள். ஆக, சென்று வருவதற்கு 15 ஆயிரம் ரூபாய். ஆனால் அந்த toll-gate செலவு 1,500 ரூபாயாக இருக்கிறது. டீசல் செலவு இருக்கிறது; கட்டுக் கூலி, மடிப்புக் கூலி இருக்கிறது. இதுபோக, சாலையிலே இருக்கிற அந்த Highway Patrol காவல் துறையினர் ஒவ்வொரு ஊரிலும் வண்டியை மறித்து, நிறுத்தி 50 ரூபாய் வசூல் செய்கிறார்கள். காரணம் கேட்டால், R.C. Book கொண்டு வா, licence கொண்டு வா என்கிறார்கள். அனைத்தையும் கொடுத்த பின்பும், லோடு அதிகமாக இருக்கிறது; தார்ப் பாய் கட்டாமல் இருக்கிறது என்று பல்வேறு காரணங்களைச் சொல்லியும் வசூல் செய்கிறார்கள். ஆகவே, அந்த மோட்டார்காரர்களுக்கு வருவதோ பெரிய நீளமான ஒரு கச்சாத்துதான். ஆகவே இன்றிருக்கிற டீசல் விலையிலே மோட்டார் ஓட்டுவதற்கே சிரமமாக இருக்கிறது. எனவே, சாலைகளில் இருக்கிற அந்த போலீஸ் அதிகாரிகளை சாலையிலே வண்டிகளை மறிக்கக் கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் ராமமூர்த்தி சாலையில் ஒரு மேம்பாலம் அமைப்பதற்காக 2007–2008 ஆம் நிதியாண்டில் நமது அரசினால் 35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், இதுவரை அந்தச் சாலையில் எந்தவிதமான பணியும் தொடங்கவில்லை. இரயில்வே நிருவாகம் பணத்தை ஒதுக்கிவிட்டது என்று எனக்கு திரு. லாலு சிங் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், மாநில அரசோ இதுவரையில் எந்தப் பணியும் செய்யவில்லை. அதுகுறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—50

அதுமட்டுமல்ல; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள விருதுநகரில் 20 வருடங்களாக ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு இயங்காமலே இருக்கின்றது. அந்தப் பேருந்து நிலையத்தை இயக்குவதற்கு நான் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், அங்கு இருக்கிற, காமராஜர் நற்பணி மன்றம், காமராஜர் மன்றம் போன்ற மன்றங்களும், அனைத்து விவசாயிகளும், வணிகர்களும் சேர்ந்து போராட்டங்கள் நடத்தியும், இதுவரை அந்தப் பேருந்து நிலையம் இயங்காமல் இருக்கிறது. நானும் இந்த மாமன்றத்தில் 3, 4 முறை பேசிவிட்டேன். இதுவரை 5, 6 மாவட்ட ஆட்சியாளர்களும் வந்து அந்தப் பேருந்து நிலையத்தை இயங்காமலே செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இரண்டு அமைச்சர்கள் இருந்தும் எந்த நலத் திட்டமும் அங்கு வரவில்லை. காரணம், அங்கு இருப்பது ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள். சிவகாசிக்கும் அப்படித்தான், விருதுநகருக்கும் அப்படித்தான், இராஜபாளையத்துக்கும் அப்படித்தான். எந்தத் திட்டமும் வருவதே இல்லை. எதற்காக விருதுநகர் இந்த மாதிரி புறக்கணிக்கப்படுகிறது என்பது தெரியவில்லை. அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு இந்த வருடம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; எங்கள் மாவட்டத்திற்குத் தண்ணீர் திட்டத்திற்காக இரண்டு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள்; நன்றி. எங்கள் மாவட்டத்திலே இந்த வருடம் மழையே பெய்யவில்லை. எந்தக் கண்மாயும் நிறையவில்லை. ஆடு, மாடு குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய நிதியிலே ஒரு கிராமத்திற்கு bore போட வேண்டுமென்று நிதி கொடுத்தால், 500 அடி, 600 அடி என்று போட்டாலும், வெறும் புகைதான் வருகிறது. தண்ணீர் வருவதில்லை. ஆகவே, எங்களுடைய மாவட்டத்திற்குக் கொஞ்சம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருதுநகரில் 15 தினங்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. எப்படிச் சுகாதாரமாக வாழ முடியும்? ஒரு வீட்டிற்கு 15 நாள், 12 நாள், 10 தினங்களுக்குப் பிறகுதான் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, விருதுநகருக்கென்று ஒரு சிறப்புத் திட்டத்தைத் தீட்டி, விருதுநகர் மக்களுடைய தண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விருதுநகரிலிருந்து அழகாபுரி செல்லும் வழியில் சுந்தரலிங்கபுரம், சந்திரகிரிபுரம், சீனியாபுரம், குந்தலபட்டி, செங்குன்றபுரம், செங்கோட்டை, எரிச்சநத்தம் – அழகாபுரிச் சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலவநத்தம், வெட்டுக்குண்டு, சென்னல்குடி, மலைப்பட்டி, கூத்திப்பாறை, கோட்டூர், வீராபட்டி, அப்பாயநாயக்கபட்டி, இருக்கன்குடி வழியாகச் செல்லும் பாதைகளைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.ஆர். நகர், கன்னிசேரி, சின்னையாபுரம், சங்கரலிங்கபுரம், முத்தலாபுரம், மத்திசேனி, சிவகாசி செல்லும் சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய விருதுநகர் தொகுதியில் பழைய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் விடவும், அதுபோல விருதுநகரிலுள்ள (மணியடிக்கப்பெற்றது) பள்ளிகள், விருதுநகர் மாவட்டத்திலும், மாநிலத்திலும் கல்வியில் சிறந்த பள்ளிகளாகத் திகழ்கின்றன. பல்வேறு கிராமங்களிலிருந்து விருதுநகருக்குப் படிக்க கிராம மக்கள் வருகிறார்கள். அங்கு வரும் சமயத்தில், பேருந்துகளில் கூட்டமாக இருப்பதால், பெண்களும், மாணவ, மாணவிகளும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, விருதுநகருக்கு டிரெய்லர் பஸ்ஸை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அருப்புக்கோட்டை – விருதுநகர், திருமங்கலம் – விருதுநகர், சாத்தூர் – விருதுநகர், சிவகாசி – விருதுநகர் ஆகிய 4 வழிகளில் டிரெய்லர் பஸ்களைவிட்டால் அந்த மாணவ, மாணவிகள் சிறப்பாகச் (மணியடிக்கப்பெற்றது) சென்று வருவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விருதுநகரிலே பெ.சி. மருத்துவமனை, ஏறத்தாழ 50 வருட காலமாக இயங்குகிறது. அது ஒரு பிரசவ மருத்துவமனை ஆகும். அதனை நகராட்சி நடத்தி வருகிறது. அந்த மருத்துவமனையில் ஒரு வருட காலமாக மருத்துவர் இல்லை. அந்த மருத்துவமனைக்கு மருத்துவரை நியமித்து, அந்த நகராட்சி மக்கள் பயன்பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

விருதுநகரில், மாவட்டத் தலைமை மருத்துவமனையில் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கூடுதல்

மருத்துவமனை கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பணி முடிக்கப்பட்டு 6 மாத காலமாகிவிட்டது. அதை இன்னும் திறக்காமல் இருக்கிறார்கள். மேலும், விருதுநகரிலே செவிலியர் பணிக்காக 250 பேர், அந்தச் செவிலியர் பள்ளியில் பயின்று வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு விடுதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த விடுதியைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 8 நிமிடங்கள்.

*** திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் திருவிளக்காம், பாரத தேசத்தின் வழிகாட்டியாம் அன்னை சோனியா காந்தியையும், இந்திய தேசத்தின் இளம் தலைவர் ராகுல் காந்தியையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சோதனைகளையும், சாதனைகளாக்கி, சரித்திரம் காணும் தமிழக மக்கள் போற்றும் தன்னிகரில்லாத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவரோடு தோள் நின்று அத்தனை சுமைகளையும் இன்முகமாய் ஏற்று மக்கள் பணியே மகேசன் பணி என்று செயலாற்றி வரும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைக் கூறி (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டினுடைய வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்ற இத்துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்த எங்களது கட்சியின் தலைவர் மற்றும் கொறடா மற்றும் அவையிலுள்ள நிதி அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், நம் நாட்டினுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டில் அங்கம் வகிக்கும் அடிப்படையான கட்டுமானங்களில் சாலைகளும், பாலங்களும் மிக முக்கிய அங்கமாகும். அதில் கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் எதிர்காலச் சிந்தனையோடு உருவாக்கப்பட்டவை என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பு காட்டுகிறது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சி இருக்கும்போதெல்லாம் நாட்டிலுள்ள மிக முக்கியப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது சரித்திரம். அதைப்போல, போக்குவரத்து நெருக்கடியைக் கருதி சென்னை மாநகரத்தில் துணை முதல்வர் அவர்கள் அன்று எடுத்த முயற்சியின் காரணமாக இன்று பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இவர்கள் நாட்டுக்கும் பாலம் அமைப்பார்கள், அன்பான உறவுக்கும் பாலம் அமைப்பவர்கள் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்ல முடியும். அந்த வகையில் தமிழக அரசும், மத்திய அரசும் இணைந்து உலக வங்கி, ஆசிய வங்கி, நபார்டு போன்ற பல்வேறு வங்கிகளின் உதவியோடு சரித்திரத்தில் பதிய வைக்கக்கூடிய செயற்கரிய பல்வேறு திட்டங்களை இந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தி உள்ளதை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். இத்துறையின் அமைச்சர் அவர்கள் மிகவும் கவனத்தோடு செயல்பட்டதற்கும், அவர்களோடு செயலர் மற்றும் தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதற்கும் கிடைத்த வெற்றி எனவும் குறிப்பிட முடியும். மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும் என்ற கலைஞர் அவர்களின் பொன்மொழியினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் சுமார் 3 இலட்சம் மரக் கன்றுகள் நடும் திட்டத்தைத் தொடங்கி இதுவரையில் சுமார் 10 இலட்சம் மரக் கன்றுகளை நட்டு உலகம் வெப்பமயமாகி வருவதை உணர்ந்து இன்றும் அதனைச் சிறப்பாகப் பராமரித்து வருவதை நிச்சயம் பாராட்டியாக வேண்டும்.

அதேபோல மாநிலத்திலுள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் படிப்படியாக அகலப்படுத்துவதிலும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலங்கள், வட்டச் சாலைகள், புறவழிச் சாலைகள் அமைப்பதிலும், விபத்து ஏற்படும் சாலைகளைக் கண்டறிந்து அவற்றின் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் அரசு பல்வேறு கொள்கை கோட்பாடுகளை உருவாக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனையும் பாராட்டுவதோடு, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், எங்களது நீண்ட காலக் கோரிக்கையான நாகை மாவட்டத்தில் உள்ள மணல்மேட்டையும், கடலூர் மாவட்டத்திலுள்ள முட்டத்தையும் இணைக்கும் உயர்மட்ட பாலத்திற்கான அடிக்கல்லை நாட்டி, அதனை மிக விரைவாகக் கட்டிமுடிப்பதற்கு

ஆணை வழங்கிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுபோல், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் வேண்டுகோள் வைத்ததையொட்டி, மயிலாடுதுறையில் பழம்பெரும் காவிரி பாலத்திற்குச் சாலை வடிகால் வசதி செய்ய சிறப்பு நிதியளித்த, இத்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் எனது சார்பாக நன்றி கூறிக்கொள்கிறேன். அதோடு, அவ்வுயர்மட்ட பாலம் வந்தடைகின்ற முடிகண்டநல்லூர் ஊராட்சி வக்காரமாரி வரை இருக்கின்ற கிராமச் சாலை, கிட்டத்தட்ட சுமார் 2½ கி.மீ. தூரம் உள்ள ஒரு குறுகிய சாலை. அந்தச் சாலை வழியாகச் செல்வதற்கு அச்சாலையை அகலப்படுத்துகின்ற நேரத்தில் 400-க்கும் மேற்பட்ட வீடுகளை இடிக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, எதிர்காலத்தினைக் கருதி, கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகின்ற இந்தப் பாலத்தினுடைய பயனையும் கருதி, இதற்காக நேரடியாக 1½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு சாலை அமைக்கக்கூடிய இடத்தினை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள்; அதற்கான திட்ட மதிப்பீடுகளும் தயாரித்திருக்கிறார்கள்; அதையும் நிறைவேற்றித் தருவதற்கும் அதோடு இந்த உயர்மட்ட பாலம் மற்றும் சாலை அமைக்கின்ற திட்டத்தோடு மணல்மேட்டில் ஒரு பயணியர் மாளிகையை அமைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தாங்களே இந்த மாமன்றத்தின் வாயிலாகவும் தொடர்ந்து வலியுறுத்திவரும் மயிலாடுதுறை புறவழிச் சாலை திட்டத்தை இவ்வாண்டு செயல்படுத்துவதாக கடந்த ஆண்டே தெரிவித்திருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் இந்த ஆண்டு அதை நிறைவேற்றித் தர வேண்டும். இதற்கான மதிப்பீடுகள், வரைபடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு குடிசைகூட இடிக்கவேண்டிய நிலை இல்லை. ஆகவே, இதில் ஒரு சிறப்பான சாலை அமைக்கக்கூடிய நிலையில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அதையும் செயல்படுத்த வேண்டிக்கொள்கிறேன். அதேநேரத்தில் தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டத்தின்கீழ் தமிழகத்திலே பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது.

பிற்பகல் 1–00

அதுபோல, அத்திட்டத்தின்மூலமாகக் குறிப்பாக சிதம்பரத்திலிருந்து மயிலாடுதுறை, குடந்தை, தஞ்சாவூர் வரை உள்ள மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில், பல்வேறு வளைவுகளையும் குறுகிய சாலையாகவும் இருக்கின்ற நிலையையும் கருதி, அதனை அகலப்படுத்தி அதை நேர்ப்படுத்திடும்வகையில் ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்துக்கொண்டால் நல்லது. பயண தூரம் குறைவாக இருந்தாலும்கூட, பயணிக்கின்ற நேரம் அதிகமாக இருக்கிற நிலையையும், ஆபத்துகளை விளைவிக்கக்கூடிய நிலையையும் கருதி, இந்தக் குறுகிய சாலைகளை நேர்படுத்த அதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த அவையிலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, மயிலாடுதுறை—வில்லியநல்லூர்—கிழாய்—மணல்மேடு செல்லும் சாலை, ஓ.டி.ஆர். சாலை மிக்வும் குறுகியதாக இருக்கிறது; 5 கிலோ மீட்டர் தூரம் அதிகப் போக்குவரத்து உள்ள ஒரு சாலை; அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கும் முயற்சி எடுக்க வேண்டும்.

அதைப்போல, டெல்டா மாவட்டங்களிலே இருக்கின்ற பழைய பிரிட்டிஷ் காலத்திலே கல், செங்கல்மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற பெரிய ஆர்ச் வளைவு பாலங்களை எல்லாம் மாற்றி புதிய பாலங்களை அமைக்கவேண்டும். அதேபோல பட்டவர்த்தி எம்.டி..ஆர். சாலையிலே இருக்கின்ற அய்யாவையனாறு பாலம் மிகவும் பழைமையான பாலமாக இருக்கிறது. அந்தப் பாலத்தையும் புதுமைப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைப்போல அணைக்கரை பாலம் கட்டுவதற்குத் திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு பயணியர் போக்குவரத்துக்கு கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் சுற்றி வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஆய்வு செய்த அதிகாரிப் பெருமக்கள், பொறியாளர்களெல்லாம் பயணியர் போக்குவரத்து அதிலே நடத்தலாம் என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, அங்கு மீண்டும் ஓர் ஆய்வு செய்து, கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் சுற்றி வரக்கூடிய அந்த நிலையை மாற்றியமைக்கக்கூடிய ஏற்பாட்டினைச் செய்வதற்கும், அதில் கன ரக வாகனங்கள் அவ்வழியில் செல்லாமல் இருப்பதற்கான ஓர் உத்தரவையும்

வழங்குவதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, ஊராட்சி சாலைகள் எல்லாம் பல்வேறு திட்டங்களின் மூலமாகப் போடப்பட்டாலும்கூட, அதில் பாலங்கள் கட்டுவதற்கு உரிய நிதிநிலை இல்லாத நிலையைக் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நம்முடைய அரசு சிறு துறைமுகங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன்மூலமாக மின்சாரப் பற்றாக்குறையினை சரி செய்யக்கூடிய அனல் மின் நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் அமையும் என சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போல, மிகப் பெரிய துறைமுகங்களாகச் செயல்பட்ட பூம்புகார் மற்றும் தரங்கம்பாடி கடற்பகுதியிலே ஒரு துறைமுகம் அமைப்பதற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகங்களாக இயங்கிய இந்த இடங்களிலே மீண்டும் துறைமுகங்களை அமைப்பதற்கும் அதன்மூலம் சுற்றுலாத் துறையையும் மேம்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதில் படகு சவாரி போன்ற செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கலாம் என்பதை கவனத்திலே எடுத்துக்கொண்டு அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய உள்ளாட்சித் துறையின்மூலமாக இரு கிராமங்களை இணைக்கக்கூடிய சாலைகளை பி.எம்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்மூலமாக கடந்த 5 ஆண்டுகளிலே செயல்படுத்தியிருந்தாலும்கூட இன்னும் பல்வேறு சாலைகள் அதேபோல எடுக்கப்பட வேண்டியுள்ளன. அவற்றையும் எடுத்துச் செயல்படுத்த கவனத்திலே கொள்ளவேண்டும்.

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய உத்தரவின்பேரில் மயிலாடுதுறை மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த வரகடை பழவாற்றில் பாலமும், நத்தத்தோப்புப் பாலமும், குறிச்சி திம்மாவரம் பாலமும் கட்டுவதற்கு அனுமதியளித்ததற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு இந்தத் தருணத்திலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, TURIP என்பது மிகச் சிறப்பான ஒரு திட்டமாக இருக்கிறது. நகர்ப்புற சாலைகள் கட்டமைப்புத் திட்டத்தின்மூலமாக மயிலாடுதுறை நகராட்சியிலே சர்வதேச அளவிலே சாலை அமைக்கின்ற பணியினைத் தொடங்குவதற்கான முதல் கட்ட ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே செயல்படுத்த வேண்டிய முக்கிய சில கருத்துகளை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் 105 கிலோ மீட்டர் சாலைகளை இத்திட்டத்தின்மூலம் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இதில் மிகவும் முக்கிய சாலைகளாக இருக்கும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 16 கிலோ மீட்டர் சாலைகளும் அடங்கியுள்ளன. அவற்றையும் இத்திட்டத்தின்மூலமாகச் செயல்படுத்தினால்தான், மற்ற சாலைகளைப்போல, ஒரே அளவீட்டில் அமைக்க முடியும். அதன்மூலமாகத்தான் சர்வதேச தரத்தைப் பெறமுடியும். ஆகவே, அதையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விடுபட்டிருக்கின்ற 23 கிலோ மீட்டர் தூரம் பாதாளச் சாக்கடைப் பணியினையும் செயல்படுத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகின்ற புதிய பேருந்து நிலையமும், அதேபோல என்னுடைய தொகுதியில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள குத்தாலம் பேரூராட்சிக்குத் தனியாக மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு பேருந்து நிலையமும் அமைக்க வேண்டும். அருகிலேயுள்ள மணல்மேடு, வைதீஸ்வரன் கோயில், தரங்கம்பாடி போன்ற பேரூராட்சிகளிலே எல்லாம் பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. அதுபோல, இங்கேயும் ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அங்கன்வாடி மையங்களெல்லாம் இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே மிகவும் இடிந்து, பாழடைந்த நிலையிலேயே இருக்கின்றன. அவை உலக வங்கி நிதியிலே கட்டப்பட்ட கட்டடங்கள். அவற்றை இப்போது மாற்றியமைப்பதற்கு repair செய்வதற்குத் என்று தனியாக நிதியே இல்லாத நிலையிலே, அதற்குச் சிறப்பு நிதி அளிப்பதற்கோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, அதாவது தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க நிதி அளிக்கப்படுவதுபோல, இப்பணிக்கும் நிதி

அளிப்பதற்கோ அனுமதி அளிக்க வேண்டும். அந்த வகையிலே அக்கட்டடங்களைச் சீரமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறை சம்பந்தமாக 2, 3 கோரிக்கைகளை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன். அதிலே குறிப்பாக, மணல்மேடு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும், அதற்குப் புதிய கட்டடங்கள் கட்டவும், அதுபோல மேலாநல்லூர், திருவாளப்புத்தூர், சித்தமல்லி, நீடூர், கடலங்குடி பள்ளிகளைத் தரம் உயர்த்தவும் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.

அதேபோல, மயிலாடுதுறை பொது நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி கேட்டிருக்கின்றேன். அதைப்போல, பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே, மணல்மேட்டில் நீண்ட காலமாக இருந்து மூடப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கும், மயிலாடுதுறையிலே இருக்கக்கூடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிதி வேண்டியும் நான் கேட்டிருக்கின்றேன். அதனையும் அளிக்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மயிலாடுதுறையிலே மேலும் ஒரு காவல் நிலையம் அமைப்பதற்கும், அதேபோல Traffic Inspector அளவில் நியமிப்பதற்கும், ஏற்கெனவே அங்கே இயங்கிவந்த traffic நிலையத்தை மீண்டும் தொடங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சர்க்கரைத் துறையின்மூலமாக NPKRR. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின்மூலமாக அதன் கழிவின்மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், கரும்பு வரத்து குறைவாக இருந்த காரணத்தால் அந்தப் பணி நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு மாண்புமிகு தமிழக அரசு கரும்புக்கு உரிய விலை வழங்க உத்தரவிட்டதால் மீண்டும் . . .

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், முடியுங்கள். முடிக்க மாட்டேன் என்கிறீர்களே!

திரு. எஸ். ராஜகுமார்: தற்போது கரும்பு உற்பத்தி அதிகப்படுத்தப்படும் நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, வருகின்ற ஆண்டில் அந்த மின் உற்பத்தியினைத் தொடங்கக்கூடிய ஆணையைத் தமிழக அரசு வழங்குவதோடு, NPKRR ஆலைக்குக் கரும்புகளை வெட்டுவதற்கு, உரிய வெட்டும் கருவிகளைக் கடன் வசதிமூலம் பெறுவதற்கான ஒப்புதல் வழங்குவதற்கும் மற்றும் நீண்ட காலமாக இருக்கின்ற கடன் மற்றும் வட்டித் தொகையான 114 கோடி ரூபாய் கடன் தொகையினை மாநில அரசின் பங்குத் தொகையாக மாற்றம் செய்வதற்கும் அரசு வழிவகை செய்ய வேண்டும். அதுபோல என்னுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஐந்து நிமிடங்கள்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றக் கட்டடத்தை உருவாக்கி, இங்கே நெடுஞ்சாலைத் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த உலகத் தமிழரின் ஒப்பற்றத் தலைவர், ஏழைகளின் ஏந்தல், முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, இனமானப் பேராசிரியர் அவர்களே, இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு, உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கி தமிழகத்தைச் சிறப்பாக வழி நடத்திச் செல்லும் எங்கள் தளபதியே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, எங்கள் மாவட்ட மக்களின் உணர்வுகளையும், தேவைகளையும் புரிந்து மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் எங்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவரையும் வணங்கி, என்னுடைய உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி, ஆரணிக்குப் பொறியியல் கல்லூரி, வந்தவாசிக்குக் கலைக் கல்லூரி, செய்யாறு சிப்காட் வளாகம், பொருளாதார மண்டலம், புதுப்பாளையத்திற்கு Central Polytechnic, ஆரணிக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், கமண்டல நாகநதியின் குறுக்கே ஒண்டிபுரம், குன்றத்தூர் ஆகிய இடங்களிலே இரண்டு மேம்பாலங்கள், கமண்டல நாகநதி குறுக்கே பையூர் அருகே தடுப்பணை, ஆரணிக்குப் போக்குவரத்து வட்டாரத் துணை அலுவலகக் கட்டடம், ஆரணியில் விளையாட்டு அரங்கம், பள்ளிக் கட்டடங்கள், ஆரம்ப

சுகாதார நிலையங்கள், நெடுஞ்சாலைத் துறைமூலமாக ரூபாய் ஒரு கோடியில் நகராட்சிக்கு மார்க்கெட் ரோடு, சிமெண்ட் சாலைகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இவை கிடைப்பதற்கு உறுதுணையாக இருந்த எங்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் நான்காண்டுக் காலங்களில் 12,094 கோடி செலவில் 57,787 கிலோ மீட்டர் நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் கிராமச் சாலைகள் திட்டம் மற்றும் பேருந்து சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றும் திட்டத்தின்கீழ் 3,787 கிலோ மீட்டர் நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன்.

ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டம் 2006–2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு நான்காண்டுகளில் 386 கோடி மதிப்பில் 2,637 கிலோ மீட்டர் நீள சாலைகளை மேம்படுத்தியுள்ளதையும் பாராட்டுகிறேன். மேலும், நபார்டு வங்கி உதவியுடன் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின்கீழ், 44 கோடி ரூபாய் மதிப்பில் 274 கிலோ மீட்டர் தார்ச் சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதையும், 330 ஆதி திராவிடர் குடியிருப்புகள், தார்ச் சாலை வசதி பெற்றுள்ளதையும் பாராட்டுகின்றேன். மாநில நெடுஞ்சாலைகளில் இருவழிச் சாலைகளையும் மற்றும் பிற சாலைகளையும் அகலப்படுத்தும் திட்டத்தை மக்கள் பாராட்டுகின்றனர். மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தையும் படிப்படியாக இருவழிச் சாலைகளாக அகலப்படுத்தவும் மற்றும் போக்குவரத்து செறிவுமிக்க மாவட்ட முக்கிய சாலைகளை குறைந்தபட்சம் இருவழிச் சாலைகளாக்கவும் முடிவு செய்து இதுவரையில் இல்லாத வகையில் கடந்த நான்காண்டுகளில் 10,280 கிலோ மீட்டர் நீளம் நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், ஒருவழிச் சாலைகளாகவும் இருவழிச் சாலைகளாகவும் அகலப்படுத்தியுள்ளதை மக்கள் பாராட்டுகின்றனர்.

நான்காண்டுகளில் மொத்தம் 3,386 கோடி செலவில் 28,145 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பராமரிப்பு ஏதுமின்றிருந்த 4,225 கிலோ மீட்டர் உள்ளாட்சி மற்றும் வேளாண் அபிவிருத்தித் திட்டச் சாலைகள், 288 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. முக்கிய நகரங்களுக்குப் புறவழிச் சாலைகளும், 1,082 மேம்பாலங்களும், 3,850 சிறு பாலங்களும் உருவாக்கியுள்ளதை மக்களே பாராட்டுகின்றார்கள். தமிழகம் எங்கும், மாவட்டத் தலைநகர், வட்டத் தலைநகர் ஆகியவற்றிற்குச் சிறப்பான சாலை மேம்பாட்டு வசதி ஆகியவற்றை ஏற்படுத்தி, நாட்டில் வாகனங்களினால் ஏற்படும் பொருளாதாரச் சீரழிவைக் குறைத்துள்ளதைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். தமிழ்நாட்டில் அபரிமிதமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்தி, பெருகிவரும் வாகனப் போக்குவரத்தைச் சீர் செய்து, சாலை மேம்பாடு, பாலங்கள் அமைப்பது போன்ற கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி, தமிழகத்தை முதலிடமாக்கச் செயல்படுவதைப் பாராட்டி வரவேற்கின்றனர்.

பிற்பகல் 1–10

திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை, ஆரணி, செய்யாறு, வந்தவாசி ஆகிய நகரங்களுக்குப் புறவழிச் சாலை ஏற்படுத்தியுள்ளதை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். தமிழகம் எங்கும் புறவழிச் சாலை, ஆரச்சாலை, தேவையான இடங்களில் அமைத்து உலக அளவில் முன்னேற்றம் அடைந்த நாடுகளைப்போல தமிழகத்தை உருவாக்கிய தலைவர் கலைஞர் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து தேவையான சாலைகளையும், பாலங்களையும் அனைத்துத் தொகுதிகளிலும் நிறைவேற்றுவதை மக்கள் வரவேற்றுப் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்குக் கனிவான வேண்டுகோள்; எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு I.T. Park அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணித் தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகிறேன். சுமார் 2,000 கிலோ மீட்டர்

சாலைகளுள்ள மலைப் பகுதிகளான ஜவ்வாது மலை சாலைப் போக்குவரத்தைக் கவனிக்கவும், அதிகாரிகள் தல ஆய்வு செய்யவும், சிறந்த முறையில் சாலைகளை மேம்பாடு செய்யவும், திருவண்ணாமலை நெடுஞ்சாலைக் கோட்டத்தை ஆரணி, வந்தவாசி மற்றும் செய்யாறு ஆகிய மூன்று உப கோட்டங்களை உள்ளடக்கி 1,710 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்க, நெடுஞ்சாலைக் கோட்ட அலுவலகம் ஒன்றைப் புதியதாக ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு இயக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். எங்கள் மாவட்டத்தில் ஆற்காடு, ஆரணி, போளூர் சாலைகளைப் போலவே, ஆரணி-செய்யாறு, ஆரணி-வந்தவாசி, ஆரணி-சேத்துப்பட்டு, ஆரணி-தேவிகாபுரம் ஆகிய சாலைகளைச் சிறப்பாக அமைத்துத் தரவேண்டுகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல் பெரும்பான்மையான மக்கள் ஈடுபடுகின்ற தொழில், பட்டு நெசவுத் தொழில் ஆகும். (மணியடிக்கப்பெற்றது) ஆரணி, வந்தவாசி, செய்யாறு, போளூர் ஆகிய தொகுதிகளில் பெரும்பான்மையோர் சுமார் 5 இலட்சம் மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் பட்டு முறுக்கு ஆலைகளிலும், சுமார் 2 இலட்சம் பேர் விசைத் தறிகளிலும் ஈடுபட்டு உள்ளனர். இந்தத் தொழில்கள் பட்டு நூல் விலையேற்றத்தின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே மத்திய, மாநில அரசுகள் விலக்களித்து சீனா போன்ற நாடுகளிலிருந்து பட்டு கொள்முதல் செய்து, அரசே மானிய விலையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லாம் அம்மா ஆட்சிக் காலத்தில்தான் எல்லாம் நிறைவேற்றப்பட்டன என்றும் (மணியடிக்கப்பெற்றது) அம்மா, அம்மா என்றும் சொல்கிறார்கள்; அது எல்லாம் சும்மா. கலைஞர் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன என்பதுதான் உண்மை. நடைபெற்று வருகின்ற கலைஞருடைய ஆட்சியே பொற்கால ஆட்சி என்று தமிழக மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்; தி.மு.க. ஆட்சியே தொடர வேண்டும் என்று மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த, அரும்பெரும் சாதனைகளால் மானுடம் போற்றும் காவியத்தைத் தமிழ் மண்ணில் செழிக்க வைத்து, முத்தமிழையும் வென்ற வரலாற்றுத் தமிழாய், எங்கள் குல விளக்காய், வள்ளுவர் வழிநின்று வாழும் தெய்வமாய், தாய்த் திருநாட்டைக் காக்க தர்மயுத்தம் நடத்தும் தனிப்பெரும் தலைவியாய், எங்கும் யாருக்கும் தீங்கு என்றால் வீறு கொண்டு எழுந்து, தீயோர் கூட்டத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) கொட்டத்தை அழித்திட அக்னிப் பிரவேசம் எடுத்துள்ள தனிப்பெரும் சக்தியாய்த் திகழும் எங்கள் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

திரு. செ. பொன்னுதுரை: மானியக் கோரிக்கைமீது என் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்னர் சில விஷயங்களை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். நான் யாரையும் தனிப்பட்ட முறையில் பேசுவதாக நினைக்க வேண்டாம். மாண்புமிகு அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட சிலர், இடத்துக்கு இடம் நிறம் மாறும் பச்சோந்திகளைப்போல, செய்த நன்றியை மறந்துவிட்டு துரோகம் செய்தவர்களால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இரும்புக் கோட்டையை அசைக்க முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, இளைஞர், இளம் பெண்கள் பாசறையைச் சேர்ந்த இலட்சோப இலட்சம் இளைய தலைமுறையினர், கின்னஸ் சாதனையை முறியடிக்கும்வகையில், அம்மா அவர்களின் பிறந்த நாளில் இரத்த தானம் கொடுத்து எந்தத் தியாகத்திற்கும் தயார் என்று சூளுரை ஏற்றதை இங்கு நினைவுபடுத்தி இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் சில கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், வேளாண் விளைபொருட்களையும், கிராமங்களில் உள்ள சிறு தொழில்

நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும், விரைவாகவும், பாதுகாப்பாகவும், விற்பனை மையங்களுக்கு எடுத்துச் செல்ல போதிய இணைப்புச் சாலை வசதிகள் ஊரக மக்களுக்குத் தேவைப்படுகின்றன என்று அறிந்து, ஊரக மக்களின் வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு மிகுந்த அக்கறை கொண்டு, தொலைதூரத்தில் உள்ள கிராமங்களுக்கு இயன்ற அளவு, இணைப்புச் சாலைகள் அமைக்க, சாலைகள் அமைத்துப் பராமரிக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்புப் பராமரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வோர் ஆண்டும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, சாலையை மேம்பாடு செய்தவர் அம்மா அவர்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

கிராமப்புற மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமச் சாலைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கிராமப்புற மக்களை அடியோடு புறக்கணித்துவிட்டது. பாலம் கட்டினோம்; மேம்பாலம் மேம்படுத்தினோம் என்று பெருமை பேசினீர்களே, ஒரு விஷயத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் 1½கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட சாலை அமைக்கும் திட்டத்தின்கீழ் புதியதாகக் கட்டப்பட்ட பல பாலங்கள் இடிந்து விழுந்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளன. காளையார்கோவில் பகுதியில் கிராமங்களை இணைக்கும் 15–க்கும் மேற்பட்ட கான்கிரீட் பாலங்கள் இடிந்து விழுந்துவிட்டன. இதுதான் இந்த அரசின் சாதனை என்று சொல்கிறீர்களா?

பிற்பகல் *1–15*

கடந்த தி.மு.க. ஆட்சியில் 1996 முதல் 2001 வரை ஒட்டுமொத்தமாக சாலைப் பணிகளின் நீளம் 23,125 கிலோ மீட்டர். ஆனால் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2001 முதல் 2006 வரை 46,017 கிலோ மீட்டர் சாலை நீளம் மேம்பாடு செய்து புதுப்பித்தார் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 4,874 கிலோமீட்டர் தேசிய நெடுஞ்சாலைகளில் 3,260 கிலோ மீட்டர் நீளமுள்ள நான்குவழிச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நேரடியாக மேற்கொண்டுள்ளது. இந்தச்

சாலைகளை இணைக்கும் பழைய தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை, மாநில அரசு ஏற்றுள்ளது. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான நகரங்களில் உள்ள அனைத்து சாலைகளும் எந்தவிதப் பராமரிப்பும் இன்றி, வாகனங்கள் செல்வதற்கு வழியில்லாமல், குண்டும், குழியுமாக உள்ளன. இவற்றையெல்லாம் எப்பொழுது இந்த அரசு சீரமைக்கப் போகிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு தகவலையும் இந்த அவைமூலமாகக் கேட்க விரும்புகிறேன். ஈரோடு மாவட்டத்தில் குமாரபாளையம் முதல் செங்கப்பள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்பட்ட நான்குவழிச் சாலையை, முன்பிருந்த மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் கடந்த ஆண்டு அவசர அவசரமாகத் திறந்து வைத்தார். அந்த நெடுஞ்சாலையில் உள்ள ஆறு பாலங்களை ஒட்டிய சர்வீஸ் ரோடுகள் இன்னும் போடப்படவில்லை. இதனால் அன்றாடம் விபத்துகள் ஏற்பட்டு, உயிர்ச் சேதங்கள் அதிகரித்து வருகின்றன. உங்கள் அரசின் சாதனை என்று சொல்வதற்கு, அவசர கோலத்தில் போடப்பட்ட இத்தகைய செயல்களால் ஏற்படும் பல உயிர்ச் சேதங்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?

இந்தியாவிலேயே சாலை விபத்துகளில் உயிரிழப்போர் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகம். விபத்துகள் நடக்காமல் தடுக்க அரசு அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சாலைகளை விரிவுபடுத்தும்போது, சாலையோரக் குடியிருப்புகளில் ஏழை, எளிய மக்களுக்குப் பாதிப்பில்லாமல், அவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் கோவையில், பிள்ளையார்பட்டியில் வாழ்ந்த அவர்களுக்கெல்லாம் மாற்று இடம் கொடுத்துத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்பொழுதுகூட அவிநாசியிலிருந்து பாலக்காடு செல்லும் தேசிய நெடுஞ்சாலையிலே நிலமெடுப்பு செய்யும்போது, இன்று காலையிலேகூட, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக, அங்கு குடியிருந்த மக்களையெல்லாம் அகற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதால், அங்கு மறியல் போராட்டம்கூட நடந்துகொண்டிருக்கிறது. சில அரசியல் தலையீட்டின் காரணமாக அது நடைபெறுவதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

பல இடங்களில் சாலைகள் சந்திக்கும் இடத்தில், எந்த ஊருக்குச் செல்கிறது என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்படவில்லை. இதனால் புதியதாக அப்பகுதியில் வருபவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

பதினைந்து நாட்களுக்கு முன்னால் ஒரு இரயில்வே பாலத்தில் எச்சரிக்கைப் பலகை வைக்கப்படாததால், அங்கே ஒரு வாகனம் இரயில்வே பாலத்திலிருந்து விழுந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைத் தடுக்க வேண்டும். எங்கள் பகுதியில் உள்ள பெருந்துறையிலிருந்து ஈங்கூர் செல்லும் இரயில்வே பாலம் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. ஆனால், இன்னும் பணிகள் முடிக்கப்படாமல் ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. அதுமாதிரி விபத்துகள் ஏற்படாமல், உடனடியாக பாலத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சாலை விபத்துகளைத் தடுக்க சாலையின் இருபுறங்களிலும் Road Dividers, ஒருசில மாவட்டங்களைத் தவிர பல மாவட்டங்களில் வைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள், நகரங்கள், பெருநகரங்கள் ஓரளவேனும் சாலை வசதிகளைப் பெற்றிருக்கும் நிலையில், மலைக் கிராமங்களில் வசிப்போர் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மத்திய அரசு மற்றும் வனத் துறை அனுமதியில் உள்ள குளறுபடி காரணமாக, மலைவாழ் மக்கள் அடிப்படை வசதிகள்கூட கிடைக்காமல் அவதிக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாக ஊட்டி, கொடைக்கானல், தேனி மாவட்டம், வருசநாட்டுப் பகுதி, ஏல்கிரி, சத்தியமங்கலம், பர்கூர், கொல்லிமலை ஆகிய பகுதிகளில் இந்தப் பிரச்சினை அதிகமாக உள்ளது. மலைக் கிராம மக்களுக்குச் சாலை வசதிகள் இல்லாத காரணத்தால், அவர்கள் கல்வி, பொருளாதாரம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதோடு, மருத்துவ வசதிகள்கூட இல்லாமல் சிரமப்படுகின்றனர். இத்தகைய பாதிப்புகள் உள்ள மலைக் கிராமங்களை அரசாங்கம் கண்டறிந்துள்ளதா? அதற்கு அரசு என்ன தீர்வு காணப் போகிறது என்பதை அமைச்சரின் பதிலுரையில் எதிர்நோக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், கிராமச் சாலைகள், நெடுஞ்சாலைக் கிராமக் கோட்டம் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தன. உங்கள் ஆட்சியில்,

கிராமச் சாலைகளைத் தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்துள்ளீர்கள். அவர்களிடம் போதுமான நிதி ஆதாரமோ, சாலைப் பணியாளர்களோ இல்லாததால், கிராமச் சாலைகளெல்லாம் அநாதைச் சாலைகளாகிவிட்டன. சாலை வசதி இல்லாத காரணத்தினால், கிராமங்களுக்குச் சென்று, மருத்துவர்களும், ஆசிரியர்களும் பணியாற்றத் தயங்குகிறார்கள். கிராமச் சாலைகள் புதர் மண்டி, குண்டும் குழியுமாக உள்ளன. எனவே, முன்பிருந்த மாநில நெடுஞ்சாலைத் துறை சாலைகளை, கோட்டம் மூலமாக, கிராமப்புற சாலைகளைப் பராமரித்ததுபோல் மீண்டும் அவற்றைப் பராமரிக்க வேண்டும் என அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

தொழிற்பேட்டைகளுக்குச் செல்லும் சாலைகளும், தொழிற்பேட்டைகளுக்கு உள்ளே உள்ள சாலைகளும் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. தொழிற்பேட்டைக்குத் தேவையான இயந்திரங்கள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பள்ளத்தில் சிக்கிக்கொள்கின்ற இந்தக் காட்சி, கிண்டி தொழிற்பேட்டை, திருவான்மியூர், திரு.வி.க. தொழிற்பேட்டைகளில் அன்றாடம் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இதில் அரசு கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவுதான் சாலைகளைப் போட்டாலும் மழைக் காலம் வந்துவிட்டால் சாலைகள் பழுதடைந்துவிடுகின்றன. தாரும், நீரும் சண்டை போடுவதால் வரும் விளைவு இது. மழை விட்டாலுங்கூட, சாலைகளின் இருபுறங்களிலும் உள்ள மரங்களிலிருந்து, மரக் கிளைகளிலிருந்து விழும் தண்ணீரால் சாலையின் இருபுறமும் பாதிப்படைகின்றன. இதனைப் போக்க புதிய சாலைகளில் மரங்களை நடாமல் பார்த்துக்கொள்வதுடன், அவற்றிற்கு மாறாக, ஊராட்சிச் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் இருபுறமும் பயோ டீசல் உற்பத்திக்குப் பயன்படும் காட்டாமணக்குச் செடியைப் பயிர் செய்தால் சாலையைப் பாதுகாப்பதுடன், அரசுக்கு வருமானமும் அதிகரிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகள் மூன்று வகைகளில் நடைபெறுகின்றன. ஒன்று, சாலையின் அமைப்பு;

இரண்டு, மனிதத் தவறு; மூன்றாவது, இயற்கை மற்றும் கால்நடைகள்மூலமாக நடக்கும் தவறு. இதில், முதல் இரண்டை நாம் தவிர்க்க முடியும். இரவு நேரங்களில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்க விபத்துகளைத் தடுக்கும் நோக்கத்தில் Highway Patrol என்ற ஒரு பிரிவை மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்தார்கள். அந்தப் பிரிவு உங்கள் ஆட்சியில் செயல்படாததன் காரணமாக தினமும் விபத்துகளும், கொத்துக் கொத்தாய் மரணங்களும் நடக்கின்றன.

நெடுஞ்சாலைத் துறையில் இரவு நேரங்களில் 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஓர் உணவகம், ஓய்வகம், மருத்துவ வசதிகள், வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை ஒரே இடத்தில் நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. பொன்னுதுரை, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. செ. பொன்னுதுரை: நீர்வழிச் சாலைகள். பொதுவாக, தமிழகத்தில் பயணத்திற்குப் பேருந்து, இரயில், விமானம் போன்ற வழிகளே உள்ளன. நீர்வழித் தடங்கள் இல்லை. இதனைக் கருத்தில்கொண்டு மேலை நாடுகளில் உள்ளதுபோல நீர்வழித் தடங்களை உருவாக்க வேண்டும். நீர்வழித் தடங்கள் கடல் வழியாகவும், கால்வாய் வழியாகவும் இருக்கலாம். சென்னையில் முதல் முயற்சியாக தடைகளை நீக்கி, பக்கிங்காம் கால்வாயை நீர்வழிக் கால்வாயாக அமைத்தால் அது சென்னை மாநகருக்கு நற்பெயரை ஏற்படுத்தித் தரும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

எனது தொகுதி பெருந்துறையிலிருந்து ஊத்துக்குளி பிர்கா, குன்னத்தூர் பிர்காவை புதிதாகத் திருப்பூர் மாவட்டத்தில் இணைத்தீர்கள். ஊத்துக்குளி, திருப்பூர் உள்வட்டத்தை அவினாசி தாலுகாவிலே சேர்த்துள்ளீர்கள். அங்குள்ள மக்கள் படும் கஷ்டத்தை அளவிட முடியாது. ஒரு வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் 3, 4 பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. எனவே அதை மாற்றி, புதிதாக பெருமாநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டும். இல்லையென்றால், தற்சமயம் தீர்வு காண்பதற்காக ஊத்துக்குளி வருவாய் உள்வட்டத்தை திருப்பூர் தாலுகாவில் இணைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருப்பூர், ஈரோடு புறநகர்ச் சாலைகளில் கொக்கராயன்பேட்டை முதல் திண்டல் வரை 14 கிலோமீட்டர் நீளத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணிக்காக 22 கோடி ரூபாய் ஒதுக்கியும் பணிகள் காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எப்போது அந்தப் பணிகள் நிறைவுபெறும் என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் ஊழலுக்கு வழிவகுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சியை விட்டுச் சென்றபோது இருந்த நிலையை எண்ணிப் பாருங்கள். அன்றையதினம் பத்திரிகைகள் எல்லாம் உங்கள் ஆட்சியைப் பற்றி 'தினக்கூலி அரசு' என்றுதான் எழுதின.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) போதும், போதும், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றபோது மக்களுக்கு நேரடியாகத் திட்டங்கள் வழங்க, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், அரசின் சார்பில் தொகுதி அலுவலகம் மற்றும் சென்னையில் நல்ல விடுதியும் தந்து சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணியாற்ற ஊக்கம் தந்ததுபோல, இக்காலத்திற்கு மட்டுமல்ல; எக்காலத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணியாற்ற, பெருந்தலைவர் காமராஜர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய தலைவர்கள் சிலையமைந்துள்ள இந்த அண்ணா சாலையில், தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சர் ஓமந்தூரார் பெயரில் அமைந்துள்ள வளாகத்தில், மூதறிஞர் இராஜாஜி மண்டபத்திற்கு அருகில் என இவ்வளவு சிறப்புகளோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சேப்பாக்கம் தொகுதியில் அமைந்துள்ள இந்த மாபெரும் மன்றத்திற்குக் கலை வடிவம் தந்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் அய்யன் வள்ளுவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குவதோடு, செம்மொழித் தமிழுக்குக் கொங்கு மண்டலத்தின் தலைநகரமாம் கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வரும் ஜூன்

மாதம் நடத்த இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றிகள் பல, கொங்கு மண்டலத்தின் சார்பாக.

பிற்பகல் 1–25

தலைவர் கலைஞருக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, கழகப் பணியிலும், ஆட்சிப் பணியிலும் தலைவரோடு இணைந்து தோளோடு தோள் நின்றுகொண்டிருக்கின்ற கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக இளைஞர் அணியில் உறுப்பினராக உள்ள இளைஞர் அணித் தொண்டர்கள், மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையின்கீழ் பணியாற்றுவதை எவ்வளவு பெருமையாகக் கருதுகிறார்களோ, அதைப்போல கழகப் பொருளாளராக தளபதி அவர்கள் இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் கழகத் தோழர்கள் எவ்வளவு பெருமையாகக் கருதுகிறார்களோ, உள்ளாட்சித் துறையில் பொறுப்பேற்றுள்ள மக்கள் பிரதிநிதிகள், இக்காலக் கட்டத்தில் அவருடைய தலைமையின் கீழ் பணியாற்றுவதை எவ்வளவு பெருமையாகக் கருதுகிறார்களோ, அதைப்போல நானும் பெருமையாகக் கருதுகிறேன். பாசமிக்க எங்கள் அமைச்சர் என்று பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பல இலட்சக்கணக்கான தாய்மார்களுக்காக, கடந்த நான்காண்டுக் காலத்தில் 31 மாவட்டங்களுக்கு சென்று, 87 மணி நேரம் தொடர்ந்து நின்றபடியே, 1,45,759 சுய உதவிக் (மேசையைத் தட்டும் ஒலி) குழுக்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான சுழல் நிதி மற்றும் கடனுதவி வழங்கி, கின்னஸ் சாதனையில் இடம்பெறும் அளவிற்குச் சரித்திரம் படைத்துவரும் தளபதி அவர்களே, அரசில் அதிரடி தேவையில்லை; ஆர்ப்பாட்டம் தேவையில்லை, அமைதி வழியில், அடக்கத்தோடு மட்டுமல்ல; பக்குவத்தோடும், 'பேச்சைக் குறைப்போம்; செயலைப் பெருக்குவோம்' என்று எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய எங்கள் அண்ணனே, தமிழக மக்களின் மன்னவனே, மாண்புமிகு துணை முதல்வரே, எங்கள் தளபதியே உங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அவையோரையும் வணங்கி, 2010–2011 ஆம் ஆண்டிற்குரிய, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கையை, ஐந்தாவது முறையாக, குறிப்பாக இந்த ஆண்டின் ஐந்தாவது மாதத்தில் ஐந்தாம் நாளன்று, ஐந்தாவது

முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஐந்தமிழறிஞர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாமன்றத்தில் மூன்றாவது முறையாக இடம்பெற உறுதுணையாக இருந்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், உழைத்திட்ட அத்தனை பேருக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நெடுஞ்சாலைத் துறையானது, ஐம்பெரும் முழக்கங்களை வகுத்து அதன் அடிப்படையில் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் 1. அகலமான பாதை, 2. பாதுகாப்பான பயணம், 3. நெரிசல் இல்லாத போக்குவரத்து, 4. குறைவான பயண நேரம், 5. பசுமையான சாலைகள் என ஐம்பெரும் முழக்கத்தோடு மட்டுமல்லாமல், இவைபோக, சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், புதிய சிறு துறைமுகங்கள் உருவாக்குதல், கடல்வழிப் போக்குவரத்தை ஊக்குவித்தல் ஆகிய பணிகளுக்காகவும், 20 அம்ச கொள்கைகளை இந்தத் துறை வகுத்து, மக்கள் நலனுக்காகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களின் பணி, பாதை அமைக்கும் பணி என்றாலும்கூட, கடந்து வந்த பாதையோ பாலைவனப் பயணத்திற்கு ஒப்பானதாகும். காரணம், 1. துவக்கத்தில் துறையில் நிலவிய அதிக காலிப் பணியிடங்கள். 2. தொகுப்பு ஒப்பந்தமுறை, 3. நிர்வாகச் சீர்கேடு, 4. கட்டுமானப் பொருள் விலையேற்றம் என பல நெருக்கடி கட்டங்களைத் தாண்டித்தான் பல்வேறு சாதனைகளை இந்தத் துறை இந்த நான்காண்டுக் காலமாக நிகழ்த்தியுள்ளது. கடந்த அரசு ஐந்தாண்டுகளில் 37 பணியிடங்களை மட்டுமே கருணை அடிப்படையில் நிரப்பியிருந்த வேளையில், இந்த நான்காண்டுக் காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் 1,441 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொகுப்பு ஒப்பந்தமுறை எனக் கடந்த ஆட்சிக் காலத்தில் 10 பணிகள், 15 பணிகள் என்று ஒரே முறையாகத் தொகுத்து, ஒரே ஒப்பந்தப்புள்ளியாகக் கோரப்பட்டது. இதனால், பணிகள் நடப்பதில் காலதாமதம் ஏற்பட்டதை அறிந்து தலைவர்

கலைஞர் அவர்கள், உடனே அதை நீக்குங்கள் என்று உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில் இப்போது ஒவ்வொரு பணிக்கும் தனித் தனி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வருகிறது. அதனால், இன்றைக்குப் பணிகள் வேகமாக நடக்கின்றன.

அதேபோல, இன்றைக்குக் கட்டுமானப் பொருள்களின் விலையேற்றம் அல்லது அந்தக் களப் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற இடம் மாறுதல் காரணமாக இப்போது பணிகளின் மதிப்பீடுகளில் மாறுதல் ஏற்படுகிறது. அதனால், இரண்டு குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1. மதிப்பீடு தொழில்நுட்பக் குழு. இன்னொன்று, திருத்திய நிருவாக ஒப்புதல் குழு என இரண்டு குழுக்களும் புதிதாக மறு சீரமைப்போடு அமைக்கப்பட்டு, சிறப்பாக, அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இப்போது பணிகள் வேகமாக நடைபெறுவதற்கு அக்குழுக்கள் உதவியாக அமைந்திருக்கின்றன.

அதேபோல, கட்டுமானப் பொருள்களின் விலையேற்றம். கடந்த ஆட்சியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கு மேலும், அதேபோல 18 மாதங்களுக்கும் மேல் இருக்குமானால் அந்தப் பணியினுடைய மதிப்பு, அப்போது அந்த விலையேற்றத்திற்கேற்ப மட்டும் மாற்றி வழங்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கு மேலேயும், 12 மாதங்களுக்கு மேலேயும் அந்தப் பணிக்குக் கால அவகாசம் இருக்குமானால், அதற்குரிய கட்டுமானப் பொருள்களுடைய விலையேற்றம் என்னவோ, அதைப்போல மாற்றி வழங்குங்கள் என்று சொன்னதன் அடிப்படையில், இப்போது பணிகள் வேகமாக நடைபெறும் அதேநேரத்தில் ஒப்பந்ததார்களும் சிறப்பாக அதிலே பங்குபெற்று அந்தப் பணிகள் வேகமாக நடந்து வருவதற்கும் உதவியாக இருக்கும்.

இதன் அடிப்படையில், இதுபோன்ற பணிகளையெல்லாம் வேகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். பல்வேறு நெருக்கடிக் கட்டத்தைத் தாண்டித்தான், இந்த நான்காண்டுக் காலமாக பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறோம். அதேநேரத்தில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முதல் முறையாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்றோம். அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று அங்கிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் முன்னால் ஆய்வு செய்து அந்தப் பணிகளையெல்லாம் வேகப்படுத்தியிருக்கிறோம்.

இரண்டாவது சுற்றிலேகூட இதுவரை 12 மாவட்டங்களுக்கு நாங்கள் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட்டு வேகப்படுத்தியிருக்கிறோம்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: அதைப்போல இன்றைக்கு வாகன வளர்ச்சியினுடைய எண்ணிக்கை, போக்குவரத்து என்கிற அடிப்படையில், அதற்கேற்ப நான்கு வகையாகப் பிரித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் தரைவழி, நீர்வழி, இருப்புப் பாதைவழி, வான்வழி என நான்கு வழியாக இருந்தாலும், மக்கள் அதிகமாகப் பயன்படுத்துவது தரை வழியாகும். இதில் தரை மற்றும் நீர்வழிகள் தொடர்பான மேம்பாட்டுப் பணிகளை இத்துறை செய்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், கடந்த காலத்திலே WBM என்கிற நீர்க் கோப்புக் கப்பிக் கலவையைத்தான் நமது மாநில நெடுஞ்சாலை அமைக்கும் நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலை அமைக்கும் நேரத்திலும் பயன்படுத்தி வந்தார்கள். அதை மாற்றி இன்றைக்கு WMM என்கிற முறையிலே, புதிய முறையான ஈரப்பதக் கலவை என்கிற முறையிலே, அறிமுகப்படுத்தியதன் காரணமாக, இந்தச் சாலைப் பணிகள் தரமாகவும் வேகமாகவும் நடப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இன்றைக்குப் பணிகள் எல்லாம் வேகமாக நடந்து வருகின்றன.

அதைப்போல சாலை வகைப்பாடு. இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். சாலைகளை, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை என்று நான்கு வகையாகப் பிரித்திருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தளவில் உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வனத் துறை, பொதுப் பணித் துறை போன்ற அனைத்துத் துறைகளின் சார்பாக ஏறத்தாழ 1,99,040 கிலோ மீட்டர் சாலைகள் இன்றைக்குப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் மத்திய மாநில அரசுகள் இணைந்து இன்றைய தேதியில் 61,674 கிலோ மீட்டர் சாலையை, நெடுஞ்சாலைத் துறைமூலமாகப் பராமரித்து வருகின்றன. கடந்த ஆட்சி நடைபெற்ற ஐந்தாண்டுக் காலங்களிலே

3,663 கிலோ மீட்டர் மட்டுமே வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தது. இந்த நான்காண்டுக் காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரில் இந்த அரசு எடுத்த நடவடிக்கையால் 12,400 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், வகைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், உள்ளாட்சித் துறை போன்று பிற துறைகளிலிருந்து தீர்மானம் வருமானால், அதை ஏற்றுக்கொண்டு இந்த அரசு ஏறத்தாழ 254 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் பராமரிப்பில் எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தற்போது சாலையினுடைய வகையும் அதனுடைய நீளமும் NH என்கிற தேசிய நெடுஞ்சாலை மாநிலத்தில் 4,873 கிலோ மீட்டராக அமைந்திருக்கிறது. அதேபோல SH என்கிற மாநில நெடுஞ்சாலை கடந்த ஆட்சிக் காலத்தில் 6,849 கிலோ மீட்டராக இருந்த நீளம், தற்போது 10,549 கிலோ மீட்டராக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, MDR என்கிற மாவட்ட முக்கிய சாலை. கடந்த ஆட்சிக் காலத்தில் 7,569 கிலோ மீட்டராக இருந்தது; 11,315 கிலோ மீட்டராக உயர்வு பெற்றிருக்கிறது. அதேபோல ODR என்கிற மாவட்ட இதர சாலை. கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாலை, இதிலிருந்துதான் மாவட்ட முக்கிய சாலையாக, மாநில நெடுஞ்சாலையாக வகைபாடு செய்கிறோம். அந்த அடிப்படையில் மாவட்ட இதர சாலையின் நீளம் குறைந்திருக்கிறது. அது குறையக்கூடாது என்றுகூட சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அது குறைந்தால்தான் மாவட்ட முக்கிய சாலையாக, மாநில நெடுஞ்சாலையாக அதிலிருந்து தேசிய நெடுஞ்சாலையாக வகைப்படுத்த முடியும். எனவே, கடந்த அரசு இருந்த நேரத்தில் 42,748 கிலோ மீட்டர் என்று இருந்த சாலை, இப்போது 34,937 கிலோ மீட்டராகக் குறைந்திருக்கிறது. இப்படி வகைப்பாடுகளும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இன்றைய தேதியில் பார்க்கின்றபோது, ஏறத்தாழ மாநில அரசு மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்ற சாலைகளின் நீளம் 56,801 கிலோ மீட்டராகும். இதிலிருக்கக்கூடிய 1,18,250 பாலங்கள் மற்றும் சிறு பாலங்களைத்தான் இந்த அரசு பராமரித்து வருகிறது. அந்த அடிப்படையில் கடந்த அரசால் ஐந்தாண்டுகளில் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 6,066 கோடி ரூபாய். தலைவர்

கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் நான்காண்டுகளில் செலவிடப்பட்ட தொகை 12,094 கோடி ரூபாயாகும். ஆக, 6,028 கோடி ரூபாய் செலவு அதிகமாக இந்த நான்காண்டுகளில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இங்கேகூட உறுப்பினர்கள் சொல்லும்போது எங்களுடைய ஆட்சியிலே 46,017 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மேம்படுத்தப்பட்டது என்பதுகூட மூன்று விதமாகச் சொல்லாம். சாலைகளை அகலப்படுத்துகின்ற பணியில்தான் செலவும் அதிகம் ஆகும். அந்தப் பணியில் சிரமமும் அதிகம். அதற்கு அடுத்தபடியாக அந்த மண்ணினுடைய தன்மைக்கேற்ப உறுதிபடுத்துதல்; பராமரித்தல். பராமரித்தல் என்பது இருக்கக்கூடிய சாலைகளை அப்படியே பராமரிப்பது. அது எளிதான வேலை. அவர்கள் அந்த வேலையைத்தான் செய்தார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்களோ சாலைகளை அகலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் தந்து அந்த அடிப்படையிலும் இன்றைக்கு அதையும் மிஞ்சி 57,787 கிலோ மீட்டர் சாலைகளை இந்த அரசு அகலப்படுத்தி மேம்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கடந்த அரசு ஐந்தாண்டுக் காலத்தில் 871 பாலங்களைக் கட்டியிருந்தது. இந்த நான்காண்டுக் காலத்தில் 1,082 பெரிய பாலங்களை இந்த அரசு கட்டியிருக்கிறது. அதேபோல, சிறிய பாலங்கள் என்று எடுத்துக்கொண்டால், கடந்த ஆட்சிக் காலத்தில், 814 பாலங்களைக் கட்டியிருந்தார்கள்; இப்பொழுது 3,809 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன் அவர்கள் பேசுகின்றபோது, சாலைகளை அகலப்படுத்துகிறீர்கள்; அதிலிருக்கக்கூடிய பாலங்களையும் அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் சாலையினுடைய அகலத்திற்கேற்ப ஏறத்தாழ 800 சிறு பாலங்களையும் இந்த அரசு அகலப்படுத்தியிருக்கிறது.

பிற்பகல் 1–35

அதேபோல, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன், கடந்த ஆட்சிக் காலத்தில் சாலைகளை அகலப்படுத்துவதற்காக 759 கோடி ரூபாய் செலவு செய்திருந்தார்கள் என்று. இந்த ஆட்சியில் 3,770 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில் 3,159 கிலோ மீட்டர்

நீளமுள்ள சாலைகள்தான் அகலப்படுத்தப்பட்டிருந்தன. இப்பொழுது 10,240 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர், பேராசிரியர் அவர்கள்கூட முதல் நிதிநிலை அறிக்கையில் சொன்னார்கள். தேசிய நெடுஞ்சாலைகள் எப்படி 4 வழியாக, 6 வழியாக அகலப்படுத்தப்படுகின்றனவோ அதேபோல் மாநில நெடுஞ்சாலைகளையும் குறைந்தபட்சம் இருவழித் தடங்களாக அகலப்படுத்த வேண்டும்; அதாவது, 7 மீட்டர் அகலம் கொண்ட சாலைகளாக, எதிரெதிரே வரக்கூடிய வாகனங்கள் விபத்தில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரில் இந்த அரசு கொள்கை முடிவெடுத்து அறிவித்தது. அந்த அடிப்படையில், அன்றைய காலத்தில் இந்த அரசு பொறுப்பேற்றபோது மாநில நெடுஞ்சாலை, 4,284 கிலோ மீட்டர் நீளம் மட்டுமே இருவழித் தடமாக இருந்தது. இன்றைய தேதியில் 7,938 கிலோ மீட்டர் நீளம் இருவழித் தடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் இருவழித் தடங்கள் என்ற நிறைவைப் பெற்றிருக்கின்ற மாவட்டங்கள் சென்னை, திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, கரூர், நாமக்கல், மதுரை, தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி என பத்து மாவட்டங்களில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும் இருவழித் தடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. மீதியிருக்கிற சாலைகளும் இருவழித் தடங்களாக மாற்றப்படும். இன்னும்கூட இந்த அரசு ஒரு சாதனையைச் செய்திருக்கிறது. ஒருவழித் தடம் என்கிற 3¾ மீட்டர் அகலம் கொண்ட சாலைகள் அனைத்தையும் குறைந்தபட்சம் இடைவழித் தடங்களாக, அதாவது 5½ மீட்டர் அகலம் கொண்ட சாலைகளாக இன்றைக்கு மாற்றியிருக்கிறோம். ஓரளவிற்கு அது விபத்துகளைத் தவிர்த்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது, தமிழ்நாட்டில் வெறும் 32 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைதான் ஒருவழித் தடமாக இருக்கின்றது. அதுவும் வனப் பகுதியில், அகலப்படுத்த முடியாத இடங்களில்தான் அது அமையப் பெற்றிருக்கிறது. எனவே, வாய்ப்பேயில்லாத பட்சத்தில்தான் அவ்வாறு உள்ளது. அந்த அடிப்படையில் எஞ்சியிருக்கின்ற 1,414 கிலோ மீட்டர் இருவழித் தடமும் எதிர்காலத்தில் படிப்படியாக அகலப்படுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மத்திய மாநில அரசுகளும், நம்முடைய உள்ளாட்சித் துறையும் சாலைகளை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால், இன்றைக்கு சாலைகளுடைய நீளம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது; அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின்படி, ஒரு இலட்சம் மக்கட்தொகைக்கு 308 கிலோ மீட்டர் நீளமாக இருந்த சாலையின் நீளம், இப்பொழுது 319 கிலோ மீட்டர் நீளமாக உயர்வு பெற்றிருக்கிறது. அதேபோல, 100 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு 148 கிலோ மீட்டராக இருந்த சாலையின் நீளம், தற்போது 153 கிலோ மீட்டர் நீளமாக உயர்ந்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, சாலைகளில் பயண நேரத்தை மிச்சப்படுத்துகின்ற வகையில், அந்தக் கொள்கையின் அடிப்படையில், சாலைகள் மேம்படுத்தப்பட்டதன் அடிப்படையில், உதாரணமாக நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை 338 கிலோ மீட்டர், இதைக் கடப்பதற்கு முன்பெல்லாம் 11½ மணி நேரம் பயணம் செல்ல வேண்டும். ஆனால், இப்பொழுதோ 5½ மணி நேரத்தில் நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற வகையில், சிறப்பான சாலையாக அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 6 மணி நேரம் மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்றைக்குப் பேசிய உறுப்பினர்களெல்லாம் சாலை விபத்துகளைப் பற்றி இங்கே அதிகமாகக் குறிப்பிட்டார்கள். சாலைகளை அகலப்படுத்திய காரணத்தினாலும், அதிலும் குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகள் என்று எடுத்துக்கொண்டால் மையத் தடுப்புடன்கூடிய 6 வழிச் சாலை, 4 வழிச் சாலை என்று அகலப்படுத்திய காரணத்தினாலும், இன்றைக்கு விபத்துகள் குறைந்துள்ளன. அதனுடைய ஆய்வறிக்கையைப் பற்றிக்கூட நான் பின்னர் குறிப்பிட விரும்புகிறேன். அதேநேரத்திலே, வாகன ஓட்டுநர்கள் முடிந்த அளவிற்குக் கவனமாக இருந்தால்தான் சாலை விபத்துகளைப் பெரிதாகக் குறைக்க முடியும். என்னதான் சாலைகளை அகலப்படுத்தினாலும், நிற்கின்ற வாகனங்களின்மீது பின்னால் வருகின்ற வாகனங்கள் மோதுகின்ற நேரங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. நான்கு சாலைகள் சந்திப்புகளில் கவனக் குறைவின் காரணமாக அதிக அளவில் விபத்துகள் ஏற்படுகின்றன. அதேபோல, 2002 ஆம் ஆண்டிற்குப் பிறகு வாகனங்களின்

எண்ணிக்கை 115 விழுக்காடு அதிகரித்துள்ளது. அப்பொழுது 10 ஆயிரம் வாகனங்களுக்கு 19 விழுக்காடாக இருந்த விபத்து, இன்றைக்கு 10 சதவிகிதமாகக் குறைந்திருப்பதாக உலக வங்கியினுடைய ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசைப் பாராட்டியிருக்கிறது.

அதேபோன்று, சாலைகளுடைய புருவங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சாலைப் பணியாளர்களின் மூலமாகப் பராமரிக்கப்படுகின்றன. அதேநேரத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில், மத்திய அரசின் உதவியோடு நடைபெற்று வருகின்ற அந்தத் திட்டத்தின்மூலமாக, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், அந்தப் பணிகளைச் செய்யும்போது, சாலையில் இருக்கின்ற புருவங்களுக்கும், பக்கத்தில் இருக்கின்ற ஏரி, கால்வாய்களிலிருந்து மண்ணை அள்ளி புருவங்களில் போடுகின்ற காரணத்தினால், வாகனங்கள் தார்ச் சாலைகளிலிருந்து எளிதாக இறங்கிச் செல்வதற்கு வசதியாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனாலும் விபத்துகள் இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 1—40

அதேபோல, பேருந்துகள் சாலையில் செல்கிற நேரத்தில், ஒதுங்கி நிற்கின்ற நேரத்தில் பின்னால் வருகிற வாகனம், அந்த வாகனத்தோடு மோதுகிறபோது வாகன விபத்து ஏற்பட்டு, அந்தச் சாலையிலே நெரிசல் ஏற்படுகிறது. இதனால், வாகனங்கள் ஒதுக்குப்புறமாக நிற்க வேண்டும் என்பதற்காக பேருந்து ஒதுங்குதளம் என்பது அறிவிக்கப்பட்டு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, 144 ஒதுங்குதளங்கள் தற்போது அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, சுமார் 8 கோடி ரூபாய் செலவில் 52 சாலை வளைவுகள் இன்றைக்குச் சரி செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால், விபத்து நடந்த இடங்கள் என்று எடுத்துக் கொண்டால், 307 இடங்கள் கண்டறியப்பட்டு, அதில் ஏறத்தாழ 254 இடங்கள் மேம்பாடு செய்யப்பட்டதன் காரணமாக விபத்துகள் குறைந்திருக்கின்றன.

சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம்—Road Accident Data Management System—என்கிற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, உலக

வங்கியினுடைய ஒத்துழைப்போடு, காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையின் ஒருங்கிணைப்போடு நெடுஞ்சாலைத் துறை, சாலை விபத்து குறித்து தகவல் மேலாண்மைத் திட்டம் உருவாக்க அரசு 23-12-2008-இல் ஆணையிட்டது. அதனுடைய பணி, நெடுஞ்சாலையில் ஏற்படும் விபத்துகள் குறித்து விவரங்களைப் பதிவு செய்து, ஆய்வு செய்யவும் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு ஏற்ற வகையில் புவியியல் தகவல் அமைப்பு சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டு, பதிவாக்கம், சேமிப்பு, ஆய்வு மற்றும் பகிர்மானப் பணிகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, காவல் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் மாநிலப் போக்குவரத்து திட்டப் பிரிவு மையத்திற்கு, அதாவது STPC, சாலை விபத்து குறித்த தகவல் சேகரிப்பு மற்றும் மேலாண்மை குறித்த பணிகளை மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

பாலங்களைப் பொறுத்த அளவில், இன்றைக்குச் சிறப்பாகப் பராமரிக்கப்படுவதோடு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 6 மீட்டர் நீளத்திற்கு மேலே கொண்டு கட்டப்படுகிற பாலத்திற்கு கட்டாயமாக நடைமேடை அமைக்க வேண்டும். இதனால் பாலத்தின்மீது வாகனங்கள் மோதுகின்ற நேரத்தில், அந்த நீர்வழிப் போக்கில் விழுந்து பெரிய விபத்துகள் தவிர்க்கப்பட்டு இன்றைக்கு அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே அடிப்படையில், கடந்த மாதம், ஆகஸ்ட் மாதத்தை, பாலங்கள் பராமரிக்கும் மாதம் என்று அறிவித்து, அந்த அடிப்படையிலே ஏறத்தாழ 27 கோடி ரூபாய் செலவில் 50,650 பாலங்கள் சீர் செய்யப்பட்டு, அதனால் அங்கு நீர்வழிப் போக்கில் ஏற்படுகிற நீர் அடைப்புகள்கூட தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் சாலையும் பராமரிக்கப்படுவதோடு, பாலத்தினுடைய கட்டுமானமும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிரொலி மணியன் அவர்கள் குறிப்பிடும்போது, இரயில்வே மேம்பாலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதேபோல, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினரும் பேசுகிறபோது இங்கே குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 4 ஆண்டுக் காலத்தில், ஏறத்தாழ முடங்கிக் கிடந்த பல்வேறு பாலங்கள் தற்போது கட்டப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 2001–2006 ஆம் ஆண்டுகளில், 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து 7 பாலங்களுக்கு மட்டுமே அனுமதி பெற்றிருந்தார்கள். அதனுடைய மதிப்பு 168 கோடி ரூபாய் ஆகும். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களின் அரசில் 5 ஆண்டுக் காலத்தில், இந்த ஆண்டோடு சேர்த்து 104 பாலங்களுக்கு ரூபாய் 2,247 கோடி மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி பெறப்பட்டு, இன்றைக்கு அதற்குரிய பணிகள் செயலாக்கத்தில் இருக்கின்றன. அதேநேரத்தில் கடந்த அரசில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 பாலங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசில், இந்த 4 ஆண்டுக் காலத்தில் ரூ.271 கோடி மதிப்பீட்டில் 22 மேம்பாலங்கள் கட்டப்பட்டன. இன்னும்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைராஜ் அவர்கள்கூட மதுரையில் இருக்கிற பாலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதேபோல மதுரை மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் இங்கே குறிப்பிட்டார்கள், மதுரையைப் பொறுத்தவரையில் 3 இரயில்வே கடவுகளிலே, சாலை மேம்பாலங்கள் கட்டுவது செயலாக்கப்பட்டுள்ளது என்று. அதில் கூடல் நகரிலே தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே மேம்பாலம் கட்டப்பட்டு இப்போதுதான் திறக்கப்பட்டது. அதேபோல எல்லீஸ் நகரிலும் ஒரு மேம்பாலம் இப்போது திறக்கப்பட்டது. அவை இன்று மக்களுடைய பயன்பாட்டில் இருக்கின்றன.

தலைவர் கலைஞர் அவர்கள் 2000–2001 ஆம் ஆண்டிலே அறிவித்த அந்த எல்லீஸ் நகர், செல்லூர் பாலமும் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இன்றைக்கு அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திறக்கப்பட்ட (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு clarification கேட்கலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் 22 இரயில்வே மேம்பாலங்கள் இந்த ஆட்சியில் கட்டப்பட்டதாக, சாதனையாகச் சொன்னார்கள். 2006–ல் நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் 22 பாலங்களில், உங்களால் அரசாணை போடப்பட்டு, நீங்களே கட்டி முடித்த பாலங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைதான் சொன்னேன். எதிர்கட்சித் துணைத் தலைவரான உங்கள் மீது கோபமோ அல்லது உங்கள் ஆட்சியின்மீது கோபமோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அம்மேம்பாலம் கட்டி முடிக்கப்படவில்லை; அது ஆமை வேகத்தில் நடப்பதாகச் சொன்னார்கள். அதற்காகத்தான் சொன்னேன். தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது 2000–2001 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட பாலமான செல்லூர் பாலத்தைப் பற்றிதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதேபோன்று 22 பாலங்களை திறந்திருக்கிறோமே, இந்த 22 பாலங்களில், 21 பாலங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது அரசாணை வெளியிடப்பட்ட பாலங்கள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் 5 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தார்கள், அதுவும் குறிப்பாக ** (குறுக்கீடு)

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது 2006–ல் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் ஏதாவது ஒரு பாலத்திற்காவது அரசாணை போடப்பட்டு, ஏதாவது ஒரு பாலத்தையாவது நீங்கள் கட்டி முடித்திருக்கின்றீர்களா என்பதுதான் கேள்வி. (குறுக்கீடு) பொறுத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் விளையாட்டாக சில செய்திகளை இங்கே தவறாகப் பதிய வைத்துக்கொண்டிருக்கின்றார். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அறிவித்த பாலம் ஏதாவது ஒன்று கட்டடப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். ஓர் இரயில்வே கடவிலே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அதற்கென்று ஒரு விதிமுறை இருக்கின்றது. (குறுக்கீடு) அந்தச் சாலையில் செல்லக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கையையும், அந்த இரயில்வே கடவிலே செல்லக்கூடிய (குறுக்கீடுகள்) இருப்புப் பாதையின் வழியாகச் செல்லக்கூடிய இரயில்களின் எண்ணிக்கையையும் பெருக்கினால் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் Train vehicle units என்கிற கணக்கு வரவேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: அப்பொழுதுதான் மத்திய அரசு தாக்கீது அனுப்பும். "இந்த இரயில்வே கடவு தகுதி பெறுகிறது, மாநில அரசினுடைய கருத்து என்ன?" என்று கேட்பார்கள். அப்படித்தான் அன்றைக்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வெறும் 9 பாலங்களுக்கு மட்டும் அனுமதி தரப்பட்டது. இதை மறைப்பதற்காகத்தான் இப்படித் திசை திருப்புகிறார். (குறுக்கீடுகள்) தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 104 பாலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அவர்கள் அனுப்பிய அத்தனை பாலங்களுக்கும் இன்றைக்கு அனுமதி பெற்றிருக்கிறோம். இவர்கள் ஐந்தாண்டு காலத்திலே வெறும் ஏழு பாலங்களைக் கட்டிவிட்டு, அதைச் சமாளிப்பதற்கு இன்றைக்கு இடக்கு முடக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) எனவே, நம்முடைய இரயில்வே பாலத்தைப் பொறுத்த அளவில், இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியைப் பொற்காலம் என்றுகூட சொல்லலாம். இதே நேரத்திலே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு (குறுக்கீடுகள்) அந்தத் துறையினுடைய இணை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய வேலு அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லியாக வேண்டும். ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அமைச்சர் பதிலை முடிக்கட்டும். முடித்த பிறகு clarification கேளுங்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: இன்றைக்கு 104 பாலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான்

இதையும் நினைவுகூர்கிறேன். (குறுக்கீடு) அதே நேரத்தில், இன்றைக்கு திருநெல்வேலியில் மாண்புமிகு . . . குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். எல்லோரும் ஒன்றுகூடி எழுந்து நிற்கிறீர்களே! ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள், எல்லோரும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொத்தம் 104 பாலங்களை அறிவித்ததாகச் சொன்னார்கள். அறிவித்ததெல்லாம் உண்மைதான். 2006–2007–ல் 410 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள், 2007–2008–ல் 877 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள், 2008–2009–ல் 561 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள், 2009–2010–ல் 201 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள், இந்த வருடம் 199 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மொத்தம் ஒதுக்கப்பட்ட பணம் 2,248 கோடி ரூபாய். எவ்வளவு ரூபாய் இந்த ஐந்து வருடங்களில் நீங்கள் செலவு செய்தீர்கள்? 150 கோடி ரூபாய்கூட செலவழிக்கவில்லை. ஒதுக்கப்பட்ட பணம் 2,248 கோடி ரூபாய், செலவழித்தது 150 கோடி ரூபாய்கூட இல்லை. அப்படியானால், உங்கள் துறையினுடைய சாதனை–performance இந்த அளவுக்குத்தான் இருக்கிறது. நீங்கள் தேவையில்லாமல் சாதனை என்று சொல்லிக்கொண்டு, ** இடையில் நின்றுகொண்டு நீங்கள் தேவையில்லாததைப் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்களே இதைப் பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், நீங்கள் உங்கள் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின்மீது மட்டும் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: நான் அதற்குள் போயிருக்க மாட்டேன். அதனால்தான் இதைக் குறிப்பிடுகிறேனேயொழிய, வேறு எந்த நோக்கமும் இல்லை. (குறுக்கீடுகள்) அவர்மீது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு யாரும் எதுவும் பேசாதீர்கள். மற்றவர்களெல்லாம் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) Please. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் வீணாகிறது. (குறுக்கீடு) தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு சபையிலே பாராட்டிப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) எனவே, அந்த அடிப்படையிலே, அவருடைய தொண்டன் என்ற முறையிலே, (குறுக்கீடுகள்) அவரையும் நான் மரியாதையாகக் கருதக்கூடியவன்தான். அந்த அடிப்படையில். . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பாராட்டித்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: என்னுடைய பதிலிலே நான் சொல்கிறேன். பொறுமையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நான் கேட்கிறேன், தலைவர் கலைஞர் அவர்கள், 2000–2001 ஆம் ஆண்டுவாக்கில் அவர்கள் அனுமதி தந்த பாலத்தை இவர்கள் கட்டியிருந்தால், (குறுக்கீடுகள்) நாங்கள் இப்பொழுது அறிவித்த பாலத்தைக் கட்டியிருப்போம். துறையையே காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள். துறையைத் தேடி கண்டுபிடிப்பதற்கே எங்களுக்கு ஓராண்டுக் காலம் ஆகிவிட்டது. அதற்குப் பிறகு 7 தலைமைப் பொறியாளர்கள் அந்தத் துறையிலே இருக்க வேண்டிய இடத்தில் 4 இடங்கள் காலியாக இருந்தன. 27 கண்காணிப்புப் பொறியாளர் இருக்க வேண்டிய இந்தத் துறையில் 17 இடங்கள் காலியாக இருந்தன. 121 கோட்டப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய துறையில் 51 இடங்கள் காலியாக இருந்தன. 930 இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 340 இடங்கள் காலியாக இருந்தன. சாலை ஆய்வாளர்கள் 1,700 பேரில் 800 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதற்கெல்லாம் அரசு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு அவை நிரப்பப்பட்டு, துறை இப்பொழுதுதான் முழுமை பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

பிறகு clarification கேட்பதாக இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பதிலுரை சொல்லும்போது இடையூறாக இருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை முழுவதும் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு மேலும் ஏதாவது clarification இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நிதி ஒதுக்கியது பற்றியும், அதைத் திரும்ப ஒப்படைத்தது பற்றியும் சொன்னார்கள். இரயில்வே பாலத்தினைப் பொறுத்தவரையில், நாங்கள் அறிவித்ததில் இன்னும் கட்டுமானப் பணிக்கு நாங்கள் வரவில்லையென்பதை ஒத்துக்கொள்கிறேன். அதனை இல்லையென்று சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், நாங்கள் அறிவித்த பாலத்தை இவர்கள் கட்டியிருந்தால், அந்தப் பாலத்திற்கான கட்டுமானப் பணிக்கு நாங்கள் வந்திருப்போம். எனவே, துறையிலே அப்படிப்பட்ட நிலைமையிருந்த காரணத்தினால்தான், அந்தப் பழைய பாலங்களை நாங்கள் கட்ட வேண்டிய நிலை; அதைத்தான் நான் சொன்னேன், 22 பாலங்களைத் திறந்திருக்கிறோம் என்று. 21 பாலங்கள் தலைவர் கலைஞர் அவர்களாலே அறிவிக்கப்பட்ட பாலங்கள். எனவே, ஒரு பாலத்தைதான் இவர்கள் அறிவித்த பாலத்தை நாங்கள் கட்டியிருக்கிறோம். அதே நேரத்தில், இன்றைக்கு 42 சாலை மேம்பாலப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல; 42 பாலங்கள் செயலாக்கத்தில் உள்ளன. 70 பாலங்கள் குறித்து இரயில்வே துறையோடு கலந்தாய்வு செய்வதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த 70 பாலங்களையும் விரைவாகக் கட்டுமானத்திற்குக் கொண்டுவருவோம் என்பதையும், மேலும் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) ரூ.7,393 கோடி ஒதுக்கப்பட்டது இவருடைய துறைக்கு. ஆனால், ரூ.6,066 கோடிதான் செலவு செய்தார்கள். . (குறுக்கீடுகள்) 1,327 கோடி ரூபாயை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். Please.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: அரசுக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இவர்களும் செலவு செய்யவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: அதே நேரத்தில் ஒதுக்கிய நிதியோ குறைவு. ரூ.7,393 கோடியில், ரூ.6,066 கோடியைத்தான் செலவு செய்தார்கள். மீதி ரூ.1,327 கோடியைத் திரும்ப ஒப்படைத்தார்கள். (குறுக்கீடுகள்) அவர்களுடைய காலத்தில் இந்த நிலைமை இருந்திருக்கிறது என்பதைப் பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்து, தங்களுடைய குருநாதரான சட்டப் பேரவையினுடைய முன்னாள் தலைவர் திரு. செல்லபாண்டியனுடைய சிலை அருகில் திருநெல்வேலியிலே ஏறத்தாழ ரூ.11 கோடியில் பாலம் கட்டி திறக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. (குறுக்கீடுகள்) அதேபோல, கோவை மாநகரில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக தலைவர் கலைஞர் அவர்கள் சாலை மேம்பாட்டுப் பணிக்காக ரூ.60 கோடியும் மற்றும் ரூ.120 கோடி அளவிற்கு தேசிய நெடுஞ்சாலைத் துறைப் பணிகளும் இன்றைக்கு நடந்து வருகின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சில ஐயப்பாடுகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விழைகிறார்; அது தவறல்ல. அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, முன்வரிசையில் இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைப் போன்றவர்கள் கேட்பது உண்டு. அதை நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில் அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் யாருக்கும் உரிமை உண்டு. ஆனால், விவாதமாகத் தொடர்ந்துகொண்டிருந்தால், அவர்களுடைய பேச்சு தடைபட்டுவிடும். (குறுக்கீடுகள்) இப்பொழுதும் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அனுபவம் மிக்கவர்.

அவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தரலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குக் கேட்பதற்கு உரிமை உண்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பதில் சொல்வதற்குக் கடமையுண்டு. எனவே, இப்பொழுது அமர்ந்து அவர் சொல்வதற்கு வழிவிடுங்கள். நீங்கள் என்ன கேட்கிறீர்களோ அதற்கு அவர் பதில் சொல்லலாம். இந்த அவை சுமுகமாக நடைபெறுவதற்கு ஒரு வழியைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்பதற்கு உரிமை உண்டு. கேட்கலாம். You have got right. அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்வதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் இரண்டு முறை வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அமைச்சர் அவருடைய பதிலுரையை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) இதைவிட நான் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கிடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் வாய்ப்பு தருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் இப்படிக் கேட்டால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆனால், மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் அவர்களே, இப்படி அடம் பிடிப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரவிச்சந்திரன் மற்றும் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், மிகவும் அதிகமாக சத்தம் போடுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் உங்களுக்கு நேரம் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) ஏன், நீங்கள் முரண்டு பிடிக்கின்றீர்கள்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ** சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: 42 இரயில்வே கடவிலே இருக்கக்கூடிய சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 70 பணிகளுக்கு நெடுஞ்சாலைத் துறையும், இரயில்வே துறையும் இணைந்து நேர்பாடு முடிவு செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். நேரிடையாக இங்கேயிருந்து சிமெண்டையும், கம்பியையும் எடுத்துக்கொண்டு போய் மேம்பாலம் கட்டிவிட முடியாது. அங்கே இருக்கக்கூடிய இரயில்வே துறையோடு நேர்ப்பாடு வரைவு முடிவு செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், நேர்ப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடும், உயரத்தில் மாற்றம் ஏற்பட்டுவிடும். இதனால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துவிடும் என்பதற்காக நேர்ப்பாடு இறுதி செய்யப்பட வேண்டும். மாண்புமிகு இரயில்வே துறையினுடைய இணை அமைச்சராகயிருந்த மாண்புமிகு திரு. அரங்க. வேலு அவர்கள், நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு மூன்று முறை வந்து (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடன் மூன்று கலந்தாய்வுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டார். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு அவையெல்லாம் வேகப்படுத்தப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) திரு. அரங்க. வேலு அவர்கள், மூன்று முறை அந்த ஆய்வுக் கூட்டங்களுக்கு வந்த காரணத்தினால் இரயில்வே துறையும், நெடுஞ்சாலைத் துறையும் அப்பொழுதுதான் இணைந்தன. இவர்கள் இருக்கும்போது, இரயில்வே துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் சரியான தொடர்பில்லாத காரணத்தால், இந்தப் பணிகளில் தொய்வு ஏற்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் உங்களுடைய குருநாதரான மாண்புமிகு திரு. செல்லபாண்டியன் அவர்களுடைய திருவுருவச் சிலையின் அருகில் ரூ.16 கோடி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மதிப்பீட்டிலே உயர்மட்ட பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது, வரும் ஜூலை மாதம் திறக்கப்படவிருக்கிறது.

அதேபோல, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக மொத்தம் ரூ.160 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறைமூலமாக சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதிலே ரூ.60 கோடி மாநில அரசின் நிதியிலிருந்தும், விடுப்பட்டிருந்த 7 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை 67-இல் இன்றைக்கு சிந்தாமணி புதூரிலிருந்து பங்குச் சந்தை வரை 7 கிலோ மீட்டர் சாலை ரூ.16 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய தனிப்பட்ட முயற்சியின் காரணமாக மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்துத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டதன் அடிப்படையில், விடுபட்ட பகுதியான, பங்குச் சந்தையிலிருந்து நரசிம்மநாயக்கன்பாளையம் வரை அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு ஏறத்தாழ ரூ.49 கோடிக்கு அனுமதி தந்து, பணிகள் இன்றைக்குத் தொடங்கியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த நேரத்தில் அதற்காக நம்முடைய மாண்புமிகு த்ணை முதல்வர் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கோவை, அவிநாசி சாலையில், மருத்துவக் கல்லூரி அருகில் இருவழிப் பாலமாக இருந்த பழைய பாலம் மூன்று வழிப் பாலமாக மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மீண்டும் ரூ.7 கோடி இன்றைக்கு இரயில்வே துறைக்கு ஒப்புதல் செய்யப்பட்டு, மூன்றுவழி பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்குமுன் அது கட்டி முடிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியில், ஏறத்தாழ சுமார் 545 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், 7 பாலப் பணிகளும், 5 மேம்பாலப் பணிகளும், இரயில்வே கடவில் ஒரு சாலை மேம்பாலப் பணியும், சுரங்க நடைபாதையைச் சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. உலக வங்கி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ஏறத்தாழ ரூ.412 கோடி மதிப்பில் 385 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மற்றும்

நடைபாதைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. ரூ.21 கோடி செலவில் பள்ளிக்கரணை நான்கு ரோடு சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைந்தகரை, செங்குன்றம், வெள்ளவேடு ஆகிய பகுதிகளில் பாலப் பணிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. ரூ.29 கோடி மதிப்பில் திரு.வி.க. பாலம் மற்றும் முகப்பேர் ஆகிய பகுதிகளில் தலா ஒரு பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் விரைவில் தொடங்கும்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிற போரூர் சந்திப்பில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு ரூ.35 கோடி அனுமதி தந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தாங்குதூண் அமைக்கிற ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் அடிக்கடி வியாசர்பாடியில் மேம்பாலம் கட்டுவது குறித்து இங்கே சொல்வார்கள். நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு ரூ.81 கோடி மதிப்பீட்டில் இரயில்வே துறையும், மாநில அரசும் இணைந்து, அங்கே ஒரு உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தாங்குதூண் அமைக்க பரிசோதனைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. பாலப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மூலக்கடை சந்திப்பில், ரூ.50 கோடி மதிப்பிலான மேம்பாலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அரசின் பரிசீலனையில் உள்ளது. ரூ.46 கோடி மதிப்பீட்டில் அண்ணாநகர் இரண்டாவது நிழற் சாலை மற்றும் திருமங்கலம் முகப்பேர் சாலை சந்திப்பில் கட்டப்படவுள்ள மேம்பாலத்திற்கான நேர்ப்பாட்டின் ஒப்புதல் மெட்ரோ இரயில் நிறுவனத்திடமிருந்து தற்போதுதான் கிடைக்கப்பெற்றது விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல, ரூ.30 கோடி மதிப்பில் வடபழனி உள் வட்ட சாலைச் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி மெட்ரோ இரயில் திட்ட ஒருங்கிணைப்போடு செயல்படுத்தப்படும்.

அதேபோல, ஒரகடத்தில், தொழிற்பூங்கா பகுதியில், ஏறத்தாழ மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.300 கோடி சிறப்பு நிதியைத் தந்து அந்தச் சாலை இன்றைக்கு 58 கிலோ மீட்டருக்கு 4 வழிச் சாலையாக மாற்றப்படுகிறது.

அதேபோல, வண்டலூரிலிருந்து ஒரகடம் கூட்டு ரோடு வரையிலும், சிங்கப்பெருமாள் கோவிலிலிருந்து ஒரகடம் கூட்டு ரோடு வரையிலும், நான்குவழிச் சாலைகளாகவும், ஒரகடம் கூட்டு ரோடிலிருந்து ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நோக்கியா கம்பெனி வரை ஆறுவழிச் சாலைகளாகவும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரகடம் கூட்டு ரோடிலே ஓர் உயர்மட்ட பாலத்தை சுமார் ரூ.16 கோடி மதிப்பீட்டிலே அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதேபோல, சென்னையிலே இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைக்கக்கூடிய வகையில் சென்னை வெளி வட்டச் சாலை என்கிற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் நடவடிக்கையின் அடிப்படையில் அதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதனுடைய மொத்த நீளம் 62 கிலோ மீட்டராகும். தேசிய நெடுஞ்சாலை எண் 47, வண்டலூரில் தொடங்கி தேசிய நெடுஞ்சாலை எண் 4–ல் நசரத்பேட்டையைக் கடந்து, தேசிய நெடுஞ்சாலை எண் 205–ல் நெமிலிச்சேரி வரை முதல் முறையாக 30 கிலோ மீட்டருக்கும் சுமார் ரூ.1,081 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இன்னும் சில நாட்களில் பணி தொடங்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

இரண்டாவது கட்டமாக மீஞ்சூர் வரை அந்தச் சாலை 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டாம் கட்டப் பணிகளுக்கு 1,076 கோடி ரூபாய்க்குண்டான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் 6 வழிச் சாலைகளாக அமைவதற்குரிய வழியினை வகுக்கும்.

பிற்பகல் 2–00

அதேபோல, சென்னை உள் வட்டச் சாலை என்கிற முறையிலே, வேளச்சேரி இரயில் நிலையத்திலிருந்து வீரங்கல் ஓடை வழியாக ஆதம்பாக்கம் ஏரியில் 6 வழிப் பாலம் கொண்டு தில்லை கங்கா நகர் வழியாக ஜி.எஸ்.டி சாலையினை இணைக்கக்கூடிய வகையிலே சென்னையின் உள் வட்டச் சாலைப் பணியும் நிறைவடையவிருக்கிறது. நடப்பாண்டு இறுதியிலே இதனை

முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலை 4,873 கிலோ மீட்டர் அளவுக்கு அமைந்திருக்கிறது. இதிலே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கடந்த மார்ச் 31—ம் தேதி வரைக்கும் 3,260 கிலோ மீட்டர்தான் எடுத்திருக்கிறார்கள். அதுபோக மீதியிருக்கக்கூடிய 1,613 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை, மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று மாநில அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதுவும் படிப்படியாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாற்றப்பட்டு வருகிறது. இதிலே மொத்தம் 2010—லிருந்து ஏறத்தாழ சுமார் 613 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசின் நிதியைப் பெற்று மாநில அரசு பராமரித்து வரக்கூடிய சாலையில் 1,307 கிலோ மீட்டர் சாலையும், 22 பாலப் பணிகளும் நடைபெற்று முடிந்திருக்கின்றன. அதுபோக, இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்ட சாலைகள் 10 மீட்டர் அகலம் கொண்ட சாலைகளாகவும் 4 வழிச் சாலை மற்றும் 6 வழிச் சாலைகளாகவும் மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் தமிழகத்தில் மட்டும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மாற்றப்பட்டிருக்கிற 3,260 கிலோ மீட்டர் மொத்தச் சாலையில் ஏறத்தாழ 25,450 கோடி ரூபாய்க்கான பணிகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டு, தனியார் முதலீட்டோடு இன்றைக்கு அமைக்கப்பட்டு வருகிறது. நாங்கள் இங்கிருந்து மதுரைக்கோ, திருநெல்வேலிக்கோ செல்ல வேண்டுமென்று சொன்னால், பல இடங்களிலே சுங்க வரி செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். சுங்க வரி வசூல் செய்யப்படுகிற காரணத்தினால்தான், அரசினுடைய நிதி குறைவாகச் செலவு செய்யப்பட்டு, தனியார் பங்களிப்போடு அந்தச் சாலைகளை அமைக்கிறோம். இன்றைக்கு விபத்துகளைத் தடுக்கின்ற வகையிலே அவை 4 வழிச் சாலைகளாகத் தடுப்புகள் அமைக்கப்பட்டு மாற்றப்பட்டிருக்கின்றன. எனவே, ஓர் இடத்தில் 50 கிலோ மீட்டருக்கு ஒரு நிறுவனம் செய்தால், 2 இடங்களிலே சுங்க வரிச் சாலைகளை அமைப்பார்கள். முதலில் துவக்கத்தில் ஓர் இடத்திலும் பிறகு கடைசியாகவும் அமைப்பார்கள். எனவே, பார்ப்பதற்கு இரண்டு இடங்களாகத் தெரியும். அதற்குப் பிறகு இன்னொரு சாலையை இன்னொரு நிறுவனம் துவங்குகிற நேரத்தில் அவர்கள் 10 கிலோ மீட்டர் தள்ளி அந்தச் சுங்க வரிச் சாலையைத் துவக்கியிருப்பார்கள்; பணிமனையை அமைத்திருப்பார்கள். அப்படிப் பார்க்கின்றபொழுது, பக்கத்திலே

பக்கத்திலே தெரியுமேயொழிய, எத்தனை கிலோ மீட்டருக்கு எந்த நிறுவனங்கள் சாலையை அமைக்கிறதோ அந்த அடிப்படையில் அதற்குரிய கட்டணம் விதிக்கப்பட்டு, அதனடிப்படையிலேதான் வசூல் செய்யப்படுகிறது. அவர்கள் வசூல் செய்யவில்லையென்று சொன்னால், அவர்கள் ரோட்டுக்குத்தான் வரவேண்டும். எனவே, தனியார் முதலீட்டோடு அரசினை நம்பி வருகின்ற நேரத்தில், அவர்களை ஊக்கப்படுத்துவதன் காரணத்தால், இந்த அளவுக்கு 4 வழிச் சாலைகள், 6 வழிச் சாலைகளை அரசு அமைக்க முடிகிறது. எனவே, அதையும் கருத்தில் கொண்டு, நியாயமான முறையிலே கட்டணம் வசூல் செய்வதற்கு அரசு தொடர்ந்து பரிசீலிக்கும். அதில் இருக்கக்கூடிய தவறுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய முறையில் நிச்சயமாக இந்தத் துறையின்மூலமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் நான் சொன்ன 25,450 கோடி ரூபாய் செலவில் தமிழகத்திலே 4 வழித் தடங்களுக்கு மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட நீளம் 2,428 கிலோ மீட்டர், 6 வழித் தடத்திற்காக எடுக்கப்பட்ட சாலையின் நீளம் 344 கிலோ மீட்டர், அதாவது 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நீளம் 865 கிலோ மீட்டர் என்கிற வகையிலே இந்திய தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. இதற்கெல்லாம் நில எடுப்புச் செய்வதற்கு மாநில அரசினுடைய ஒத்துழைப்பு வேண்டும். நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு 4 ஆண்டுகளில் ஏறத்தாழ 4,500 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் வெறும் 709 எக்டேர் நிலங்கள்தான் கையகப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், நம்முடைய அரசு 4 ஆண்டுகளிலே ஏறத்தாழ 4,131 எக்டேர் நிலங்களைக் கையகப்படுத்தித் தந்திருக்கின்றது.

அதேபோல, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்தால் உலக வங்கித் திட்டத்தின் நிதியுதவி அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சாலைகளின் நீளம் ஏறத்தாழ 765 கிலோ மீட்டர். அதன் மதிப்பு 2,442 கோடி ரூபாய். இதிலே உலக வங்கியினுடைய நிதி 1,903 கோடி ரூபாய்; மாநில அரசின் நிதி 539 கோடி ரூபாய். இன்றைக்கு 1,418 கோடி ரூபாய் செலவில்

700 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. 72 கோடி ரூபாய் மதிப்பில் எடுக்கப்பட்ட 15 பாலப் பணிகளில் 13 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பின்வரும் 13 இடங்களில், ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், விருத்தாச்சலம், சிதம்பரம், அரியலூர், சீர்காழி, நாகப்பட்டினம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, இராமநாதபுரம் மற்றும் கும்பகோணம் புறவழிச் சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆரணி மற்றும் திருக்கோவிலூர் புறவழிச் சாலைப் பணி முழுமையாக நடைபெற்றுவிட்டது. மீதியிருக்கிற புறவழிச் சாலைகளிலே கும்பகோணத்திலே நில எடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இராமநாதபுரத்தில் நில எடுப்புப் பணி நடைபெற்று அந்தப் பணியும் தொடங்கும் தருவாயில் உள்ளது. சீர்காழி, சிதம்பரம் பகுதிகளில் சாலை அமைக்கின்ற பணி முடிவுபெற்றுவிட்டது. திருவண்ணாமலையில் முடிந்துவிட்டது. அங்கு வரக்கூடிய, இரயில்வே கடவுகளில் கட்ட வேண்டிய மேம்பாலப் பணியை அரசு இரயில்வே துறைக்கு ஒப்படைப்பு செய்திருக்கிறது. இரயில்வே துறை, வைப்புத் தொகையின் அடிப்படையிலே அந்தப் பணியை எடுத்துச் செய்கிற காரணத்தால் கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது. அதையும்கூட இந்த் அரசு பொறுப்பேற்ற பிறகு, வேகப்படுத்தியிருக்கின்றோம். இந்தப் பணிகளைப் பொறுத்தளவில் நாங்கள் பொறுப்பேற்றபோது உலக வங்கி, 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் செய்த ஆய்வின் அடிப்படையில், இங்கு வந்து பார்த்துவிட்டு, எங்களுக்கு ஒரு தாக்கீது அனுப்பியது. "இந்தத் திட்டம் சுணக்கமாக இருக்கிறது, இந்தத் திட்டத்தை ஏன் இரத்துச் செய்யக்கூடாது?" என்று உலக வங்கி அனுப்பிய கடிதம் மே மாதம் எங்களுக்குக் கிடைத்தது. "இதை நாங்கள் இரத்து செய்கிறோம்; இன்றைக்கு இத்திட்டம் நடைபெறுவதாகத் தெரியவில்லை; அதனால் இதை நாங்கள் இரத்துச் செய்கிறோம்" என்றார்கள். நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கிறோம் என்று நாங்கள் பதில் எழுதினோம். ஏறத்தாழ 10 மாவட்டங்களினுடைய ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தை தஞ்சையிலே நடத்தி, நில எடுப்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, அதற்குப் பிறகு அந்தப் பணிகளுடைய முன்னேற்றம் வேகமடைந்த காரணத்தினால், பல முறை நான் அந்தச் சாலைகளை ஆய்வு செய்து, அதே நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, நில எடுப்புப் பணியை வேகப்படுத்திய காரணத்தினால், பணிகள் இன்றைக்கு பெரும் பகுதி நிறைவுற்றிருக்கிறது. இதைப்

பாராட்டி உலக வங்கி கடிதம் எழுதி இருக்கிறது. 'மாநில அரசை நாங்கள் பாராட்டுகிறோம், இந்தப் பணியில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது' என்று கடிதம் எழுதியிருக்கிறது. அந்த ஆதாரமும் எங்கள் கையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

அதேபோல, கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே இரு வழித் தடமாக அமைக்கப்பட்டு, இன்றைக்கு புதுச்சேரி வரை சுங்க வரி வசூல் செய்யக்கூடிய சாலையாக—TNRDC—தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம் என்ற நிறுவனத்தால் அது பராமரிக்கப்பட்டு வருகிறது. அதை மாமல்லபுரம் வரை 4 வழிச் சாலையாக மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மீதி இருக்கக்கூடிய, மாமல்லபுரத்திலிருந்து புதுச்சேரி வரை இருக்கக்கூடிய வளைவுகளைச் சரிசெய்து, விபத்து நடக்காதவண்ணம் இருக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, உலக வங்கித் திட்டக் கடன் உதவியோடு எடுத்த சாலைப் பணி வேலூர் மாவட்டம், ஆற்காட்டிலே துவங்கி, அரியலூர் மாவட்டம் வழியாக தஞ்சை மாவட்டத்தைக் கடந்து, நாகப்பட்டினத்திலிருந்து தொடர்ந்து கிழக்குக் கடற்கரையையொட்டிச் செல்கிறது. எனவே, ஏற்கெனவே நம்முடைய சாலை கிழக்குக் கடற்கரைச் சாலை என்கிற முறையிலே, சென்னை, திருவான்மியூரிலிருந்து புதுச்சேரி வரை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தேசிய நெடுஞ்சாலை. புதுச்சேரி, கடலூர், சீர்காழி வழியாகச் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை 45–A என்கிற முறையிலே மத்திய அரசு நிதியோடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதே நேரத்திலே நாகப்பட்டினத்திலிருந்து தொடர்ந்து தூத்துக்குடி வரை ஏறத்தாழ 338 கிலோ மீட்டர், உலகத் தரத்திற்கு ஒப்பான சாலையாக அமைக்கப்பட்டிருக்கிறது. மீதி கன்னியாகுமரி வரை இருக்கக்கூடிய பகுதி விடுபடக் கூடாது என்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் அரசு நிதியில் நேரடியாக 120 கிலோ

மீட்டர் நீளமுள்ள சாலைக்கு 170 கோடி ரூபாய் நிதியைத் தந்திருக்கின்றார்கள். தூத்துக்குடியிலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய கூடங்குளம் வழியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை 7–ல் அஞ்சுகிராமம் என்கிற பகுதி இணைப்பு வரை அதையும் இருவழித் தடமாக மேம்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்குரிய பணிகள் நடந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையில் மட்டுமல்லாமல், இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையோடு சிறு துறைமுகங்கள் துறையும் இணைக்கப்பட்டிருக்கிறது. முழுக்க முழுக்க இதன் பணி கடலை ஒட்டிய பகுதியாக, புதிய துறைமுகங்களை ஏற்படுத்துகிற பணி என்கின்ற அடிப்படையில், தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடலையொட்டிய பகுதியாக அமைந்திருக்கிறது. இதுவே நீர்வழிப் போக்குவரத்துக்கு உகந்த மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அரசின் மூலமாக 7 துறைமுகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடலூர், நாகப்பட்டினம் போன்றவை அரசுத் துறைமுகங்கள். மீதம் இருக்கக்கூடிய 13 துறைமுகங்கள் தனியார் முதலீட்டோடு, பெரும்பாலான துறைமுகங்கள், அதாவது 11 துறைமுகங்கள் நிலக்கரியை இறக்கி அனு மின் நிலையம் மூலமாக மின்சார உற்பத்தி செய்வதற்காக ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அதை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முழுமையான ஒப்புதலையுமே இந்த அரசுதான் கொடுக்க நடவடிக்கை எடுத்து, அந்தத் துறைமுகங்கள் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை அந்தத் தனியார் நிறுவனங்களே எடுத்துச் செய்து வருகிறார்கள். அதே நேரத்திலே 3 பெரிய துறைமுகங்கள் நம்முடைய மாநிலத்திலே அமைந்திருக்கின்றன. நம்முடைய இந்திய நாட்டிலேயே மொத்தம் 12 பெரிய துறைமுகங்கள்தான் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் மட்டும் 3 பெரிய துறைமுகங்கள் உள்ளன. சென்னைக்கு அருகில் எண்ணூர், சென்னை, தூத்துக்குடி என்கிற பெரிய துறைமுகங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. அதேபோல, அரசினுடைய நிதியைப் பயன்படுத்திதான் இந்த நிறுவனத்தின் நிர்வாகமே நடந்து வந்தது. தலைவர் கலைஞருடைய அரசு ஏற்பட்ட பிறகு, சரக்குக் கையாளுதல் கூடுதலாக்கப்பட்டு, அந்த அடிப்படையில் இந்த நிறுவனம் முன்னேறி இருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டில் 33

இலட்சத்து 92 ஆயிரத்து 422 மெட்ரிக் டன் சரக்கு மட்டும் கையாளப்பட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு 37 இலட்சத்து 46 ஆயிரத்து 825 மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டுள்ளது. அதாவது 3 இலட்சத்து 72 ஆயிரம் மெட்ரிக் டன் கூடுதலாக நான்கே ஆண்டுகளில் கையாண்டிருக்கிறோம் என்பதையும், இன்னும் இந்தத் துறை முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்ல; இந்தத் துறையில் கிடைத்த வருவாயின் பங்குத் தொகையாக தமிழக அரசுக்கு இதுவரை இரண்டு முறை முதலில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மாண்புமிகு முதல்வரிடத்திலே காசோலையாக வழங்கி இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக 2 கோடியே 75 இலட்ச ரூபாயை பங்குத் தொகையாகச் செலுத்தி இருக்கிறது. இந்த ஆண்டு இப்பொழுது வரவு--செலவு முடிக்கப்பட்டு மார்ச் மாதம் முடிவுற்ற பிறகு ஏறத்தாழ 4 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்குப் பங்குத் தொகையை அரசுக்கு இந்த நிறுவனம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு இன்றைக்கு வருவாயை அதிகப்படுத்தியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, துறைமுகங்களை மேம்படுத்துவது பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான் அறிவிப்பிலே கூற இருக்கிறேன். அதற்கிடையிலே நாகப்பட்டினம் துறைமுகம்கூட சுனாமியால் பாதிக்கப்பட்டது. ஏறத்தாழ 46 கோடி ரூபாய் ஆசிய வளர்ச்சி வங்கியிலிருந்து நிதியைப் பெற்று இன்றைக்கு அந்தத் துறைமுகம் பராமரிக்கப்பட்டு, சரக்கு கையாளுவதில் நல்ல முன்னேற்றத்தில் இருக்கிறது. அந்தத் துறைமுகத்தைக்கூட ஆய்வு செய்தோம். இந்திய தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின்மூலம் சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்திருக்கிறோம். இந்தத் துறைமுகத்தை விரிவு செய்ய வேண்டுமென்று அந்த ஆய்வறிக்கை கிடைத்திருக்கிறது. பொருளாதார சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்த பின்பு, இத்துறைமுகம் தனியார் முதலீட்டின்மூலமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் பதின்மூன்று சிறு துறைமுகங்களுக்கு அனுமதியைத் தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மீண்டும் ஒரு முறை குறிப்பிடுவதோடு, இதன்மூலமாக தூத்துக்குடியில் ஒரு பயிற்சி நிறுவனத்தை இந்தத் துறை நடத்தி வருகிறது. அந்தப் பயிற்சி நிறுவனத்தின் மூலமாகக் கடல் சார்ந்த

பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் அதுவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 2–10

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், மூன்று கப்பல்களைச் சொந்தமாக வாங்கி, எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார், எம்.வி. தமிழ் காமராஜர் என்கிற பெயரிலே போட்டு, முழுக்க முழுக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரி இறக்குமதி செய்யக்கூடிய நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. அதுவும் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த அந்தத் துறை இன்றைக்கு இலாபத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையோடுதான் கன்னியாகுமரி படகு போக்குவரத்துத் துறையும் இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதுவும் இலாபத்தில் இயங்கிக் கொண்டு வருகிறதென்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மத்திய அரசினுடைய திட்டப் பணிகளுக்காக நிலம் எடுக்கிற பணியிலும் கடந்த மாதம், அதுவும் குறிப்பாக மாண்புமிகு துணை முதல்வருடைய தலைமையிலே ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, வேகப்படுத்தப்பட்டு, நல்ல முன்னேற்றம் கண்டதால், மத்திய அரசு பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு எங்களுக்கு ஊக்கம் தந்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை இந்த நேரத்தில் நன்றி சொல்லிக்கொள்வதோடு, இந்தத் துறையில் சுமார் மூன்று ஆண்டுக் காலம் பணியாற்றி இன்றைக்கு உயர் பணிக்குச் சென்றிருக்கக்கூடிய நம்முடைய செயலாளராகப் பணியாற்றிய திரு. அலாவுதீன் அவர்களுக்கும், கடந்த ஓர் ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பொறுப்பேற்று, மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிற திரு. சந்தானம், ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தலைவர் திரு. தீபக் ஜெயின், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தலைமைச் செயலாளராக இருக்கக்கூடிய திரு. மோகன் வர்கீஸ் சுங்கத், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டத்தின் பொறுப்பு இயக்குநராகப் பதவி வகித்து வருகிற திரு. தியாகராஜன், ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், தமிழ்நாடு சாலை வளர்ச்சி நிறுவனத்தின் நிருவாக இயக்குநராக இருக்கும் திரு. சுனில்

பாலிவால், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினுடைய தலைமைப் பொறியாளர் முதல் சாலைப் பணியாளர் வரை அனைவருக்கும் துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூடுதலான நிதியைத் தந்ததன் காரணத்தால், இதுபோன்ற பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகுமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை ஆகியோர் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே இங்கே அதிகமான குறைகளைச் சொல்லியிருப்பதை, இங்கே குறிப்பு எடுத்திருக்கிறோம். துறையினுடைய பொறியாளர்களும் குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் எதிர்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், ஏறத்தாழ 80 பேர், 366 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்ன நிலைமை என்று நாங்கள் அதனைக்கூட ஆய்வு செய்தோம். முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டு குறைந்தது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்தது, இதுவே இந்தத் துறையினுடைய செயல்பாட்டுக்கு ஓர் உதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1967 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபோது, இந்தத் துறை பொதுப் பணித் துறையோடு இணைக்கப்பட்டிருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குறிப்பை எடுத்து நான் அவருடைய பதிலுரையைப் படித்துப் பார்த்தபோதுதான், வெட்டுத் தீர்மானங்களைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். "நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று

மானியக் கோரிக்கையை வெட்டும் இல்லாமல், தட்டும் இல்லாமல், நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று சொல்லியிருந்த வாசகத்தை இந்த நேரத்தில் நினைவூட்டி, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்பதோடு, அறிவுப்புகள் சிலவற்றை வெளியிட்டு, நான் அமருகிறேன்.

அதன் அடிப்படையில், சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடு, அரசின் பராமரிப்பில் உள்ள சாலை மற்றும் பாலங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்த, நடப்பு நிதியாண்டிற்கு மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.4,049 கோடி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதன்மூலம் இன்றைக்கு சாலைத் திட்டப் பணிக்களுக்காக ரூ.2,225 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.683 கோடியும் ஒதுக்கப்படும். இதன்மூலம் சுமார் 5,000 கிலோ மீட்டர் சாலையை அகலப்படுத்தவும் மேம்படுத்தவும் சுமார் 5,000 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிப்பு செய்யவும் வழிவகை செய்யப்படும்.

பாலப் பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.1,171 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி ஏற்கெனவே நடைபெற்று வரும் 273 பாலப் பணிகளும் மற்றும் புதிதாக எடுக்கப்படவுள்ள 96 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்படும். அதிலிருந்து துவங்கி 23-வது அறிவிப்பான இராமேஸ்வரம் சுற்றுலாப் படகுப் போக்குவரத்து என்கிற முறையில் வங்காள விரிகுடாவில் இராமநாதபுரம் மாவட்டம், அக்னி தீர்த்தம் என்கிற சுற்றுலாத் தலத்தில் பயணிகளைக் கவரும் வகையில் புதிய திட்டமாகப் படகுப் போக்குவரத்து தனியார்மூலம் நடத்த, தமிழ்நாடு கடல்சார் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. தோணித் துறை போன்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்த பின் படகுப் போக்குவரத்து தொடங்கப்படும் என்கிற 23 அறிவிப்புகளை@ நான் படித்ததாகக் கருதி, இந்த அவையின் பதிவேட்டில் பதிவு செய்துக்கொள்ளுமாறு உங்களைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, வெட்டும் இல்லாமலும், தட்டும் இல்லாமலும் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடுகள்)

@ 747 முதல் 755 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மணி இப்போது 2.15 ஆகிறது, சார். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம்.

பிற்பகல் 2–15

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கம் செய்வதும், அந்த நிதியினை அந்தந்தத் துறை முறையாகப் பயன்படுத்துவதன்மூலம்தான் அந்தத் துறையினுடைய சாதனை இலக்கை எட்ட முடியும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால், நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், 2006–2007–இல் அந்த ஆண்டிற்கான திட்டப் பணிக்காக 2,366 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அந்தத் துறை செலவழித்த தொகை 1,432 கோடி ரூபாய்தான். Surrender செய்த தொகை மட்டும் 934 கோடி ரூபாய், வேலை செய்யாமல். அதாவது நிதி ஒதுக்கி வேலை செய்யாமல் நெடுஞ்சாலைத் துறை 2006–2007–இல் திரும்பச் செலுத்தியது 934 கோடி ரூபாய். தொடர்ந்து இந்த நான்கு வருடங்களாக அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. கடந்த வருடம், 2009–2010 ஆம் ஆண்டு தலைமைப் பொறியாளர் திட்ட மதிப்பீடுக்கு ரூ.539.59 கோடி ஒதுக்கினார்கள். செலவினம் எவ்வளவு தெரியுமா? 255.44 கோடி ரூபாய். செலவழிக்காத தொகை எவ்வளவு? 284 கோடி ரூபாய். அதாவது, செலவழித்த தொகையைக் காட்டிலும் செலவழிக்காத தொகை கூடுதலாக அவர்கள் கையிலே வைத்திருக்கிறார்கள். அதாவது, ஒரு துறையினுடைய செயலாக்கம், சாதனை என்ற அளவில் ஒதுக்கப்படுகின்ற நிதியை முறையாகச் செலவழிக்காத ஒரே துறை, இன்றைக்கு இருக்கிறது என்றால் அது நெடுஞ்சாலைத் துறைதான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் clarification கேளுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: என்ன clarification? இதுதான் clarification. அப்புறம் வேறு என்ன clarification?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: 2004 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், அதாவது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தடையற்ற சாலைப் போக்குவரத்துக்கென நெடுஞ்சாலைகளில் உள்ள

அனைத்து Railway crossing–களும் அகற்றப்பட்டு, சுரங்கப் பாதை அல்லது மேம்பாலங்கள் அமைக்கப்படும் என, 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. ஆனால், இதுவரை மொத்தம் தமிழ்நாட்டில் எவ்வளவு crossings இருக்கின்றன? 2,624 இரயில்வே கடவுகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு மத்தியில் காங்கிரஸ், தி.மு.க. கூட்டணிதான் ஆட்சியில் இருந்தது. தொடர்ந்து, இப்போதும், 2009 ஆம் ஆண்டும் நீங்கள்தான் ஜெயித்து காங்கிரஸ், தி.மு.க. ஆட்சிதான் தொடர்ந்து இருக்கிறது. இந்த 2,624 இரயில்வே கடவுகளில் எத்தனை போட்டிருக்கிறீர்கள், இதுவரைக்கும்? இதுவரைக்கும் எத்தனை போட்டிருக்கிறீர்கள்? எதுவுமே இல்லை. இதுதான் சாதனையா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீட்டைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவரும் இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தார், முதலமைச்சராகவும் இருந்தவர். கடந்த அரசில் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 7,393 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது, நெடுஞ்சாலைத் துறைக்கு. செலவு செய்ததோ 6,066 கோடி ரூபாய். அப்போது மீதம் எவ்வளவு? 1,327 கோடி ரூபாயை நீங்களும் திரும்ப ஒப்படைத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பொறுப்பேற்றபோது, துறையிலே எவ்வளவு பணியிடங்கள் காலியாக இருந்தன என்று சொன்னேன். 37 பணியிடங்களைத்தான் நீங்கள் ஐந்தாண்டு காலத்திலே நிரப்பியிருந்தீர்கள். ஒரு கையெழுத்தில் 1¾ இலட்சம் பேரை வீட்டிற்கு அனுப்பியவர்கள். வெறும் 37 பணியிடங்களை அதுவும் கருணை அடிப்படையிலான பணியிடங்களைத்தான் நிரப்பி இருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், பொறியாளர் மட்டத்திலே அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அணுகியதால், 1,441 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) துறை இப்போதுதான் முழுமை பெற்றிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. இந்த இரண்டு ஆண்டுக் காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் இவர்களும் அந்த நிதியை திருப்பி ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எவ்வளவு சாலைகள், மேம்பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். தேர்தல் அறிக்கையிலே சொன்னதைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன், இரயில்வே கடவில் சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், இரயில்வே துறையும் ஒப்புதல் தர வேண்டும். அவர்கள்தான் பட்டியலை அனுப்புவார்கள். அப்படி அனுப்பிய பட்டியலுக்குத்தான், 104 பாலங்களுக்கு தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் அனுமதி தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பாலத்தைக்கூட இரத்து செய்யவில்லை. வந்ததை உடனே திருப்பி அனுப்பி மத்திய அரசினுடைய இரயில்வே பட்ஜெட்டில் சேர்த்து, 104 பாலங்கள் தமிழ்நாட்டிற்கு வந்தன. 1989–1990 ஆம் ஆண்டிற்கு முன்னால் மொத்தம் தமிழ்நாட்டில் இருந்த இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்களுடைய எண்ணிக்கை 226–தான்; தமிழ்நாட்டிலேயே. இந்த 104 பாலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது, எப்போது வேண்டுமானாலும் கட்டிக்கொண்டிருக்கலாம். தலைவர் கலைஞர் அவர்கள் 2000–2001 ஆம் ஆண்டு 21 பாலங்களுக்கு அனுமதி தந்தார்கள். நாங்கள் வந்த பிறகுதான் அந்த 21 பாலங்களையும் சேர்த்து 22 பாலங்களை மீண்டும் கட்டியிருக்கிறோம் இவர்கள் பணிகளை பாக்கி வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். என்ன செய்ய முடியும்? பொறியாளர் பணியிடங்கள் காலி; துறையே காணாமல் கிடந்தது; துறை என்கிற இடத்திலே நெடுஞ்சாலை புரைதான் இருந்தது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,055,86,60,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,400,54,09,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

141. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

142. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

143. கால்நடை பராமரிப்புத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,055,86,60,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,400,54,09,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

141. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

142. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

143. கால்நடை பராமரிப்புத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,055,86,60,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,400,54,09,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

141. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

142. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

143. கால்நடை பராமரிப்புத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

2010 மே 5]

144. மீன் வளத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் (2006–2007 முதல் 2009–2010 வரை) குறித்த சிறு நூல். (தமிழ்)

145. பால் வளத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

இணைப்பு-I

(412 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010-2011

1. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளை பராமரிப்பதற்கும், தேவையான நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிப்பதற்கும், 40 முதல் 50 சங்கங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவர் என்ற அடிப்படையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மாவட்ட ஒன்றியங்களில் கூடுதலாக 50 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள், ரூ.192 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

2. தூய பால் கொள்முதல் முறையை செயல்படுத்தவும், ஆரம்ப நிலையில் பாலில் காணப்படும் நுண்ணுயிர்களின் அளவை கட்டுப்படுத்தவும், நடப்பாண்டில் மத்திய அரசு மற்றும் மாவட்ட பால் ஒன்றிய திட்டங்களின்கீழ் கிராம அளவில் 20 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும்.

3. தமிழ்நாட்டில் எருமையின வளர்ப்பை ஊக்குவிப்பதற்கும், எருமைப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், "எருமையினக் கன்றுகள் வளர்க்கும் திட்டம்" செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 605 பெண் எருமையினக் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, இலவசமாக கால்நடைத் தீவனம், காப்பீடு மற்றும் கால்நடைப் பராமரிப்புப் பணிகள், ரூ.156.40 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

4. மடிநோய் தவிர்த்தல், பணியாளர் குறைவை நிவர்த்தி செய்தல், கலப்படத்தைத் தடுத்தல், உற்பத்தி செலவைக் குறைத்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பால் உற்பத்தியாளர்களின் உபயோகத்திற்காக, பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு 100 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

5. தூய பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் நோக்கில், 400 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2000 துருவுறா எஃகு பால் கேன்கள் ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இதில், ரூ.27.00 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.27.00 இலட்சம் சங்கங்களின் பங்காகவும் இருக்கும்.

6. தூய பால் உற்பத்தியை மேம்படுத்த, 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 150 துருவுறா எஃகினாலான பால் சேகரிப்பு உபகரணங்கள் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

7. சங்க வளாகத்திலேயே உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலை எடையிட்டு வாங்குவதற்கு வசதியாக, 200 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்னணு எடை இயந்திரங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். இதில், ரூ.20.00 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.20.00 இலட்சம் சங்கங்களின் பங்காகவும் இருக்கும்.

8. பாலின் தரத்தைத் துல்லியமாகக் கணக்கிடவும் மற்றும் கொள்முதல் விவரங்களை கணினியில் பதிவு செய்து பால்பண பட்டுவாடா கணக்குகளை எளிதாக பராமரிக்கவும், 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்னணு பால் பரிசோதனைக் கருவிகள் ரூ.52.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

9. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 100 புல்வெட்டும் கருவிகள், ஒருங்கிணைக்கப்பட்ட பால்பண்ணைகள் மற்றும் பிரதம சங்கங்களுக்கு ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

10. மின்னணு ஆளுமையை மேம்படுத்தும் வகையில், ஆணையர் அலுவலகத்தில் ரூ.6.80 இலட்சம் மதிப்பீட்டில் கணினி மற்றும் பிரிண்டர்கள் நிறுவப்படும்.

11. மாதவரம் பால்பண்ணையிலுள்ள புல் பண்ணையைச் சுற்றி முள்வேலி மற்றும் மின்சக்தியை சேமிக்கும் வகையில் சூரிய சக்தியினால் எரியக்கூடிய விளக்குகள் ஆகியவை மொத்தம் ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

12. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 500 உறுப்பினர்கள், ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்விச் சுற்றுலாவாக பிற மாநிலங்களுக்கு அழைத்து செல்லப்படுவார்கள்.

2010 மே 5]

13. பால் மற்றும் பால் உபபொருட்கள் தரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் நிறுவப்படும்.

14. ஒன்றிய மற்றும் இணைய தொழில்நுட்பப் பணியாளர்களின் திறமைகளை வளர்க்க, 400 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

15. எரிசக்தி சேமிப்பு மேலாண்மைத் திட்டம், 7 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.75.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

16. ஒருங்கிணைக்கப்பட்ட பால்பண்ணை கிராமங்களில் 500 ஏக்கர் பரப்புளவில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புல்பண்ணைகள் நிறுவப்படும்.

17. நடப்பாண்டில், புதியதாக 150 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். மேலும், செயல்படாமலுள்ள 100 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்படும்.

18. ஒன்றியப் பணியாளர்களுக்கு இரவுப் பணிப்படி ரூ.15/-லிருந்து ரூ.20/-ஆக உயர்த்தியும், சலவைப்படி ரூ.60/-லிருந்து ரூ.70/-ஆக உயர்த்தியும் வழங்கப்படும். சலவைப்படி உயர்வு இணையப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

19. பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அளவில் அதிகமாக பால் வழங்கும் பத்து உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் 3 உறுப்பினர்களுக்கு, பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், இதர 7 உறுப்பினர்களுக்கு ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

20. ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்த, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த, பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு, மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழை ஒரு பாடமாகக்கொண்டு, அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒரு மடிக்கணினி வீதம் 17 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

[2010 மே 5

21. ஒன்றியப் பணியாளர்கள், பிரதம பால் கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளில் +2 தேர்வில், தமிழை ஒரு பாடமாகக் கொண்டு, அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் ஒரு மடிக்கணினி வீதம் 17 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

22. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு, மாநில அளவில், முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் தேர்ச்சி பெறும் இணையம், ஒன்றியங்கள் மற்றும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கு, 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம் இதில் எது குறைவோ, அதுவரை அரசு நிர்ணயித்த கல்வி கட்டணத் தொகை முழுமையாக ஏற்கப்படும்.

23. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெறும், இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில், அதிக மதிப்பெண் பெறும் 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

24. மாநில பாடத்திட்டம் வாயிலாக, +2 தேர்வில் தமிழைப் பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெறும் பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குழந்தைகளில், அதிக மதிப்பெண் பெறும் 5 குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

25. நடப்பாண்டில், நாளொன்றுக்கு 28.00 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

26. நடப்பாண்டில், சென்னை மாநகரத்தில், நாளொன்றுக்கு 10.40 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், மாவட்ட ஒன்றியங்கள் வாயிலாக நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

27. மாவட்ட ஒன்றிய அளவில், சங்க உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளில், அதிக பால் உற்பத்தியில் சிறந்த எருமையினம், கலப்பினம் மற்றும் நாட்டினம் ஆகிய இனங்களில், பிரிவுக்கு 3 மாடுகள் தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அளவில் ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். அதேபோன்று, மாநில

அளவில், பிரிவுக்கு ஒரு கறவையினம் தேர்வு செய்யப்பட்டு ஊக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

28. மாநில அளவில், செயற்கைக் கருவூட்டல் பணியினை திறம்படச் செய்து இனவிருத்திப் பணியை அதிகரிக்கும் பணியாளர்களில், ஒரு பெண் பணியாளர் உட்பட மூவர் தேர்வு செய்யப்பட்டு, ஊக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

29. பாலின் முதன்மைத் தரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள, மொத்த பால் குளிர்விப்பான் மையங்களில் திறம்படச் செயல்படும் மையத்தின் சிறந்த மூன்று செயலாளர்களுக்கு ஊக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

30. இலாபத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், பால் வழங்கும் பிரதம பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களின் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், சங்கத்தின் நிருவாகச் செலவிற்காக பிடித்தம் செய்யப்படும் தொகையை ஏற்று, அதற்கிணையான தொகையை, பால் உற்பத்தியாளர் சங்கங்களின் மூலமாக உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் விலையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

31. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும், மாற்றுத் திறன் கொண்ட பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அறிவித்துள்ள போக்குவரத்துப்படி வழங்கப்படும்.

32. மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய களப் பணியாளர்கள் மற்றும் இணைய விற்பனைப் பிரிவு களப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிரந்தர பயணப்படி, தற்பொழுது வழங்கப்படும் தொகையிலிருந்து ரூ.100/- உயர்த்தி வழங்கப்படும்.

33. இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்படும் இடையூறுப்படி ரூ.200/-, ரூ.400/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

34. பிரதம பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்படும், சீருடைகள் மற்றும் தையற்கூலி ஆகியவை

ஆண்களுக்கு, ரூ.840/-லிருந்து ரூ.890/- ஆகவும், பெண்களுக்கு ரூ.770/-லிருந்து ரூ.790/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

35. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர் அல்லாத பால் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் விதமாக, இலாபத்தில் இயங்கும் சங்கங்களில் *2007-2008* மற்றும் *2008-2009* ஆம் ஆண்டுகளுக்கான ஊக்கத் தொகை உறுப்பினர் அல்லாதவருக்கும் வழங்கப்படும்.

36. மாநில அளவில் திறம்பட செயல்படும் சிறந்த சங்கங்களின் *3* செயலாளர்களுக்கு ஊக்கப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

37. தரம் உயர்ந்த ஜெர்சி கலப்பின பொலி காளைகளை உருவாக்கும்பொருட்டு, வேலூர் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்கள் தேசிய பால்வள வாரியத்துடன் இணைந்து வம்சாவழியின சோதனைத் திட்டம், ரூ.8.64 கோடி செலவில் வரும் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(425 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 7 – மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010–2011.

அறிவிப்பு 1

மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.500/–லிருந்து ரூ.800/–ஆக உயர்த்தி வழங்குதல்:

மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்தில், மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ. 500/- நிவாரணத்தொகை இந்த ஆண்டு முதல் ரூ.300/- கூடுதலாக உயர்த்தப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.800/- ஆக வழங்கப்படும்.

அறிவிப்பு 2

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ், மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.1800/- கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் ரொக்கமாக வழங்கப்படும்.

அறிவிப்பு 3

இராமநாதபுரம் மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் கட்டுதல்:

மீனவ மக்களின் பயன்பட்டிற்கு இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதியில் உள்ள மூக்கையூர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த ஒரு திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 மே 5

அறிவிப்பு 4

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்:

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை பயன்படுத்தி மீன்பிடித் தொழில்புரியும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு, இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.20,000/- சென்ற 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.30,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 3,000 ஆக உயர்த்தி மீனவர் வசிக்கும் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் 5 பயனாளிகளுக்கு இயந்திரங்கள் ரூபாய் 9 கோடி செலவில் வழங்கப்படும்.

அறிவிப்பு 5

ஆற்றுமுகத்துவாரங்களை தூர் வாருதல்:

பருவகால மாற்றத்தால் ஆற்று முகத்துவாரம் மற்றும் கால்வாய்களில் மண் திட்டுகள் படிவதால் முகத்துவாரம் அடைபட்டுவிடுகிறது. இதனால் மீனவர்கள் ஆற்று முகத்துவாரத்தைப் பயன்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் ஆற்று முகத்துவாரங்களை தூர் வார 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி ஒப்புதல் அளிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிவிப்பு 6

விற்பனை வரி நீக்கப்பட்ட டீசல் எண்ணெய் வழங்குதல்:

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்படும் விற்பனை வரி நீக்கப்பட்ட டீசல், மாதம் ஒன்றுக்கு 250 லிட்டரிலிருந்து 300 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

அறிவிப்பு 7

மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் உள்ள மீனவர் குடியிருப்புகளை மறுசீரமைத்தல்:

1950 ஆம் ஆண்டு மணிமுத்தாறு நீர்த்தேக்கக் கட்டுமானப் பணியின்போது அமைக்கப்பட்ட பணியாளர் குடியிருப்புகள்,

2010 மே 5]

அங்குள்ள மீன்விதைப் பண்ணையில் பணிபுரியும் மீனவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அனைத்து குடியிருப்புகளும் மங்களூர் ஓடுகள் வேயப்பட்ட கூரையுடன் களிமண் காரையினால் கட்டப்பட்டுள்ளன. தற்போது அனைத்து குடியிருப்புகளும் பழுதடைந்து குடியிருக்க இயலாத நிலையிலுள்ளதால், இக்குடியிருப்புகள் ரூ.19.00 இலட்சம் செலவில் இவ்வாண்டு மறுசீரமைக்கப்படும்.

அறிவிப்பு 8

பூண்டி மீன் துறை ஆய்வாளர் அலுவலக கட்டடத்தை பழுதுபார்த்தல்:

திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள மீன்வளத் துறை ஆய்வாளர் அலுவலகம், சத்தியமூர்த்திசாகர் நீர்த்தேக்க மீன்வள செயல்பாடுகளைக் கவனித்தல், மீன்பண்ணைகளில் தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம் செய்தல் மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொருட்டு 1956-1960 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதுவரை, இக்கட்டடத்தில் மராமத்து/பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இக்கட்டடம், ரூ.4.50 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்படும்.

அறிவிப்பு 9

மீன் துறை தலைமை அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவுகளை கணினிமயமாக்குதல்:

மீன் வளத் துறை தலைமை அலுவலக நிர்வாகப் பிரிவுகளை அகண்ட அலைவரிசை வசதியைக் கொண்டு இணைப்பதன்மூலம் மீனவர் நலத்திட்டங்கள் உரிய நேரத்தில் மீனவர்களை சென்றடைவதுடன், திட்டங்களை செம்மையாக செயல்படுத்திடவும் இயலும். எனவே, தலைமை அலுவலகத்தின் அனைத்து நிர்வாகப் பிரிவுகளையும் கணினிமயமாக்கி அகண்ட அலைவரிசையில் இணைக்க, ரூ.25.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அறிவிப்பு 10

கடல் மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு 2010:

டிசம்பர் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி காரணமாக கடல் மீனவ மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வது

இன்றியமையாததாகி உள்ளது. சுனாமிக்குப் பின்னர், பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களின் விவரங்கள் மற்றும் மீனவ மக்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை அறிவது அவசியமாகிறது. மேலும், கடல் மீன்வள மேம்பாட்டிற்கும், எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்கும் மீனவர்கள் வசிக்கும் மீனவக் கிராமங்கள், மீன்பிடி இறக்குதளங்கள், மீனவ மக்கள் தொகை மற்றும் மீனவர்களால் உபயோகப்படுத்தப்படும் வலைகள் மற்றும் கலன்கள் பற்றிய விவரங்கள் முக்கியமானவையாகும். இக்கணக்கெடுப்பு, மீன் துறையின் சார் அலுவலகங்களில் பணிபுரியும் மீன் வள மேற்பார்வையாளர் / மீன் துறை சார் ஆய்வாளர் / மீன் துறை ஆய்வாளர் ஆகியோரைப் பயன்படுத்தி ரூ.21.01 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு 11

மீன் வளத் துறையின் 100 ஆண்டுக் கால செயல்பாடு குறித்து ஆவணப்படம் தயாரித்தல்:

மீன் வளத் துறையானது, 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மீன் வளத் துறையின் தொடக்க காலம் தொட்டு இன்று வரை மீன் வளத்தைப் பெருக்குவதற்காகவும், மீனவர் நலனுக்காகவும், மீன் வளத் துறையின் நடவடிக்கைகளை மீனவர்களிடமும், பொது மக்களிடமும் எடுத்துச்செல்லும் வகையில் நூறு ஆண்டுக் கால செயல்பாடுகள் குறித்தான ஆவணப்படம் ரூ.11.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

அறிவிப்பு 12

மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தை மேம்படுத்துதல்:

மீன் துறைப் பணியாளர் பயிற்சி நிலையமானது, 1976 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் பயிற்சி நூலகத்துடன் செயல்பட்டு வருகிறது. மீன் துறை பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மீன் வளர்ப்போருக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்பயிற்சிகளை சிறப்பாக நடத்திடவும், மீன் துறை பணியாளர் பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தவும், மீன் வளம் தொடர்பான புத்தகங்கள், மாத இதழ்கள், கையேடுகள் மற்றும் மீன் வளம் பற்றிய செய்திகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

ஆகியவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ள அகண்ட அலைவரிசை இணைப்பும் ரூ.4.70 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு 13

கடலூர் மாவட்டத்தில் ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாருதல் :

கடலூர் மாவட்டத்தில் வெள்ளாற்று முகத்துவாரம், பில்லுமேடு ஆற்று முகத்துவாரம், பிச்சாவரம் செல்லும் கால்வாய் சின்ன வாய்க்கால் ஆற்று முகத்துவாரம் மற்றும் கால்வாய்கள் ரூ.29.04 இலட்சம் செலவில் தூர் வாரப்படும்.

அறிவிப்பு 14

மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர் சந்தை அமைத்தல் :

மன்னார் வளைகுடா பகுதியில் கிடைக்கக்கூடிய புரதச்சத்து மிக்க மீன்களை, சுகாதாரமான முறையில், இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல் விற்பனை செய்யும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர் சந்தை ஒன்று அமைக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-III

(433 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010–2011

1. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுக்காக, 6 இரத்த பகுப்பாய்வு (தானியங்கி உபகரணம்) கொள்முதல் செய்தல் (ரூ.30.00 இலட்சம்).

2. கால்நடைகளுக்கு வரும் நோய்களைக் கண்டறியும் பிரிவுகளுக்காக, 6 சிறுநீர் பகுப்பாய்வு (தானியங்கி) உபகரணம் கொள்முதல் செய்தல் (ரூ.3.00 இலட்சம்).

3. மின் ஆளுமைக்கு, வலைத்தளம் ஏற்படுத்துதல் (ரூ.39.15 இலட்சம்).

4. கிளை நிலையங்களுக்கு தேவையான அறைகலன்கள் வாங்குதல் (ரூ.28.00 இலட்சம்).

5. நீலகிரி மாவட்டத்தில், முயல் பண்ணை, கோழிப்பண்ணை, ஆடுவளர்ப்பு ஆகியவற்றை மகளிர் சுயஉதவிக் குழுக்களைக்கொண்டும், பழங்குடியின மகளிரைக் கொண்டும் நடத்துதல் (ரூ.20.50 இலட்சம்).

6. சினைப் பருவத்திற்கு வராத கறவை மாடுகளுக்கு மலிவு விலையில் ப்ரோஜெஸ்டிரோன் யோனி உறிஞ்சிகள் தயாரித்தல் (ரூ.9.50 இலட்சம்).

7. மீன் உற்பத்தி பொருள்களுக்கான தரமிகு கண்காணிப்பு சான்றளிப்பு மையம் அமைத்தல் (ரூ.20.00 இலட்சம்).

8. கட்டடச் செலவு நீங்கலாக தோராயமாக ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் (ரூ.150.00 இலட்சம்) செலவில், 100 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் துவக்கப்படும். இவற்றுக்கான கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உதவியுடனான ஏற்பாடுகள்மூலமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியுதவியின்மூலமும் பெறப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

9. 200 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்.

10. 200 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி அமர்த்தப்படுவார்கள். இதற்கான செலவினம், தோராயமாக ரூபாய் நான்கு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து நாற்பதாயிரம் (ரூ.4,37,40,000) ஆகும்.

11. 200 கால்நடை ஆய்வாளர்கள் (நிலை—II), வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்கள். இதற்கான செலவினம், தோராயமாக ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நான்காயிரம் (ரூ.2,63,04,000) ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-IV

(480 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

I. முன்னுரை

தமிழ்நாட்டில், தொழில், தகவல் தொழில்நுட்பம், சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டு, நகரமயமாவதில் தமிழகம் இந்தியாவில் 3-வது பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் சாலை மற்றும் பாலங்களின் பங்கு முக்கியமானது. அபரிமிதமான தொழில் வளர்ச்சியும், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையும், துறைமுகங்களின் மேம்பாடும் வாகனப் போக்குவரத்தை பன்மடங்கு அதிகரிக்க வைத்துள்ளன. அகலமான சாலை, பாதுகாப்பான பயணம், நெரிசல் இல்லா போக்குவரத்து ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு, சாலைகளை மேம்படுத்த நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக சாலை மற்றும் பாலக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவு 1,30,058 சதுர கி.மீ. ஆகும். இதில் மொத்தம் சுமார் 1,99,040 கி.மீ. நீள சாலைகள் உள்ளன. இவற்றில் 61,641 கி.மீ. நீள சாலைகள் மைய மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறைகள்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சாலைகளின் வகைகள் மற்றும் அவற்றின் நீளம்:

சாலையின் வகை	நீளம் (கி.மீ)
தேசிய நெடுஞ்சாலைகள் (NH)	4,873
மாநில நெடுஞ்சாலைகள் (SH)	9,384
மாவட்ட முக்கிய சாலைகள் (MDR)	11,288
மாவட்ட இதர சாலைகள் (ODR)	36,096
மொத்தம்	61,641

இது தவிர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற துறைகள் மூலமும் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன.

சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

பாலங்களின் வகைகள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை:

பாலங்களின் வகைகள்	எண்ணிக்கை
பெரிய பாலங்கள்	1,326
சிறு பாலங்கள்	7,770
மிகச் சிறு பாலங்கள்	1,08,915
இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள்	181
இரயில்வே கடவுகளில் சாலை கீழ் பாலங்கள்	58
மொத்தம்	1,18,250

இந்தியாவில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு சராசரியாக 329 கி.மீ. நீள சாலை வசதிகள் உள்ளன. தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 319 கி.மீ. நீள சாலை வசதிகள் உள்ளன.

மேலும், ஒவ்வொரு 100 சதுர கி.மீ. பரப்பிலும், இந்தியாவின் தற்போதைய சராசரி அளவான 103 கி.மீ. என்ற அளவைவிட அதிகமாக தமிழ்நாட்டில் 153 கி.மீ. நீள சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டில் சாலை கட்டமைப்பு வசதி நல்ல மேம்பாடு அடைந்துள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும்.

தமிழ்நாட்டில் கடற்கரையின் நீளம் 1076 கி.மீ. ஆகும். இதில், சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டில் 15 சிறு துறைமுகங்கள் இருந்தன. இந்த அரசு எடுத்த சீரிய முயற்சியால் அவை 20 சிறு துறைமுகங்களாக அதிகரித்துள்ளன. 1963 ஆம் ஆண்டு பெருந்துறைமுகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் பெரிய துறைமுகங்கள், மைய அரசின் கட்டுப்பாட்டிலும், 1908 ஆம் ஆண்டு இந்திய துறைமுகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் சிறு துறைமுகங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் தொடர்பான பணிகள்

தமிழ்நாடு அரசின் சிறு துறைமுகத் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995-இன்படி 18-03-1997 அன்று தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. 16-09-1998 ஆம் நாளன்று தூத்துக்குடியில் துவக்கப்பட்ட தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம், அரசாணை எண் 196, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 01-08-2008 இன்படி, தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-04-1974 ஆம் நாளன்று கம்பெனிகள் சட்டம், 1956-இன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதற்காக நிறுவப்பட்டது. இக்கழகமானது ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து எம். வி. தமிழ் அண்ணா, எம். வி. தமிழ் பெரியார் மற்றும் எம். வி. தமிழ் காமராஜ் ஆகிய மூன்று சொந்தக் கப்பல்கள் மற்றும் வாடகைக் கப்பல்கள் மூலமாக நிலக்கரியை ஏற்றி எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு கொண்டு வந்து இறக்குகிறது.

மேலும், குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்தினை எம்.எல். குகன், எம்.எல். பொதிகை மற்றும் எம்.எல். பாகீரதி ஆகிய மூன்று விசைப் படகுகளின்மூலம் சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்தினை நடத்தி வருகிறது.

II. கொள்கை வரையறை

தமிழ்நாட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சாலை மற்றும் பாலக் கட்டமைப்பினை மேம்படுத்த நெடுஞ்சாலைகளுக்கென தனியாக ஒரு துறை 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது. பெருகி வரும் வாகனப் போக்குவரத்து மற்றும் சாலைகளைப் பயன்படுத்துவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில், இந்திய சாலைக் கழக நெறிமுறைகளின்படி சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

2010 மே 5]

2008 ஆம் ஆண்டு முதல் இத்துறை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது, இத்துறைக்கு பின்வரும் இருபது கொள்கைகளை அரசு வகுத்துள்ளது.

1. மாநில நெடுஞ்சாலைகள் (SH) அனைத்தையும் அகலப் படுத்தி குறைந்தபட்சம் இருவழிப் பாதையாக (7 மீ. அகலம்) மாற்றுதல்.

2. போக்குவரத்து அதிகமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளை (MDR) குறைந்தபட்சம் இடைவழித் தடமாக (5.50 மீ. அகலம்) அகலப்படுத்துதல்.

3. போக்குவரத்து அதிகமுள்ள அவசியமான மாவட்ட இதர சாலைகளை (ODR) படிப்படியாக இடைவழித் தடமாக (5.50 மீ. அகலம்) அகலப்படுத்துதல்.

4. அதிக சுமையேற்றிய கனரக வாகனங்கள் செல்லக்கூடிய கனிமச் சுரங்கங்களுக்குச் செல்லும் சாலைகளைக் கண்டறிந்து உறுதிப்படுத்துதல்.

5. ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளை இணைக்கும் அரசு சாலைகளை மேம்படுத்துதல்.

6. போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஆரச் சாலைகள், வட்டச் சாலைகள், புறவழிச் சாலைகள் அமைத்தல்.

7. தொழிற்சாலைகள் அமைந்துள்ள மற்றும் புதிதாக உருவாகி வரும் தொழிற்சாலைப் பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துதல், தொழிற் சாலைகளுக்கும், துறைமுகங்களுக்கும் இடையிலான இணைப்பினை மேம்படுத்துதல், அதன் மூலம் தொழில் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

8. பொது மக்கள் வசதிக்காக சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துதல்.

9. போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளை, பொது மற்றும் தனியார் கூட்டு பங்கேற்பு மூலம் மேம்படுத்துதல்.

10. பாதசாரிகளுக்குத் தேவையான இடங்களில் சாலையைக் கடக்க சுரங்கப் பாதைகள் மற்றும் உயர்மட்ட நடைபாதைகள் அமைத்தல்.

[2010 மே 5

11. சாலை ஓரங்களில் உள்ள மரங்களைப் பராமரிப்பதோடு தேவைப்படும் இடங்களில் மரக்கன்றுகளை நட்டுப் பராமரித்தல்.

12. சாலைகளின் எல்லைகளை வரையறுத்து துறைக்குச் சொந்தமான இடங்களைப் பாதுகாத்தல்.

13. சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் அதன் மூலம் கண்டறியப்படும் விபத்து நிகழும் சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்தல்.

14. நெடுஞ்சாலைகளில் ஏற்கனவே உள்ள பாலங்களைப் பராமரிப்பதோடு நீர்வழிப் பாதைகளிலும், போக்குவரத்து அதிகம் உள்ள சாலை சந்திப்புகளிலும் மற்றும் இரயில்வே கடவுகளிலும் சாலை மேல்/கீழ் பாலம் கட்டுதல்.

15. துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தினைக் கண்காணித்து உறுதி செய்தல்.

16. இத்துறையின் பராமரிப்பிலுள்ள சாலைகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கும் வகையில் உள்ளாட்சி அமைப்பின் உதவியோடு வடிகால் வசதியினை ஏற்படுத்துதல்.

17. எதிர் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலை மற்றும் பாலப் பணிகளைக் கண்டறிய சிறப்பு ஆய்வினை மேற்கொள்ளுதல்.

18. தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை தனியார் முதலீடு மூலம் மேம்படுத்தி அவற்றின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.

19. சுற்றுலாப் பயணிகளுக்கான கடல் வழி படகுப் போக்குவரத்தினை ஊக்குவித்தல்.

20. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை கப்பல் மூலமாகக் கொண்டு வரும் பணியினை மேற்கொள்ளுதல்.

III. அரசு சாலைகளின் வகைகள்

3.1 தேசிய நெடுஞ்சாலைகள் (National Highways):

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலத் தலைநகரங்கள், பெரிய துறைமுகங்கள், பெரிய தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் சுற்றுலா

2010 மே 5]

மையங்கள் ஆகியவற்றை இணைக்கும் வகையில் போக்குவரத்து மிக அதிகம் உள்ள சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மைய அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 2006 ஆம் ஆண்டு 4254 கி.மீ. நீளமாக இருந்த தேசிய நெடுஞ்சாலைகள் தற்போது 4873 கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளன.

இதில் 1,613 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளுக்கு, மைய அரசின் நெடுஞ்சாலை அமைச்சகம் ஒதுக்கீடு செய்யும் நிதியினைக் கொண்டு, மேம்பாடு, பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. எஞ்சியுள்ள 3,260 கி.மீ. நீள சாலைகளை கடின புருவங்களுடன்கூடிய இருவழி (10 மீ. அகலம்), நான்குவழி மற்றும் ஆறுவழித் தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) நேரடியாக மேற்கொண்டுள்ளது.

3.2. மாநில நெடுஞ்சாலைகள் (State Highways) :

தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அடுத்தபடியாக போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளாக அரசால் அறிவிக்கப்படுகின்றன. இச்சாலைகள் மாவட்டத் தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களை இணைக்கின்றன.

தமிழ்நாட்டில் 2006 ஆம் ஆண்டு 6,849 கி.மீ. நீளமாக இருந்த மாநில நெடுஞ்சாலைகள், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நான்காண்டுகளில் பல்வேறு வகையான சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தியதால், தற்போது இவ்வகை சாலைகளின் நீளம் 9,384 கி.மீ.-ஆக அதிகரித்துள்ளது.

மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தையும் குறைந்தபட்சம் இருவழித் தடமாக (7 மீ. அகலம்) அகலப்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படி, வனப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறை சார்ந்த இடம் இல்லாமையால் அகலப்படுத்த முடியாத 32 கி.மீ. ஒருவழித் தடச் சாலைகளைத் தவிர, மீதமுள்ள பகுதிகள் பின்வருமாறு அகலப்படுத்தப்பட்டுள்ளன.

- ➢ இருவழித் தடங்களுக்கு மேல் (7 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக) உள்ள சாலைகளின் நீளம் - 677 கி.மீ.

[2010 மே 5

➤ இருவழித் தடமாக (7 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 7,261 கி.மீ.

➤ இடைவழித் தடமாக (5.50 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 1,414 கி.மீ.

இதன்படி 2006 ஆம் ஆண்டு 62 சதவீதமாக இருந்த இருவழி மற்றும் பலவழித் தடச் சாலைகள், இந்த அரசின் சீரிய முயற்சியால் தற்போது 85 சதவீதமாக அதிகரித்துள்ளன. மீதமுள்ள இடைவழித் தடச் சாலைகளும் படிப்படியாக இருவழித் தடச் சாலைகளாக அகலப்படுத்தப்படும்.

3.3. மாவட்ட முக்கிய சாலைகள் (Major District Roads) :

மாநில நெடுஞ்சாலைகளுக்கு அடுத்தபடியாக போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகள் மாவட்ட முக்கிய சாலைகளாக அரசால் அறிவிக்கப்படுகின்றன. மாவட்டத்திலுள்ள உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை இணைக்கும் வகையிலும், இந்த மையங்களை தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் வகையிலும் மாவட்ட முக்கிய சாலைகள் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் 2006 ஆம் ஆண்டு 7,569 கி.மீ. நீளமாக இருந்த மாவட்ட முக்கிய சாலைகள் தற்போது 11,288 கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது.

இவற்றில்,

➤ இருவழித் தடங்களுக்கு மேல் (7 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக) உள்ள சாலைகளின் நீளம் - 115 கி.மீ.

➤ இருவழித் தடமாக (7 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 3,109 கி.மீ.

➤ இடைவழித் தடமாக (5.50 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 3,894 கி.மீ.

➤ ஒருவழித் தடமாக (3.75 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 4,170 கி.மீ.

2010 மே 5]

இதன்படி 2006 ஆம் ஆண்டு 47 சதவீதமாக இருந்த இடைவழி/ இருவழித் தடச் சாலைகள், இந்த அரசின் சீரிய முயற்சியால் தற்போது 63 சதவீதமாக அதிகரித்துள்ளன. மீதமுள்ள ஒருவழித் தடச் சாலைகளும் படிப்படியாக இடைவழித்தட சாலைகளாக அகலப்படுத்தப்படும்.

3.4 மாவட்ட இதர சாலைகள் (Other District Roads):

2006 ஆம் ஆண்டு மாவட்ட இதர சாலைகள் (கரும்புச் சாலைகள் உட்பட) 42,748 கி.மீ. நீளமாக இருந்தது. இந்த அரசு படிப்படியாக வகைப்பாடு உயர்த்தியதால் தற்போது 36,096 கி.மீ. ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள் ஆகியவற்றை வட்டத் தலைமையிடங்கள், மற்றும் அருகில் உள்ள பிற முக்கிய சாலைகளுடன் இணைக்கும் வகையில் மாவட்ட இதர சாலைகள் அமைந்துள்ளன.

இவற்றில்,

- இருவழித் தடங்களுக்கு மேல் (7 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக) உள்ள சாலைகளின் நீளம் - 31 கி.மீ.
- இருவழித் தடமாக (7 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 948 கி.மீ.
- இடைவழித் தடமாக (5.50 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 2,292 கி.மீ.
- ஒருவழித் தடமாக (3.75 மீட்டர் அகலம்) உள்ள சாலைகளின் நீளம் - 32,825 கி.மீ.

3.5. சாலை வகைப்பாட்டை உயர்நிலைப்படுத்துதல்:

நெடுஞ்சாலைகளில் பெருகி வரும் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, சாலைகளின் வகைப்பாடு அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 10,240 கி.மீ. நீளச் சாலைகள் வகைப்பாடு உயர்த்தப்பட்டுள்ளன. இதன்மூலம் சாலைகளை மேம்படுத்தி பராமரிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2010 மே 5

வகைப்பாடு மாற்றியமைக்கப்பட்ட சாலைகளின் விவரம்:

வ. எண்	வகைப்பாடு மாற்றப்பட்ட சாலை	வருடம் 2001-2006 நீளம் கி.மீ.	வருடம் 2006-2010 நீளம் கி.மீ.
1.	தேசிய நெடுஞ்சாலைகளாக	506	639
2.	மாநில நெடுஞ்சாலைகளாக	2,968	3,446
3.	மாவட்ட முக்கிய சாலைகளாக	189	6,063
4.	மாவட்ட இதர சாலைகளாக	—	92
	மொத்தம்	3,663 கி.மீ.	10,240 கி.மீ.

IV. நிர்வாக அமைப்பு மற்றும் மேம்பாடு

4.1. நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகள்:

நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாகத்தினை சீரமைத்து செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், துறை இயக்குநர் என்ற புதிய பதவி தோற்றுவிக்கப்பட உள்ளது. துறையின் பணிகளை துறையின் எட்டு அலகுகளிடையே பின்வருமாறு பணிப் பகிர்வு செய்யப்பட உள்ளது.

(அ) துறை இயக்குநர்:

- துறையின் ஒட்டுமொத்த திட்டமிடுதல் மற்றும் நிதிநிலை அறிக்கை தயாரித்தல்
- துறையின் அனைத்து பணியாளர் தொடர்பான நடவடிக்கைகள்
- அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

(ஆ) செயலாக்கம் மற்றும் பராமரிப்பு அலகு:

- மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளையும் அவற்றிலுள்ள பாலங்களையும் பராமரித்தல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

- அரசின் பகுதி-2 திட்டப் பணிகளின் செயலாக்கம்
- மழை, வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர்களால் பழுதுபடும் சாலைகள் மற்றும் பாலங்களை சீரமைத்தல்
- ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் கட்டுதல்
- புறவழிச் சாலைகள் அமைத்தல்
- பொது - தனியார் பங்கேற்பின்மூலம் சாலை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்
- கரும்புச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.
- அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

(இ) தேசிய நெடுஞ்சாலை அலகு:

- மைய அரசின் நிதியுதவியுடன் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள், அவற்றிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பராமரிப்புப் பணிகள்.
- புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டப் பணிகள் (CRF)
- பொருளாதார முக்கியத்துவம் மிக்க மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சாலைகளை மேம்படுத்தும் திட்டப் பணிகள்(E&I and ISC)
- பாரத் நிர்மாண் திட்டப் பணிகள்.
- மலைப்பகுதி (HADP) மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி (WGDP) சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.
- மைய அரசின் பிற சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

[2010 மே 5

(ஈ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு:

- நபார்டு வங்கி நிதி உதவியின்மூலம் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் பாலப் பணிகள்

- ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் சுனாமி நிவாரணப் பணிகள்

- மாவட்ட இதர சாலைகளில் சிலவற்றில் பராமரிப்புப் பணிகள்

- அரசு அவ்வப்போது ஒப்படைக்கும் பிற பணிகள்

(உ) திட்டங்கள் அலகு:

- இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ் இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப் பாலப் பணிகள்

- அரசு மற்றும் நபார்டு நிதி உதவியின்மூலம் செயல்படுத்தப்படும் பெரிய பாலப் பணிகள்

- ஆரச் சாலைகள் மற்றும் சுற்றுச் சாலைப் பணிகள்

- கரும்புச் சாலைகள் அமைத்தல்

- அரசு ஒப்படைக்கும் பிற சிறப்புத் திட்டப் பணிகள்.

(ஊ) பெருநகர் சாலை மேம்பாட்டு திட்ட அலகு

- சென்னை பெருநகர்ப் பகுதிக்கான வளர்ச்சித் திட்டப் (CMDP) பணிகளை செயல்படுத்துதல்

- தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் (TNUDP III) செயல்படுத்தப்படும் சாலைப் பணிகள், பெரிய பாலப் பணிகள் மற்றும் சாலை சந்திப்பில் மேம்பாலப் பணிகள்.

- அரசால் ஒப்படைக்கப்படும் மாநகரப் பகுதிகள் சார்ந்த இடங்களில் பிற பணிகள்.

2010 மே 5]

(எ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்:

- உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாட்டுப் பணிகள்
- மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்புப் பணிகள்
- பொது - தனியார் பங்கேற்பின் கீழ் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- துறை அமைப்புகளை பலப்படுத்துதல் மற்றும் செயல் திட்டங்களை நிறைவேற்றுதல்
- சாலை விபத்து, தகவல் மேலாண்மைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

(ஏ) ஆய்வு மற்றும் வடிவமைப்பு அலகு:

- புதிய சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- ரூ.2 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள பாலப் பணிகளுக்கு கட்டுமான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல்
- அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

(ஐ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்:

- சாலை மற்றும் பாலங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகள்.
- சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சிப் பணிகள்
- ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண்டல ஆய்வகங்கள் மூலம் தரக்கட்டுப்பாட்டுப் பணிகள்
- அரசால் ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

(ஓ) தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC):

- தொழிற்சாலைப் பகுதிகளுக்குத் தேவையான சாலை மற்றும் பாலக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள்
- அரசால் ஒப்படைக்கப்படும் சில சிறப்புத் திட்டங்கள்.

(ஓ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC):

- சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகளை நிர்வகித்தல்.
- இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலைப் பணிகளை மேற்கொள்ளுதல்
- கிழக்குக் கடற்கரைச் சாலை (சென்னை முதல் புதுச்சேரி வரை) சுங்கச்சாலையாக மேம்படுத்தி பராமரித்தல்
- அரசால் ஒப்படைக்கப்படும் பிற பணிகள்

4.2. தமிழ்நாடு கடல்சார் வாரியம்:

- சிறு துறைமுகங்களை நிர்வகித்தல்
- தனியார் பங்கேற்பில் சிறு துறைமுகங்களை உருவாக்குதல்
- இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடிய கப்பல் தொடர்பான பயிற்சி நிறுவனம் நடத்துதல்

4.3. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்:

- கப்பல்மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருதல்.
- கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளுக்கான கடல் வழி படகுப் போக்குவரத்தினை மேற்கொள்ளுதல்.

4.4 துறையின் நிர்வாக சீரமைப்பு:

(அ) பணியாளர்கள் அமைப்பை மறு சீரமைத்தல்:

துறையின் நிர்வாக அமைப்பில் பழைய நடைமுறைகளை காலமாற்றத்திற்கேற்ப சீரமைக்க அரசு முடிவு செய்து உலக வங்கி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

நிதியுதவியோடு நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாக அமைப்பினை மாற்றியமைக்கும் பணிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்படி துறையினை கணினி மயமாக்குதல், பொறியாளர்களின் அதிகார வரம்பை மாற்றியமைத்தல், அலகுகளிடையே பணிகளை மறுபகிர்மானம் செய்தல் ஆகியவை ஏற்கெனவே நடைமுறை படுத்தப்பட்டுவிட்டன.

இதன் ஒரு பகுதியாக துறையின் பல்வேறு அலகுகளை ஒருங்கிணைக்கும் வகையில் துறைத் தலைவர் என்ற புதிய பதவியினை உருவாக்கவும், தரக்கட்டுப்பாட்டு பிரிவுகளை உருவாக்கி பணிகளின் தரத்தினை மேம்படுத்தவும், நிர்வாகத்தை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு அலகுகளிடையே உள்ள பணியாளர் அமைப்பு முறையினை மாற்றியமைக்கவும் அரசு ஆணை வெளியிடப்படவுள்ளது.

2001-2006 ஆம் ஆண்டுகளில் *37* காலிப் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டன. கடந்த நான்காண்டுகளில் காலியாக இருந்த *1,441* பல்வேறு பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட்டுள்ளன:

வ. எண்	பணியிடம்	எண்ணிக்கை
1.	உதவிப் பொறியாளர்	*295*
2.	இளநிலைப் பொறியாளர்	*1*
3.	இளநிலை வரைதொழில் அலுவலர்	*140*
4.	தணிக்கை உதவியாளர்	*16*
5.	இளநிலை உதவியாளர்	*98*
6.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்	*8*
7.	தட்டச்சர்	*126*
8.	பதிவுரு எழுத்தர்	*95*
9.	சாலை ஆய்வாளர்	*362*
10.	சாலைப் பணியாளர்	*300*
	மொத்தம்	*1,441*

(ஆ)பன்னாட்டு தரக்கட்டுப்பாட்டு அமைப்பு 9001:2008 சான்றிதழ் (ISO 9001 : 2008 Certification):

நிர்வாக சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக இத்துறையின் பொது அலகில், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி வட்டத்திற்கும், புதுக்கோட்டை மற்றும் ஈரோடு கோட்டத்திற்கும், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகில், கோயம்புத்தூர் கோட்டத்திற்கும் சர்வதேச தர நிர்ணய அமைப்பின் (International Standard Organisation) சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான தணிக்கையினை தேசிய உற்பத்தி மன்றத்திடம் (NPC), சான்றிதழ் பெறும் பணியினை இந்திய தர நிர்ணய அமைவளத்திடமும் (Bureau of Indian Standards) அளிக்கப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தி மன்றம் தணிக்கையினை முடித்துள்ளது. சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. தர அமைவளத்தால் விரைவில் தணிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. ஜூன் 2010-இல் சான்றிதழ் பெறப்படும்.

(இ) சாலை மேலாண்மைத் திட்டம் (Road Management System):

உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள், பாலங்கள் குறித்த தகவல்கள் வலை தளம் சார்ந்த தகவல் தொகுப்பின்மூலம் சேகரிக்கப்பட்டு சாலை மேலாண்மை அமைப்புக்கான மென்பொருள் ஆலோசகர்கள் உதவியுடன் பரிசோதனை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள், நெடுஞ்சாலைத் துறையின் சேவையகத்தில் (Server) ஏற்றம் செய்யப்பட்டுள்ளது. தகவல் சேகரிப்பு தள ஆய்வு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைத் திட்டமிடவும், மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

2010 மே 5]

மேலும்

- பல்வேறு திட்டங்களுக்கான வரவு-செலவு திட்டமிடல்
- ஒட்டுமொத்த சாலை தொடரமைப்பின் செயலாக்கத்தினைக் கண்காணித்தல் மற்றும்
- உத்தேசித்த இலக்கினை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றினை இதன்மூலம் செயல்படுத்த இயலும்.

(ஈ) சாலை விபத்து, தகவல் மேலாண்மைத் திட்டம் (Road Accident Data Management System):

காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையினரின் ஒருங்கிணைப்போடு நெடுஞ்சாலைத் துறை, சாலை விபத்து குறித்த தகவல் மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்க அரசு 23-12-2008-இல் ஆணை வெளியிட்டது. இத்திட்டத்திற்கான நிலையான வழிகாட்டு நடைமுறை 22-09-09 நாளிட்ட அரசாணையின்மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ்,

- நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் குறித்த விவரங்களைப் பதிவு செய்து, ஆய்வு செய்யவும் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு ஏற்ற வகையில் புவியியல் தகவல் அமைப்பு சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டு பதிவாக்கம், சேமிப்பு, ஆய்வு மற்றும் பகிர்மானப் பணிகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- காவல் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் மாநில போக்குவரத்து திட்டப்பிரிவு மையத்திற்கு (STPC) சாலை விபத்து குறித்த தகவல் சேகரிப்பு மற்றும் மேலாண்மை குறித்த பணிகளை மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(உ) திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான குழு:

நெடுஞ்சாலைத் துறையில் பணிகளின் செயலாக்கத்தின் போது குறிப்பாக பாலப் பணிகளில் வடிவமைப்பில் ஏற்படும் மாறுபாடு, கட்டுமானப் பொருட்களின் விலை மாற்றம் காரணமாகவும்

அல்லது கூடுதலாக பணிகளைச் சேர்க்க வேண்டிய நிலையிலும் திருத்திய நிர்வாக அனுமதி (RAS) கோரும் நிலை ஏற்படுகிறது. ஒவ்வொரு பணிக்கும் தனித் தனியே ஆராய்ந்து திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு அரசு அளவில் நிதித் துறையின் பிரதிநிதித்துவத்தோடு 04-12-2008-இல் குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப காரணங்களால் ஏற்படும் மாறுதல்களை ஆராய்ந்து மேற்கண்ட குழுவிற்குப் பரிந்துரை செய்ய துறையில் ஓய்வு பெற்ற மூன்று தலைமைப் பொறியாளர்கள் அடங்கிய குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இது வரை ரூ.840 கோடி மதிப்பிலான 328 சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு இக்குழு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்காக பரிந்துரை செய்யப்பட்டதன் அடிப்படையில், திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான அரசாணை விரைவாக வழங்கப்பட்டு, பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(ஊ) மதிப்பீட்டிற்கான தொழில்நுட்பக் குழு:

நெடுஞ்சாலைத் துறையில் செயலாக்கப்படும் சாலை மற்றும் பாலப் பணிகளின் மதிப்பீடுகளில் முறையான தொழில்நுட்ப நெறிமுறைகளைப் பின்பற்றவும், குறைந்தபட்ச செலவினத்தோடு பணிகளைத் திட்டமிடவும், கோட்ட, வட்ட மற்றும் மாநில அளவில் உள்ள பொறியாளர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழுக்கள் 2009-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

அதன்படி, சாலை மற்றும் பாலப் பணிகளின் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிட வடிவமைப்பு மற்றும் புலனாய்வு அலகு மற்றும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த கோட்டப் பொறியாளர்கள் துணை இயக்குநர்கள் உள்ளிட்ட குழுவினரால் ரூ.15 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரை மதிப்பிலான பணிகளுக்கு கோட்டப் பொறியாளர்கள் அளவிலும், ரூ.50 இலட்சம் முதல் ரூ.2 கோடி வரை மதிப்பிலான பணிகளுக்கு கண்காணிப்புப் பொறியாளர்கள் அளவிலும், ரூ.2 கோடிக்கு மேல் உள்ள பணிகளுக்கு தலைமைப் பொறியாளர்கள் அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் ஆலோசனைப்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


2010 மே 5]

V. துறை செயல்படுத்தும் திட்டங்கள்

செயலாக்க விவரம்:


2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளின் கீழ் ரூ.4,731 கோடி செலவில் சாலை மற்றும் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், ரூ.4,234 கோடி செலவில், 46,017 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், ரூ.497 கோடி செலவில் 871 பாலங்கள் மற்றும் 814 மிகச் சிறு பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்ற 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளில் திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளின் கீழ் ரூ.12,094 கோடி செலவில் சாலை மற்றும் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், ரூ.11,213 கோடி செலவில் 57,787 கி.மீ. நீளச் சாலைகள் மேம்படுத்தி/ புதுப்பிக்கப்பட்டன. ரூ.881 கோடி மதிப்பில் 1,046 பாலப் பணிகள் மற்றும் 3,809 மிகச் சிறு பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



[2010 மே 5

2001–2006 மற்றும் 2006–2010 ஆம் ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட பாலப் பணிகளின் விவரம்



சாலைகளை அகலப்படுத்துதல்:

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ரூ.759 கோடி செலவில் 3,159 கி.மீ. நீள மாநில/மாவட்ட முக்கிய/மாவட்ட இதர சாலைகள் அகலப்படுத்தப்பட்டன. 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளில் ரூ.3,770 கோடி செலவில் 10,280 கி.மீ. நீள சாலைகள் அகலப்படுத்தப்பட்டன.

சாலைகளை உறுதிப்படுத்துதல்:

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ரூ.1,953 கோடி செலவில் 24,497 கி.மீ. நீள மாநில/மாவட்ட முக்கிய/மாவட்ட இதர சாலைகள் உறுதிபடுத்தப்பட்டன. 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளில் ரூ.4,057 கோடி செலவில் 19,361 கி.மீ. நீள சாலைகள் உறுதிபடுத்தப்பட்டன.

சாலைகளை புதுப்பித்தல்

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ரூ. 1,522 கோடி செலவில் 18,361 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளில் ரூ. 3,386 கோடி செலவில் 28,146 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2010 மே 5]

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.26.79 கோடி செலவில் 50,645 பாலங்களில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புப் பணிகளும் இதில் அடங்கும்.

பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ரூ.497 கோடி செலவில் 871 பாலங்களும், 814 சிறு பாலங்களும் கட்டப்பட்டன. 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளில் ரூ.881 கோடி செலவில் 1,046 பாலங்களும், 3,809 சிறு பாலங்களும் கட்டப்பட்டன.

இரயில்வே கடவில் சாலை மேம்பாலங்கள்:

2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை இரயில்வே துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் நிதிப் பகிர்வு அடிப்படையில் ரூ.2,247 கோடி மதிப்பிலான 104 இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5.1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP):

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அதிகளவில் சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பாலங்கள் கட்டுதல், விபத்துப் பகுதியினை மேம்பாடு செய்தல் ஆகிய பணிகள் பெரும் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாநில நெடுஞ்சாலைகளை இருவழித் தடமாக்குதல், போக்குவரத்து செறிவு மிக்க மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை குறைந்தபட்சம் இடைவழித் தடமாக அகலப்படுத்துதல் மற்றும் அதிகப் பளு ஏற்றிய வாகனங்களின் போக்குவரத்திற்கு உகந்த வகையில் சாலையினை அமைக்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் திட்டப் பணிகளுக்கான மொத்த செலவு ரூ.8,707 கோடியில், இத்திட்டத்திற்கு மட்டும் ரூ.4,236 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் —

- ரூ.2,672 கோடி செலவில் 9,487 கி.மீ. நீள சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன.
- ரூ.1,492 கோடி செலவில் 9,730 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ரூ. 72 கோடி செலவில் 196 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

இதன் விவரம் பின் வருமாறு:

5.1.1 மாநில நெடுஞ்சாலைகள் (State Highways):

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 2009–2010 ஆம் ஆண்டில், ரூ.442.23 கோடி மதிப்பில்,

- 389 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தவும்,
- 548 கி.மீ. நீள சாலைகளை வலுப்படுத்தவும்,
- 116 பாலம்/சிறு பாலங்களைக் கட்டவும்,
- 43 விபத்துப் பகுதிகளை மேம்பாடு செய்யவும்,
- 14 கி.மீ. நீள சுற்றுலாப் பகுதி சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு ஒப்புதல் அளித்தது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட பெரிய பாலப் பணிகள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தஞ்சாவூர்	மா. நெ. எண் 27 (பெரம்பலூர் – மானாமதுரை சாலை) கி.மீ. 65/10–இல் வெண்ணாற்றின் குறுக்கே பாலம்	பள்ளி அக்ரஹாரம்	6.00
2.	கிருஷ்ணகிரி	மா. நெ. எண் 17 (மாலூர் – ஒசூர் – அதியமான் கோட்டை சாலை) கி.மீ. 4/4–இல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம்	பாகலூர்	3.20

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
3.	புதுக்கோட்டை	மா. நெ. எண் 26 (திருச்சி–புதுக்கோட்டை – மீமிசல் சாலை) கி.மீ.117/10–இல் கொழுவனாற்றின் குறுக்கே பாலம்	மீமிசல்	2.65
4.	திருநெல்வேலி	மா. நெ. எண் 177 (சேரன்மகாதேவி – பணகுடி சாலை) கி.மீ 30/2–இல் நம்பியாற்றின் குறுக்கே பாலம்	திருக் குறுங்குடி	2.65
5.	திருப்பூர்	மா. நெ. எண் 136 (பல்லடம் – அவிநாசி சாலை) கி. மீ. 13/4–இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்	மங்கலம்	2.25
6.	மதுரை	மா. நெ. எண் 73 (திருமங்கலம் – பள்ளப்பட்டி சாலை) கி.மீ. 17/10–இல் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்	மேலக்கால்	1.25
7.	நாமக்கல்	மா. நெ. எண் 94 (திருச்செங்கோடு – நாமக்கல் சாலை) கி.மீ. 8/6–இல் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம்	மாணிக்கம் பாளையம்	1.50
8.	திருச்சி	மா. நெ. எண் 62 (திருச்சி – துறையூர் சாலை) கி.மீ. 1/10–இல் பங்குனி வாய்க்காலின் குறுக்கே பாலம் மற்றும் 1/8, 2/8–இல் சிறுபாலம்	மணச்ச நல்லூர்	2.00
9.	நாகை	மா.நெ. எண் 23 (கும்பகோணம் – சீர்காழி சாலை) கி.மீ.35/6–இல் காவிரியாற்றின் குறுக்கே பாலம்	மயிலாடு துறை	1.00
10.	செங்கல்பட்டு	மா.நெ.எண் 57 (சிங்கப்பெருமாள் கோவில் – திருபெரும்புதூர் சாலை) கி.மீ. 28/2–இல் பொதுப்பணித்துறை வாய்க்காலின் குறுக்கே பாலம்	திருப்பெரும் புதூர்	1.30

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
11.	வேலூர்	மா. நெ. எண் 128 (சோழிங்கர் – காவேரிபாக்கம் சாலை) கி.மீ..15/6–இல் மகேந்திரவாடி உபரி நீர் ஓடையின் குறுக்கே பாலம்	கீழ் வீராணம்	1.50
12.	திருவண்ணா மலை	மா.நெ.எண் 6 (கள்ளக்குறிச்சி – திருவண்ணாமலை சாலை) கி.மீ. 45/2–இல் ஓடையின் குறுக்கே பாலம்	பெருந் துறைப் பட்டு	1.00

இப்பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- இதன் பேரில் ரூ.471.42 கோடி செலவில் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 950 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 169 பால/ சிறு பாலப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவற்றுள் பின்வரும் பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	காஞ்சிபுரம்	மா.நெ.எண் 8 (மறைமலையடிகள் பாலம் – இரும்புலியூர் சாலை) கி.மீ.7/10–இல் வெங்கல் ஓடையின் குறுக்கே பாலம்	பள்ளிக்கரணை	3.97
2.	காஞ்சிபுரம்	மா. நெ. எண் 48 (மறைமலையடிகள் பாலம் – இரும்புலியூர் சாலை) கி.மீ. 7/4–இல் வெங்கல் ஓடையின் குறுக்கே பாலம்	பள்ளிக்கரணை	2.23
3.	தஞ்சாவூர்	மா. நெ. எண் 29 (தஞ்சாவூர் – காரைக்குடி – இளையான்குடி – பரமக்குடி –சாயல்குடி சாலை) கி.மீ. 51/2–இல் நரியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்	சீதாம்பாள்புரம்	1.80

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
4.	நாமக்கல்	மா. நெ. எண் 79 (மல்லியக்கரை – இராசிபுரம்– திருச்செங்கோடு – ஈரோடு சாலை) கி.மீ. 14/6–இல் மங்களபுரம் ஆற்றின் குறுக்கே பாலம்	மங்களபுரம்	1.00
5.	திருநெல்வேலி	மா. நெ. எண் 44 (பருவக்குடி – எட்டயபுரம் – வேம்பார் சாலை) கி.மீ. 14/8–இல் காகநதியின் குறுக்கே பாலம்	நக்கல முத்தன்பட்டி	1.00

நடைபெற்று வரும் சில பாலப் பணிகள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	விழுப்புரம்	மா.நெ. எண் 9 (கடலூர் – சித்தூர் சாலை) கி. மீ.73/4–இல் துரிஞ்சலாற்றின் குறுக்கே பாலம்.	திருக்கோவிலூர்	2.50
2.	திருவள்ளூர்	மா.நெ. எண் 52 (கவரப்பேட்டை - சத்தியவேடு சாலை)யில் கி. மீ. 12/6, 13/6, 18/6 மற்றும் 18/10–இல் ஒடையின் குறுக்கே பாலம்.	பூவலம்பேடு, ஈணரிப் பூண்டி பொம்மாஜி-குளம்	2.27
3.	கன்னியாகுமரி	மா.நெ.எண் 45 (ஆரல்வாய்மொழி – நெடுமாங் காடு சாலை) கி.மீ. 9/2–9/4–இல் கூத்தனாறு கால்வாய் குறுக்கே பாலம்	ஆண்டிதோப்பு நாஞ்சில் நாடு	2.00
4.	கன்னியாகுமரி	மா. நெ. எண் 180 (குளச்சல் – திருவட்டார் சாலை) கி.மீ. 23/6–இல் பரளியாற்றின் குறுக்கே பாலம்	திருவட்டார்	2.00

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
5.	கன்னியாகுமரி	மா.நெ. எண் 179 (கன்னியாகுமரி – பழைய உச்சகடை சாலை) கி.மீ. 4/8–இல் பாலம் மற்றும் 17/6–இல் ஓடையின் குறுக்கே சிறுபாலம்	வால்குளம்	1.25
6.	தஞ்சாவூர்	மா. நெ. எண் 66 (கும்பகோணம்–மன்னார்குடி அதிராமபட்டினம் சாலை) கி.மீ. 70/6–இல் நகவினியாற்றின் குறுக்கேபாலம்	பழஞ்சூர்	1.80
7.	திருவாரூர்	மா. நெ. எண் 63 (தஞ்சாவூர்–மன்னார்குடி–கோடியக்கரை சாலை) கி.மீ.39/2–இல் முள்ளியாறு மற்றும் அய்யனாற்றின் குறுக்கே பாலம்	தட்டான்கோவில்	1.50
8.	மதுரை	மா. நெ. எண் 73 (திருமங்கலம்–பள்ளப்பட்டி சாலை) கி.மீ.32/8–இல் பெரியாறு கால்வாயின் குறுக்கே பாலம்	நாச்சிகுளம்	1.00
9.	திருநெல்வேலி	மா. நெ. எண் 40 (திருச்செந்தூர் – பாளையங் கோட்டை – குற்றாலம் – செங்கோட்டை சாலை) கி.மீ. 122/2–இல் அழுதகன்னி ஆறு பாலம்	தென்காசி மத்தாளம் பாறை	1.30
10.	விழுப்புரம்	மா. நெ. எண் 4 (ஆற்காடு – விழுப்புரம் சாலை) கி.மீ. 82/6–இல் ஓடையின் குறுக்கே பாலம்.	செஞ்சி ஒட்டம்பட்டு	1.00

2010 மே 5]

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து நடப்பாண்டிற்கு ரூ.485.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.2. மாவட்ட முக்கிய சாலைகள் (Major District Roads):

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.352.90 கோடி மதிப்பில்,

- *600 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்தவும்,*
- *515 கி.மீ. நீள சாலைகளை வலுப்படுத்தவும்,*
- *88 பாலங்கள்/சிறு பாலங்களைக் கட்டவும்,*
- *26 விபத்துப் பகுதிகளை மேம்பாடு செய்யவும்,*
- *12 கி.மீ. நீள சுற்றுலாப் பகுதி சாலைகளை மேம்பாடு* செய்யவும் *அரசு ஒப்புதல் அளித்தது.*

ஒப்புதல் அளிக்கப்பட்ட பெரிய பாலங்கள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	விழுப்புரம்	பெரும்பாக்கம் – திருவக்கரை – கொடுக்கூர் சாலை கி.மீ.6/6 – 7/0–இல் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.	திருவக்கரை	7.00
2.	கோவை	இருட்டுப்பள்ளம் – பூண்டி சாலை கி. மீ. 0/6–இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்.	இருட்டுப் பள்ளம்	2.30
3.	திருப்பூர்	கரைபுதூர் –வி.டி. அய்யன் கோவில் சாலை கி.மீ. 1/6–இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்	சின்னக்கரை	1.50
4.	வேலூர்	இராணிப்பேட்டை – பொன்னை சாலை கி.மீ. 11/2–இல் பாலம்	பொன்னை	1.00

[2010 மே 5

மேற்கண்ட பாலப் பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதன் பேரில், ரூ.361.29 கோடி செலவில் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 1081 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 128 பால/சிறு பாலப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இப்பணிகளுள் நிறைவேற்றப்பட்ட பின்வரும் பாலப் பணிகளும் அடங்கும்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	கரூர்	இரும்பூதிப்பட்டி – பஞ்சப்பட்டி சாலை கி.மீ.10/8–இல் ஓடையின் குறுக்கே பாலம்.	பஞ்சப்பட்டி	2.06
2.	நாமக்கல்	சோளக்காடு – அரப்பள்ளீஸ்வரர் கோயில் – செம்மேடு சாலை கி.மீ. 32/6–8–இல் பரவையாற்றின் குறுக்கே பாலம்.	அரப்பள்ளீஸ் வரர் கோயில்	2.03
3.	தஞ்சாவூர்	வல்லம் – புதூர் சாலை கி.மீ. 1/2–இல் முதலை முத்துவாரியின் குறுக்கே பாலம்	திருமலை சமுத்திரம்	1.00
4.	தஞ்சாவூர்	பாச்சூர் சாலை கி.மீ.0/2–இல் கல்லணை கால்வாயின் குறுக்கே பாலம்	பாச்சூர்	1.05

2010 மே 5]

நடைபெற்று வரும் சில பாலப் பணிகள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவாரூர்	முத்துப்பேட்டை – வாய்மேடு சாலை கி.மீ.0/2-இல் கோரையாற்றின் குறுக்கே பாலம்.	முத்துப் பேட்டை	6.05
2.	விழுப்புரம்	பாகண்டை கூட்டு சாலை முதல் மாமண்டூர் வரை செல்லும் சாலை கி.மீ.15/10–இல் மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம்	அகரக் கோட்டலம்	1.95
3.	தஞ்சாவூர்	வல்லம் – ஒரத்தநாடு சாலை கி.மீ. 14/6–இல் கல்லணை கால்வாயின் குறுக்கே பாலம்	ஈச்சங் கோட்டை	1.15
4.	கோவை	கோயம்புத்தூர் – சிறுவாணி சாலை கி.மீ.22/10–இல் சிறுவாணி ஆற்றின் குறுக்கே பாலம் மற்றும் கி.மீ. 15/4–இல் சிறுபாலம்	சிறுவாணி	1.00
5.	மதுரை	மா. நெ. எண். 191 (மேலூர் – திருப்பத்தூர் சாலை) கி.மீ. 42/6–இல் கீழவளவு கண்மாயின் குறுக்கே பாலம்	கீழவளவு	1.50

[2010 மே 5

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
6.	திருநெல்வேலி	சிவராமப்பேட்டை – பன்பொழி சாலை கி.மீ.15/2–இல் ஹரிஹர நதியின் குறுக்கே பாலம்	செங்கோட்டை	1.00
7.	கன்னியாகுமரி	பரசேரி – திங்கள் சந்தை – புதுக்கடை சாலை கி.மீ. 5/4–இல் வள்ளியாற்றின் குறுக்கே பாலம்	இரணியல்	1.81
8.	கன்னியாகுமரி	இரணியல் – இராஜாக்க மங்கலம் சாலை கி.மீ. 3/4 –இல் இரட்டை கரை ஓடையின் குறுக்கே பாலம்	குறுந்தன் கோடு	1.00

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளுக்கும் சேர்த்து நடப்பாண்டிற்கு ரூ.402.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.3 மாவட்ட இதர சாலைகள் (Other District Roads):

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் ரூ. 245.26 கோடி மதிப்பில்,

- *1,405 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும்,*
- *137 பாலங்கள்/சிறு பாலங்களை கட்டவும், புதுப்பித்துக் கட்டவும் அரசு அனுமதியளித்தது.*
- *23 கி.மீ. நீள சுற்றுலாப் பகுதி சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு ஒப்புதல் அளித்தது.*

2010 மே 5]

ஒப்புதல் அளிக்கப்பட்ட பெரிய பாலங்கள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	மதுரை	பரவை அருகே இரயில்வே கடவு எண் 356க்கு பதிலாக சாலை கீழ்ப்பாலம்	பரவை	8.50
2.	திருநெல்வேலி	தளபதி சமுத்திரம் – கண்ணநல்லூர் சாலை கி.மீ. 7/6–இல் நம்பியாற்றின் குறுக்கே பாலம்.	கண்ண நல்லூர்	2.00
3.	விருது நகர்	இராமலிங்காபுரம் சாலை கி.மீ. 5/10–இல் காயல்குடி ஆற்றின் குறுக்கே பாலம்	அணைத் தலைப் பட்டி	1.08
4.	மதுரை	ஒத்தக்கடை – பி.மேட்டுப்பட்டி சாலை கி.மீ.0/10–இல் சிலுசிலுப்பை ஓடையின் குறுக்கே பாலம்	ஒத்தக் கடை	1.00
5.	திருச்சி	அளுந்தலைப்பூர் – கல்லகம் சாலை கி.மீ. 5/4, 6/4, 9/6–இல் காட்டாற்றின் குறுக்கே பாலம்	மால்வாய்	1.80
6.	புதுக்கோட்டை	காரக்கோட்டை சாலை கி.மீ. 0/2–இல் நரசிங்க காவேரி ஆற்றின் குறுக்கே பாலம்	காரக் கோட்டை	1.20
7.	திருவண்ணா மலை	கீழ்கொடுங்காளூர் சாலை கி.மீ. 2/10–இல் சுகநதியின் குறுக்கே பாலம்	கீழ்கொடுங் காளூர்	1.50

[2010 மே 5

மேற்கண்ட பாலங்கள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதன் பேரில் ரூ.255.91 கோடி செலவில் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 1,318 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 109 பால/சிறு பாலப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பணிகளுள் நிறைவேற்றப்பட்ட பின்வரும் பெரிய பாலங்களும் அடங்கும்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தருமபுரி	மாரண்டஹள்ளி – பஞ்சப்பள்ளி சாலையில் அத்திமுட்டலூர் அருகே கி.மீ. 2/10–இல் சின்னாற்றின் குறுக்கே பாலம்	அத்தி முட்டலூர்	4.69
2.	விழுப்புரம்	கடலூர் – சித்தூர் சாலையில் கி.மீ. 56/2–இல் இருந்து பிரியும் சீக்கம்பட்டு சாலை கி.மீ 5/2–இல் கெடிலம் ஆற்றின் குறுக்கே பாலம்	கொண்ட சமுத்திரம்	3.43
3.	சேலம்	சேலம் – உளுந்தூர்பேட்டை சாலையிலிருந்து மணிவிழுந்தான் செல்லும் சாலையில் வசிஷ்டா ஆற்றின் குறுக்கே கி.மீ. 1/8–இல் பாலம்.	மணி விழுந்தான்	2.38
4.	தருமபுரி	ஆண்டியூர்– அம்மாபேட்டை சாலை கி.மீ. 1/10–இல் வரட்டாற்றின் குறுக்கே பாலம்	வேட கட்ட மடுவு	1.52

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

நடைபெற்று வரும் பெரிய பாலப் பணிகள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	கடலூர்	திட்டக்குடி பேரூராட்சி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே கி.மீ.0/6–0/8–இல் பாலம்.	திட்டக்குடி	7.93
2.	கடலூர்	முருகன்குடி–கிளிமங்கலம் சாலை கி. மீ. 0/4–0/6–இல் வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.	முருகன்குடி	7.64
3.	தருமபுரி	ஆண்டியூர்–அம்மாபேட்டை சாலை கி.மீ. 7/10–இல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம்.	அம்மா பேட்டை, நீப்பத்துறை	5.65
4.	காஞ்சிபுரம்	மா. நெ. எண் 55 (மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலையையும் மணப்பாக்கம் சாலையையும் இணைத்து) அடையாற்றின் குறுக்கே நந்தம்பாக்கத்தில் பாலம்.	நந்தம் பாக்கம்	4.45
5.	விழுப்புரம்	கடலூர் – சித்தூர் சாலை கி.மீ. 18/6–இல் இருந்து பிரியும் மதகடிப்பட்டு சாலை கி.மீ 7/6–இல் மலட்டாற்றின் குறுக்கே பாலம்.	கொங்கம் பட்டு	2.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
6.	புதுக்கோட்டை	ஆயக்குடி தெற்கு – பால கிருஷ்ணாபுரம் சாலை கி.மீ. 3/2–இல் வில்லுனி காட்டாற்றின் குறுக்கே பாலம்	பாலகிருஷ் ணாபுரம் மாத்தூர்	1.72
7.	திருநெல்வேலி	கீழங்காடு– பாலமார்த்தாண்ட புரம் சாலை கி.மீ. 0/2–இல் கருப்பா நதியின் குறுக்கே பாலம்	கீழங்காடு	1.90
8.	விருது நகர்	கருப்புரெட்டியபட்டி – ராவுத்தன்பட்டி (வழி) நல்லமுத்தன்பட்டி சாலை கி.மீ. 0/2–இல் ஒப்போடையின் குறுக்கே பாலம்	நல்ல முத்தன் பட்டி	1.22
9.	கன்னியாகுமரி	பேச்சிப்பாறை அணை – கொடையார் சாலை கி.மீ. 0/4 –இல் கோதையாறு பாலம்	பேச்சிப் பாறை	1.38

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து நடப்பாண்டிற்கு ரூ.296.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.4 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்:

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக ஆதி திராவிடர் குடியிருப்புக்ளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தை 2006-2007 ஆம் ஆண்டு முதல் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

2010 மே 5]

2009-2010 ஆம் ஆண்டில், ரூ.96.59 கோடி மதிப்பில், 598 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும், 39 பாலங்கள்/சிறு பாலங்களைக் கட்டவும் அரசு அனுமதியளித்ததன் பேரில் ரூ.111 கோடி செலவில் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 621 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 29 பால/சிறு பாலப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2009-2010 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பெரிய பாலங்கள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	சிவகங்கை	எஸ். வி. மங்களம் – மேல்பட்டி (வழி) மட்டிக்கரைப்பட்டி சாலை கி.மீ. 0/2—இல் பாலாற்றின் குறுக்கே பாலம்.	மட்டிக் கரைப் பட்டி	2.00
2.	திண்டுக்கல்	வேல்வார்கோட்டை – கோவிலூர் சாலை கி.மீ. 3/6—இல் சந்தனவர்தினி ஆற்றின் குறுக்கே பாலம்	கோவிலூர்	1.30
3.	திண்டுக்கல்	தாடிக்கொம்பு – புத்தாம்பட்டி சாலை கி.மீ. 3/10—இல் சந்தனவர்தினி ஆற்றின் குறுக்கே பாலம்	உண்டார் பட்டி	1.25
4.	திண்டுக்கல்	பெரியக்கோட்டை – கோவிலூர் சாலையிலிருந்து கஸ்தூரி நாயக்கன்பட்டி சாலை கி.மீ.0/10—இல் சந்தனவர்தினி ஆற்றின் குறுக்கே பாலம்	கோம்பை யான்பட்டி	1.25
5.	திண்டுக்கல்	ரெட்டியார்சத்திரம் – கன்னிவாடி சாலை கி.மீ. 3/10—இல் மாங்கரை ஆற்றின் குறுக்கே பாலம்	புதுப்பட்டி	1.00

[2010 மே 5

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் புதிதாக அனுமதிக்கப்படவுள்ள பணிகளுக்கும் சேர்த்து நடப்பாண்டிற்கு ரூ.133.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.5 பகுதி 2 திட்டப் பணிகள்:

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.9.51 கோடி மதிப்பில் 7 பாலங்களைக் கட்ட அரசு அனுமதி அளித்தது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட பெரிய பாலங்கள் பின்வருமாறு:

வ. எண்.	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தூத்துக்குடி	விளாத்திகுளம் – பெருநாழி சாலையில் காட்டாற்றின் குறுக்கே கி. மீ. 12/2–4–இல் பாலம். (MDR)	காடல்குடி (சின்னூர்)	2.50
2.	திருப்பூர்	காங்கேயம் – கொடுமுடி சாலையில் கி.மீ. 20/4–இல் நகுவன்கரை ஓடையின் குறுக்கே பாலம். (MDR)	முத்தூர் (மேட்டுக் கடை)	2.40
3.	திருச்சி	மா.நெ. எண் 62 (திருச்சி – துறையூர் சாலை) கி.மீ. 14/8–இல் உப்பாற்றின் குறுக்கே பாலம்	பெர மங்கலம்	1.23
4.	தருமபுரி	அரூர் – அச்சளவாடி – பேத்தம்பட்டி சாலை கி.மீ. 11/10–இல் காட்டாற்றின் குறுக்கே பாலம் (MDR)	அச்சளவாடி	1.18

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
5.	சேலம்	சேலம் – வீராணம் சாலையிலிருந்து ஜப்தி வீராணம் வழியாக டி. பெருமாபாளையம் செல்லும் சாலை கி.மீ. 7/8–இல் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் (ODR)	டி. பெருமா பாளையம்	0.95
6.	திண்டுக்கல்	வடமதுரை – சிலுவத்தூர் சாலையிலிருந்து வட்டாணம் செல்லும் சாலை கி.மீ. 10/4–இல் சந்தனவர்தினி ஆற்றின் குறுக்கே பாலம் (MDR)	கொசவப் பட்டி	0.8
7.	கன்னியாகுமரி	பெருவிளைசாலை கி.மீ.1/2–இல் பொதுப் பணித் துறை கால்வாயின் குறுக்கே பாலம் (ODR)	பெரு விளை	0.5

மேற்கண்ட பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2009-2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட பணிகளும் மற்றும் நிலுவைப் பணிகள் உள்ளிட்ட 12 பாலப் பணிகள் ரூ.30.78 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இவற்றில் முடிக்கப்பட்ட சில பாலங்கள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருச்சி	திருச்சி மாவட்டத்திலுள்ள செங்கரையூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அலமேலுபுரம் பூண்டி கிராமங்களை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்.(ODR)	செங் கரையூர், அலமேலுபுரம் பூண்டி	46.00
2.	திருப்பூர்	காட்டுப்பாளையம் - மயில்ரங்கம் - வெள்ளாத்தங்கரை — புதூர் சாலை கி.மீ. 7/2 இல் மயில்ரங்கம் அருகே பிரியும் சாலையில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம். (ODR)	மயில்ரங்கம்	5.19
3.	ஈரோடு	கோபி – சவுண்டப்பூர் சாலையில் கி. மீ. 11/8-10 இல் பவானி ஆற்றின் குறுக்கே பாலம். (MDR)	அத்தாணி	4.48
4.	கரூர்	மா.நெ. எண் 21 (பொள்ளாச்சி – தாராபுரம் - கரூர் சாலை) கி.மீ. 91/8–இல் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்.	சின்ன தாராபுரம்	2.90

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
5.	கரூர்	மா.நெ. எண் 193 (துடாகோயில் அருகே அரவக்குறிச்சி புறவழிச் சாலை) கி.மீ. 326/4–இல் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே பாலம்.	அரவக்குறிச்சி (துடாகோயில்)	1.69

நடைபெற்று வரும் சில பாலப் பணிகள்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	கடலூர்	குண்டு உப்பலவாடி சாலை கி.மீ 1/6–இல் பெண்ணையாற்றின் குறுக்கே பாலம். (ODR)	குண்டு உப்பலவாடி	4.50
2.	அரியலூர்	மா. நெ. எண் 143 (மாத்தூர் – திட்டக்குடி சாலை) கி.மீ. 20/10–21/2–இல் சின்னாற்றின் குறுக்கே பாலம்.	வயலப் பாடி	3.84
3.	திருநெல்வேலி	மா. நெ. எண் 39 (திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம் சாலை) கி.மீ.51/2–இல் சித்தாற்றின் குறுக்கே பாலம்.	ஆசாத் நகர்	3.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
4.	திருநெல்வேலி	நாங்குநேரி – வள்ளியூர் – விஜயாபதி சாலை கி.மீ.7/10 இல் நம்பியாற்றின் குறுக்கே பாலம் (MDR)	ஏர்வாடி	3.00

தற்போது நடைபெற்று வரும் பணிகளுக்கும் புதிய பணிகளுக்கும் சேர்த்து நடப்பாண்டிற்கு ரூ.13.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.2. சுனாமி மறுவாழ்வுத் திட்டம்:

5.2.1 ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம்:

சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், 5 பெரிய பாலங்கள் கட்டவும், ஒரு சாலைப் பணியை மேற்கொள்ளவும் ரூ.42.70 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால், வடிவமைப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக ரூ.92.55 கோடி மதிப்பில் அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியது.

கடலூர் மாவட்டத்தில், ரூ.9.40 கோடி செலவில், 20.60 கி.மீ. நீளமுள்ள ஆலப்பாக்கம்—அண்ணன் கோவில் சாலை முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2009-2010 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 4 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	கடலூர்	பச்சையான் குப்பம் – சோத்திக்குப்பம் சாலையில் கி.மீ.1/4–இல் பரவனார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் (ODR)	பச்சையான் குப்பம்	23.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமை விடம்	மதிப்பு (ரூ. கோடியில்)
2.	திருவள்ளூர்	திருவள்ளூர்– பழவேற்காடு ஏரியில் இருந்து பழவேற்காடு கலங்கரை விளக்கம் வரை உயர்மட்டப் பாலம் (ODR)	பழவேற் காடு	17.15
3.	நாகப்பட்டினம்	பிச்சாவரம் – கொடியம்பாளையம் சாலையில் கி.மீ. 4/6– இல் உப்பனார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் (ODR)	கொடியம் பாளையம்	10.87
4.	நாகப்பட்டினம்	வேட்டைக்காரன் இருப்பில் கி.மீ. 1/8 – 9 இல் அரிச்சந்திரா நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் (Pt.union road)	வேட்டைக் காரன் இருப்பு	4.22

2009-2010 ஆம் ஆண்டில் இதற்கான செலவினம் ரூ.21.45 கோடி ஆகும்.

மீதமுள்ள கீழ்க்கண்ட பாலம் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	கடலூர்	கிள்ளை சாலையில் கி.மீ. 11/4 இல் வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் (MDR)	பரங்கிப் பேட்டை	23.67

[2010 மே 5

5.2.2. மைய அரசின் உதவியுடன் சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகள்:

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ், ரூ.277.78 கோடி மதிப்பில் 470.37 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும் 61 பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது.

(அ) பொது அலகின்மூலம் செயலாக்கப்படும் பணிகள்

சுனாமி மறு வாழ்வுத் திட்டத்தின்கீழ், ரூ.224.38 கோடி மதிப்பில் 423.22 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும், 55 புதிய பாலங்கள் கட்டவும் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது.

இவற்றில் 4 சாலைப் பணிகள் மற்றும் 3 பாலப் பணிகள் நீக்கம் செய்யப்பட்டு, 16 பாலப் பணிகளில் வடிவமைப்பு மாறுதல் மற்றும் உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து வழிமுறைகளின்படி ஏற்பட்ட தொழில்நுட்ப மாறுதல் காரணமாக ரூ.258.40 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின்கீழ் 413.37 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 52 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில், இதுவரை ரூ.125.85 கோடி செலவில் 32 பாலப் பணிகள் மற்றும் 410 கி.மீ. நீள சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
1.	கடலூர்	உப்பனாறு கழிமுக பகுதியில் நொச்சிக்காடு கிராமத்தை தே.நெ. 45–ஏ உடன் இணைக்கும் வகையில் பாலம்	நொச்சிக் காடு	4.50

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
2.	கடலூர்	உச்சிமேடு–சுபஉப்பலவாடி கி.மீ.3/2–இல் உப்பனாற்றின் குறுக்கே பாலம்	சுப உப்பலவாடி	1.50
3.	கடலூர்	கிள்ளை சாலை கி.மீ. 2/8–இல் கான்சாகிப் வாய்கால் குறுக்கே பாலம் (MDR)	தில்லை விளாகம்	0.70
4.	நாகப்பட்டினம்	வேளாங்கண்ணி–வேதாரண்யம் சாலை கி.மீ 10/6–இல் சக்கிலியன் வாய்காலின் குறுக்கே பாலம் (MDR)	விழுந்த மாவடி	1.23
5.	நாகப்பட்டினம்	பிரதாபராமபுரம் கிராமச்சாலையில் கி.மீ 3/2–இல் வெண்ணையாறு கிளை வாய்காலின் குறுக்கே பாலம் (ODR)	பிரதாபராம புரம்	1.36
6.	கன்னியா குமரி	நீரோடி – இரயுமான்துறை சாலை கி.மீ. 5/10–இல் ஏ.வி.என் கால்வாயின் குறுக்கே பாலம் (ODR)	சின்னத் துறை	0.80

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

இத்திட்டத்திற்கு *2009-2010* ஆம் ஆண்டில் ரூ.*9.67* கோடி செலவிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் துவங்கப்படவுள்ள பாலங்களின் விவரம்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
1	திருவள்ளூர்	சென்னை – பூவேற்காடு சாலையிலிருந்து பசியாவரம் சாலை கி.மீ 0/4 – இல் கால்வாயின் குறுக்கே பாலம் (Pt. Union Road)	பசியாவரம்	18.00
2	திருவள்ளூர்	சடையான்குப்பம் ஊராட்சி ஒன்றிய சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம்	சடையான் குப்பம்	13.25
3	தூத்துக்குடி	மா. நெ. எண் 176 தூத்துக்குடி – திருச்செந்தூர் – கன்னியாகுமரி சாலை கி.மீ. 21/2–இல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்	முக்காணி	15.00
4	நாகப் பட்டினம்	வண்டல் மற்றும் அவரிக்காடு கிராமங்களை இணைத்து நல்லார், அடப்பார் மற்றும் முல்லையாற்றின் குறுக்கே பாலம். (Pt. Union Road)	வண்டல், அவரிக் காடு	11.35

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
5	நாகப் பட்டினம்	வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உப்பனாற்றின் குறுக்கே 5 இடங்களில் பாலங்கள்	வேதா ரண்யம்	11.25
6	நாகப் பட்டினம்	எடமனல் மற்றும் திருநகரியை இணைத்து வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே பாலம். (ODR)	எடமனல், திருநகரி	10.98
7	நாகப் பட்டினம்	செருதூர்– வேளாங்கண்ணி சாலை கி.மீ.0/4–இல் வெள்ளையாற்றின் குறுக்கே பாலம் (Pt. Union Road)	வேளாங் கண்ணி	5.00
8	நாகப் பட்டினம்	புத்தூர் – புதுப்பட்டினம் – பழையாறு சாலை கி.மீ.18/4–இல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் (MDR)	பழையாறு	3.52
9	நாகப் பட்டினம்	பாப்பாகோவில் – கருங்கண்ணி சாலை கி.மீ.2/6–இல் கடுவையாற்றின் குறுக்கே பாலம் (ODR)	வடலூர்	2.37
10	காஞ்சிபுரம்	கடப்பாக்கம் சாலை கி.மீ. 2/6–இல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் (ODR)	கடப் பாக்கம்	5.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
11	காஞ்சிபுரம்	வெண்ணாங்குப்பட்டு – பனையூர் சாலை கி.மீ. 11/4 லிருந்து தழுதாளிகுப்பம் செல்லும் சாலை கி.மீ. 0/6–இல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம். (ODR)	தழுதாளி குப்பம்	5.10
12	காஞ்சிபுரம்	திருப்போரூர் – நெமிலி சாலை கி.மீ. 3/2–இல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் (MDR)	நெமிலி	4.10
13	காஞ்சிபுரம்	சென்னை– மாமல்லபுரம் சாலை வழி திருப்போரூர் கி.மீ. 57/4–இல் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் (ODR)	மாமல்லபுரம்	4.00
14	இராமநாத புரம்	சாயல்குடி – மூக்கையூர் சாலை கி.மீ. 5/6–இல் கழிமுகப்பகுதியில் பாலம் (ODR)	மூக்கை யூர்	5.50

(ஆ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் மூலம் செயலாக்கப்படும் பணிகள்:

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ. 53.40 கோடி மதிப்பில், 47.15 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்யவும், 6 உயர்மட்ட பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் வழங்கியது. இதற்கான திருத்திய நிர்வாக அனுமதி ரூ.73.79 கோடிக்கு அரசாணை பெறப்பட்டுள்ளது.

2009-2010 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 3 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	நாகப்பட்டினம்	சின்ன கோட்டயமேடு மற்றும் கோழையார் சாலை கி.மீ. 0/0 – 1/6 வரை மேம்பாடு செய்யும் பணி மற்றும் முடவனார் வடிகால் கால்வாய் (வலையகாரன் ஓடை) குறுக்கே கி.மீ. 0/6–இல் பாலம் (Pt.road)	சின்ன கோட்டய மேடு	2.70
2.	நாகப்பட்டினம்	வடக்குபொய்யூர் மற்றும் அக்கரைப்பேட்டை சாலையில் கி.மீ. 0/2–இல் கீச்சாங்குப்பம் கிராமம் வழியாக ஒரு பாலம் (ODR)	வடக்கு பொய்யூர்	2.15
3.	நாகப்பட்டினம்	வானவன் மகாதேவி சாலையில் அடப்பார் ஆற்றின் குறுக்கே கி. மீ. 81/0–இல் ஒரு பாலம் (Pt.union road)	நாலு வேதபதி	1.95

2009-2010 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.6.95 கோடி ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் 3 சாலைப் பணிகளுக்கு வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 3 பாலப் பணிகளில் நாகை மாவட்டம், திருமுல்லைவாசலில் ரூ.27.50 கோடி மதிப்பிலான பாலம் நடப்பாண்டில் துவங்கப்படும்.

[2010 மே 5

பின்வரும் 2 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	நாகப்பட்டினம்	பெருந்தோட்டம் மற்றும் நாயக்கர் குப்பம் சாலை கி.மீ 0/0 – 1/5 வரை மேம்பாடு செய்யும் பணி மற்றும் செல்வனார் ஆற்றின் குறுக்கே கி.மீ. 0/8 –இல் பாலம் மற்றும் உப்பனார் ஆற்றின் குறுக்கே கி.மீ 1/2–இல் பாலம் (Pt.union road)	பெருந் தோட்டம்	12.96
2.	நாகப்பட்டினம்	குமாரக்குடி மற்றும் வேப்பஞ்சேரி சாலை கி. மீ. 0/0 – 1/6 வரை மேம்பாடு செய்யும் பணி மற்றும் கி.மீ. 0/6 – இல் பாலம் ((Pt. road)	குமாரக்குடி	6.12

5.2.3 உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசரகால உதவித் திட்டம்:

சுனாமியால் சேதமடைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில், மணக்குடி கிராமங்களை இணைக்கும் பாலத்தை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ரூ.23.20 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டுவதற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்கான உத்தரவு வழங்கப்பட்டு 16-03-2010-இல் பணி துவங்கப்பட்டுள்ளது.

2010 மே 5]

5.3. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)

சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலை மற்றும் பாலக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மாநில அரசு நிதியின்மூலம், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் சாலைகள் மேம்படுத்துதல், பாலங்கள் கட்டுதல், சாலைகளில் தடுப்புகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை ரூ.825 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியது. இதில் மொத்தம் 473 கி.மீ. நீள சாலைப் பணிகள், 7 பாலப் பணிகள், 5 மேம்பாலங்கள், இரயில்வே கடவில் ஒரு சாலை மேம்பாலம், சுரங்கப்பாதைகள் சீரமைத்தல் மற்றும் சாலை மைய தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற பணிகள் உள்ளடங்கியதாகும்.

இவ்வலகின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டு வரை ரூ. 412 கோடி மதிப்பில் 385 கி.மீ. நீள சாலைப் பணிகளும், நடைபாதை, சுரங்கப்பாதை சீரமைத்தல் மற்றும் மத்திய தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள 88 கி.மீ. நீள சாலைப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

மேலும், பெருநகர அலகின்மூலம் நடைபெற்று வரும் பாலப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

ஆற்றுப் பாலங்கள்:—

1. திருவள்ளூர் மாவட்டத்தில் திருமழிசை சத்தியவேடு சாலையில் வெள்ளவேடு அருகில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் பாலம் அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணி மே 2010-இல் முடிவடையும்.

2. திருவள்ளூர் மாவட்டத்தில் பெரிய வடக்கத்திய சாலையில் கி.மீ 17/2-இல் செங்குன்றம் ஏரியின் அருகில் ரூ.4.96 கோடி மதிப்பீட்டில் பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி மே 2010-இல் முடிவடையும்.

3. சென்னை மாவட்டத்தில் அமைந்தகரையில் பழைய பாலத்தையொட்டி மூன்று வழித் தடத்தில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் புதிய பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஜூலை 2010-இல் முடிவடையும் .

4. திருவள்ளூர் மாவட்டம், சென்னை — நெற்குன்றம் பகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே பெரிய மேற்கத்திய சாலை கி.மீ. 11/2-ஐ முகப்பேறு பகுதியுடன் இணைக்கும் சாலையில் ரூ.16.04 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலத்திற்கான தாங்கு தூண்களுக்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. சென்னை அடையாறில் திரு.வி.க. பாலத்துக்கு இணையாக ரூ.13.08 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மூன்று வழித் தட பாலம் கட்டும் பணிக்கு 19-04-2010 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

6. திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் முகத்துவாரத்தின் மீது எண்ணூர் விரைவு சாலையையும், வடசென்னை அனல் மின் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய பாலம் கட்ட ரூ.20 கோடி மதிப்பில் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பாலம் அமையும் இடம் பக்கிங்காம் கால்வாய் பகுதி மற்றும் குசஸ்தலை ஆறும் இணையும் பகுதியாகும். இப்பகுதி இந்திய உள்நாட்டு நீர்வழிப் பாதையில் உள்ளது என அறிவிக்கை வெளியிடப்பட்டு விட்டதால் பாலத்திற்கான நேர்பாட்டில் மாற்றம் செய்யப்பட்டு பிப்ரவரி 2010-இல் இறுதி செய்யப்பட்டது. தற்போது இந்த உயர்மட்ட பாலப் பணிக்கு திருத்திய நேர்பாடு மற்றும் மதிப்பீடுகளுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நடப்பாண்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சாலை மேம்பாலங்கள்:—

1. இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாலப் பணிகளில், திட்ட அலகின்மூலம், ரூ.21.02 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், பல்லாவரம் — துரைப்பாக்கம் ஆரச்சாலை மற்றும் மறைமலையடிகள் இரும்புலியூர் சாலை சந்திப்பில் (பள்ளிக்கரணை) சாலை மேம்பாலப் பணி முடிக்கப்பட்டு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் 29-10-2009 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

2010 மே 5]

2. திருவள்ளூர் மாவட்டம், போரூரில் கோடம்பாக்கம் — திருப்பெரும்புதூர் சாலை, மவுண்ட் பூந்தமல்லி சாலை சந்திப்பில் ரூ.34.72 கோடி மதிப்பில் அமைய உள்ள சாலை மேம்பாலப் பணிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பூர்வாங்கப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

3. திருவள்ளூர் மாவட்டம், பெரிய வடக்கத்திய சாலையில் மாதவரம் நெடுஞ்சாலை சந்திப்பில் மூலக்கடை பகுதியில் ரூ.49.55 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணிக்கு 19-04-10 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

4. சென்னை மாவட்டம், அண்ணாநகர் 2-வது நிழற்சாலை மற்றும் திருமங்கலம் முகப்பேர் சாலை - உள்வட்ட சாலை சந்திப்பில் அமைய உள்ள சாலை மேம்பாலத்திற்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கைக்கு வழிகாட்டும் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன் உத்தேச மதிப்பீடு ரூ.46.46 கோடியாகும். இப்பாலம் அமையும் இடத்தில் சென்னை மெட்ரோ இரயில் பாதை நேர்பாடு அமைந்துள்ளதால் அந்நிறுவனத்தின் ஒப்புதல் பெற வேண்டி இருந்தது. அதன் ஒப்புகை 17-12-09-இல் பெறப்பட்ட பின், சாலை மேம்பாலத்தின் வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி நடப்பாண்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. சென்னை மாவட்டம், வடபழனியில், உள்வட்ட சாலை - என்.எஸ்.கே. சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்க ரூ.30 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்மேம்பாலம் சென்னை பெருநகர இரயில் திட்ட நேர்பாட்டில் வருவதால் அப்பணியை சென்னை பெருநகர இரயில் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரயில்வே கடவில் சாலை மேம்பாலம்

சென்னை மாவட்டத்தில் வியாசர்பாடி கீழ்ப்பாலத்திற்கு பதிலாக ரூ.80.68 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு தாங்கு தூண்களுக்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.4. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம்-III

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் சென்னையிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் ரூ.145 கோடி மதிப்பீட்டில் 36 கி.மீ. நீளமுள்ள 5 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பணிகளின் விவரம் பின் வருமாறு:

1 திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர்-காட்டூர்-திருப்பாலைவனம் சாலை கி.மீ. 0/0-17/4 வரை ரூ.49.73 கோடி மதிப்பில் இடைவழித் தடத்தில் இருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு இரு பிரிவுகளாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

2 சென்னை மாவட்டம், தரமணி இணைப்பு சாலை கி.மீ.0/0-3/650 வரை ரூ.38.94 கோடி மதிப்பில் இருவழித் தடத்தில் இருந்து ஆறுவழித் தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3 திருவள்ளூர் மாவட்டம், அரியலூர்-விளாங்காடுபாக்கம் சாலை கி.மீ. 0/0-6/4 வரை ரூ.15.10 கோடி மதிப்பில் ஒருவழித் தடத்தில் இருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் சாலைப் பணி முடிக்கப்படும்.

4 திருவள்ளூர் மாவட்டம், கோலடி சாலை கி.மீ. 0/0-7/0 வரை ரூ.33.48 கோடி மதிப்பில் ஒருவழித் தடத்தில் இருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சாலைப் பணி முடிக்கப்படும்.

5 திருவள்ளூர் மாவட்டம், மாதர்வேடு சாலை, கி.மீ.0/0-1/6 வரை ரூ.4.82 கோடி மதிப்பில் ஒருவழித் தடத்தில் இருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் சாலைப் பணி முடிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்ற பேரவை — TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

5.5. ஓரகடம் தொழிற்பூங்கா பகுதியில் சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பகுதியில் பெருகி வரும் தொழிற்சாலைகளுக்கு தேவையான சாலை மற்றும் பாலக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் இவ்வரசு, ரூ.300 கோடி மதிப்பில் ஓரகடம் தொழிற்பூங்கா சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கி தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

வ. எண்	சாலையின் பெயர்	நீளம் கி. மீ.
1.	மா.நெ. எண் – 57–இல் (சிங்கப்பெருமாள்கோயில் முதல் ஓரகடம் வரை) மையத்தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்	12.60 கி.மீ
2.	மா.நெ. எண் – 57–இல் (ஓரகடம் முதல் திருப்பெரும்புதூர் வரை) மையத்தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல் (போந்தூர் கிராமத்திற்கு 2.40 கி. மீ. நீள புறவழிச்சாலை அமைக்கும் பணி உட்பட)	12.00 கி.மீ
3.	மா.நெ. எண் – 48–இல் (வண்டலூர் முதல் ஓரகடம் வரை) மையதடுப்புடன் கூடிய நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்	16.60 கி.மீ
4.	மா.நெ. எண் – 48–இல் (ஓரகடம் முதல் வாலாசாபாத் வரை) மையதடுப்புடன் கூடிய நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்	16.80 கி.மீ
	மொத்தம்	58.00 கி.மீ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

இதில், 29 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 166 சிறு பாலப் பணிகளில் 113 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒரகடம் சாலை சந்திப்பில் ரூ.23 கோடி மதிப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளுக்காக 2009—2010 ஆம் ஆண்டில் நில எடுப்புச் செலவினம் உட்பட ரூ.145.38 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக, ஒரகடம் முதல் திருப்பெரும்புதூர் வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகளுக்கான நில எடுப்புப் பணிகள் முடிவுற்ற பின் நடப்பாண்டில் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

இத்திட்டப் பணிகளுக்காக நடப்பாண்டிற்கு ரூ. 165 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.6. நகரப் பகுதிகளுக்கு புறவழிச் சாலைகள் அமைத்தல்

நகரங்களில் வாகனப் போக்குவரத்து சீராக நடைபெறவும் மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் புறவழிச்சாலை / ஆரச்சாலை அமைக்கும் பணி அவசியமாகும். எனவே, இச்சாலைகளை அமைப்பதில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது. இப்பணிகள் இரண்டு கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றன. முதல் கட்டமாக நில எடுப்புப் பணிகளும், இரண்டாம் கட்டமாக சாலை அமைக்கும் பணிகளுமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் அறிவித்தவாறு திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு நகருக்கு ரூ.4.40 கோடி செலவில் 3 கி.மீ. நீள புறவழிச் சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

5.6.1. நடைபெற்று வரும் புறவழிச் சாலைப் பணிகள் :

2009-2010 ஆம் ஆண்டில், பின்வரும் 6 நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

- நாகப்பட்டினம் மாவட்டம், எட்டுக்குடி நகருக்கு ரூ.1.55 கோடி மதிப்பில் 1.60 கி.மீ. நீள புறவழிச் சாலை

2010 மே 5]

- காஞ்சிபுரம் நகருக்கு ரூ.34.18 கோடி மதிப்பில் 8.50 கி.மீ. நீள புறவழிச் சாலை
- திருச்சி மாவட்டம் துறையூர் நகருக்கு ரூ.9.45 கோடி மதிப்பில் 3.60 கி.மீ. நீள புறவழிச் சாலை
- சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி நகருக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் 2.60 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை
- திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகருக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் 2 கி.மீ. நீள புறவழிச் சாலை
- கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகருக்கு ரூ.6 கோடி மதிப்பில் 5 கி.மீ. நீள வட்டச் சாலை

5.6.2. ஈரோடு வட்டச் சாலை:

நாமக்கல் மாவட்டம் கொக்கராயன் பேட்டையிலிருந்து ஈரோடு மாவட்டம் திண்டல் வரை சுமார் 14.80 கி.மீ. நீளம் முதற்கட்டமாகவும், சத்தி சாலை முதல் திண்டல் வரை சுமார் 9 கி.மீ. நீளம் இரண்டாம் கட்டமாகவும் ஈரோடு வட்டச் சாலை அமைக்க அரசு கொள்கை அளவில் அனுமதித்து நில எடுப்பிற்காக ரூ.22 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வட்ட சாலையின் முதற்கட்டமாக, கொக்கராயன் பேட்டையிலிருந்து கரூர் சாலை சந்திப்பு வரை 2.20 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கவும், கொக்கராயன்பேட்டை - இலக்காபுரம் பரிசல் துறைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டவும், ரூ.14 கோடி மதிப்பில் பணி துவங்கப்பட்டுள்ளது.

ஈரோடு கரூர் சாலை சந்திப்பிலிருந்து காங்கேயம் சாலையை கடந்து ஈரோடு - பெருந்துறை சாலை திண்டல் வரை உள்ள பகுதிக்கு 12.60 கி.மீ. (கி.மீ. 2/2 - 14/8) நீள சாலை அமைக்கும் பணிக்கான நில எடுப்பு நடைபெற்று வருகின்றன.

5.6.3. நில எடுப்பு நடைபெறும் புறவழிச் சாலைப் பணிகள் :

புறவழிச் சாலைகளுக்காக பின்வரும் 6 நகரங்களில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(1) திருத்துறைப்பூண்டி

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகருக்கு வேளாங்கன்னி–திருத்துறைப்பூண்டி சாலை கி.மீ. 39/2–இல் பிரிந்து மயிலாடுதுறை–திருத்துறைப்பூண்டி சாலை கி.மீ. 66/6–இல் இணையும் வகையில் 3.00 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க நில எடுப்புப் பணிக்கு ரூ.21 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2 கிராமங்களில் 7.70 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில், தேசிய நெடுஞ்சாலை எண் 45 கி.மீ.264/10–இல் பிரிந்து ஆத்தூர்–பெரம்பலூர் சாலையை கி.மீ.49/6–இல் கடந்து துறையூர்–பெரம்பலூர் சாலை கி.மீ. 32/4–இல் இணையும் வகையில் பெரம்பலூர் நகருக்கு 9.00 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, நில எடுப்புப் பணிக்கு ரூ.5.36 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 4 கிராமங்களில் 56.19 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நில எடுப்பிற்கு சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(3) பட்டுக்கோட்டை

தஞ்சாவூர் மாவட்டத்தில், பட்டுக்கோட்டை–முத்துப்பேட்டை சாலை கி.மீ. 52/0–இல் பிரிந்து கும்பகோணம்–மயிலாடுதுறை–மதுக்கூர்–அதிராம்பட்டினம் சாலை கி.மீ. 41/4–இல் கடந்து தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை சாலையில் கி.மீ. 43/4–இல் இணையும்படி 7.40 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, நில எடுப்புப் பணிக்கு ரூ.2.78 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணி தொடர்பாக 10 கிராமங்களில் 20.01 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2010 மே 5]

(4) தஞ்சாவூர் இரண்டாம் கட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர் நகருக்கு தே.நெ. 67—இல் கி.மீ.89/6—இல் பிரிந்து பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் கி.மீ. 64/10—இல் இணையும் வகையில் 14.30 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, நில எடுப்புப் பணிக்கு ரூ.14.41 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 10 கிராமங்களில் 60.22 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(5) தாராபுரம்

திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம் நகருக்கு, 4.80 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, பழநி—தாராபுரம் (வழி அலங்கியம்) சாலையில் கி.மீ. 31/6—இல் பிரிந்து மெட்டூர்—பழக்கானூத்து—ஒட்டன்சத்திரம்—தாராபுரம்—திருப்பூர் சாலையில் கி.மீ. 72/4—இல் இணைந்து மீண்டும் இதே சாலையில் கி.மீ. 75/4—இல் பிரிந்து பொள்ளாச்சி—தாராபுரம் சாலையில் கி.மீ. 58/0—இல் முடிவடைகிறது. இதற்கான நில எடுப்புப் பணிக்கு ரூ.0.63 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

இப்பணி தொடர்பாக 4 கிராமங்களில் 9.85 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(6) இராசிபுரம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகருக்கு, மல்லியகரை — இராசிபுரம் சாலையில் கி.மீ. 36/8—இல் பிரிந்து அதே சாலையில் கி.மீ 50/2 வரை 13.68 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, நில எடுப்புப் பணிக்கு ரூ.4.18 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

10 கிராமங்களில் 39.04 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடன் நடப்பாண்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

5.7. நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் மூலமாக நபார்டு வங்கி கடனுதவியுடன் நபார்டு திட்டங்கள் எண் 29, 51, 85, 91, 103, 110, 121, 122 மற்றும் 125-இன் கீழ் ரூ.374 கோடி மதிப்பில் 175 பாலப் பணிகளும் 337 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

5.7.1. மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு:

இத்திட்டத்தின்கீழ் ரூ.7.99 கோடி செலவில் நிலுவையிலிருந்த கீழ்க்காணும் 3 பாலப் பணிகள், 2009-2010 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவள்ளூர்	நகரி – பள்ளிப்பட்டு சாலையிலிருந்து கேசவராஜ குப்பம் சாலை கி.மீ. 0/2–4 – இல் குசஸ்தலையார் ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	புன்னியம்	4.38
2.	திருவள்ளூர்	திரூர் செவ்வாய்பேட்டை – கீரனூர் சாலையில் கி.மீ. 0/2 – 4– இல் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	அரண் வாயல்	3.70
3.	விழுப்புரம்	மொடையூர் சாலையில் கி.மீ. 0/8–இல் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	மொடையூர்	1.96

2010 மே 5]

இது தவிர, நபார்டு திட்டம் 125-இன்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.113 கோடி மதிப்பில், 14 மாவட்டங்களில் 260 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் ரூ.42.14 கோடி செலவில் 18.70 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2009-2010 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. மீதமுள்ளப் பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்.

2009-2010 ஆம் ஆண்டில் இதற்கான செலவினம் ரூ. 50.13 கோடி ஆகும்.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.89.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.2. அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல்:

அரசு சாலைகளில் பாலங்கள் கட்டும் திட்டத்தின் (நபார்டு திட்டம் எண். 91) கீழ் நிலுவையிலிருந்த ரூ.74 கோடி மதிப்பிலான 48 பாலப் பணிகள் 2009-2010 ஆம் ஆண்டில், செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில், 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.33.28 கோடி செலவில், 21 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரிய பாலங்கள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தூத்துக்குடி	தூத்துக்குடி – திருச்செந்தூர் சாலையில் கி.மீ.5/2–இல் உப்பனாற்றின் குறுக்கே பாலம் (ODR)	வீரநாயக் கன்தட்டு	5.28
2.	விருதுநகர்	மா.நெ. எண் 42 (திருவில்லிபுத்தூர் – சிவகாசி–பார்த்திபனூர் சாலை) கி.மீ. 30/2–4 இல் காட்டாற்றின் குறுக்கே பாலம்	சேர்வைக் காரன்பட்டி	2.30

மீதமுள்ள 27 பாலப் பணிகளில் பின்வரும் 24 பணிகள் நடைபெற்று வருகின்றன:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தூத்துக்குடி	மா.நெ. எண் 40 (திருச்செந்தூர்–அம்பை–தென்காசி – செங்கோட்டை சாலை கி.மீ. 30/2–லிருந்து பிரியும்) ஸ்ரீவைகுண்டம் இரும்புப் பாலச் சாலை கி.மீ.0/2–இல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்	ஸ்ரீ வைகுண்டம்	17.16
2.	திருநெல்வேலி	சேரன்மாதேவி ஆற்றுச் சாலையில் கி.மீ. 3/0-3/4-இல் சேரன்மாதேவி ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	சேரன்மா தேவி	8.81
3.	திருநெல்வேலி	ராஜபாளையம்-சங்கரன் கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 65/6–இல் ஓடையின் குறுக்கே பாலம் (ODR)	அழகிய பாண்டியபுரம்	3.12

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
4.	ஈரோடு	இக்கரைதத்தப் பள்ளி– வெள்ளையம்பாளையம் சாலையில் கி.மீ. 2/8 மற்றும் முடுக்கன்துறை– எரங்காட்டூர் சாலையில் கி.மீ. 1/6–இல் இணைக்கும் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	பவானிசாகர்	4.28
5.	திருவள்ளூர்	மா.நெ. எண் 3 திருத்தணி – ரேனிகுண்டா சாலை) கி.மீ. 84/10–இல் நந்தியாற்றின் குறுக்கே பாலம்	திருத்தணி	3.03
6.	திருவள்ளூர்	மா.நெ. எண் 54 (சித்தூர் – திருத்தணி சாலை) கி.மீ. 42/4–இல் நந்தினியாற்றின் குறுக்கே பாலம்	கோரமங்கலம்	2.75
7.	திருச்சி	மா.நெ. எண் 30 (முசிறி – துறையூர் – ஆத்தூர் சாலை) கி.மீ.18/6–இல் அய்யாறு ஆற்றின் குறுக்கே பாலம்	கண்ணனூர்	2.73

[2010 மே 5

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
8.	திருவாரூர்	மா.நெ. எண் 63 (தஞ்சாவூர்– மன்னார்குடி– வேதாரண்யம்– கோடியக்கரை சாலை) கி.மீ.38/8–இல் கோரையாற்றின் குறுக்கே பாலம்	காசான்குளம்	2.59
9.	திருப்பூர்	மா.நெ. எண் 37 (மேட்டூர்– ஒட்டன்சத்திரம்– தாராபுரம்– ஈரோடு சாலை) கி.மீ. 128/4–இல் நொய்யலாற்றின் குறுக்கே பாலம்	பழையக் கோட்டை	2.58
10.	விழுப்புரம்	மா.நெ. எண் 6 (கள்ளக்குறிச்சி– திருவண்ணா மலை சாலை) கி.மீ. 1/6–இல் கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்	சாலை மாமண்டூர்	2.39
11.	விழுப்புரம்	மா.நெ. எண் 6 (கள்ளக்குறிச்சி– திருவண்ணா மலை சாலை) கி.மீ. 18/4–இல் மணிநதியின் குறுக்கே பாலம்)	சங்கராபுரம்	2.37

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
12.	விழுப்புரம்	மா.நெ. எண் 6 (கள்ளக்குறிச்சி– திருவண்ணாமலை சாலை) கி.மீ. 9/2–இல் முக்தாநதியின் குறுக்கே பாலம்	மூரார் பாளையம்	2.36
13.	விருதுநகர்	மா.நெ. எண் 41 (ராஜபாளையம் – சங்கரன்கோயில் – திருநெல்வேலி சாலை) கி.மீ. 8/4–இல் முடங்கியாற்றின் குறுக்கே பாலம்	ராஜபாளையம்	2.37
14.	வேலூர்	மா.நெ. எண் 58 (சதராஸ்– செங்கல்பட்டு– காஞ்சிபுரம்– அரக்கோணம் – திருத்தணி சாலை) கி.மீ. 88/10–இல் ஓடையின் குறுக்கே பாலம்	பெரப்பாக்கம்	0.76
15.	வேலூர்	மா.நெ. எண் 58 (சதராஸ்– செங்கல்பட்டு– காஞ்சிபுரம்– அரக்கோணம் – திருத்தணி சாலை) கி.மீ.89/6 –இல் ஓடையின் குறுக்கே பாலம்	பொய்முச்சி	0.71

[2010 மே 5

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
16.	திருவண்ணா மலை	திருவண்ணாமலை தானிபாடி சாலை கி.மீ. 26/8–இல் பாம்பாற்றின் குறுக்கே பாலம் (MDR)	மலமஞ்சனூர்	1.77
17.	சேலம்	மா.நெ. எண் 30 (முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலை) கி.மீ 86/6–இல் ஓடையின் குறுக்கே பாலம்	தாண்டவ ராயபுரம்	1.16
18.	சேலம்	மா.நெ. எண் 18 (சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலை) கி.மீ. 0/8–இல் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம்	அயோத்தியா பட்டணம்	0.60
19.	கிருஷ்ணகிரி	ஒசூர்–தளி சாலை கி.மீ 25/8– இல் தளி ஏரியின் உபரி நீர் வெளியேறும் வாய்க்காலின் குறுக்கே பாலம் (MDR)	தளி	1.57
20.	ஈரோடு	ஊஞ்சலூர் ரயில் நிலையம் முதல் ஈரோடு–காங்கேயம் சாலை கி.மீ. 0/4–இல் காளிங்கராயன் வாய்க்காலின் குறுக்கே பாலம் (ODR)	ஊஞ்சலூர் ரயில் நிலையம்	0.31

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
21.	ஈரோடு	சென்னிமலை–அரச்சலூர்–கொடுமுடி சாலை கி.மீ. 11/8–இல் கீழ்பவானி பாசன வாய்க்காலின் குறுக்கே பாலம் (MDR)	அரச்சலூர்	0.68
22.	கரூர்	மா.நெ. எண் 71 (முசிறி–குளித்தலை முதல் புதுக்கோட்டை – ஆலங்குடி–பேராவூரணி–சேதுபவாசத்திரம் சாலை) கி.மீ. 6/10 (ii)–இல் புதிய கட்டளை மேட்டு வாய்க்காலின் குறுக்கே பாலம்	குளித்தலை	0.30
23.	புதுக்கோட்டை	கருப்பட்டிபட்டி – மீனம்பட்டி சாலையில் கி.மீ. 3/2–இல் பிரிந்து துவார் சாலையில் கி.மீ. 1/6–இல் அக்னி ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	துவார்	1.46
24.	நாகப்பட்டினம்	மா.நெ. எண் 67 (நாகூர்–நன்னிலம் –நாச்சியார் கோவில் சாலை) கி.மீ. 3/8–இல் பிராவிடன் ஆற்றின் குறுக்கே பாலம்	பனங்குடி	1.00

[2010 மே 5

எஞ்சியுள்ள கீழ்க்கண்ட மூன்று பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	காஞ்சிபுரம்	மா.நெ. எண் 58 (சதுரங்கப்பட்டிணம்– செங்கல்பட்டு– காஞ்சிபுரம்– அரக்கோணம் – திருத்தணி சாலை) கி.மீ. 0/8 இல் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே பாலம்	சதுரங்கப் பட்டிணம்	4.95
2.	கரூர்	மா.நெ. எண் 71 (முசிறி– குளித்தலை முதல் புதுக்கோட்டை – ஆலங்குடி– பேராவூரனி– சேதுபவாசத்திரம் சாலை) கி.மீ. 6/10(i) – இல் கட்டளை மேட்டு வாய்க்காலின் குறுக்கே பாலம்	குளித்தலை	0.49
3.	நீலகிரி	தலைக்குந்தா– கல்லட்டி – தெப்பக்காடு சாலையில் கி.மீ. 29/2 இல் மாயாறு ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	தெப்பக்காடு	1.47

நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 27.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

மேலும், 2009-2010 ஆம் ஆண்டில், மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் நபார்டு திட்டம் 121 மற்றும் 122-இன் கீழ் ரூ.129 கோடி மதிப்பில் 90 பாலங்கள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.46.95 கோடி செலவில், 65 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 25 பாலப் பணிகளில் பின்வரும் 21 பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தூத்துக்குடி	மா.நெ. எண் 44 (பருவக்குடி— கோவில்பட்டி— வேம்பார் சாலை) கி.மீ. 73/4—6—இல் வைப்பாற்றில் பாலம்.	விளாத்தி குளம்	13.65
2.	திண்டுக்கல்	வத்தலகுண்டு— உசிலம்பட்டி சாலையில் கி.மீ. 8/6—இல் வைகையாற்றின் குறுக்கே பாலம் (MDR)	கன்னாப் பட்டி	5.51
3.	அரியலூர்	அரியலூர் — சம்பராயபுரம் சாலையில் கி.மீ. 8/8—10—இல் மருதையாற்றின் குறுக்கே பாலம் (ODR)	பள்ளக் கிருஷ்ணா புரம்	5.37
4.	ஈரோடு	வைரமங்கலம் — தளவாய்ப்பேட்டை சாலை கி.மீ. 0/10—இல் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் (Pt.Union road)	வைரமங் கலம்	5.34

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
5.	பெரம்பலூர்	ரஞ்சன்குடி – வி.களத்தூர் – கை.களத்தூர் சாலையில் கி.மீ. 8/10 – 9/2–இல் கல்லாற்றின் குறுக்கே பாலம் (ODR)	வி.களத் தூர்	4.13
6.	திருப்பூர்	மா.நெ. எண் 21 (பொள்ளாச்சி–தாராபுரம்–கரூர் சாலை) கி.மீ. 63/10–இல் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே பாலம்	கரையூர்	2.95
7.	கிருஷ்ணகிரி	சூளகிரி–இராயக்கோட்டை சாலையில் கி.மீ.10/2–இல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம்.(ODR)	இராயக் கோட்டை	2.89
8.	திருச்சி	தொட்டியம் – காட்டுப்புத்தூர் சாலையில் கி.மீ.11/8–இல் கரைபொட்டனாறு குறுக்கே பாலம் (MDR)	ஆனைக் கல்பட்டி	2.76
9.	விழுப்புரம்	சேஷகனூர் – ஆண்டிபாளையம் சாலையில் கி.மீ. 2/2–இல் பம்பை நதியின் குறுக்கே பாலம்(ODR)	சேஷகனூர்	2.70
10.	விருதுநகர்	அம்மத்தூர்–லட்சுமிபுரம் சாலையில் கி.மீ 9/2–இல் அர்ஜீனா ஆற்றின் குறுக்கே பாலம் மற்றும் கி.மீ 4/0–9/2 சாலையை மேம்பாடு செய்தல் (ODR)	அம்மத்தூர்	2.47
11.	திருநெல்வேலி	வடக்கு செழியநல்லூர்–தெற்கு செழியநல்லூர் சாலையில் கி.மீ 1/4–இல் சிற்றாற்றின் குறுக்கே பாலம் (Pt.Union road)	வடக்கு செழிய நல்லூர்	2.44

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
12.	திருச்சி	முசிறி—புலிவலம் சாலையில் கி.மீ 8/10—இல் அய்யாறு ஆற்றின் குறுக்கே பாலம் (MDR)	வேலக்கா நத்தம்	2.44
13.	திருப்பூர்	மா.நெ. எண் 81 (கோபி—ஊத்துக்குளி—காங்கேயம் சாலை) கி.மீ. 40/2—40/4—இல் நொய்யலாற்றின் குறுக்கே பாலம்	ஊத்துக்குளி இரயில் நிலையம்	2.17
14.	கரூர்	அரவக்குறிச்சி — புங்கம்பாடி சாலையில் கி.மீ. 0/2—இல் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	அரவக் குறிச்சி	2.10
15.	கடலூர்	பேர்பெரியாங்குப்பம் — சேந்தநாடு சாலை வழியாக காடாம் புலியூர் — உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ.13/2—இல் விருூர் ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	விருூர்	1.58
16.	விழுப்புரம்	சின்னசேலம்—கூகையூர்—பெத்தசமுத்திரம் சாலையில் கி.மீ.3/4—இல் ஓடையின் குறுக்கே பாலம் (ODR)	பெத்த சமுத்திரம்	0.54
17.	புதுக் கோட்டை	மா.நெ. எண் 99 (திருக்காட்டுப்பள்ளி—செங்கிப்பட்டி—பட்டுக்கோட்டை சாலை) கி.மீ 44/2—4—இல் தலைவாரி ஓடையின் குறுக்கே பாலம்	வேப்பம் பட்டி	1.67

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
18.	புதுக் கோட்டை	மாத்தங்காள்–நடுப்பட்டி சாலையில் கி.மீ.4/8–இல் காட்டாற்றின் குறுக்கே பாலம் (ODR)	நம்பூரன் பட்டி	1.75
19.	திண்டுக்கல்	கோஷன் – கிளாவரை சாலையில் கி.மீ.8/2–4 இல் காட்டாற்றின் குறுக்கே பாலம் (ODR)	கிளாவரை	1.16
20.	விருதுநகர்	கல்லுப்பட்டி சாலையிலிருந்து மேலமடை–பழவநத்தம் சாலையில் கி.மீ 2/2–இல் ஓடையின் குறுக்கே பாலம் (ODR)	கல்லுப்பட்டி	0.96
21.	விருதுநகர்	மத்தியசேனை–வேலூர் சாலையில் கி.மீ 0/6–இல் ஓடையின் குறுக்கே பாலம் (ODR)	மத்திய சேனை	0.41

எஞ்சியுள்ள கீழ்க்கண்ட நான்கு பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவண்ணா மலை	காழியூர் – அத்தி சாலையில் கி.மீ. 2/8– இல் செய்யாற்றின் குறுக்கே பாலம் (ODR)	காழியூர்	13.24

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
2.	திருவண்ணா மலை	கண்ணமங்கலம் – ஆரணி சாலையிலிருந்து குன்னத்தூர் வழியாக ஆரணி – படவேடு சாலையில் கி.மீ. 2/8–10–இல் கமண்டல நாகநதியின் குறுக்கே பாலம் (ODR)	குன்னத்தூர்	7.30
3.	திருவண்ணா மலை	திருவண்ணாமலை – தானிப்பாடி சாலையில் கி.மீ. 22/8–இல் தென்பெண்ணையாற் றின் குறுக்கே பாலம் (MDR)	கொள மஞ்சூர்	6.65
4.	திருவண்ணா மலை	அத்திமலைப்பட்டு சாலையில் கி.மீ.1/4–இல் கமண்டல நாகநதியின் குறுக்கே பாலம் (ODR)	அத்திமலைப் பட்டு	6.21

5.7.3 கிராமச் சாலைகள் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டம் 103 மற்றும் 110-இல் நிலுவையிலிருந்த ரூ.33 கோடி மதிப்பிலான 53 கி.மீ நீள சாலைப் பணிகளும் 19 பாலப் பணிகளும் 2009-2010 ஆம் ஆண்டில் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில்

[2010 மே 5

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.15.31 கோடி செலவில் 13 பாலப் பணிகளும், அனைத்து சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 57 கிராமங்கள் தார்ச் சாலை இணைப்பு வசதி பெற்றுள்ளன.

இவற்றில் முடிக்கப்பட்ட பாலங்கள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவாரூர்	தில்லைவிளாகம் – தெற்குகாடு – மேல தொண்டிய காடு சாலை கி.மீ.1/8–இல் பழைய கிளை தாங்கியார் கி.மீ 3/8–இல், புதிய கிளைதாங்கியார் மற்றும் கி.மீ.3/10–இல் மரைக்காங் கோரையாற்றின் குறுக்கே பாலம்	தில்லை விளாகம் – தெற்குகாடு	2.41
2.	திருநெல்வேலி	பிரம்மதேசம் – அடைச்சாணி சாலையில் கி.மீ.0/2–இல் கடனாநதியின் குறுக்கே பாலம்	பிரம்மதேசம்	2.29
3.	திருப்பூர்	அமராவதி ஆற்றின் குறுக்கே எடைக்காடு தீவை இணைக்கும் பாலம்	எடைக்காடு	2.02

மீதமுள்ள பின்வரும் 6 பாலப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவாரூர்	ஓடாச்சேரி – தென்ஓடாச்சேரி சாலை கி.மீ.0/10–இல் வெட்டாற்றின் குறுக்கே பாலம்	ஓடாச்சேரி	5.34
2.	காஞ்சிபுரம்	தரைப்பாக்கம்–அனகாபுத்தூர் சாலையில் அடையார் ஆற்றின் குறுக்கே பாலம்	தரைப் பாக்கம்	4.70
3.	திருச்சி	நெய்வேலி – வீரமலிபட்டி சாலை கி.மீ.2/0–இல் அய்யாறு ஆற்றின் குறுக்கே பாலம்	நெய்வேலி	3.31
4.	திருச்சி	குணசீலம் – கல்லூர் சாலை கி.மீ.0/8–இல் அய்யாறு ஆற்றின் குறுக்கே பாலம்	கல்லூர்	2.75
5.	திருப்பூர்	ஆத்துக்கால் புதூர் நல்ல குமார கவுண்டன்புதூர் இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்	குளத்துப் பாளையம்	1.29
6.	கன்னியாகுமரி	மருந்துக்கோட்டை ஜங்சன் முதல் சரல் விளை சாலை தாந்தவிளை சாலையில் கி.மீ. 0/2–இல் வள்ளியாற்றின் குறுக்கே பாலம்	தாந்த விளை	0.64

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.16.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தார்ச் சாலை வசதி செய்தல்:

ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்தின் கீழ் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக ஆதி திராவிடர்கள் உள்ள குடியிருப்புகளுக்கான இணைப்புச் சாலைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் திட்டம் 103 மற்றும் 110-இல் நிலுவையிலிருந்த ரூ.3.09 கோடி மதிப்புள்ள 5 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 6 பாலப் பணிகளும் 2009-2010 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் 19 கிராமங்கள் தார்ச் சாலை இணைப்பு வசதி பெற்றுள்ளன. இத்துடன் இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

5.7.5. பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு இணையாக தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன. திட்டம் 110-இன்கீழ் நிலுவையிலிருந்த ரூ.15 கோடி மதிப்பிலான 19 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 9 பாலப் பணிகளும் 2009-2010 ஆம் ஆண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.9.61 கோடி செலவில் அனைத்து சாலைப் பணிகளும் 8 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டன. மீதமுள்ள கீழ்க்காணும் ஒரு பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணியும் நடப்பாண்டில் முடிவுறும்.

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	விழுப்புரம்	கொங்கராயனூரிலிருந்து – பையூர் வழியாக டி. எடையார் செல்லும் சாலையில் கி.மீ. 3/6–9–இல் கோரையாற்றின் குறுக்கே பாலம்	பையூர்	9.83

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.5.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.6. நபார்டு வங்கி நிதியுதவியுடன் காவிரி டெல்டா பகுதிகளில் பாலங்கள்

இத்திட்டத்தின்கீழ் காவிரி டெல்டா பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் 2008 ஆம் ஆண்டு வரை ரூ. 204.73 கோடி மதிப்பில் 4 பெரிய பாலங்கள் உள்ளிட்ட 59 ஆற்றுப் பாலங்கள் மற்றும் 417 கி.மீ. நீளமுள்ள கரும்புச் சாலைகளை மேம்பாடு செய்ய அரசு ஒப்புதல் அளித்தது. இதுவரை, ரூ.71.15 கோடி செலவில் 47 ஆற்றுப் பாலங்கள் மற்றும் 412 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. நீக்கப்பட்ட மூன்று பாலப் பணி மற்றும் 5 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணி தவிர, எஞ்சியுள்ள பாலப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

நடப்பாண்டில் முடியக்கூடிய பாலப் பணிகள்

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தஞ்சாவூர்	சாலியமங்கலம் – பாபநாசம் சாலை கி.மீ. 10/4–இல் வெட்டாற்றின் குறுக்கே பாலம் (MDR)	திருக் கருக் காவூர்	2.95

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
2.	திருவாரூர்	கும்பகோணம் – குடவாசல் – கொரடாச்சேரி மாவூர் சாலை கி.மீ. 29/4–இல் வெட்டாற்றின் குறுக்கே பாலம் (MDR)	கொரடாச் சேரி	3.08
3.	திருவாரூர்	மன்னார்குடி – திருவாரூர் சாலை கி.மீ. 9/2–இல் கோரை ஆற்றின் குறுக்கே பாலம் (MDR)	கோரை யாறு	1.85
4.	திருவாரூர்	திட்டை – தாராசுரம் சாலை கி.மீ. 24/4–இல் கள்ளான் ஆற்றின் குறுக்கே பாலம் (MDR)	ஆவூர்	1.61
5.	திருவாரூர்	மன்னார்குடி– திருவாரூர் சாலை கி.மீ. 14/8–இல் வெள்ளையாற்றின் குறுக்கே பாலம் (MDR)	வேளுக்குடி	1.50

வரும் நிதியாண்டில் முடிக்கப்படவுள்ள நான்கு பெரிய பாலப் பணிகள்:

1. *காவிரி ஆற்றின் குறுக்கே, கரூர் மாவட்டத்தில் வாங்கலையும், நாமக்கல் மாவட்டத்தில் மோகனூரையும் இணைக்கும் உயர்மட்ட பாலப் பணி ரூ.36.30 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.*

2. *கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, தஞ்சாவூர் மாவட்டத்தில் நீலத்தநல்லூரையும், அரியலூர் மாவட்டத்தில் மதனத்தூரையும் இணைக்கும் உயர்மட்ட பாலப் பணி ரூ.36.50 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.*

2010 மே 5]

3. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மாவட்டத்தில் முட்டத்தையும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மணல் மேட்டையும் இணைக்கும் உயர்மட்ட பாலப் பணி ரூ.48.85 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

4. வைகை ஆற்றின் குறுக்கே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி மற்றும் எமனேஸ்வரத்தையும் இணைக்கும் உயர்மட்ட பாலப் பணி ரூ.11.65 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.13.52 கோடி இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 60.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.8. சென்னை உள்வட்டச் சாலை:

இராஜிவ்காந்தி சாலை (கி.மீ. 3/0) முதல் வேளச்சேரி பேருந்து நிலையம் வரை 3.6 கி.மீ. நீள தரமணி இணைப்புச் சாலை ஆறுவழித் தடச் சாலையாக உலக வங்கி நிதியுதவியோடு மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. வேளச்சேரி இரயில் நிலையம் (MRTS) முதல் பரங்கிமலை இராணுவ முகாம் வரை 5 கி.மீ. நீள சாலைப் பணியும் மற்றும் ஆதம்பாக்கம் ஏரியை கடக்க 350 மீ. நீளமுள்ள பாலப் பணியும் ரூ. 67.91 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.9.71 கோடி இத்திட்டத்திற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.18.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.9. மதுரை ஆரச் சாலைகள்:

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை ஆரச் சாலைகளுக்கு இரண்டாம் கட்டமாக, ரூ.70.60 கோடி மதிப்பில் 123.20 கி.மீ. நீளமுள்ள 14 சாலைப் பணிகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.*6.95* கோடி இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

5.10. இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் (Railway Works Programme):

அரசு சாலைகளில் இரயில்வே கடவுகளில் *181* மேம்பாலங்களும் *58* கீழ்ப்பாலங்களும் உள்ளன. இரயில்வே துறையும், நெடுஞ்சாலைத் துறையும் இணைந்து இப்பாலங்களைப் பராமரித்து வருகின்றன.

அரசு சாலைகளில், இருப்புப்பாதை குறுக்கிடும் பகுதியில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்திற்கும் மேல் இரயில் வாகன அலகுகள் (Train Vehicle Unit) இருக்கும் இருப்புப்பாதை கடவிற்குப் பதிலாக சாலை மேம்பாலம்/கீழ்ப்பாலம் கட்டும் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இரயில்வே பணி திட்டத்தின்கீழ் இப்பணிக்கு அணுகு சாலைகள் மற்றும் பயன்பாட்டு சாலைகள் உள்பட மேம்பாலம்/கீழ்ப்பாலம் கட்டுவதற்கு ஆகும் செலவை மாநில அரசும், இரயில்வே அமைச்சகமும் சரிசமமாக ஏற்றுக்கொள்கின்றன.

2001 ஆம் ஆண்டு முதல் *2006* ஆம் ஆண்டு வரை உள்ள 5 ஆண்டுகளில், *7* இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.*168.35* கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. *2006* ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை *104* இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் ரூ. *2246.50* கோடி மதிப்பில் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. விவரம் பின்வருமாறு:

ஆண்டு	பாலங்கள்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
2001-2002	—	—
2002-2003	—	—
2003-2004	*2*	*20.92*
2004-2005	*1*	*38.50*
2005-2006	*4*	*108.93*
2006-2007	*25*	*409.65*

2010 மே 5]

2007-2008	*42*	*876.70*
2008-2009	*23*	*560.94*
2009-2010	*3*	*200.68*
2010-2011	*11*	*198.53*
மொத்தம்	*111*	*2414.85*

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை ரூ.119.80 கோடி மதிப்பில் 9 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பால/கீழ்ப்பாலப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.271 கோடி செலவில் கீழ்கண்ட 22 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பால/கீழ்ப்பாலப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

2006–2010–இல் முடிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள் விவரம்:

வ. எண்	மாவட்டம்	இரயில்வே கடவு எண் / பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	வேலூர்	90 / திருப்பத்தூர்	6.50
2.	தூத்துக்குடி	437 / கோவில்பட்டி	7.00
3.	திருச்சி	85 / பாலக்கரை, திருச்சி	11.00
4.	கரூர்	37 / வெங்கமேடு, கரூர்	12.50
5.	சேலம்	9 / ஓமலூர், சேலம்	10.00
6.	கோயம்புத்தூர்	145 / ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்	16.50
7.	மதுரை	360 / கூடல் நகர், மதுரை	9.50
8.	கோயம்புத்தூர்	20 / வாலாங்குளம், கோயம்புத்தூர்	16.00
9.	தருமபுரி	100 / மொரப்பூர் / தர்மபுரி	9.50
10.	திருப்பூர்	128 / ஊத்துக்குளி, திருப்பூர்	8.55

வ. எண்	மாவட்டம்	இரயில்வே கடவு எண் / பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
11.	திருப்பூர்	129 /திம்மநாயக்கன் பாளையம்	7.26
12.	திருவள்ளூர்	10 / கத்திவாக்கம்	23.00
13.	மதுரை	எல்லீஸ் நகர்	22.00
14.	வேலூர்	64 / குடியாத்தம்	9.10
15.	சேலம்	114 / சிவதாபுரம்	5.20
16.	சேலம்	116 / மகுடன்சாவடி	8.75
17.	வேலூர்	33 / அரக்கோணம்	13.37
18.	காஞ்சிபுரம்	13 / மடுவங்கரை, கிண்டி	21.65
19.	கடலூர்	202 / சிதம்பரம்	16.97
20.	வேலூர்	91 / திருப்பத்தூர் – மூலக்காரன்பட்டி	9.00
21.	தூத்துக்குடி	485 / மீளவிட்டான்	11.65
22.	காஞ்சிபுரம்	19 / மீனம்பாக்கம்	16.00
		மொத்தம்	271.00

30 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. 4 பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு பரிசிலனையில் உள்ளது. மீதமுள்ள பணிகளில், 6 பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படும் தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில் அமைவதால், இப்பணிகளை துவங்குவதற்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு பணி சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது.

எஞ்சியுள்ள பணிகள், இரயில்வே துறையி ன் பொது நேர்பாடு வரைபட ஒப்புதல், வடிவமைப்பு தயாரித்தல் மற்றும் நில எடுப்பு போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.191.70 கோடி இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.649.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2010 மே 5]

5.11. ஹட்கோ நிதியுதவியுடன் பாலங்கள் கட்டும் திட்டம்:

ஹட்கோ நிதியுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பில் 61 பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2004-2005 ஆம் ஆண்டு வரை ஹட்கோ நிதியின் கீழும் அதன் பின்னர் அரசு நிதியிலும் செயலாக்கப்பட்டு வருகிறது. இவற்றில் ரூ.47.84 கோடி செலவில் 54 பாலப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட 2 பாலப் பணிகள் நீங்கலாக, கீழ்க்கண்ட 5 பாலப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

வ. எண்	மாவட்டம்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	தஞ்சாவூர்	மனத்திடல்– வளப்பக்குடி சாலையில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே பாலம் (கிராமச்சாலை)	மனத்திடல் வளப்பக்குடி	4.41
2.	திருவாரூர்	மா.நெ. எண் 23 (மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி சாலை) கி.மீ. 20/6–இல் அரசலாற்றின் குறுக்கே பாலம்	பூந்தோட்டம்	4.30
3.	திருவாரூர்	மா.நெ. எண் 23 (மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி சாலை) கி.மீ.26/10–ல் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம்	சன்னாசி நல்லூர்	2.33
4.	நாகை	மா.நெ. எண் 67 (நாகூர் – நன்னிலம் – நாச்சியார் கோவில் சாலை) கி.மீ. 12/10–இல் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம்	திருமருகல்	2.16
5.	நாகை	குத்தாலம்–கோமல் சாலை கி.மீ. 6/4–இல் வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம் (ODR)	கோமல்	1.07

2009-2010 ஆம் ஆண்டு ரூ.8.58 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் மேம்பாலம் கட்டுதல்:

திருநெல்வேலி புறவழிச் சாலையில் சட்டப் பேரவை முன்னாள் தலைவர் செல்லபாண்டியன் அவர்களின் திருவுருவச் சிலை அருகில் ரூ.16.40 கோடி செலவில் மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கு 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.10.77 கோடி செலவிடப்பட்டது. இப்பணி ஜூலை 2010-ல் முடிவடையும்.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.12. திருப்பூர் நகரச் சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாடு:

திருப்பூர் நகரில் பெருகி வரும் போக்குவரத்தின் காரணமாக ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கு திருப்பூர் சுற்றுச் சாலை, நகரத்தை இணைக்கும் ஆரச் சாலைகள் மற்றும் பாலப் பணிகளுக்காக அரசு ரூ.70 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. இதில் 99 கி.மீ. நீள சாலைப் பணி, 2 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலம், 9 ஆற்றுப் பாலப் பணிகள் அடங்கும்.

இவற்றுள் சாலைப் பணிகள் முழுவதுமாக முடிவடைந்துள்ளன.

9 பாலப் பணிகளில், ரூ.6.70 கோடி மதிப்பில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

வ. எண்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
1.	மா.நெ. எண் 19 (அவினாசி – திருப்பூர் – பல்லடம் சாலை) கி.மீ. 4/8–இல் நல்லாற்றின் குறுக்கே பாலம்	திருமுருகன் பூண்டி	1.90
2.	மா.நெ. எண் 19 (திருப்பூர் – பல்லடம் சாலை) கி.மீ. 19/4–இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்	சின்னக் கரை	1.30

வ. எண்	பணியின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
3.	திருப்பூர் – குன்னத்தூர் சாலை கி.மீ. 4/6--ல் நல்லாற்றின் குறுக்கே அமைந்துள்ள உயர்மட்டப் பாலத்தை அகலப்படுத்துதல் (MDR)	பிச்சம்பாளையம்	1.20
4.	திருப்பூர் – விஜயமங்கலம் சாலை கி.மீ. 1/8--இல் நல்லாற்றின் குறுக்கே பாலம் (ODR)	கூலிப்பாளையம்	2.00
5.	மா.நெ. எண் 19 (திருப்பூர் – பல்லடம் சாலை) கி.மீ. 8/4, 15/8, 18/2, 17/4, 21/6--இல் சிறு பாலங்களை அகலப்படுத்துதல்	திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள்	0.30

மா.நெ. எண் 19 (அவினாசி - திருப்பூர் - பல்லடம் சாலை) கி.மீ. 4/8 மற்றும் 19/4-இல் உள்ள பாலங்களை 21-10-2009 அன்று மாண்புமிகு துணை முதல்வர் தலைமையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மீதமுள்ள கீழ்க்காணும் 4 பாலப் பணிகள் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும்.

வ. எண்	பணிகளின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய். கோடியில்)
1.	சிக்கன்ன கல்லூரி அருகில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் (ODR)	அணைப்பாளையம்	2.50

வ. எண்	பணிகளின் பெயர்	பாலத்தின் அமைவிடம்	மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
2.	நல்லூர் – காசிபாளையம் – விஜயமங்கலம் சாலை கி.மீ. 2/4–ல் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் (ODR)	காசிபாளையம்	2.50
3.	மா.நெ. எண் 19 (அவினாசி – திருப்பூர் – பல்லடம் சாலை) கி.மீ. 12/10–இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம்	வளர்மதி	1.80
4.	திருப்பூர் – குன்னத்தூர் சாலை கி.மீ.11/2–இல் நல்லாற்றின் குறுக்கே உள்ள உயர்மட்டப் பாலம் மற்றும் 1/8, 4/2–இல் அமைந்துள்ள சிறு பாலங்களை அகலப்படுத்துதல் (MDR)	பெருமாநல்லூர்	0.80

இரண்டு இரயில்வே கடவு சாலை மேம்பாலங்களைப் பொறுத்தவரை கூலிப்பாளையத்தில் அமையவிருக்கும் மேம்பாலம், இரயில்வே பணி திட்டத்தின்கீழ் (Railway Works Programme) எடுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. சிக்கன்ன கல்லூரி அருகில் அமையவிருக்கும் மேம்பாலம் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5.13. கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்:

கரும்பு ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வையைப் (Cess Fund) பயன்படுத்தி கரும்பு விளையும் பகுதிகளிலிருந்து ஆலைகளுக்கு கரும்பு கொண்டு வருவதற்கு சாலைகள் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2010 மே 5]

இத்திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.25.61 கோடி மதிப்பிலான 90 கி.மீ. நீளமுள்ள 50 சாலைப் பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.4.93 கோடி இத்திட்டப் பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.12.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.15 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,873 கி.மீ. இதில் 1,613 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளுக்கு, மைய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 3260 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 97 பெரிய பாலங்களும் 400 சிறிய பாலங்களும், 45 இரயில்வே மேம்பாலங்களும் 20 மேம்பாலங்களும், 12 நடைபாதை சுரங்கப் பாதைகளும், 7 வாகனங்களுக்கான சுரங்கப் பாதைகளும் உள்ளன.

5.16. தமிழக அரசுமூலம் செயல்படுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்:

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.622 கோடி செலவில் 2,169 கி.மீ. நீளச் சாலைகள் மைய அரசின் நிதியின்மூலம் மேம்பாடு செய்யப்பட்டு 46 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்ற 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மைய அரசின் நிதியின் மூலம் ரூ.613 கோடி செலவில் 1,307 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு 22 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

[2010 மே 5

வருடாந்திர திட்டப் பணிகள் (Annual Plan)

மாநில அரசின் பராமரிப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாட்டிற்கு (1613 கி.மீ.) வருடாந்திர திட்டப் பணிகளின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.227 கோடி மதிப்பில் 31 எண்ணிக்கையிலான பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் ரூ.218 கோடி மதிப்பிலான 29 சாலைப் பணிகள் மற்றும் ரூ.9 கோடி மதிப்பிலான 4 சிறிய பாலங்கள் அடங்கிய 2 பாலப் பணிகள் உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ரூ.152 கோடி மதிப்பில், 225 கி.மீ. நீள சாலைப் பணிகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் கோட்டக்கரை ஆற்றின் குறுக்கே தே.நெ. எண் 210-ல் (திருச்சி - காரைக்குடி - இராமநாதபுரம் சாலை) சனவெளி கிராமத்தில் ரூ.12.80 கோடி மதிப்பில் ஒரு பெரிய பாலப் பணி முடிக்கப்பட்டு 3-10-2009 அன்று, மைய அரசின் மாண்புமிகு உள் துறை அமைச்சர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மேலும், தே.நெ. 208-ல் (செங்கோட்டை - தென்காசி - திருமங்கலம் சாலை) ரூ.4.20 கோடி செலவில் திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டளைக் குடியிருப்பு, இடைக்கல், புளியங்குடி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் 5 சிறு பாலப் பணிகளும், விருதுநகர் மாவட்டத்தில் சேத்தூர், இராஜபாளையம் ஆகிய இடங்களில் 5 சிறு பாலப் பணிகளும், தே.நெ.எண் 209-ல் (திண்டுக்கல் - கோவை சாலை) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கணபதியில் 1 சிறு பாலப் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.169 கோடி இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது.

ரூ.276 கோடி மதிப்பில் எஞ்சியுள்ள 330 கி.மீ. நீளமுள்ள 69 சாலைப் பணிகளும், ரூ.14 கோடி மதிப்பில் 9 சிறிய பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்.

பராமரிப்புப் பணிகள்

2009-2010ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை பராமரிப்புப் பணிகளுக்கு மைய அரசு ரூ.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இந்நிதியைப் முழுமையாகப் பயன்படுத்தி 59 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2010 மே 5]

5.17 தேசிய நெடுஞ்சாலை அலகினால் செயல்படுத்தப்படும் பிற திட்டங்கள்

5.17.1 புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் (Revamped Central Road Fund Scheme):

மைய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்புத் தீர்வை விதிப்பதன்மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு 2000 ஆம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2005 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை ரூ.594 கோடி மதிப்பிலான 1235 கி.மீ. நீள சாலைப் பணிகளுக்கும், 31 பாலப் பணிகளுக்கும் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மார்ச் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.381 கோடி செலவில், 726 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 13 பாலப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ரூ.204 கோடி மதிப்பில் மீதமுள்ள 480 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 18 பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பாண்டில் செய்து முடிக்கப்படும்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் 2009-2010-ம் ஆண்டில் ரூ.147 கோடி மதிப்பிலான 196 கி.மீ நீள சாலைப் பணிகளுக்கு மைய அரசு 31-03-2010-ல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.17.2 பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் (Economic Importance & Interstate Connectivity Scheme):

(அ) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் (Economic Importance Scheme): (50% மைய அரசு நிதி மற்றும் 50% மாநில அரசு நிதி)

2009-2010ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.9.53 கோடி மதிப்பில், 24.80 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுத்துக்

கொள்ளப்பட்டு, இவற்றில் 8.80 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்.

மேலும், இத்திட்டத்தின்கீழ் புதிய பணியாக சேலம்— கொச்சின் தேசிய நெடுஞ்சாலையில் (தே.நெ.47) பெருமாநல்லூரில் தொடங்கி நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர் சாலையில் (தே.நெ.67) அவிநாசிபாளையத்தில் இணையும் வகையில் ரூ.31.79 கோடி மதிப்பில் சுமார் 30 கி.மீ. நீளமுள்ள சாலையினை 10 மீட்டருக்கு அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கான நிர்வாக ஒப்புதலை மைய அரசு 18-02-2010-ல் அளித்துள்ளது. இப்பணி நடப்பாண்டில் முடிவடையும்.

2009-2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.4.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.10.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் (Inter State Connectivity Scheme): (100% மைய அரசு நிதி)

2009-2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.19.48 கோடி மதிப்பில் 17 கி.மீ. நீள சாலைப் பணிகளும், வேலூர் மாநகரத்தில் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணியும் எடுக்கப்பட்டு, அவற்றில் பாலப் பணியும், 10 கி.மீ. நீள சாலைப் பணியும் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள சாலைப் பணி நடப்பாண்டில் முடிவடையும்.

2009-2010 ஆம் ஆண்டில் ரூ.11.71 கோடி இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.16.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.17.3 பாரத் நிர்மாண் திட்டம் (Bharat Nirman Scheme):

கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்காக மைய அரசு இத்திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

முதற்கட்டமாக இத்திட்டத்தின்கீழ் மாவட்ட இதர சாலைகளில் ரூ.254 கோடி மதிப்பில் 1286 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.7 கோடி மதிப்புள்ள 32 கி.மீ. நீள சாலைகள் நீக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.152 கோடி செலவில் 743 கி.மீ. நீள சாலைப் பணிகள் இது வரை செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 511 கி.மீ. நீள சாலைப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

மேலும், இரண்டாம் கட்டமாக மாவட்ட இதர சாலைகளில் ரூ.49 கோடி மதிப்பில், 246 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவை அனைத்தும் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

5.17.4 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (WGDP):

இத்திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பில் 10.20 கி.மீ. நீள சாலைப் பணிகள் முறையே திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2010-2011ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.17.5 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP):

இத்திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.331 இலட்சம் மதிப்பில், 11.40 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் ரூ.114 இலட்சம் மதிப்பில் 4.60 கி.மீ. நீளமுள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.2.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.18 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், மத்திய அரசால் பாராளுமன்றத்தில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையச்

[2010 மே 5

சட்டம் 1988 வாயிலாக தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்திப் பராமரிக்கவும் மற்றும் மேலாண்மை செய்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 1995 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் செயலாக்கத்தில் உள்ளது. இவ்வாணையம் மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை (National Highway Development Programme) 7 பகுதிகளாக (VII-Phases) செயலாக்கி வருகிறது. இது தவிர துறைமுக இணைப்புத் திட்டம் மற்றும் இதர சிறப்புத் திட்டங்களின் வாயிலாகவும் சாலைகள் / மேம்பாலங்கள் / சுரங்கப் பாதைகள் ஆகியவை மேம்படுத்தப்பட்டு / கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள தே.நெ. 4, 5, 7, 7A, 45, 45B, 45C, 46, 47, 47B, 49, 66, 67, 68, 205, 210, 226 மற்றும் 227 ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை இவ்வாணையத்தின் வாயிலாக மைய அரசானது மாநில அரசின் ஒத்துழைப்போடு மேம்படுத்தி வருகின்றது.

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதில் வேலைகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் நிதி அளித்தல் ஆகியவை மைய அரசின் பொறுப்பாகும்.

மாநில அரசானது, உறுதுணை ஒப்பந்தத்தின் அடிப்படையில், நில எடுப்பு செய்தல், மின் கம்பங்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் இடமாற்றம் செய்ய உதவுதல் மற்றும் திட்டத்தைச் செயலாக்குதல் போன்ற பணிகளுக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு தனது ஒத்துழைப்பினை நல்குகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான ஒப்பந்தக்காரர்களைத் தேர்வு செய்தல், பணிகளைச் செயலாக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பொறுப்பாகும்.

2006 ஆம் ஆண்டு வரை முடிக்கப்பட்ட பணிகள்:

இவ்வாணையத்தின் வாயிலாக, ரூ.1613 கோடி செலவில் 414 கி.மீ. நீளமுள்ள இரு வழிச் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாகவும், 19 கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச்சாலையை முதற்கட்டமாக இரு வழிச் சாலையாகவும் ஆக மொத்தம் 433 கி.மீ. நீள சாலைகள் இவ்வாணையம் துவக்கப்பட்ட நாள் முதல் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மேம்படுத்தப்பட்டுள்ளன.

2010 மே 5]

பணிகளின் விவரம்

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ.	மதிப்பு (ரூபாய் கோடியில்)
நான்கு வழிச் சாலை			
1.	தே.நெ. 5-இல் சென்னை முதல் தடா வரை	42.00	185.00
2.	தே.நெ. 4-இல் வாலாஜாபேட்டை முதல் காஞ்சிபுரம் வரை	36.00	122.00
3.	தே.நெ. 7- இல் அத்திப்பள்ளி முதல் கிருஷ்ணகிரி வரை	61.00	205.00
4.	தே.நெ.7-இல் தொப்பூர் மலைப்பாதை	7.40	20.00
5.	தே.நெ. 7-இல் சேலம் புறவழிச் சாலை	8.40	27.00
6.	தே.நெ. 7-இல் கரூர் புறவழிச் சாலை	9.36	46.00
7.	தே.நெ. 7-இல் கரூர் மேம்பாலம்	0.84	12.00
8.	தே.நெ. 7-இல் நாமக்கல் புறவழிச் சாலை	8.40	21.00
9.	தே.நெ. 45-இல் தாம்பரத்தில் நடைபாதை சுரங்கப்பாதை		3.00
10.	தே.நெ. 45-இல் ஆலந்தூரில் நடைபாதை சுரங்கப்பாதை		4.00

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
நான்கு வழிச் சாலை			
11.	தே.நெ. 45– இல் தாம்பரம் முதல் திண்டிவனம் வரை	93.00	375.00
12	தே.நெ. 46–இல் கிருஷ்ணகிரிமுதல் வாலாஜாபேட்டை வரை	147.00	518.00
	மொத்தம்	414.00	1538.00
இரு வழிச் சாலை			
13.	சென்னை புறவழிச் சாலை (முதல் கட்டம்)	19.20	75.00
	மொத்தம்	19.20	75.00
	ஆக மொத்தம்	433.00	1613.00

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை முடிக்கப்பட்ட பணிகள்

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, ரூ.5,579 கோடி செலவில் 1,044 கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதைகளுடன்கூடிய நான்கு வழிச்சாலைகள் / கடின தள புருவங்களுடன்கூடிய இரு வழிச் சாலைகளாக (10.00 மீ அகலம்) அமைக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டது.

2010 மே 5]

பணிகளின் விவரம்

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
நான்கு வழிச் சாலை			
1.	தே.நெ. 4–இல் காஞ்சிபுரம் முதல் பூவிருந்தவல்லி வரை	56.00	164.00
2.	தே.நெ. 7–இல் கிருஷ்ணகிரி முதல் சமயநல்லூர் வரை	321.00	1626.00
3.	தே.நெ. 7–இல் மதுரை முதல் கோவில்பட்டி வரை	82.00	502.00
4.	தே.நெ. 7–இல் கயத்தாறு முதல் பணகுடி வரை	84.00	456.00
5.	தே.நெ. 45–இல் திண்டிவனம் முதல் திருச்சி வரை	205.00	1260.00
6.	தே.நெ. 45B–இல் திருச்சி முதல் மதுரை வரை	125.00	476.00
7.	தே.நெ. 47–இல் குமாரப்பாளையம் முதல் செங்கப்பள்ளி வரை	49.00	380.00
	மொத்தம்	922.00	4864.00
கடின தள புருவங்களுடன்கூடிய இரு வழிச் சாலை (10 மீ. அகலம்)			
8.	தே.நெ. 67– இல் கரூர் முதல் கோயம்புத்தூர் வரை	114.40	175.79
	மொத்தம்	114.40	175.79


சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


சிறப்புத் திட்டப் பணிகள்			
9.	தே.நெ. 45–இல் கத்திப்பாரா சந்திப்பில் பலவழிப் பாலம்	3.00	260.00
10.	தே.நெ. 45–இல் சென்னை விமான நிலையம் எதிரில் மேம்பாலம்	1.60	98.00
11.	தே.நெ. 205–இல் பாடி சந்திப்பில் பலவழிப் பாலம்	2.00	125.00
12.	தே.நெ. 67–இல் லாலாபேட்டையில் (கரூர்) இரயில்வே மேம்பாலம்	2.00	24.00
	மொத்தம்	8.60	507.00
துறைமுக இணைப்புத் திட்டம்			
13.	சென்னை எண்ணூர் விரைவுச் சாலையில் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள்		25.00
	மொத்தம்		25.00
இதர திட்டங்கள்			
14.	தே.நெ. 45–இல் சென்னை விமான நிலையம் மற்றும் திரிசூலம் இரயில்வே நிலையம் ஆகியவற்றை இணைக்கும் சுரங்க நடைபாதை		5.00
15.	தே.நெ. 45–இல் பல்லாவரத்தில் சுரங்க நடைபாதை		2.48
	மொத்தம்		7.48
	ஆக மொத்தம்	1044.00	5579.27

ஆணையத்தின் செயலாக்கத்தில் உள்ள பணிகள்

ஆணையத்தின் செயலாக்கத்தில் ரூ.7,837 கோடி மதிப்பில் 802 கி.மீ. நீளமுள்ள 15 சாலைகளை மேம்படுத்தும் பணி துவங்கி நடைபெறுகிறது. இவற்றில் 480 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 322 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் மேம்பாலம், உயர்மட்ட சாலை மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2010 மே 5]


மேம்படுத்தப்பட்ட சாலைகளின் நீள விவரம்
(தேசிய நெடுஞ்சாலை)
நீளம் கி.மீ.யில்
1200
1000
800
600
400
200
0
மார்ச் 2006 வரை
433 கி.மீ
மார்ச் 2006 முதல்
2010 வரை
1044 கி.மீ
மார்ச் 2006 வரை
மார்ச் 2006 முதல் 2010 வரை


செலவினத்தின் விவரம்
(மதிப்பு ரூபாய் கோடியில்)
6000
5000
4000
3000
2000
1000
மார்ச் 2006
வரை
1613
மார்ச் 2006
முதல் 2010
வரை
5579
மார்ச் 2006 வரை
மார்ச் 2006 முதல் 2010 வரை

[2010 மே 5

செயலாக்கத்தில் உள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
ஆறு வழிச் சாலை			
1.	தே.நெ.5–இல் சென்னை முதல் தடா வரை	43.00	419.00
நான்கு வழிச் சாலை			
2.	சென்னை புறவழிச் சாலை (தாம்பரம் முதல் புழல் வரை மதுரவாயல் மேம்பாலம் உட்பட) (பணி முடிக்கப்பட்ட நீளம்–31 கி.மீ)	32.00	500.00
3.	தே.நெ.7–இல் கோவில்பட்டி முதல் கயத்தாறு வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–28 கி.மீ)	39.00	173.50
4.	தே.நெ.7–இல் பணகுடி முதல் கன்னியாகுமரி வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–26 கி.மீ)	32.00	206.00
5.	தே.நெ.45–இல் திருச்சி முதல் திண்டுக்கல் வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–51 கி.மீ)	88.27	576.00
6.	தே.நெ.45B–இல் மதுரை முதல் தூத்துக்குடி வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–52 கி.மீ	128.50	629.00
7.	தே.நெ.47–இல் சேலம் முதல் குமாரபாளையம் வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–48 கி.மீ)	53.53	469.80

2010 மே 5]

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
8.	தே.நெ.66–இல் பாண்டிச்சேரி முதல் திண்டிவனம் வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்– 16 கி.மி)	38.62	285.00
9.	தே.நெ. 67–இல் தஞ்சாவூர் முதல் கரூர் வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–71 கி.மி)	136.00	796.00
10.	தே.நெ.68–இல் சேலம்முதல் உளுந்தூர்பேட்டை வரை (பணி முடிக்கப்பட்ட நீளம்–44 கி.மி)	136.36	941.00
11.	தே.நெ.47–இல் கோயம்புத்தூர் முதல் வாளையார் வரை	54.83	1095.00
	மொத்தம்	739	5671.00

இதர பணிகள்

12.	சென்னை துறைமுகம் மற்றும் மதுரவாயல் சந்திப்பை இணைக்கும் உயர்மட்டச் சாலை	19.00	1655.00
13.	தே.நெ.4–இல் கோயம்பேடு சந்திப்பில் பலவழிப் பாலம்	–	93.00
	மொத்தம்	19.00	1748.00
	ஆக மொத்தம்	802.00	7837.00

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

சென்னை துறைமுகம் மற்றும் மதுரவாயல் சந்திப்பை இணைக்கும் உயர்மட்டச் சாலை

ரூ.1655 கோடி திட்ட மதிப்பில் 19 கி.மீ. நீளமுள்ள உயர்மட்டச் சாலையாக இது அமையும். இச்சாலையானது, 17.50 கி.மீ. நீளத்திற்கு உயர் மட்டத்திலும், எஞ்சிய 1.5 கி.மீ. நீளம் தரை மட்டத்தில் செல்வதாகவும் அமையும். இது, இந்தியாவிலேயே அதிக நீளமுள்ள உயர்மட்டச் சாலைத் திட்டமாகும்.

இதற்கான நில எடுப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான சுமார் ரூ. 258 கோடி செலவை தமிழக அரசும், சென்னை துறைமுக பொறுப்புக் கழகமும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ள முன் வந்துள்ளன. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, மறுகுடியமர்வுக்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

துறைமுக இணைப்புத் திட்டம்

இந்தியாவிலுள்ள, 12 பெரிய துறைமுகங்களுக்குத் தேவையான சாலை இணைப்பை ஏற்படுத்தும் நோக்கோடு இத்திட்டத்திற்கு மைய அரசின் அமைச்சக பொருளாதார செயல்பாட்டுக் குழு (CCEA) 2000 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இதனைச் செயலாக்க, மைய அரசு பெரும்பாலான மாநிலங்களில் தனி நோக்கு நிறுவனம்(Special Purpose Vehicle) என்ற அமைப்பை ஏற்படுத்தி உள்ளது. தமிழகத்தில் சென்னை, எண்ணூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று பெரிய துறைமுகங்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்த இரு தனி நோக்கு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சென்னை–எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் (EMRIP)

துறைமுக இணைப்புத் திட்டத்தில் தமிழக அரசு, சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், எண்ணூர் துறைமுகம் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இணைந்து சென்னை — எண்ணூர் துறைமுகச் சாலை நிறுவனம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த துறைமுகச் சாலை இணைப்புத் திட்டத்தில், கீழ்க்கண்ட மாநில நெடுஞ்சாலைகள் (State Highways) மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2010 மே 5]

வ. எண்	சாலையின் விவரம்	நீளம் (கி.மீ.)
1.	மா.நெ. எண் 56 (திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையை) நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்	9.00
2.	மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நான்கு வழிச் சாலையை கடினப் புருவங்களுடன் பலப்படுத்தி மேம்படுத்துதல் (MDR)	5.40
3.	மா.நெ. எண் 1 (சென்னை– எண்ணூர் விரைவுச் சாலையை நான்கு வழிப் பாதையாக சேவை சாலைகளுடன் அகலப்படுத்தி மேம்படுத்துதல்	7.50
4.	மா.நெ. எண் 2 (சென்னை உள்வட்டச் சாலையின் (நான்கு வழிப் பாதை) வடக்குப் பகுதியை (IRR) பலப்படுத்தி மேம்படுத்துதல்	8.10
	மொத்தம்	30.00

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.165 கோடி என 2003 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டது. மேலும், இரு வழிப் பாதையான இத்திட்டம் நான்கு வழிப் பாதையாகவும் சேவைச் சாலை, வடிகால் வசதி, சுரங்கப்பாதை மற்றும் மறுகுடியமர்வு திட்டம் என விரிவுபடுத்தப்பட்டதால் இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ.600 கோடியாக அதிகரித்தது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் ரூ.267.47 கோடிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினத்தை அதனுடைய பங்குதாரர்கள் பின்வரும் அடிப்படையில் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

பங்குதாரர்	பங்குத் தொகை (சதவீதத்தில்)	பங்குத் தொகை	கடன்	மொத்தம்
		ரூபாய் கோடியில்		
இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்	23.30%	139.80	117.50	257.30

[2010 மே 5

பங்குதாரர்	பங்குத் தொகை சதவீதத்தில்)	பங்குத் தொகை	கடன்	மொத்தம்
		ரூபாய் கோடியில்		
சென்னை துறைமுக பொறுப்புக் கழகம்	23.30%	139.80	110.68	250.48
தமிழ்நாடு அரசு	9.70%	58.20	--	58.20
எண்ணூர் துறைமுகம்	5.67%	34.02	--	34.02
மொத்தம்		371.82	228.18	600.00

மைய அரசின் மாண்புமிகு கப்பல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 8-2-2010 அன்று சென்னையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுரையின்படி நாங்களும் கலந்து கொண்ட கூட்டத்தில், இத்திட்டத்தினை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தினால் சென்னை-எண்ணூர் விரைவுச் சாலையில் குடியிருக்கும் 1,824 குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்படுவதால், அவர்களை, மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு திட்டத்தின்கீழ், திருவொற்றியூரில் புதிதாக தமிழக குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

தூத்துக்குடி துறைமுக இணைப்புத் திட்டம்

துறைமுக இணைப்புத் திட்டத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் தூத்துக்குடி துறைமுகம் சேர்ந்து தூத்துக்குடி துறைமுகச் சாலை நிறுவனம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு ரூ.290 கோடி மதிப்பில் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி வரையுள்ள 51.20 கி.மீ நீளமுள்ள தே.நெ. 7A-ஐ மேம்படுத்த திட்டமிடப்பட்டது. ஒப்பந்தக் காலம் முடிந்த பிறகும் ஒப்பந்தக்காரர் பணியை முழுமையாக நிறைவேற்றாததால் ஒப்பந்தம், இரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை முடிக்க மறுஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு ஒப்பந்த

2010 மே 5]

உடன்படிக்கை 5-4-2010 அன்று நிறைவேற்றப்பட்டு, விரைவில் பணிகள் துவங்கப்பட உள்ளன.

வேலைத் திட்டம்–I பணிகள்

தமிழ்நாட்டில் உள்ள ரூ.9029 கோடி மதிப்பில் வேலைத் திட்டம்-I இல் 1296 கி.மீ. நீளமுள்ள 13 பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன் துவங்கப்படும். இப்பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
ஆறு வழிச்சாலை			
1.	தே.நெ. 4–இல் பூவிருந்தவல்லி முதல் வாலாஜாபேட்டை வரை	92.91	1045
2.	தே.நெ. 46–இல் வாலாஜாபேட்டை முதல் கிருஷ்ணகிரி வரை	148.20	1066
3.	தே.நெ. 7–இல் கர்நாடக மாநில எல்லை (அத்திப்பள்ளி) முதல் கிருஷ்ணகிரி வரை	59.99	535
	மொத்தம்	301	2646
நான்கு வழிச்சாலை			
4.	தே.நெ. 47–இல் கேரள மாநில எல்லை முதல் – கன்னியாகுமரி வரை	69.92	1100
5.	தே.நெ. 67 இல் காங்கேயம்பாளையம் முதல் மேட்டுப்பாளையம் வரை	59.35	601
6.	தே.நெ. 205–இல் ஆந்திர மாநில எல்லை முதல் சென்னை வரை	59.60	571
7.	தே.நெ. 47–இல் செங்கப்பள்ளி முதல் வாளையார் வரை (அவினாசி முதல் நீலாம்பூர் வரை ஆறு வழிச் சாலை)	54.83	1095
	மொத்தம்	244	3367

[2010 மே 5

வ. எண்	வேலையின் பெயர்	நீளம் கி.மீ	மதிப்பு (ரூபாய் கோடியில்)
கடின தள புருவங்களுடன் கூடிய இரு வழிச் சாலைகள் (10 மீ. அகலம்)			
8.	தே.நெ. 45 & 220—இல் திண்டுக்கல் முதல் குமுளி வரை	124.36	475
9.	தே.நெ. 49—இல் மதுரை முதல் தனுஷ்கோடி வரை	185.55	625
10.	தே.நெ. 66—இல் திண்டிவனம் முதல் கிருஷ்ணகிரி வரை	173.46	753.38
11.	தே.நெ. 67—இல் நாகப்பட்டினம் முதல் தஞ்சாவூர் வரை	80.00	304.92
12.	தே.நெ. 210—இல் திருச்சி முதல் காரைக்குடி வரை	108.35	386.26
13.	தே.நெ. 210—இல் காரைக்குடி முதல் இராமநாதபுரம் வரை	79.50	471.14
	மொத்தம்	751	3016
	ஆக மொத்தம்	1296	9029

மேற்கண்ட 13 பணிகளில் 1 பணிக்கான (செங்கப்பள்ளி முதல் வாளையார் வரை (தே.நெ. 47) வேலை உத்தரவு வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சிய 12 பணிகளுக்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இப்பணிகளுக்கான வேலை உத்தரவு நடப்பாண்டில் வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளன.


2010 மே 5]

நிலம் கையகப்படுத்துதல்

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிலம் கையகப்படுத்த உதவுவது தமிழக அரசின் முக்கிய பங்காக உள்ளது. இத்திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் மார்ச் 2006 ஆம் ஆண்டு வரை 709 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தி ஆணையத்திடம் திட்டப் பணிக்காக ஒப்படைக்கப்பட்டது.

தமிழக அரசால் நில எடுப்பு பணியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு 2006-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 4131 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தி ஆணையத்திடம் திட்டப் பணிக்காக ஒப்படைக்கப்பட்டது.

மேலும் நடப்பாண்டில் வேலைத் திட்டம்-I மற்றும் நடைபெற்று வரும் பணிகளுக்காக 5346 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தி ஆணையத்திடம் திட்டப் பணிக்காக ஒப்படைக்கப்பட உள்ளது.



[2010 மே 5

இத்திட்டத்திற்குத் தேவையான நிலங்களை குறுகிய காலத்தில் கையகப்படுத்த வேண்டியுள்ளதால் மாநில அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, 65 சிறப்பு நில எடுப்பு அலகுகளில், வருவாய்த் துறையைச் சார்ந்த சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், சிறப்பு வட்டாட்சியர் மற்றும் நில அளவை துறையைச் சார்ந்த துணை நில அளவை ஆய்வாளர், சார்பு நில அளவை ஆய்வாளர் உட்பட அலுவலர்களை நியமிக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணியைத் துரிதப்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் தலைமையில் 26-02-2010 அன்று சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நானும் இத்துறையைச் சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டோம். கூட்ட முடிவில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய அலுவலர்களுக்கு மேற்கண்ட பணிகளை விரைந்து முடிக்க மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது இப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

5.19 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன:

1. பன்னாட்டுத் தரத்திற்கேற்ப சாலை அமைத்தல்

2. சிறப்பு பராமரிப்புப் பணிகள்

3. நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கைகள் வகுத்தல்

இத்திட்டம் ரூ. 2160 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் துவங்கப்பட்டது. இதன் தற்போதைய திருத்திய மதிப்பீடு ரூ.2442 கோடி ஆகும். இதில் உலக வங்கியின் நிதி ரூ.1903 கோடி மற்றும் தமிழக அரசின் நிதி ரூ.539 கோடியாகும்.

கடந்த காலங்களில் நிலம் கையகப்படுத்துவதில் தாமதம், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் இதர காரணங்களால், இத்திட்டத்தின் பணிகளில் முன்னேற்றம்

குறைவாக இருந்தது. இதனை கருத்தில் கொண்டு, மார்ச் 2009-ல் வருகை தந்த உலக வங்கி குழு முழுமையான ஆய்வுக்கு பின்னர் மார்ச் 2010 வரை கால நீட்டிப்பு வழங்கியது. தற்பொழுது பணித் தளங்களின் நிலைமைக்கு ஏற்றவாறு திட்ட விவர அறிக்கையில் அனுமதிக்கப்பட்ட வேறுபாடுகளின்படி கூடுதல் பணிகள் மற்றும் பணிகளின் அளவுகளின் மாறுபாடு காரணமாக, சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாட்டுக் காலம் 31-03-2012 வரை நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது.

5.19.1 உலக வங்கி நிதியுதவியுடன் சாலை மேம்பாடு:

நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள மாநில, மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் சில சாலைகள், உலக வங்கி நிதி உதவியோடு பணிகள் ஆறு தொகுப்புகளாக மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- தொகுப்பு 1—வேலூர் மாவட்டம் ஆற்காடு முதல் ஆரணி, திருவண்ணாமலை, விருத்தாசலம், ஜெயங்கொண்டம், கும்பகோணம் வழியாக திருவாரூர் வரை ரூ. 768.50 கோடி மதிப்பீட்டில் 378 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 370 கி.மீ. நீளச் சாலைகள் முடிவடைந்துள்ளன. மேலும், 6 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் மற்றும் ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், விருத்தாசலம், அரியலூர், சிதம்பரம், சீர்காழி ஆகிய நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் இதில் அடங்கும். அனைத்து பணிகளும் நடப்பாண்டில் நிறைவடையும்.

- தொகுப்பு 2—நாகப்பட்டினம் முதல் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை வழியாக புதுக்கோட்டை மாவட்டம் கட்டுமாவடி வரை ரூ.237 கோடி மதிப்பீட்டில் 119 கி.மீ. நீளச் சாலை எடுத்துக் கொள்ளப்பட்டதில் 115 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி மற்றும் மூன்று இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்களும் இதில் அடங்கும். இப்பணிகள் நடப்பாண்டில் நிறைவடையும்.

- தொகுப்பு 3—கட்டுமாவடி முதல் மீமிசல் வழியாக இராமநாதபுரம் வரை ரூ.143 கோடி மதிப்பீட்டில் 100 கி.மீ. நீள சாலை முடிக்கப்பட்டு மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களால் 28-02-2009 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- தொகுப்பு 4—இராமநாதபுரம் முதல் கீழக்கரை, சாயல்குடி வழியாக தூத்துக்குடி வரை 115 கி.மீ. நீள சாலை ரூ.133 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இரு பகுதிகளாக 19-11-2009 மற்றும் 27-02-2010 தேதிகளில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- தொகுப்பு 5—இராமநாதபுரம் புறவழிச் சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

- தொகுப்பு 5A கும்பகோணம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

- தொகுப்பு 6—குமரி மாவட்டத்தில், மணக்குடி கிராமங்களை இணைக்கும் உயர்மட்டப் பாலப் பணி 16-03-2010 அன்று துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள புறவழிச் சாலை பணிகளின் நீளம் மற்றும் மதிப்பு விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	நகரம்	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1.	திருவண்ணாமலை	ஆரணி	5.30	11.61
2.		போளூர்	4.90	10.72
3.		திருவண்ணாமலை	10.90	23.86
4.	விழுப்புரம்	திருக்கோவிலூர்	4.40	9.63
5.	கடலூர்	விருத்தாச்சலம்	9.20	19.92

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

வ. எண்	மாவட்டம்	நகரம்	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூபாய் கோடியில்)
6.		சிதம்பரம்	16.90	37.00
7.	அரியலூர்	அரியலூர்	7.60	16.63
8.	நாகப்பட்டினம்	சீர்காழி	8.80	19.18
9.		நாகப்பட்டினம்	9.00	19.49
10.	திருவாரூர்	முத்துப்பேட்டை	4.90	10.51
11.		திருத்துறைப்பூண்டி	3.70	6.80
12.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	10.40	35.29
13.	தஞ்சாவூர்	கும்பகோணம்	4.10	24.56
		மொத்தம்	100.10	245.20

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

5.19.2 உலக வங்கி நிதியுதவியுடன் சாலை பராமரிப்புப் பணிகள்:

இத்திட்டத்தின்கீழ் சிறப்பு சாலை பராமரிப்புப் பணிகள் மாநில சாலைகள் மற்றும் மாவட்ட சாலைகளில் ரூ.430 கோடி மதிப்பீட்டில் 1033 கி.மீ. நீளத்திற்கு நான்கு கட்டமாக செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 953 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 374 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

5.19.3 நிர்வாக சீரமைப்பு (Institutional Development Strategy)

நெடுஞ்சாலைத் துறைக்கான இயக்குநர் ஒருவரை நியமிக்கவும், நடைமுறை சார்ந்த நிர்வாக மேம்பாட்டிற்காக நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்தை மறு சீரமைப்பு செய்யவும் அரசு ஆணை வழங்கப்பட உள்ளது.

5.19.4 பொது, தனியார் துறை கூட்டமைப்புத் திட்டம் (Public Private Partnership Scheme):

பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகளுக்காக பன்னாட்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை, சென்னை வெளிவட்டச் சாலை ஆகியவற்றின் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை பணிகளுக்கான நடவடிக்கைகளை பொது அலகின் மூலமும், சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகளை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினை (TNRDC) நிர்வாக ஒருங்கிணைப்பாளராகக் (Managing Associate) கொண்டும் தமிழக அரசு செயல்படுத்துகிறது.

பொதுத் துறை, தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் சாலைகளுக்கு நான்கு வழிப் பாதைகள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

2010 மே 5]

1.	மெட்டூர் - பழக்கானூத்து-ஒட்டன்சத்திரம்-தாராபுரம்-காங்கேயம்-திருப்பூர் சாலை (SH 37)	126 கி.மீ
2.	ஈரோடு—தாராபுரம் சாலை (SH 83A)	78 கி.மீ.
3.	ஆற்காடு புறவழிச் சாலை	3.6 கி.மீ
4.	ஈரோடு வெளி வட்டச் சாலை பகுதி-II	9.6 கி.மீ
5.	சென்னை வெளி வட்டச் சாலை பகுதி-II	32.3 கி.மீ

5.19.5 சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வு (Strategic Option Study II):

நெடுஞ்சாலைத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வின் அடிப்படையில் தற்போது மேற்கொண்டுள்ள சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி கடனுதவி அளித்துள்ளது. உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற மேற்கூறிய சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வு இன்றியமையாதது.

தமிழகத்தில் உள்ள அனைத்து சாலை தொகுப்பிலிருந்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையில் சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வுப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதி பெற்ற பன்னாட்டு ஆலோசகரை நியமிக்க உலக வங்கி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற பின்பு ஆலோசகரை நியமித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆய்வுகளின் இறுதி அறிக்கையின்படி, உலக வங்கியிடமிருந்தும் மற்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5.19.6 செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (Performance Based Maintenance Contract):

சாலை பராமரிப்பில் தற்போது உள்ள முறையை மாற்றி நீண்ட கால பராமரிப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிகளைத் திறம்பட செய்து முடிக்க, தனியார் துறைமூலம் ஒரே ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சாலையை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பராமரிக்க, உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பணிகள் செய்ய கீழ்க்கண்ட சாலைகள்

முன் மாதிரியாக தேர்வு செய்யப்பட்டு உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகளை மேற்பார்வையிட ஆலோசகரை நியமிக்கும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளது.

வ. எண்	மாவட்டம்	சாலையின் பெயர்	மொத்த தூரம் கி.மீ
1.	சேலம்	ஓமலூர் – மேச்சேரி சாலை – MDR	14.60
2.	சேலம் மற்றும் நாமக்கல்	ஓமலூர் – சங்ககிரி – திருச்செங்கோடு -பரமத்தி சாலை (மா.நெ. எண் -86)	81.00
3.	சேலம் மற்றும் ஈரோடு	தொப்பூர்–மேட்டூர் – பவானி– ஈரோடு சாலை (பவானி வரை) (மா.நெ. எண் - 20)	94.00
4.	சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர்	சேலம்–அரூர்–திருப்பத்தூர் – வாணியம்பாடி சாலை (மா.நெ. எண் - 18)	106.40
		மொத்தம்	296.00

5.19.7 கணினிமயமாக்குதல்

துறையின் செயலாக்க அமைப்புகளை வலுப்படுத்தவும் செயல்திறனை அதிகரிக்கவும் பல்வேறு அலகுகளை கணினிமயமாக்க முடிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இத்துறையின் பல்வேறு அலகுகளில் தலைமைப் பொறியாளர் அலுவலகம் முதல் பிரிவு அலுவலகம் வரை ரூ.14.77 கோடி செலவில் 751 அலுவலகங்களுக்கு மொத்தம் 1779 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ் 2700 பணியாளர்களுக்கு கணினிச் சார்ந்த பயிற்சியும், 330 பொறியாளர்களுக்கு மென்பொருள் சார்ந்த மேம்படுத்தப்பட்ட பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

2010 மே 5]

5.19.8 புவியியல் தொடர்பான தகவல் அமைப்பு (Geographic Information System)

சாலை பராமரிப்பில் நெடுஞ்சாலைத் துறையின் சேவையை பயனுள்ள வகையில் முன்னுரிமை அடிப்படையில் செயலாக்கம் செய்யவும், அதற்கேற்ற அறிக்கையை தயார் செய்யும் விதத்திலும், கணினிகளை கொண்டு புவியியல் தொடர்பான தகவல் அமைப்பு மென்பொருளினை நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு செய்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருளை கொள்முதல் செய்ய

1. புவியியல் தொடர்பான மென்பொருள் வாங்கப்பட்டு துறையின் தேவைக்கேற்றவாறு அவற்றை வழக்கத்தில் கொண்டு வருவதற்கான பணியினை ஆலோசகர்மூலம் மேற்கொள்ள உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. தகவல்களை சேகரிக்கும் உபகரணங்கள் வாங்குவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளிக்கான அனுமதி உலக வங்கியிடம் எதிர்நோக்கப்படுகிறது.

5.19.9 திட்டம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு (Project & Finance Management System):

மாநிலம் முழுவதும் கணினிமயமாக்குதலை செயல்படுத்தி தற்பொழுது உடல் உழைப்பு சார்ந்த பணிகளை துரிதப்படுத்தும் வகையில் திட்ட மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் பணியாளர் பதிவேடு அமைத்து அவற்றின்மூலம் பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதற்கான ஆலோசகர் நியமனம் இறுதி செய்யப்பட்டு உலக வங்கி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

5.19.10 சாலைப் பாதுகாப்பு தணிக்கை

சாலைப் பாதுகாப்பு தணிக்கை தொடர்பாக உடன்படிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), சென்னையுடன் 22-01-2010 அன்று செய்யப்பட்டது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு 2, 3 மற்றும் 4-ல் மேம்பாடு செய்யப்பட்ட 335 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலைப் பாதுகாப்பு மதிப்பீடு செய்தல்,

சாலைகளின் பாதுகாப்பை ஆய்வு செய்தல், சாலைப் பாதுகாப்பு குறித்த இன்னல்கள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை களைவதற்கான விரிவான சாலைப் பாதுகாப்பு அறிக்கை தயார் செய்தல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு 2-ல் மேம்பாடு செய்யப்பட்ட நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை சுமார் 119 கி.மீ. நீளச் சாலையில் பாதுகாப்பு தணிக்கைப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நடப்பாண்டில் முடியும்.

5.19.11 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு:

சாலை விபத்துகளை தடுக்கும் வண்ணம் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகளுக்கான ஆலோசகர்களின் சேவைப் பணிகள், இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை அவர்களால் கண்காணிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளில், விரிவான செயல்முறை திட்டம் வகுத்தல், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுநர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சாலைகளில் நிற்கும் வாகனங்களின் பின்புறம் மோதுவதை தவிர்க்கும் முறைகளைக் கண்டறிதல் ஆகிய ஐந்து பணிகளும் இதில் அடங்கும். இப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

5.20 சாலைகளை காலமுறைப்படி புதுப்பித்தல்

5.20.1 சாலைகளை புதுப்பிக்கும் பணிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு:

அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் பெரும் பொருட்செலவில் உருவாக்கப்படும் சாலை கட்டமைப்பு வசதிகளை முறையாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். இதனை நன்கு உணர்ந்த இந்த அரசு சாலைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரிக்கும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதன்படி, இவ்வரசு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலையின் ஓடுதளத்தை புதுப்பிக்க வேண்டும் என்ற இந்திய சாலை கழகத்தின் (IRC) நெறிமுறைகளின்படி சாலைகளைப் புதுப்பித்து பராமரித்து வருகிறது.

2010 மே 5]

சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கு அதிக அளவில் இவ்வரசால் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்யப்பட்டுள்ளது.

ரூ கோடியில்

வருடம்	மொத்த செலவினம்	ஊரக வளர்ச்சி துறையின் செலவினம்	நெடுஞ்சாலைத் துறை	
			செலவினம்	முடிக்கப்பட்ட சாலை நீளம் (கி.மீ.)
2006 –2007	801.37	103.60	697.77	7889
2007 – 2008	826.26	103.60	722.66	7115
2008 –2009	874.04	103.60	770.44	6632
2009 –2010	876.83	103.60	781.06	6392
மொத்தம்	3378.50	414.40	2971.93	28028

இவ்வாறு கடந்த நான்காண்டுகளில் நெடுஞ்சாலைத் துறை வாயிலாக ரூ. 2971.93 கோடி செலவில் 28028 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2001-2006 ஆம் ஆண்டு வரை ரூ. 1522.12 கோடி செலவில் 18361 கி.மீ. நீளச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் 2002 வரை மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டு பராமரிப்பின்றி இருந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள், வேளாண் அபிவிருத்தி திட்டச் சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் ரூ.288.46 கோடி செலவில் 4225 கி.மீ. நீளத்திற்குப் புதுப்பிக்கப்பட்டன.

மேலும், நடப்பாண்டில் அரசு சாலைகளைப் பராமரிக்க ரூ. 653.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.20.2 பாலங்களைப் பராமரித்தல்:

பெரும் பொருட்செலவில் உருவாக்கப்படும் பாலங்களை முறையாகப் பராமரிப்பது பாலங்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்கிறது. மேலும், பாலங்கள் மற்றும் குறுக்கு வடிகால்களை

பராமரிப்பதினால் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் வெள்ளப்பெருக்கு சீராக அகற்றப்பட்டு சாலையின் ஓடுதளத்தில் ஏற்படும் பழுதினை வெகுவாகக் குறைக்க உதவுகிறது. எனவே, 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தை பாலங்களின் பராமரிப்பு மாதமாக 2009-2010 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பாலப் பராமரிப்பிற்கு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2009-2010 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த 1,12,963 பாலங்களில், ரூ. 26.79 கோடி செலவில் 50,645 பாலங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டிலும் பாலங்களைப் பராமரிக்க சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

VI. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் திட்டங்கள்

6.1. இராஜீவ் காந்தி சாலை (தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை) – 2 ஆம் கட்டப் பணிகள்:

சென்னை மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான இராஜீவ் காந்தி சாலை (தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை) முதற்கட்டமாக சுமார் 20 கி.மீ. நீளத்திற்கு உலகத்தரத்திற்கு ஒப்பாக ஆறு வழிச் சாலையாகவும், சோழிங்கநல்லூரிலிருந்து குடுமியான் தோப்பு வரை (கிழக்கு கடற்கரைச் சாலை) இரண்டு கி.மீ. நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாகவும் சுமார் ரூ.300 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டது. இச்சாலை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக சிறுசேரியிலிருந்து கிழக்கு கடற்கரைச் சாலையில் மாமல்லபுரம் வரை சுமார் 25 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழிச் சாலையாக பொது-தனியார் பங்களிப்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுதல், செயல்படுத்துதல், ஒப்படைத்தல் (DBFOT) அடிப்படையில் மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ரூ.550 கோடியாகும். இதில் அரசின் பங்களிப்பாக ரூ.150 கோடி மானியமாக வழங்கப்படவுள்ளது. இப்பணிக்கான நிலம் கையகப்படுத்த அரசு ரூ.70 கோடிக்கு ஒப்புதல் அளித்து நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன், திட்டப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 மே 5]

6.2. சென்னை வெளிவட்டச் சாலை (Chennai Outer Ring road):

சென்னை மாநகரில் தற்போதுள்ள சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னை பெருநகரைச் சுற்றி ஆறு வழித் தடம் கொண்ட வெளிவட்டச் சாலை 62 கி.மீ. நீளத்தில் வண்டலூரில் தொடங்கி நெமிலிச்சேரி வழியாக மீஞ்சூர் வரை அமைக்க அரசு முடிவு செய்தது. இதில் முதற்கட்டமாக ரூ.1081.40 கோடி மதிப்பில் 30 கி.மீ. நீளத்திற்கு தே.நெ. 45-ல் உள்ள வண்டலூர் முதல் தே.நெ. 4-ல் உள்ள நசரத்பேட்டை வழியாக தே.நெ. 205-ல் உள்ள நெமிலிச்சேரி வரை பொது—தனியார் பங்களிப்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுல், செயல்படுத்துதல், ஒப்படைத்தல் (DBFOT) அடிப்படையில் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்ட ஆதார நிதியாக ரூ.300 கோடியை, திட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் கட்டுமான காலமான 30 மாதங்களில் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பராமரிப்பு காலமான 17½ வருடங்களுக்கு அரையாண்டுக்கு ஒரு முறை சந்தா தொகை (Semi-Annual Annuity) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.

இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரி முதல் திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரை சுமார் 32 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழி தடம் கொண்ட சாலை அமைக்கத் தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இரண்டாம் கட்டப் பணிகளை ரூ.1076 கோடியில் மேற்கொள்வதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இப்புதிய சாலை அமைக்கப்படுவதால் தமிழ்நாட்டிற்கு பல திசைகளிலிருந்து வந்து செல்லும் கனரக மற்றும் பெட்டக வாகனங்கள் தாமதமின்றி எண்ணூர், சென்னை துறைமுகங்களுக்கும் மற்றும் பிற பகுதிகளுக்கும் செல்ல முடியும்.

இத்திட்டத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளராக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

2009-2010ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.2.75 கோடி செலவிடப்பட்டது.

[2010 மே 5

2010-2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.3 கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு:

சென்னை முதல் கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரை சாலை, மொத்தம் 765 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளது. முதற்கட்டமாக, சென்னை முதல் கடலூர் வரையுள்ள 166 கி.மீ. நீள சாலைப் பகுதிகள், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.102 கோடி மதிப்பில் இருவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதில் சென்னை முதல் காஞ்சிபுரம் மாவட்டம், அக்கரை வரையிலான சாலை நெடுஞ்சாலைத் துறை மூலமாக பராமரிக்கப்படுகிறது. அக்கரை முதல் புதுச்சேரி மாநில எல்லை வரையிலான சுமார் 113 கி.மீ. நீள சாலைப் பகுதி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் (TNRDC) மூலம் சுங்கச் சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை முதல் புதுச்சேரி மாநில எல்லை வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள அதிகபட்ச போக்குவரத்தை கணக்கில் கொண்டும், விபத்துகளை தவிர்க்கவும், சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகளை கருத்தில் கொண்டு நான்குவழித் தடச் சாலையாக அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அரசு ஆணை வழங்கியதின் பேரில், நான்குவழித் தடமாக அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் தயாரித்து அரசுக்கு அளித்துள்ளது.

விழுப்புரம் முதல் புதுச்சேரி, கடலூர் வழியாக நாகப்பட்டினம் வரை அமைந்துள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையாக (எண் 45A) தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இச்சாலையில் புதுச்சேரி முதல் நாகப்பட்டினம் வரை உள்ள பகுதி கிழக்குக் கடற்கரையை ஒட்டி செல்லும் சாலையாகும். இச்சாலையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருவழித் தடமாக உள்ள 14 கி.மீ. நீள சாலைப் பகுதி இருவழித் தடமாக அகலப்படுத்த மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சிதம்பரம் மற்றும் சீர்காழி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2010 மே 5]

மேலும், இச்சாலையில் நாகப்பட்டினம் முதல் முத்துப்பேட்டை திருத்துறைப்பூண்டி - வேளாங்கண்ணி - கட்டுமாவடி - மீமிசல் - இராமநாதபுரம் வழியாக தூத்துக்குடி வரை உள்ள பகுதியில் ஓரிரு பாலப் பணிகள் மற்றும் இராமநாதபுரம் புறவழிச் சாலையைத் தவிர பெரும்பாலான பணிகள் முடிவுற்றன.

தூத்துக்குடி முதல் திருச்செந்தூர் - கூடங்குளம் வழியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் (தே.நெ. எண் 7-ல்) உள்ள அஞ்சுகிராமம் வரை ரூ.190 கோடி மதிப்பில் எஞ்சியுள்ள பகுதியான 120 கி.மீ. நீளமுள்ள சாலையை இரு வழித்தடமாக மாநில அரசின் நிதிமூலம் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கையினை ஆலோசகர் மூலம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி நடப்பாண்டில் பொது அலகின்மூலம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாறு இச்சாலை மேம்படுத்தப்படும் பட்சத்தில் சென்னை முதல் கன்னியாகுமரி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு செல்பவர்களுக்கு உகந்த எழில்மிக்க சாலையாக அமையும்.

VII. சிறப்புத் திட்டங்கள்

7.1 கோவை மேற்கு பகுதி புறவழிச் சாலை:

நடப்பாண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.284 கோடி மதிப்பீட்டில், கோவை மாநகரின் மேற்கு பகுதியில் தே.நெ. 47 மற்றும் தே.நெ. 67-ஐ இணைக்கும் வகையில் சுமார் 26 கி.மீ. நீளத்திற்கு நான்குவழித் தடத்தில் கடின புருவங்களுடன் புறவழிச் சாலை அமைக்க அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக நில எடுப்புப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

7.2 உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு – சாலை கட்டமைப்பு வசதிகள்

2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 முதல் 27 வரை கோவையில் நடைபெறவுள்ள உலக தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், போக்குவரத்தினை

[2010 மே 5

சீர் செய்யவும், மாநாடு நடைபெறவுள்ள வளாகத்திலிருந்து இரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் விமான நிலையத்தை இணைக்கும் 96 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்யவும், மைய திட்டு அமைக்கவும் அரசு ரூ.59.85 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து, சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

மேலும், சேலம் - கொச்சின் சாலையில் மருத்துவக் கல்லூரி அருகே சமீபத்தில் இரயில்வே துறையால் கட்டப்பட்ட மூன்று வழித்தடச் சாலை மேம்பாலத்திற்கு அருகே மற்றுமொரு மூன்று வழித்தடச் சாலை மேம்பாலம் கட்டும் பணி ரூ.4.88 கோடி மதிப்பில் வைப்புநிதிப் பணியாக இரயில்வே துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மேம்பாலத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறைமூலம் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் கோவை மாநகரில் தே.நெ. 67-ல் பங்குச் சந்தை முதல் ஷோபா கார்னர், கவுண்டம்பாளையம், துடியலூர் வழியாக நரசிம்ம நாயக்கன்பாளையம் வரை ரூ.49.70 கோடி மதிப்பில் (கி.மீ.340/0-360/0) 20 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியில் நான்கு வழிப் பாதையாக உள்ள முதல் 10 கி.மீ. நீளச் சாலையை உறுதிபடுத்தவும், இருவழித் தடமாக உள்ள எஞ்சிய 10 கி.மீ. நீளச் சாலையை நான்கு வழித் தடமாக அமைக்கும் பணியும் செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

7.3 பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா – சாலை கட்டமைப்பு வசதிகள்:

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தவாறு ரூ.7.90 கோடி மதிப்பிலான 3.50 கி.மீ. சாலைப் பணிகளுக்கும் அதே போல் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அறிவித்தவாறு ரூ.2.75 கோடி மதிப்பிலான 2 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவை நடப்பாண்டில் முடிவடையும்.

2010 மே 5]

7.4 தேசிய பாதுகாப்புப் படையின் சென்னை அலுவலகத்திற்கு அணுகு சாலை அமைத்தல்

தேசிய பாதுகாப்புப் படையின் சென்னை பிரிவு அலுவலகம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கேளம்பாக்கத்தில் அமைந்துள்ளது. இவ்வலுவலகத்தை வண்டலூர்-கேளம்பாக்கம் மாநில நெடுஞ்சாலையுடன் இணைக்கும் நான்கு வழி தடச் சாலைப் பணி ரூ.2.36 கோடி மதிப்பில் முடிவடைந்துள்ளது.

7.5 புதிதாக அமைக்கப்பட்டு வரும் தொழில் மண்டலங்களுக்கு இணைப்புச் சாலை அமைத்தல்

தொழில் மேம்பாட்டின் அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தொழில் மண்டலங்களுக்கு அனைத்து வசதிகளையும் இவ்வரசு அளித்து வருகிறது. அதன்படி இத்தொழில் மண்டலங்கள் அமைந்துள்ள பகுதியினை முக்கிய சாலைகளோடு இணைக்கும் வகையில் இணைப்புச் சாலைகள் அமைக்க இவ்வரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் சூரபூண்டியிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியிலும் அமையவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கும் பணியினை நெடுஞ்சாலைத் துறைமூலம் மேற்கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

VIII. சாலைப் பாதுகாப்பு செயல் திட்டம்

சாலை பயன்படுத்துவோரிடையே விழிப்புணர்வை மேம்படுத்தவும், பாதசாரிகள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்வோர் தொடர்புடைய சாலை விபத்துகளை வெகுவாகக் குறைக்கவும், சாலைப் பாதுகாப்பு செயல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விபத்து விகிதத்தைக் குறைப்பதன் மூலம் உயிர் இழப்பை தவிர்க்க முடியும். நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையால் விபத்துகள் பெருமளவில் குறைந்துள்ளன. விபத்துகள் பற்றிய விவரங்களை சேகரிக்கவும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கிடையே விவரங்களை பகிர்ந்துகொள்ளவும், பகுப்பாய்வு செய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2010 மே 5

- சாலை விபத்துகள் பற்றி முறையாக ஆய்வு செய்து, விபத்துகள் தொடர்பான புள்ளிவிவரங்களை போக்குவரத்து மற்றும் காவல் துறைகளுக்கிடையே பகிர்ந்து கொண்டு, அவற்றை பகுப்பாய்வு செய்தல்.
- சாலைப் பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகம் செய்தல், விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து நிவர்த்திப் பணிகளை மேற்கொள்ளுதல், சாலைகள் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்தல்.
- சாலைகளிலுள்ள வேகத் தடைகளால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு, சாலைச் சந்திப்புகள் மற்றும் வளைவுகளில் தேவைக்கேற்ப ஓரே மாதிரியான வேகத் தடைகளை அமைத்தல்.

8.1 விபத்துப் பகுதிகள் மேம்பாடு:

தமிழகத்தில் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை மற்றும் நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் அடிக்கடி விபத்துக்குள்ளாகும் பகுதிகளாக கண்டறியப்பட்ட 307 இடங்களில், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் 254 விபத்துப் பகுதிகள் உள்ளன. அவற்றில் 200 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 54 இடங்களில் சில பணிகளுக்கு நிலம் தேவைப்படுவதால் மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் கண்டறியப்பட்ட 53 விபத்துப் பகுதிகளில் 36 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, மீதமுள்ள 17 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

8.2 மாநில நெடுஞ்சாலைகளில் இணையும் பிற சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல்:

தேசிய நெடுஞ்சாலைகளில் இணையும் மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலை சந்திப்புகளில் ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு ரூ.4.69 கோடி செலவில் இப்பகுதிகளில் வேகத்தடை அமைத்தல், அறிவிப்புப் பலகைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் 635 இடங்களில் சாலை பாதுகாப்பு நிதியின்கீழ் 2008-2009-ல் மேற்கொள்ளப்பட்டதைப் போல 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.32 கோடி செலவில் மாநில நெடுஞ்சாலைகளில் வந்து இணையும் 800 இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் மேம்பாட்டுப் பணிகள் திட்டம் சாரா பணிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8.3 எல்லை கற்களை நடுதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்:

ஆக்கிரமிப்பு காரணமாக நெடுஞ்சாலைப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு எல்லை கற்கள் 9384 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள் அனைத்திலும் நடப்பட்டுள்ளன. 11,288 கி.மீ. நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளில், 8400 கி.மீ. நீளச் சாலைகளில் எல்லை கற்கள் நடப்பட்டு நெடுஞ்சாலையின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சாலைகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் இப்பணிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மீதமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளில் நடப்பாண்டில் எல்லை கற்கள் நடப்படும். இதே போல் 36096 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளிலும் எல்லை கற்கள் நடும் பணி நடப்பாண்டில் துவங்கப்படும்.

8.4 மரம் வளர்த்தல்:

2007 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வரின் 84-வது பிறந்த நாளை முன்னிட்டு, மாநில நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் சுமார் 3 இலட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்படி, 2007-2008 ஆம் ஆண்டில் 3.93 இலட்சம் மரக்கன்றுகளும், 2008-2009 ஆம் ஆண்டில் 2.80 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2009-2010 ஆம் ஆண்டில் 2.53 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயலாக்கப்படும்.

[2010 மே 5

IX நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

9.1 ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள்:

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையம் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைகள் மேற்கொண்டு நெடுஞ்சாலைத் துறை பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

இதன் முக்கிய பணிகள் பின்வருமாறு:

- செயல்முறை சார்ந்த தள ஆராய்ச்சி
- தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்
- தரக் கட்டுப்பாடு ஆய்வுகள் மேற்கொள்ளுதல்

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சென்னையில் நான்கு ஆய்வகங்களும், நான்கு மண்டல அளவிலான ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை, தஞ்சாவூர் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன.

9.2 சாலைப் பணிகளில் தரக்கட்டுப்பாடு

சாலை மற்றும் பாலங்களின் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பெருமளவில் நிதி செலவிடப்படுகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யவும், முறையாகப் பராமரிக்கவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்கிறது.

2006-2007ஆம் ஆண்டு வரை தள ஆய்வுப் பணிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் 13 உட்கோட்டங்கள் (தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மண்டல ஆய்வகங்கள் உட்பட) சாலை மற்றும் பாலப்பணிகளில் தரக்கட்டுப்பாடு பரிசோதனைகளை மேற்கொண்டு வந்தன.

2007-2008ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நடைபெறும் அனைத்து சாலை மற்றும் பாலப் பணிகளின் தரத்தை மேம்படுத்த ஒவ்வொரு நிரந்தர கோட்டத்திற்கும்

2010 மே 5]

தரக்கட்டுப்பாட்டு அமைப்பு விரிவாக்கப்பட்டுள்ளது. இதில் 38 உதவிக் கோட்டப் பொறியர்ளர்களும் மற்றும் 114 உதவிப் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதன்மூலம் பணியின் தரத்தை முறையாக பரிசோதிக்க இயலுகிறது.

மேலும், புதிய நிர்வாக சீரமைப்பின்படி தரக்கட்டுப்பாட்டிற்கு 8 கோட்டப் பொறியாளர்கள் நியமித்து முழுமையான தரக்கட்டுப்பாடு அலகு அமைக்கப்பட உள்ளது. தவிர தற்போது இயங்கி வரும் ஒவ்வொரு வட்டத்திற்கும் தனித்தனியாக பரிசோதனைக் கூடங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனை விவரம் பின்வருமாறு.

சோதனை விவரங்கள்	2006-07	2007-08	2008-09	2009-10	மொத்தம்
சோதனை செய்த பணிகள்	820	1753	5506	4944	13023
மாதிரிகள் சேகரிக்கப்பட்டவை	4041	12426	38145	38716	93328
பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டவை	6128	16774	44360	44188	111450

9.3 சென்னையிலுள்ள ஆய்வகங்கள்

அ. மண் மற்றும் அடித்தளப் பொறியியல் ஆய்வகத்தின் பணிகள்

- கடின மற்றும் நெகிழ்வான சாலை அடித்தள வடிவமைப்புக்கு ஆலோசனை வ்ழங்குதல்
- மண் பரிசோதனை மேற்கொண்டு அடித்தளம் மற்றும் கீழ் அடித்தளப் பகுதிகளின் வடிவமைப்பிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்
- பாலங்களின் கீழ்த்தூண்களின் (Piles) தாங்கு திறனை கண்டறிந்து வடிவமைப்புக்கு உதவுதல்

[2010 மே 5

- சாலைகள் அமைப்பு மற்றும் பாலங்கள் கட்டுவதற்காக புதிய பொருட்களைப் பயன்படுத்துவது பற்றி தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்

ஆ. கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வகப் பணிகள்

- பாலங்களின் கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்படும் கற்கலவை விகிதங்களை பரிந்துரைத்தல்.
- சிமெண்ட் மற்றும் கற்கள் சோதனை மற்றும் அவற்றின் ஒத்திசைவு பற்றிய பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்.
- பாலங்களில் கற்கலவைப் பகுதிகளை சேதப்படுத்தாமல் அவற்றின் தரத்தைப் பரிசோதனை செய்தல்.

இ. நிலக்கீல் ஆய்வகத்தின் பணிகள்

- பகுதி அடர்த்தி நிலக்கீல் கற்கலவை, முழு அடர்த்தி நிலக்கீல் கற்கலவை, நிலக்கீல் தளம் ஆகியவற்றின் கலவை விகிதத்தை நிர்ணயம் செய்தல்.
- நிலக்கீல் மற்றும் சரளைக்கற்கள் தொடர்பான பல்வேறு சோதனைகளை மேற்கொள்ளுதல்.

ஈ.1 போக்குவரத்து ஆய்வகத்தின் பணிகள்

- சாலைகளின் மேல்தளத்திலுள்ள மேடு பள்ளங்களை கணக்கிடுவதற்கு பம்ப் இன்டகிரேடர் பரிசோதனை மேற்கொள்ளுதல்.
- போக்குவரத்து அளவு கணக்கெடுப்பு மற்றும் வாகனங்களின் அச்சு எடை கணக்கெடுப்புமூலம் சாலைத் தளத்தின் கனத்தை வடிவமைத்தல்.

2. போக்குவரத்து பொறியியல் கோட்டம்

இக்கோட்டத்தின்மூலம் சாலை சந்திப்புகளை வடிவமைத்தல் மற்றும் போக்குவரத்து மேம்பாட்டிற்கான பொறியியல் ஆலோசனைகள் வழங்குதல்.

2010 மே 5]

மேலும், சாலையில் உள்ள தள விவரங்கள் கணினிமூலம் இதற்கென பிரத்யேகமாக உள்ள RAM DAS கருவியை கொண்டு சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

சாலைகளில் விபத்துகளை தவிர்க்கும் பொருட்டு விபத்துகள் தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9.3.1 மண்டல ஆய்வகங்களின் பணிகள்

- *நெகிழ்வான சாலைகளின் மேற்பரப்பில் கருவிகள்மூலம் சோதனைகள் மேற்கொண்டு அழுங்கும் திறனை கண்டறிந்து மேற்தளம் வடிவமைப்பிற்குப் பரிந்துரைகள் செய்தல்.*
- *சாலைகளில் அமைந்துள்ள / அமையவுள்ள பகுதிகளில் அடிமட்ட மண் பரிசோதனைகள் செய்து சாலைத் தளங்களை முறையாக வடிவமைக்க ஆலோசனைகள் வழங்குதல்.*
- *சாலைகளில் பணிகள் நடைபெறும் போது பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான தரக்கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ளுதல்*
- *சென்னையிலுள்ள தலைமை ஆய்வகம் மூலம் செய்யப்படும் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையாக இருத்தல்.*

9.3.2 செயலாக்கம் மற்றும் சோதனை

அ. ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள்

முறையாக பராமரிக்கப்படும் சாலைகளிலும் சில பகுதிகளில் மேற்தளம் சேதமடைவதற்கான காரணங்களை ஆராய்ந்து அதனை சரிசெய்ய தக்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இது போன்றே பாலங்களின் பயன்பாடு முழுமையானதாக இருக்கும் வகையில் பாலங்களின் பல்வேறு விவரங்கள் பெறப்பட்டு சீரமைப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

ஆ. செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி

2009-2010ஆம் ஆண்டு ரூ.3.17 இலட்சம் செலவில் பகுதி-II திட்டத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. போக்குவரத்து வாகன வேக கணக்கீட்டு ஆய்வு செய்தல்.

2. கற்கலவைக்கு கியூரிங் செய்வதன் விளைவு ஆய்வு செய்தல்.

3. காப்பர் சிலாக்கை பயன்படுத்தி கற்கலவை தயாரித்து ஆய்வு செய்தல்.

இப்பணிகள் முடிவுற்ற பின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

தவிர, ரூ.4.86 இலட்சத்தில் ஆராய்ச்சிக்குத் தேவையான புதிய கருவிகள் 2009-2010ஆம் ஆண்டில் வாங்கப்பட்டன.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல்வேறு பணிகளுக்குரிய மாதிரிகளை சேகரித்து பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது. 2009-2010ஆம் ஆண்டில், சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான கலவை விகிதங்கள் நிர்ணயம் செய்தல் மற்றும் பரிசோதனைகள் வாயிலாக ரூ.2.97 கோடி வருவாய் கீழ்க்கண்டவாறு ஈட்டப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	எண்ணிக்கை	வருவாய் (ரூபாய்)
1.	மண் ஆய்வகத்தின் மூலம் மண் ஆய்வு சோதனைகள் தூணின் தாங்கும் திறன் கண்டறிதல் மற்றும் பிற ஆய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டவை	149	38,59,233
2.	சாலைப் பணிகளுக்கான நிலக்கீல் கலவை விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டவை	540	44,82,656
3.	பாலப் பணிகளுக்கான கற்கலவையின் கலவை விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டவை	623	79,98,153

2010 மே 5]

வ. எண்	விவரம்	எண்ணிக்கை	வருவாய் (ரூபாய்)
4.	போக்குவரத்து ஆய்வகத்தின் மூலம் சாலையின் மேடு பள்ள குறியீடு கண்டறிதல் மற்றும் பிற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டவை	19	3,63,731
5.	நான்கு மண்டல ஆய்வகங்களின் மூலம் செயல்படுத்தப்பட்ட சோதனைகள்	2037	1,30,02,287
	மொத்தம்	3368	2,97,06,060

பிற துறை, பிற மாநிலங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மண் மற்றும் தள அமைப்பு போன்ற 39 பரிசோதனைகள் செய்து ஈட்டப்பட்ட ரூ.6.15 இலட்சம் வருவாயும் இதில் அடங்கும்.

9.4 பாதிப்புக்கு இலக்காகும் சாலைப் பகுதிகள்

பல்வேறு வகையான சாலைகளிலும் மண்ணின் தாங்கு திறன் குறைவின் காரணமாகவும் அதிக சுமையேற்றிய கனரக வாகனங்கள் பெருமளவில் செல்வதாலும், நீர்பிடிப்புப் பகுதிகளாலும் அடிக்கடி பழுதடையும் சாலைப் பகுதிகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது. அத்தகைய சாலைகள் களப்பொறியாளர்கள்மூலம், மாநில சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் கண்டறியப்பட்டுள்ளன. தள ஆய்வுகள், மண் மாதிரிகள் மற்றும் மண் பரிசோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய ஆய்வகங்கள்மூலம் நடைபெற்று வருகின்றன. பழுதடைவதற்கான காரணங்களைத் தெரிந்து அப்பகுதிகளை முழுமையாக மேம்படுத்தவும் சாலைகள் மீண்டும் பழுதடையாமல் இருக்கவும் பரிந்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2009-2010ஆம் ஆண்டில் மண் ஆய்வுக் கூடத்தில் முறையே கலிபோர்னியா மண் தாங்கும் (California Bearing Ratio) விகிதப் பரிசோதனை

[2010 மே 5

3279 எண்ணிக்கையும் மற்றும் பெங்கிள்மேன் உத்திரத்தின் ((Benkleman Beam Deflection Test) வளைபடும் திறன் பரிசோதனை 906 கி.மீ. நீள 113 சாலைகளுக்கு மேற்கொள்ளப்பட்டு சாலை வடிவமைப்பு வழங்கப்பட்டுள்ளது.

9.5 தகவல் தொகுப்பு வங்கி (Data Bank)

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும் உடனடியாக அறிந்துகொள்ள, தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகளிலுள்ள 1326 பெரிய பாலங்களில், 614 பெரிய பாலங்களுக்கும், 7770 சிறிய பாலங்களில், 3408 சிறு பாலங்களுக்கும் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன மீதமுள்ள பாலங்களுக்கும் விவரங்கள் நடப்பாண்டில் சேகரிக்கப்படும்.

மேலும், பாலங்களுக்கு தனிக் குறியீட்டு (Unique) எண் வழங்கி சீரிய முறையில் பராமரிக்க தனி செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு அரசு சாலைகளிலும் 4179 இடங்களில் சேகரிக்கப்பட்ட வாகன கணக்கெடுப்பு விவரங்கள் கணினியில் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் பாலங்களின் விவரங்களை உடனடியாகப் பெறவும், பழுதடைந்த பாலங்களைக் கண்டறிந்து அவற்றை சீர்படுத்தவும் இயலும். எனவே, 3 ஆண்டுக்கு ஒரு முறை போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்கள் நிரந்தர கோட்டங்களிலிருந்து பெறப்பட்டு கணினியில் சேகரிக்கப்படும்.

9.6 பொறியாளர்களுக்கு பயிற்சித் திட்டம்

பொறியாளர்களின் தொழில்நுட்ப அறிவுத்திறனை மேம்படுத்தி சந்தேகங்களை நீக்கி நுட்பமான செயல்முறைகளை எடுத்து கூறுவதற்கு பயிற்சி மிகவும் அவசியமாகும். களப்பணியின் போது ஏற்படும் தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு சாத்தியமான செயல்முறைகள்மூலம் பொறியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலை மற்றும் பாலங்களை திட்டமிடுதல்,. வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல்

2010 மே 5]

ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உதவுகிறது.

தற்பொழுது, துறையில் உள்ள அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், மண், நிலக்கீல், கற்கலவை, போக்குவரத்து மற்றும் கணினி ஆகியவற்றில் தரக்கட்டுப்பாடுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை திட்டமாகும்.

புதியதாக நியமிக்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. இதுவரை 161 புதிய உதவி பொறியாளர்கள் இவ்வாண்டு வரை பயிற்சி பெற்றுள்ளனர்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு புது தில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையம் (CRRI), தேசிய நெடுஞ்சாலை பொறியாளர் பயிற்சி நிலையம் (NITHE) மற்றும் இதர நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

X. வடிவமைப்பு மற்றும் ஆய்வு

10.1. செயல்பாடுகள்:

நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகளின் மூலமாக செயலாக்கப்படும் சாலை விரிவாக்கப் பணிகளுக்குத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளும், பாலப் பணிகளுக்கு தள விவரங்கள் சேகரித்து வடிவமைப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் பணிகளும் இவ்வலகில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளை 7 ஆய்வுக் கோட்டங்களும், 4 வடிவமைப்புக் கோட்டங்களும் செயல்படுத்துகின்றன.

10.2. ஆய்வுக் கோட்டங்களும் அதன் பணிகளும்:

சென்னை, விழுப்புரம், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு 7 ஆய்வுக் கோட்டங்கள் இயங்குகின்றன.

இக்கோட்டங்களின் பணிகள்:

[2010 மே 5

I. தள ஆய்வு செய்தல்:

- பாலம் அமையவுள்ள இடம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் விரிவான ஆய்வு மேற்கொண்டு ஆறுகளின் நீர் பிடிப்பு மற்றும் தள விவரங்களை சேகரித்தல்.
- நீர் நிலை கடவிற்கு பொதுப் பணித் துறையிடமிருந்தும், இருப்புப்பாதை கடவிற்கு இரயில்வே நிர்வாகத்திடமிருந்தும் கருத்துருக்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் பெறுதல்.

II. மண்ணின் தாங்கு திறனை கண்டறியவும், பாலத்தின் அடித்தளத்தை வடிவமைக்கவும் ஆழ்துளைகளின் வாயிலாக மண்ணின் தன்மையை ஆய்வு செய்தல்.

III. அறிக்கை மற்றும் வரைபடம் தயாரித்தல்:

- தள மற்றும் மண்ணியல் ஆய்வுகளின் அடிப்படையில் செயலாக்கக்கூடிய கருத்துருக்களை தயார் செய்தல்.
- தள மட்டம் மற்றும் நீரியல் விவரங்களைக் கணக்கிடுதல்.
- கருத்துருக்கள் தொடர்பான அறிக்கைகள், நேர்பாடு வரைபடங்கள் தயார் செய்து உகந்த கருத்துருக்களுக்கு ஒப்புதல் பெறுதல்.
- புதிதாக அமைக்கப்படும் புறவழிச்சாலை, இணைப்புச் சாலை பணிகளுக்குத் திட்ட மதிப்பீடு தயாரித்தல்.

2009-2010ஆம் ஆண்டில் ரூ.486.49 கோடி மதிப்பீட்டில், 5 புறவழிச் சாலைகள் மற்றும் 37 ஆற்றுப் பாலங்கள், 6 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள், 4 இரயில்வே கடவுகளில் சாலை கீழ்ப்பாலங்கள் ஆகிய பணிகளுக்கு வடிவமைப்புகள் தயாரிக்கத் தேவையான தள விவரங்களை ஆய்வுக் கோட்டங்கள் அளித்துள்ளன.

10.3 வடிவமைப்புக் கோட்டங்களும் அதன் பணிகளும்:

சென்னையிலுள்ள வடிவமைப்பு மற்றும் ஆய்வு தலைமையகத்தில் 4 வடிவமைப்புக் கோட்டங்கள் இயங்குகின்றன.

2010 மே 5]

இக்கோட்டங்களின் பணிகள்:

- ஆற்றுப் பாலம், இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலம், கீழ்ப்பாலம், சாலை சந்திப்புகளில் அடுக்குப்பாலம் ஆகிய பணிகளுக்கான வடிவமைப்புகள், வரைபடங்கள், மதிப்பீடுகள், தொழில்நுட்ப நெறிமுறைகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.
- பாலப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளோடு பெறப்படும் மாற்று வடிவமைப்புகள், செயலாக்கத்தின் போது பெறப்படும் மாற்று வடிவமைப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்தாய்வு செய்து, ஒப்புதல் வழங்குதல்.
- ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்படும் விரிவான திட்ட அறிக்கைகளை சரிபார்த்தல்.
- பாலப்பணிகள் நடைபெறும் போது மண்ணின் தாங்குதிறன் குறைவாக உள்ளதாக கண்டறிந்தால் அதற்கேற்றவாறு அடித்தளத்தினை மாற்றி வடிவமைத்தல்.
- மண்ணியல் அறிக்கையின்படி பாலங்களின் ஏனைய கட்டமைப்பு பாகங்களில் மாற்றம் தேவையெனில் அவற்றுக்கு மாற்று வடிவமைப்பு தயாரித்தல்.
- மிகப் பெரிய கனரகச் சுமையுந்து சாலைகளில் செல்வதற்காக உள் துறை அமைச்சகத்தின் அனுமதி பெறுவதற்கு மைய அரசின் விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு அரசின் விதிமுறைகளின் படியும் கூர்ந்தாய்வு செய்து, தக்க பரிந்துரை செய்தல்.
- பிற துறைகளால் நிறைவேற்றப்படும் பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகளைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.
- அரசிடமிருந்து பெறப்படும் குறிப்பிட்ட பாலப் பணிகளுக்கு ஆய்வு மற்றும் வடிவமைப்பு தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

[2010 மே 5

10.4 வடிவமைப்பு கோட்டங்களால் முடிக்கப்பட்ட பணிகள்:

2008-2009ஆம் ஆண்டில் ரூ.687 கோடி மதிப்பீட்டில், 11 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள், 31 ஆற்றுப் பாலங்கள் என மொத்தம் 42 பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டன. 5 ஆற்றுப்பாலப் பணிகளுக்கான அடித்தளத்தினை மாற்றி வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டன.

2009-2010ஆம் ஆண்டில் ரூ.1564 கோடி மதிப்பீட்டில், இருப்புப்பாதைக் கடவுகளில் 47 மேம்பாலங்கள் மற்றும் 5 கீழ்ப்பாலங்கள், 53 ஆற்றுப் பாலங்கள், 3 சாலை மேம்பாலங்கள் ஆக மொத்தம் 108 பாலப்பணிகளுக்கான வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் வடிவமைப்பு அலகில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட 39 இரயில்வே மேம்பாலங்கள், 1 இரயில்வே கீழ்ப்பாலம், 6 ஆற்றுப்பாலங்கள் 3 சாலை மேம்பாலம், 2 மாற்று வடிவமைப்புகள் ஆகிய பணிகளும் அடங்கும்.

நடப்பு ஆண்டில் அரசால் நிறைவேற்றப்படவுள்ள பாலத்திட்டங்களில், சுமார் ரூ.1336 கோடி மதிப்பில் 66 பாலப் பணிகளுக்குத் தள விவரங்களை கூர்ந்தாய்வு செய்து, வடிவமைப்புகள் தயாரித்தல் மற்றும் ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கைகளை சரிபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், 13 புதிய புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட உள்ளன.

XI. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

1076 கி.மீ. நீளமான கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், 20 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. இவற்றுடன், மேலும் 3 சிறு துறைமுகங்கள் அறிவிக்கப்படுவதற்கான கருத்துருக்கள் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளன. 1953 ஆம் வருட பெருந்துறைமுகக் கழகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் பெரிய துறைமுகங்கள், மைய அரசின் கட்டுப்பாட்டிலும், 1908ஆம் வருட இந்திய துறைமுகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் சிறு துறைமுகங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

2010 மே 5]

தனியார் முதலீட்டின்மூலம் தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள், அதன் தொடர் வசதிகளான அலைநீர்த் தடுப்பி (Breakwater), தோணித் துறை (Jetty), நங்கூர மிதவை வசதி (Mooring) போன்றவற்றை உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முக்கிய நடவடிக்கைகளாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து வந்த தமிழ்நாடு அரசின் துறைமுகத் துறையானது, 18-03-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996)இன்படி தமிழ்நாடு கடல்சார் வாரியமாக மாற்றியமைக்கப்பட்டது.

இயற்கையான கடல் ஆழம், அனுகூலமான தொழில் சூழல், தொழிலாளர்களின் ஒத்துழைப்பு, திறமையான மனித வளம் மற்றும் அரசின் சீரிய கொள்கைகள் ஆகியவற்றின் காரணமாக, துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளும் தனியார் முதலீட்டுத் துறைமுகங்களும் அமைக்கப்படுவதற்கான சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

11.1 தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள்:

அரசுத் துறைமுகங்கள்	தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்	அறிவித்து ஆய்வில் உள்ள துறைமுகங்கள்
1. கடலூர்	1. காட்டுப்பள்ளி	1. பனையூர்
2. நாகப்பட்டினம்	2. எண்ணூர்	2. பரங்கிப்பேட்டை
3. பாம்பன்	3. முகையூர்	3. உடன்குடி
4. இராமேஸ்வரம்	4. திருச்சோபுரம்	
5. வாலிநோக்கம்	5. சிலம்பிமங்கலம் கப்பல் கட்டும் தளம்	
6. கன்னியாகுமரி	6. பி. ஒய். 03 எண்ணெய் வளப்பகுதி	

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

அரசுத் துறைமுகங்கள்	தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்	அறிவித்து ஆய்வில் உள்ள துறைமுகங்கள்
7. குளச்சல்	7. காவேரி	
	8. வானகிரி	
	9. திருக்கடையூர்	
	10. திருக்குவளை	
	11. புன்னக்காயல்	
	12. மணப்பாடு	
	13. கூடங்குளம்	

தமிழ்நாட்டில் தற்போதுள்ள சிறு துறைமுகங்களில், கப்பல் அணையும் தளவசதி இல்லாததால், கப்பல்களைக் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தி மிதவைகள்மூலமாக சரக்குகள் இறக்கி ஏற்றப்படுகின்றன.

11.2 சிறு துறைமுகங்களின் செயல்பாடுகள்:

அரசுத் துறைமுகங்களான கடலூர் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்களில், கப்பல்கள்மூலம் டீசல் மற்றும் நாப்தா ஏற்றுமதியும், உரம், நிலக்கரி, சமையல் எண்ணெய், கச்சா எண்ணெய் மற்றும் பல்வகை சரக்குகள் இறக்குமதியும் நடைபெறுகிறது. பாம்பன் கால்வாயில் சிறு கலன்கள் இக்கால்வாயைக் கடப்பதற்கு வழிகாட்டப்படுகின்றன. கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது.

தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் தொழில் முனைவோரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இயக்கப்படுகின்றன. இங்கு அடிப்படை வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய அனைத்துப் பொறுப்புகளும் அவர்களைச் சார்ந்ததாகும். எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து திரவ அமோனியா மற்றும் நாப்தா ஆகியவை கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாக கரையிலுள்ள சேமிப்புக் கலன்களுக்கு நேரடியாக இறக்குமதி செய்யப்படுகிறது.

2010 மே 5]

பதின்மூன்று தனியார் முதலீட்டுத் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம் (திருவள்ளூர்), திருச்சோபுரம் (கடலூர்), பிஓய்.03 எண்ணெய் வளப்பகுதி (கடலூர்), திருக்கடையூர் (நாகப்பட்டினம்) மற்றும் கூடங்குளம் (திருநெல்வேலி) ஆகிய ஐந்து துறைமுகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள எட்டு தனியார் முதலீட்டுத் துறைமுகங்களுக்கான நிர்மாணப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

11.3 சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விவரம்:

(1) அரசுத் துறைமுகங்கள்:

வ. எண்	துறைமுகம்	ஏற்றப்படும் சரக்குகள்	இறக்கப்படும் சரக்குகள்
1.	கடலூர்	---	உரம், நிலக்கரி மற்றும் வினைல் குளோரைடு மோனோமர்
2.	நாகப்பட்டினம்	டீசல் மற்றும் நாப்தா	சமையல் எண்ணெய், கச்சா எண்ணெய் மற்றும் பல்வகை சரக்குகள்.

(2) தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்:

வ. எண்	துறைமுகம்	ஏற்றப்படும் சரக்குகள்	இறக்கப்படும் சரக்குகள்
1.	எண்ணூர் சிறு துறைமுகம்	---	திரவ அமோனியா
2.	பி.ஓய்.03 எண்ணெய் வளப்பகுதி	கச்சா எண்ணெய்	---
3.	திருக்கடையூர்	---	நாப்தா


TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

11.4 வாரியத்தின் செயல்பாடும், அதிகரித்து வரும் வருவாயும்:

கடல்சார் வாரியம், கடந்த 2001-2002ஆம் ஆண்டு முதல் 2005-2006ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் 33,92,422 மெட்ரிக் டன்கள் சரக்கினைக் கையாண்டுள்ளது. தற்போதைய 2006-2007ஆம் ஆண்டு முதல் 2009-2010ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளில் 37,64,825 மெட்ரிக் டன்கள் சரக்கினைக் கையாண்டுள்ளது. இதனை ஒப்புநோக்கும் போது கடந்த நான்கு ஆண்டுகளில் கையாண்ட சரக்கு, இதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் கையாண்ட சரக்கினைவிட 3.72 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாகும்.

சரக்கு கையாண்ட விவரம்



1997ஆம் ஆண்டு உருவான கடல்சார் வாரியம் அந்நிதியாண்டில், 19 கப்பல்கள்மூலம் 2.69 இலட்சம் மெட்ரிக் டன் சரக்கு கையாண்டு, அரசின் மானிய உதவியுடன் இயங்கி வந்தது. வாரியத்தின் சீரிய செயல்பாட்டின் காரணமாக சரக்குப் போக்குவரத்து படிப்படியாக அதிகரித்து, 2008-2009ஆம் நிதியாண்டில் 92 கப்பல்கள் வந்து சென்றதன்மூலம் ரூ.15.10 கோடி மொத்த வருவாய் ஈட்டி, அதில், குத்தகை வருமானத்தில் அரசின் பங்குத் தொகையான ரூ.2 கோடியே 75 இலட்சத்திற்கான காசோலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் 09.10.2009 அன்று வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

2009-2010 ஆம் நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவு 120 கப்பல்கள் வந்து சென்றதன்மூலம் 11.74 இலட்சம் மெட்ரிக் டன் சரக்கு கையாண்டு, ரூ.22.17 கோடி மொத்த வருவாயை கடல்சார் வாரியம் ஈட்டியதன் அடிப்படையில், குத்தகை வருமானத்தில் அரசின் பங்குத்தொகையான ரூ.4 கோடியே 75 இலட்சம் வழங்கப்பட உள்ளது.

11.5 சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை:

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானதான தொழிற்சாலைகளுக்கும் துறைமுகங்களுக்குமான நெருங்கிய தொடர்பினை உணர்ந்து, துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் தனிப்பட்ட உபயோகத்திற்கென துறைமுகங்கள், தோணித்துறைகள் மற்றும் நங்கூர மிதவைகள் ஆகியவற்றை தனியார் பங்கேற்பின் மூலமாக அமைப்பதற்கு இவ்வாரியத்தின்மூலம் அரசு ஊக்கமளித்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்காக ஆகஸ்ட் 2007 முதல் சிறு துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கையினை அரசு வகுத்து செயல்படுத்தி வருகிறது.

துறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்:

தொழிற்சாலைகளுக்கும், துறைமுகங்களுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துறைமுகத்தின் மேம்பாட்டினை தொழில் வளர்ச்சியுடன் இணைத்து செயல்படுத்துவதும் இவ்வாரியத்தின் நோக்கம் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான தனியார் முதலீட்டுத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதே இவ்வாரியத்தின் குறிக்கோளாகும்.

(i) நோக்கம்:

- *நிலக்கரி, நாப்தா, எண்ணெய், இயற்கை வாயு ஆகியவற்றை துறைமுகம் சார்ந்த அனல் மின் நிலையங்கள் தமது தனி உபயோகத்திற்காக இறக்குமதி செய்வதற்கான வசதிகளை அளித்தல்.*

[2010 மே 5

- ஏற்றுமதி சார்ந்த தொழில்களையும் துறைமுகம் சார்ந்த தொழில்களையும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- நெடுஞ்சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகளின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கிழக்குக் கடலோரப் பகுதியில் கப்பல் போக்குவரத்து வசதிகளை உருவாக்குதல்.
- சுற்றுலா, உல்லாசப் படகு மற்றும் கரையோர வாணிபம் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- கப்பல் பழுதுபார்த்தல் மற்றும் மிதவை கலன்கள் கட்டுவதற்கான வசதிகளை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் வசதி செய்தல்.

(ii) கொள்கை வழிமுறைகள் – தனியார் பங்கேற்பு:

- மொத்த அளவிலான சரக்குகள், சரக்குப் பெட்டகங்கள் மற்றும் திரவ நிலையிலான பெட்ரோலியம், இரசாயனங்கள் போன்ற அனைத்து பொருட்களையும் கையாளும் வகையில் பல்நோக்கு துறைமுக வசதிகளை சிறு துறைமுகங்களில் பொது மற்றும் தனியார் பங்கேற்பின் மூலமாக மேம்படுத்துதல்

தனியார் முதலீட்டுத் தோணித்துறைகள் (Captive Jetties):

- தொழில் முனைவோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கான தனியார் முதலீட்டுத் தோணித்துறைகளை (Captive Jetties) உருவாக்குவதற்கு அரசு அனுமதியளிக்கும். கணிசமான அளவில் முதலீடு செய்யும் தனியார் நிறுவனங்கள் கடலோரங்களில் ஏற்படுத்தும் துறைமுகம் சார்ந்த வசதிகளுக்காக தனிப்பட்ட மற்றும் வணிக ரீதியான தோணித்துறைகளை (Commercial Jetties) உருவாக்கத் தேவையான இட வசதியளிக்கப்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

அணுகுமுறை

- ❖ துறைமுகங்கள், தோணித்துறைகளை (Jetties) கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து வெளிப்படையான வழிமுறைகள் வகுக்கப்பட்டு தனியார் பங்கேற்பின்மூலம் ஒவ்வொரு கருத்துருவும், அதன் தகுதியின் அடிப்படையிலும் மற்றும் தனித்தன்மையின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்படும்.

(iii) செயல்முறைத் திட்டம்:

- ❖ உலக அளவிலான அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன்மூலம் வெளிப்படையான தன்மை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.
- ❖ இத்திட்டங்கள், கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் செயல்படுத்தப்படும்.
- ❖ மேற்கூறிய திட்டங்கள் முதலில் 30 ஆண்டுகளுக்கும் பின்னர் 50 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடியதாகவும் இருக்கும்.
- ❖ கையாளப்படும் சரக்குகளுக்கு நியாயமான கட்டணத் தொகை வசூலிக்கப்படும்.

11.6 துறைமுக மேம்பாட்டுப் பணிகள்:

அ. அரசுத் துறைமுகங்கள்:

1. கடலூர் துறைமுகம்:

(அ) சுனாமியால் சேதமுற்ற இத்துறைமுகத்தை, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.11.91 கோடி செலவில் அலைநீர் தடுப்பி புனரமைப்பு, நீட்டித்தல் மற்றும் தூர் வாருதல் ஆகிய பணிகள் செப்டம்பர் 2009ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிட். நிறுவனத்தினர், கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைத்துள்ள ப்ளாஸ்டிக் (பிவிசி) தொழிற்சாலைக்குத் தேவையான வினைல் குளோரைடு மோனோமர் எனும் மூலப் பொருளை இறக்குமதி செய்வதற்காக கடலூர் துறைமுக எல்லைக்குள் தீவுத் தோணித்துறை (Jetty)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

அமைத்து 2009-2010 ஆம் ஆண்டில் இத்தோணித்துறைமூலமாக 16 கப்பல்கள்மூலம் 97,268 மெட்ரிக் டன் வினைல் குளோரைடு மோனோமரினை இறக்குமதி செய்துள்ளனர்.

(இ) கடலூர் பவர்ஜென் கார்ப்பரேஷன் லிட். தனது 1320 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாள்வதற்கு, சுமார் ரூ.325 கோடி செலவில், ஒரு தோணித்துறை (Jetty) அமைக்க கொள்கை அளவிலான அனுமதி, இவ்வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, இத்துறைமுகத்தின் எல்லைகள், அரசாணை நிலை எண் 213, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 02-09-2008-இன் வாயிலாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. 12.66 ஏக்கர் பரப்புள்ள கடலோர நிலம் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தால் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

2. நாகப்பட்டினம் துறைமுகம்:

(அ) சுனாமியால் சேதமுற்ற இத்துறைமுகத்தை, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.44.64 கோடி செலவில் அலைநீர் தடுப்பி புவரமைப்பு, நீட்டித்தல், தூர் வாருதல் மற்றும் சரக்கு கிடங்குகள் கட்டுதல் ஆகிய பணிகள் செப்டம்பர் 2009ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

இத்துறைமுகத்தில், 2009-2010ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு சரக்குகள் கையாளப்பட்டுள்ளன:

சரக்கு	கப்பல் எண்ணிக்கை	கையாளப்பட்ட அளவு மெட்ரிக் டன்
சமையல் எண்ணெய்	12	47,285
தேங்காய் பிண்ணாக்கு	2	9,635
பெட்ரோலியப் பொருட்கள் (எரிபொருள்)	1	15,551
மொத்தம்	**15**	**72,471**

2010 மே 5]

(ஆ) நாகப்பட்டினம் துறைமுக எல்லைக்குள், திருவாளர்கள் சி.பி.சி.எல். நிறுவனம் தனது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான சரக்குகளை கையாள ஒரு தோணித்துறையினை (Jetty) அமைத்து அதன்மூலம் சரக்குகளைக் கையாண்டு வருகிறது.

இத்தோணித்துறையில், 2009-2010ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு சரக்குகள் கையாளப்பட்டுள்ளன:

சரக்கு	கப்பல் எண்ணிக்கை	கையாளப்பட்ட அளவு மெட்ரிக் டன்
கச்சா எண்ணெய்	24	2,93,915
நாப்தா	14	1,41,176
டீசல்	10	97,393
மொத்தம்	48	5,32,484

3. குளச்சல் துறைமுகம்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இத்துறைமுகம், சர்வதேச கப்பல் வழித்தடத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளதுடன், கரைக்கு அருகிலேயே பெரிய கப்பல்கள் வந்து செல்லும் துறைமுகம் அமைக்கத் தேவையான கடல் ஆழத்துடன் உள்ளது. மேற்கண்ட சிறப்புத் தன்மைகளின் காரணமாக, ரைட்ஸ் (RITES) லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையில் குளச்சல் துறைமுகம் சரக்குப் பெட்டகங்களைக் கையாள்வதற்கு தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த அதிக அளவு முதலீடு தேவைப்படும் என்பதால், மைய அரசிடம் இதற்கான உதவி கோரப்பட்டது. 21-07-2009-இல் மைய அரசானது இத்திட்டத்தினை மாநில அரசே செயல்படுத்துமாறு தெரிவித்தது.

இத்துறைமுகத்தினை மேம்படுத்தும் தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால், 15-04-2010 அன்று ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டு, சாத்தியக்கூறு அறிக்கையை ஐந்து மாத காலத்திற்குள் வழங்கிட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

[2010 மே 5

ஆ. தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்:

1. காட்டுப்பள்ளி துறைமுகம்:

திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூர் அருகில், திருவாளர்கள் எல். & டி. ஷிப் பில்டிங் லிமிடெட் நிறுவனத்தினர், சுமார் ரூ3375 கோடி மதிப்பில் கப்பல் கட்டும் தளத்துடன்கூடிய சிறு துறைமுக வளாகம் அமைக்க ஏதுவாக இத்துறைமுகத்தின் எல்லைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன. இத்துறைமுக எல்லைக்குட்பட்ட சுமார் 77 ஏக்கர் பரப்புள்ள கடலோர நிலம் இந்நிறுவனத்திற்கு டிசம்பர் 2008-இல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. துறைமுக மேம்பாட்டுப் பணிகள் நடைபெறும் இடத்தில் குடியிருப்பவர்களை மாற்று இடத்தில் குடியமர்த்தும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தை சுங்கத் துறைமுகமாக அறிவிப்பதற்கான கருத்துரு மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. 400 மீட்டர் நீள வடக்கு நீர்த்தடுப்பியும், 600 மீட்டர் நீள தெற்கு நீர்த்தடுப்பியும், கப்பல் தூக்கும் (Ship Lift) வசதிக்குத் தேவையான கட்டுமானப் பணிகளும், தூர் வாருதல் போன்ற மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2. எண்ணூர் சிறு துறைமுகம்:

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள இத்துறைமுகத்தில், திருவாளர்கள் கோரமண்டல் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் பன்முனை நங்கூர மிதவை மற்றும் அமிழ்குழாய் அமைப்புகள் ஆகிய கடல்சார் வசதிகள் ரூ.22.64 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு திரவ அமோனியா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. 2009-2010ஆம் ஆண்டில், 5 கப்பல்கள்மூலம் 44,504 மெட்ரிக் டன்கள் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

3. முகையூர் துறைமுகம்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரம் அடுத்துள்ள முகையூரில் திருவாளர்கள் மார்க் சுவர்ணபூமி போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சுமார் ரூ.500 கோடி மதிப்பில் அமைக்கவுள்ள கப்பல் பழுதுபார்க்கும் தளம் அமைப்பதற்காக அரசாணை எண் 224, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்

2010 மே 5]

துறை, நாள் 23-11-2009இன் வாயிலாக துறைமுகம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

4. திருச்சோபுரம் துறைமுகம்:

கடலூர் மாவட்டம், திருச்சோபுரத்தில், திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அமைக்கவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பாலையில், கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களைக் கையாள்வதற்காக சுமார் ரூ.1800 கோடி மதிப்பில் ஒரு துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினர் சுத்திகரிப்பாலைக்குத் தேவையான தளவாடங்களை 2009-2010ஆம் ஆண்டில், 9776 மெட்ரிக் டன் அளவிற்கு தற்காலிக தோணித்துறை (Jetty) மூலம் இறக்குமதி செய்துள்ளனர்.

மேலும், இந்நிறுவனத்தின் பங்கு நிறுவனமான திருவாளர்கள் கடலூர் போர்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின்மூலம் இத்துறைமுகத்தினை மேம்படுத்தவும், வணிகச் சரக்குகளை கையாளவும், அனுமதி கோரியுள்ளது. இதற்கான ஒதுக்கீட்டு (Assignment) ஒப்பந்தம், உரிமம் மற்றும் துறைமுக மேம்பாட்டு ஒப்பந்தம் ஆகியவற்றின்மீது சட்டக்கருத்து பெறப்பட்டு, அதனடிப்படையில் உரிய மாற்றங்கள் செய்யுமாறு இந்நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது.

5. சிலம்பிமங்கலம் கப்பல் கட்டும் துறைமுகம்:

கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலத்தில் 75,000 டன்கள் வரை கொள்ளளவுக் கொண்ட கப்பல்கள் கட்டுவதற்காக, திருவாளர்கள் குட்எர்த் கப்பல் கட்டும் நிறுவனத்தால் ரூ.500 கோடி மதிப்பில் அமைக்கவுள்ள துறைமுகத்திற்கு அரசாணை எண் 183, நெடுஞ்சாலைத் துறை, நாள் 23-07-2007-இல் வழங்கப்பட்டது. இத்துறைமுகம் மைய அரசினால் சுங்கத் துறைமுகமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்துறைமுகத்தில் சூப்பர் பாஸ்பேட் உர உற்பத்தித்தளம் அமைப்பதற்கான கருத்துருவிற்கும் கொள்கை அளவிலான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரிய நிபந்தனைகளின்படி உரத்தொழிற்சாலைக்குரிய தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் கப்பல் கட்டும் தளத்திற்கான

[2010 மே 5

தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை இந்நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பான சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு நெறிகள் (Terms of Reference), அனைத்து மறுப்பின்மை சான்றுகள் மற்றும் இதர அனுமதிகள் பெறுதல், நிதிநிலை இறுதி செய்தல் போன்றவற்றை விரைவில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இவற்றை பெற்றபின் துறைமுக கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

6. பி. ஒய். 03 எண்ணெய் வயப்பகுதி:

கடலூருக்கு தென்கிழக்கே சுமார் 50 கி.மீ. தொலைவில் கடலில் அமைந்துள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெயை சேமித்து ஏற்றுமதி செய்வதற்காக ரூ.33.62 கோடி மதிப்பில், மிதவை அமைப்புகளுடன் இத்துறைமுகம் இயங்குகிறது. 2009-2010ஆம் ஆண்டில், 7 கப்பல்கள்மூலம் 68,364 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையாளப்பட்டுள்ளது.

7. காவேரி துறைமுகம்:

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் அருகில் திருவாளர்கள் பி.இ.எல். பவர் லிமிடெட் நிறுவனத்தினர் தங்களது 1320 மெகாவாட் மின்உற்பத்தி நிலையத்திற்கு தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கான தோணித்துறையினை(Jetty) சுமார் ரூ.200 கோடி மதிப்பில் அமைக்க உள்ளனர். அதற்காக, இத்துறைமுக எல்லைகள், அரசாணை எண்.2, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 07-01-2010-இன் வாயிலாக அறிவிக்கை செய்யப்பட்டது.

8. வானகிரி துறைமுகம்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வானகிரியில் திருவாளர்கள் என்.எஸ்.எல். பவர் லிமிடெட் நிறுவனத்தினர் தங்களது 1500 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கான தோணித்துறையினை (Jetty) சுமார் ரூ.250 கோடி மதிப்பில் அமைக்க உள்ளனர். அதற்காக இத்துறைமுக எல்லைகள், அரசாணை எண் 147, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 29-07-2009-இல் அறிவிக்கை செய்யப்பட்டது. இந்நிறுவனத்திற்கு, நீர்முகப்பு பிப்ரவரி 2010ஆம் ஆண்டு முதல்

2010 மே 5]

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தை, சுங்கத் துறைமுகமாக அறிவிக்கை செய்வதற்கான கருத்துரு, மைய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

9. திருக்கடையூர் துறைமுகம்:

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூருக்கு அருகிலுள்ள பிள்ளைப்பெருமாள் நல்லூரில், 1996-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வரும் துறைமுகத்தில், திருவாளர்கள் ப்பி.ப்பி.என். (P.P.N.) பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினரால், 330 மெகாவாட் மின் உற்பத்தி திட்டத்திற்கான இயற்கை வாயு மற்றும் நாப்தா எரிபொருள் கையாளப்படுகின்றது.

2009-2010 ஆம் ஆண்டில், இத்துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்குகள் விவரம் பின்வருமாறு:

நாப்தா	22 கப்பல்கள்	2,62,147 மெட்ரிக் டன்
எரிவாயு	——	61,419 மெட்ரிக் டன்
கச்சா எண்ணெய்	——	3090 மெட்ரிக் டன்
மொத்தம்	22 கப்பல்கள்	3,26,656 மெட்ரிக் டன்

தற்போது திருவாளர்கள் இந்துஸ்தான் ஆயில் எக்ஸ்ப்ளோரேஷன் லிமிடெட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள வாயு குழாய், துறைமுக எல்லைக்குள் இருக்க வேண்டுமென்பதால், இத்துறைமுகத்தின் எல்லைகள் அரசாணை நிலை எண் 16, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 20-01-2010-இன் படி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

10. திருக்குவளை துறைமுகம்:

நாகப்பட்டினம் மாவட்டம், வேட்டைக்காரன்இருப்பு கிராமத்தின் அருகில், திருவாளர்கள் டிரைடம் போர்ட் அன்ட் பவர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் அமைக்க உத்தேசித்துள்ள 2000 மெகாவாட் வணிக மின் நிலையத்திற்கான நிலக்கரியை கையாளுவதற்காக, சுமார் ரூ.650 கோடி மதிப்பில்

[2010 மே 5

அமைக்கவுள்ள திருக்குவளை துறைமுகத்தின் எல்லைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்துறைமுகத்தில், 276 ஏக்கர் பரப்புள்ள துறைமுக நிலம், ஆண்டு உரிம அடிப்படையில் கடல்சார் கட்டுமானங்களை உருவாக்குவதற்காக கடல்சார் வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், விரிவான திட்ட அறிக்கை இந்நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. துறைமுகக் கட்டுமானப் பணிகள் துவங்குவதற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அனுமதியினை பெற்றுத் தருமாறு இந்நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது.

11. மணப்பாடு துறைமுகம்:

தூத்துக்குடி மாவட்டம், வேம்பாரில் திருவாளர்கள் இந்தியன் பவர் ப்ராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தினரால் நிறுவப்பட இருக்கும் 2000 மெகாவாட் இயற்கை வாயு மின் உற்பத்திக்கு தேவையான திரவ இயற்கை வாயுவை கையாளுவதற்கென, சுமார் ரூ.1,800 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படவுள்ள மணப்பாடு, சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு, கடல்சார் கட்டுமானங்களை நிறுவுவதற்கு, துறைமுக நிலம் 100 ஏக்கர் ஆண்டு உரிம அடிப்படையில் கடல்சார் வாரியத்தால், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினர், நிதிப் பங்கீட்டினை விரைவில் முடிவு செய்யவுள்ளனர்.

12. கூடங்குளம் துறைமுகம்:

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் இந்திய அணுமின் சக்தி கழகத்தால் அமைக்கப்பட்டு வரும் 2000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரு அணு உலைகளின் தேவைக்கான இயந்திரங்களை இறக்குமதி செய்யும்பொருட்டு இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் நிலையத்திற்குத் தேவைப்படும், கடல் நீர் உபயோகத்திற்காக, சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளம் மற்றும் 500 மீட்டர் அகலம் கொண்ட நீர்த்தேக்க அமைப்பு, இயந்திரங்கள் கையாளத் தேவையான நீர்த்தடுப்பிகளுடன்கூடிய தோணித்துறை (Jetty) ஆகியவை இத்துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

2010 மே 5]

இத்துறைமுகத்தில், 2009-2010 ஆம் ஆண்டில் 231 மெட்ரிக் டன் இயந்திரத் தளவாடங்கள் கையாளப்பட்டுள்ளன.

11.7 அறிவித்து ஆய்வில் உள்ள துறைமுகங்கள்:

1. பனையூர் துறைமுகம்:

காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் அடுத்துள்ள பனையூரில், திருவாளர்கள் கோஸ்டல் தமிழ்நாடு பவர் லிமிடெட் நிறுவனத்தினர் அமைக்க உத்தேசித்துள்ள 4000 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரியை கையாளுவதற்காக, தனியார் முதலீட்டுத் துறைமுகம் அமைக்க, கொள்கை அளவிலான அனுமதி வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் 20-07-2009 அன்றைய கூட்டத்தின் தொடர்பாக, பரமன்கேணி துறைமுகம் அமையவுள்ள இடம் சுற்றுப்புறச்சூழல் கூர் உணர்ச்சியுடைய (Eco-sensitive) இடம் என கண்டறிந்து அதனடிப்படையில் மாற்று இடத்தினை தெரிவு செய்யுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையிலும், திருவாளர்கள் பி. எப். சி. கன்சல்டிங் சர்வீசஸ் நிறுவனத்தினர் தனது 26-08-2009 கடிதத்தில் கோரியுள்ளதின் அடிப்படையிலும், இத்துறைமுகத்தினை காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பனையூர் கிராமத்தில் அமைக்க கொள்கை அளவிலான அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக அனுமதி கோரி நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

2. பரங்கிப்பேட்டை துறைமுகம்:

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் திருவாளர்கள் ஐ.எல். & எப்.எஸ். நிறுவனத்திற்கு, அவர்களது 4000 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாளுவதற்காக, சுமார் ரூ.1,300 கோடி மதிப்பில் தனியார் துறைமுகம் அமைக்க கொள்கை அளவிலான அனுமதி 19-06-2008 அன்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இத்துறைமுகத்தின் எல்லைகள் நிர்ணயம் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

3. உடன்குடி துறைமுகம்:

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகிலுள்ள உடன்குடியில் திருவாளர்கள் உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினர் அமைக்கவுள்ள 1600 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள அனல்மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாளுவதற்காக சுமார் ரூ. 600 கோடி மதிப்பில் தோணித்துறை (Jetty) அமைப்பதற்கான கொள்கை அளவிலான அனுமதி 06-07-2009 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கான கடல்நீர் உள்ளிழுப்பு மற்றும் வெளியேற்றுகை அமைப்புகள் உருவாக்குவதற்கும் கொள்கை அளவிலான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனத்தினை (National Institute of Oceanography, Goa) தனது தொழில்நுட்ப ஆலோசகராக நியமித்துள்ளது. இத்துறைமுக தோணித்துறை (Jetty) அமைக்கும் திசையினை முடிவு செய்யும் பணியில் தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

11.8 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்:

16-09-1998 ஆம் நாளன்று தூத்துக்குடியில் துவக்கப்பட்ட தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம், அரசாணை எண் 196, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 01-08-2008இன்படி, தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின்கீழ் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுவரை 15 தொகுதி பயிற்சி வகுப்புகள் முடிவுற்றுள்ளன. தொடக்கத்தில், இக்கல்வி நிறுவனத்தில், கடல் மாலுமிக்கான பயிற்சி மற்றும் கடல்சார் பயிற்சிகள் நடத்தப்பட்டன. தற்போது மாலுமிப் பயிற்சி மற்றும் கடல்சார் பயிற்சிக்குப் பதிலாக 40 நபர்கள் கொண்ட பொது முறை மாலுமி பயிற்சி (General Purpose Rating) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இப்பயிற்சி நிறுவனத்தில் இந்திய அரசு கப்பல் துறை 1995 விதிகளின்படி "தன்னிலை பாதுகாப்பு உக்தி "(Personal Survival Techniques), "கடலில் முதலுதவி செய்தல் (Elementary First Aid)", "தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (Personal Safety and Social Responsibility)", "எண்ணெய்க் கப்பல் பரிச்சயம் (Oil Tanker Familiarization)"மற்றும்

2010 மே 5]

"தீயணைப்பு அடிப்படை பாதுகாப்புப் பயிற்சி" (Fire Prevention and Fire fighting) ஆகிய ஐந்து வகைப்பட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இப்பயிற்சிக் கழகத்தில் பயின்ற பயிற்சியாளர்கள், கடந்த ஆறு பயிற்சித் தேர்விலும் தொடர்ச்சியாக 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளனர். இதற்கு முன்பான கடந்த ஐந்து பயிற்சித் தேர்விலும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றதன் அடிப்படையில், கப்பல் துறை பேரியக்குனரின் அங்கீகாரம் பெற்ற மாலுமிகள் பொறுப்புக் கழக தேர்வுக்குழு, தமிழ்நாடு கடல்சார் பயிற்சிக் கழகத்தின் தொடர் தேர்ச்சியினை பாராட்டி "மிகச் சிரிய முறையில் தொடர்ந்து சேவை புரியும் பயிற்சி நிறுவனம்" என்ற சான்றிதழை 30-10-2009 அன்று வழங்கியது.

11.9. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் புதிய நிர்வாக அலுவலகக் கட்டடம்:

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தலைமை அலுவலகத்திற்கு புதிய நிர்வாக அலுவலகக் கட்டடம், சென்னை கிரீன்வேஸ் சாலையில் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

XII. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-04-1974-இல் கம்பெனிகள் சட்டம் 1956-இன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையங்களுக்குத் தேவையான மொத்த நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது.

12.1. நிலக்கரியை ஏற்றி இறக்கும் துறைமுகங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரி, சொந்த மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி தூத்துக்குடி மற்றும் எண்ணூர் துறைமுகங்களுக்கு கொண்டு வந்து சேர்க்கப்படுகிறது.

12.2 சொந்த கப்பல்கள் மற்றும் வாடகை கப்பல்கள்:

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், குறைந்த ஆழமுள்ள கடல் பகுதியிலும் இயங்கும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார் மற்றும் எம்.வி. தமிழ் காமராஜ் ஆகிய மூன்று சொந்த கப்பல்களை ஆகஸ்ட் 1985 முதல் ஜனவரி 1987 வரையிலான கால கட்டத்தில் வாங்கியது. சொந்த கப்பல்களின்மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை கொண்டு வரும் பணியினை மேற்கொள்கிறது. இது தவிர, தேவைக்கேற்ப, இந்திய மற்றும் அயல்நாடுகளில் பதிவு செய்துள்ள கப்பல் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்படுகின்றன. 2009-2010ஆம் ஆண்டில் தனியார் நிறுவனங்களின் ஏழு கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன.

12.3.1 நிலக்கரி கையாளுதல்:

இக்கழகமானது, 2009-2010ஆம் ஆண்டில் இந்திய நிலக்கரி நிறுவனத்தால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த சுமார் 128.34 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியில் 127.79 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை அனல்மின் நிலையங்களுக்கு எடுத்து வந்துள்ளது.

12.3.2 கடந்த ஆண்டுகளில் கழகத்தின் செயல்பாடு:

கடந்த ஆண்டுகளில் இக்கழகத்தால் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு, ஈட்டிய மொத்த வருவாய் மற்றும் இலாப விவரங்கள் பின்வருமாறு:

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை கழகத்தின் நிகர நட்டம் ரூ.8.91 கோடியாகும். 2006-2007ஆம் ஆண்டு முதல் 2008-2009ஆம் ஆண்டு வரை இந்நிறுவனம் ரூ.4.94 கோடி இலாபம் ஈட்டி உள்ளது. கடந்த ஆண்டில் ரூ.3.24 கோடி இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2010 மே 5]

2006–2007 முதல் 2009–2010 வரை

வருடம்	எடுத்துவரப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்)	மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்)	நிகர லாபம் (ரூபாய் கோடியில்)
2006-2007	*131.74*	*391.51*	(+) *0.08*
2007-2008	*133.90*	*548.90*	(+) *1.94*
2008-2009	*133.11*	*684.62*	(+) *2.92*
2009-2010	*127.79*	*442.15**	(+) *3.24**

*உத்தேசக் கணக்கின்படி

*2010-2011*ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இந்திய நிலக்கரி நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ள சுமார் 138 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை எடுத்துவர திட்டமிட்டுள்ளது.

12.4. கன்னியாகுமரி படகுத்துறை:

இக்கழகம், குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு பயணிகள் படகுப் போக்குவரத்தினை இயக்கி வருகிறது. முந்தைய நிதியாண்டில் வாங்கப்பட்ட எம்.எல். குகன் மற்றும் எம்.எல். பொதிகை ஆகிய இரு படகுகளுடன் ஏற்கெனவே இயக்கத்திலிருந்த எம்.எல். பாகீரதி படகினையும் சேர்த்து, தற்போது மூன்று படகுகள் இயக்கப்பட்டு வருவதால், சுற்றுலாப் பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்காமல் விரைவாக அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவு பாறைக்குச் சென்றுவர வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.


[2010 மே 5

கடந்த நான்காண்டுகளுக்கான படகுத்துறையின் செயல்பாட்டு விவரங்கள் பின்வருமாறு:


ஆண்டு	படகுகளின் எண்ணிக்கை	பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	கட்டண வசூல் (ரூபாய் இலட்சத்தில்)	இலாபம் (ரூபாய் இலட்சத்தில்)
2006–07	2	14.79	287.45	52.01
2007–08	2	16.65	324.09	50.34
2008–09	3	18.48	359.73	75.75
2009–10	3	19.23	376.63	50.00 (உத்தேசக் கணக்கின்படி)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சாலைகளின் வகைகள் மற்றும் அதன் நீளம் (கி.மீ)



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS


2574.11
2542.68
2158.72
1758.74
1432.08
1068.66
1500
2001 - 02
2002 - 03
2003 - 04
2004 - 05
2005 - 06
2006 - 07
2007 - 08
2008 - 09
2009 - 10
ஆண்டுகள்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 – 11 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு
(ரூ. கோடியில்)



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

இணைப்பு-V

(572 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடு

அரசின் பராமரிப்பில் உள்ள சாலை மற்றும் பாலங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடப்பு நிதியாண்டுக்கு மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.4,049 கோடியை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

சாலைப் பணிகள்

சாலைப் பணிகளில் திட்டப் பணிகளுக்கு ரூ.2,225 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.653 கோடியும் ஒதுக்கப்படும். இதன்மூலம் சுமார் 5,000 கி.மீ. சாலைகளை அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் மற்றும் சுமார் 5,000 சாலைகளை பராமரிக்கவும் வழிவகை செய்யப்படும்.

பாலப் பணிகள்

பாலப் பணிகளுக்காக நடப்பாண்டில் ரூ.1,171 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி ஏற்கெனவே நடைபெற்று வரும் 273 பாலப் பணிகளும் மற்றும் புதிதாக எடுக்கப்படவுள்ள 96 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை அண்ணாசாலையில் மேம்பாலங்கள்

ரூ.500 கோடி மதிப்பீரில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில், அண்ணா சாலையில் புதிய சட்டப் பேரவை வளாகத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் இடையே துவங்கி பட்டுலாஸ் சாலை சந்திப்பு வரை சுமார் 2.00 கி.மீ நீளத்திற்கும், அண்ணா அறிவாலயம் அருகே

துவங்கி சைதாப்பேட்டை மாம்பலம் கால்வாய் வரை சுமார் 3.00 கி.மீ. நீளத்திற்கும் இரண்டு சாலை மேம்பாலங்கள் கட்டப்படும். சென்னைப் பெருநகர் இரயில் திட்டம் இச்சாலையில் செயல்படுத்தப்படவுள்ளதால் இந்த மேம்பாலங்களுக்கான தாங்கு தூண்கள் (Piles) நடப்பாண்டில் முடிக்கப்படும். இம்மேம்பாலங்களுக்கான மேல் தூண்கள் மற்றும் தளங்கள் சென்னைப் பெருநகர் இரயில் திட்டப்பணிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

3. சென்னை இராஜீவ் காந்தி சாலையில் மேம்பாலங்கள்

சென்னை இராஜீவ் காந்தி சாலை, மத்திய கைலாஷில் துவங்கி சிறுசேரி வரை (சுமார் 20 கி.மீ. நீளம்) முதற்கட்டமாக அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. ரூ.171 கோடி மதிப்பில், இச்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் பின்வரும் ஐந்து சந்திப்புகளில் சாலை மேம்பாலங்கள் கட்டப்படும்.

1. திருவான்மியூர்—தரமணி சாலை சந்திப்பு
2. எஸ்.ஆர்.பி. டூல்ஸ்—தரமணி இணைப்பு சாலை சந்திப்பு
3. பெருங்குடி சாலை சந்திப்பு
4. துரைப்பாக்கம்—பல்லாவரம் சாலை சந்திப்பு
5. சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு

4. கோவை மேற்குப் பகுதி புறவழிச்சாலை

4. ரூ.284 கோடி மதிப்பில், கோவை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் தே.நெ. 47 இல் கோவை புதூரில் துவங்கி, பேரூர், வீரகேரளம், வடவள்ளி, சோமயம்பாளையம் வழியாக தே.நெ. 67-இல் துடியலூரில் இணையும் வகையில் சுமார் 26 கி.மீ. நீளத்திற்கு புறவழிச்சாலை அமைக்கப்படும். இச்சாலை கடின புருவங்களுடன்கூடிய நான்கு வழித்தடச்சாலையாக அமைய உள்ளது.

2010 மே 5]

5. புறவழிச் சாலைகள்

பின்வரும் நகரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் மற்றும் நேர்வழிப் போக்குவரத்து தடையின்று நடைபெறவும் புறவழிச்சாலை அமைக்கும் பணிகளுக்காக நடப்பாண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்:

1. திருநெல்வேலி
2. அம்பாசமுத்திரம்
3. தென்காசி
4. சங்கரன்கோவில்
5. சிவகங்கை
6. முதுகுளத்தூர்
7. நாமக்கல்
8. திருச்செங்கோடு
9. பவானி
10. மணச்சநல்லூர்
11. மயிலாடுதுறை
12. மன்னார்குடி
13. கடலூர்
14. வேலூர்
15. திருப்பத்தூர் (வேலூர்)
16. ஆற்காடு
17. திருவண்ணாமலை
18. திருவள்ளூர்
19. திருத்தணி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 5

6. மாநகராட்சிப் பகுதிகளில் பாவு தளங்களுடன் சாலை அமைத்தல்

மாநகராட்சி எல்லைகளுக்குள் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளில் அவற்றின் மொத்த அகலத்திற்கும் வடிகால் பாவு தளங்களுடன் கூடியதான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த வசதி, கட்டடங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.

7. வழிபாட்டுத் தலங்களின் சாலைகளை மேம்பாடு செய்தல்

பாரம்பரிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கும் வகையில் சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

8. சாலை சந்திப்புகளை மேம்பாடு செய்தல்

மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் வந்து இணையும் பிற அரசு சாலை சந்திப்புகளை, மேம்பாடு செய்து, சீரான போக்குவரத்து ஏற்படுத்தும் வகையில் நடப்பாண்டில் 800 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. சாலை மற்றும் நடைபாதையினை சுத்தப்படுத்தும் கருவிகள் கொள்முதல் செய்தல்

சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி எல்லைப் பகுதிகளில் சாலை மற்றும் நடை பாதையினை சுத்தப்படுத்த ரூ.1 கோடி மதிப்பில் இரண்டு இயந்திர சுத்தப்படுத்தும் கருவிகள் நடப்பாண்டில் கொள்முதல் செய்யப்படும்.

10. இரயில்வே கடவில் புதிய சாலை மேம்பாலங்கள்

இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் ரூ. 318.53 கோடி மதிப்பில் பின்வரும் 13 இரயில்வே கடவுகளில் புதிய சாலை மேம்பாலங்கள் அமைக்கும் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

2010 மே 5] ரூ. கோடியில்

வ. எண்	கடவு எண்	தொகுதி	அமைவிடம்	திட்ட மதிப்பீடு
1.		திருச்சி—1	திருச்சிராப்பள்ளி இரயில் சந்திப்பு அருகில் பழமையான இரயில்வே பாலம் எண் 1136—க்கு பதிலாக	66.00
2.		ஸ்ரீரங்கம்	திருவானைகோவில் அருகில் பழமையான இரயில்வே பாலம் எண் 380A-க்கு பதிலாக,	54.00
3.	22	ஒரத்தநாடு	நீடாமங்கலம்	18.64
4.	16	திருவள்ளூர்	புட்லூர் செவ்வாய்பேட்டை அருகே	19.24
5.	124	ஈரோடு	பெரிய சதயாம்பாளையம், ஈரோடு	19.54
6.	18	திருநெல்வேலி	திருநெல்வேலி கிடங்கு	12.43
7.	2	பூந்தமல்லி	பட்டாபிராம் மற்றும் பட்டாபிராம் கிடங்கு இடையில்	18.34
8.	2	விழுப்புரம்	விழுப்புரம் மற்றும் வெங்கடேசபுரம் இடையில்	17.74
9.	4	சிங்காநல்லூர்	இருகூர் மற்றும் பீளமேடு இடையில்	18.34
10.	7	சிங்காநல்லூர்	இருகூர் மற்றும் பீளமேடு இடையில்	18.34
11.	10	கோயம்முத்தூர் கிழக்கு	பீளமேடு மற்றும் கோயமுத்தூர் வடக்கு இடையில்	18.34
12.	131	திருப்பூர்	ஊத்துக்குளி மற்றும் திருப்பூர் இரயில் நிலையங்களுக்கிடையில்	19.54
13.	309	திண்டுக்கல்	திண்டுக்கல் கிடங்குக்கு அருகாமையில்	18.04

[2010 மே 5

11. White topping என்ற புதிய யுக்தியில் சாலை ஓடுதளத்தை சீரமைத்தல்

நடப்பாண்டில் போக்குவரத்துச் செறிவின் காரணமாக பழுதடைந்த தார்ச் சாலைத் தளங்களில், சிமெண்ட் கற்கலவையினைக் (Plain cement concrete) கொண்டு White topping என்ற புதிய யுக்தியைக் கையாண்டு சாலையின் ஓடுதள தன்மைக்கேற்ப சோதனை முறையில் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

12. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவையான கருவிகள் வாங்குதல் மற்றும் புதிய ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளுதல்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள நிலக்கீல் ஆய்வகம், கற்கலவை ஆய்வகம் மற்றும் மண் பரிசோதனைக் கூடம் ஆகிய ஆய்வகங்களுக்குத் தேவையான பரிசோதனைக் கருவிகள் ரூ. 2 கோடி செலவில் வாங்கவும் மற்றும் புதிய ஆராய்ச்சிப் பணிகள் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பாலங்களின் வடிவமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக கணினி மென்பொருள் வாங்குதல்

துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பாலங்களின் வடிவமைப்பு பணிகளை விரைவுபடுத்துவதற்கு ரூ.1 கோடி மதிப்பில் கணினி மென்பொருள்கள் தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) அலுவலகம் மற்றும் ஆய்வுக் கோட்ட அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. ஆய்வுக் கோட்ட அலுவலகங்களுக்கு நில அளவை நவீனக் கருவி வாங்குதல்

துறையின்மூலம் செயல்படுத்தப்படும் சாலை மற்றும் பால ஆய்வுப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக ஆய்வுக் கோட்ட அலுவலங்களுக்கு நில அளவை நவீனக் கருவிகள் ரூ.1 கோடி செலவில் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 மே 5]

15. நெடுஞ்சாலைகளின் எல்லைக் கற்கள் அமைத்தல்

நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் நோக்கோடு மாநில நெடுஞ்சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட முக்கிய சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் மாவட்ட இதர சாலைகளில் எல்லைக் கற்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

16. நெடுஞ்சாலைத் துறைக்கு ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுதல்

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்குமான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கட்டட வளாகத்தில் கட்டப்படும்.

17. நெடுஞ்சாலைத் துறை வட்ட, கோட்ட அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

வட்ட, கோட்ட அலுவலகங்களுக்கு மற்றும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய மண்டல அலுவலகங்களுக்கு புதிதாகக் கட்டடம் கட்டுதல்.

1. சென்னை மற்றும் விழுப்புரம் வட்ட அலுவலகங்கள்
2. திருவள்ளூர், வாணியம்பாடி, நாகப்பட்டினம், தாராபுரம் மற்றும் திருப்பூர் கோட்ட அலுவலகங்கள்
3. நாகப்பட்டினம் உட்கோட்டம்
4. திருச்சி, விழுப்புரம் மற்றும் சேலத்திற்கு மண்டல ஆய்வகக் கட்டடங்கள் என ஒன்பது கட்டடங்கள் ரூ.3.48 கோடி மதிப்பில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

18. மாவட்டத் தலைநகரங்களுக்கான போக்குவரத்து மேம்பாட்டு ஆய்வு

மாவட்டத் தலைநகரங்களில் பெருகி வரும் போக்குவரத்தை எதிர்கொள்ளும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட காலத் தேவைகளைக் கண்டறிந்து போக்குவரத்துச் செறிவின்

அடிப்படையில் சாலைகளை அகலப்படுத்துதல், மேம்பாடு செய்தல், சாலை சந்திப்புகள் மற்றும் வளைவுகளை மேம்படுத்துதல், சாலை மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் சுரங்க நடைபாதைகள் அமைத்தல் ஆகிய பணிகளைக் கண்டறியும் ஆய்வு அறிக்கை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உதவியோடு நெடுஞ்சாலைக் கோட்ட அளவில் தயாரிக்கப்படும் அதன் அடிப்படையில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

19. சாலை முன்னுரிமை தேர்வு (SOS-II)

தற்போது உலக வங்கி உதவியுடன் ரூ.2,442 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. சாலை மேம்பாட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளில், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையில், ஆலோசகர் மூலம் 18,000 கி.மீ. நீளச் சாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவ்வாய்வின் அடிப்படையில், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து நிதி உதவி பெற்று, மேம்பாடு செய்யப்படும்.

20. கடல்சார் வாரியம்மூலம் பயிற்சி அளித்தல்

தமிழ்நாடு கடல்சார் வாரியப் பயிற்சி நிறுவனத்தில் ஆதி திராவிடர் நலத்துறை கேட்டுக்கொண்டபடி 40 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

21. கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் துறைமுகத்தின் மேம்பாட்டிற்காகத் தேவைப்படும், அதிக அளவிலான தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்காக, பொது மற்றும் தனியார் முதலீட்டின் மூலமாக (Private Public Partnership) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இம்முறையில் துறைமுகத்தில் அலைநீர்த் தடுப்பி (Breakwater), தூர்வாருதல் (Dredging), சரக்கு கையாளும் வசதிகள் போன்றவற்றை தனியார் முதலீட்டின்மூலம் செய்து துறைமுகத்தை இயக்கி, அதில் வரும் வருவாயில் ஒரு பங்கை ஒப்பந்த காலத்தில் கடல்சார் வாரியத்திற்கு அளிக்கப்படும். ஒப்பந்த காலம் முடிந்தவுடன் துறைமுகம்

2010 மே 5]

வாரியத்திடம் மீள ஒப்படைக்கப்படும். 4-6-2010 அன்று இதற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட உள்ளது.

22. நாகை மாவட்டம் நெய்தவாசல் மற்றும் பெருந்தோட்டம் அருகே தோணித்துறை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா நெய்தவாசல் மற்றும் பெருந்தோட்டம் அருகே திருவாளர்கள், சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பெனி மற்றும் எம்பீ.பவர் நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்களது 1800 மெகாவாட் மற்றும் 1200 மெகாவாட் திறனுள்ள இரு அனல்மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கு சுமார் ரூ.300 கோடி செலவில் அமைக்கவுள்ள தோணித்துறைக்கான கொள்கை அளவிலான அனுமதியை கடல்சார் வாரியம் வழங்கியுள்ளது. அதற்கான துறைமுக எல்லைகள் வரையறுக்கப்பட்டு வருகின்றன.

23. இராமேஸ்வரத்தில் சுற்றுலா படகுப் போக்குவரத்து

வங்காள விரிகுடாவில், இராமநாதபுரம் மாவட்டம், அக்னி தீர்த்தம் என்ற சுற்றுலா தலத்தில் பயணிகளை கவரும் வகையில் புதிய திட்டமாக படகு போக்குவரத்து தனியார்மூலம் நடத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. தோணித்துறை போன்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தபின் படகு போக்குவரத்து துவங்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை (Index)
பயன்படுத்தும் முறை

பேரவை நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுதிக்கும் (Volume) தனித்தனியாக அட்டவணை வெளியிடப்பெறுகின்றது. உறுப்பினர்கள் பேரவையில் எழுப்பிய வினாக்கள், ஆற்றிய உரைகள் ஆகியவை தொடர்பான குறிப்புகளை இலகுவாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட இவ்வட்டவணை பெரிதும் பயன்படும்.

இந்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

(1) உள்ளடக்கம் (Contents)

(2) உறுப்பினர்களின் பெயர் அட்டவணை (Name Index)

(3) பொருள் அட்டவணை (Subject Index).

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள் பற்றிய குறிப்புகளை "உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழும், உறுப்பினர்கள் பேசியது தொடர்பான குறிப்புகளை "பெயர் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும், விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகளை "பொருள் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும் காணலாம்.

"உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழ்—

அமைச்சரின் அறிக்கை

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அறிக்கை அளித்தல்

அறிவிப்புகள்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் இதர தீர்மானங்கள்

இரங்கற்குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள்

உரிமைப் பிரச்சினைகள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ஒழுங்குப் பிரச்சினைகள்

கவன ஈர்ப்பு

சிறப்புக் கவன ஈர்ப்பு

தகவல் கோரல்

தனித் தீர்மானங்கள்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்
மற்றும் இதர நிதி அலுவல்கள்

வரவு-செலவுத் திட்ட பொது விவாதம்

போன்றவை வருவதால் அவை "பொருள் அட்டவணை"யில் இடம்பெறவில்லை.

"பெயர் அட்டவணை"யில் ஒவ்வோர் உறுப்பினரது பெயரின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பின் இறுதியிலும் அவ்வுறுப்பினர் அவையில் எந்த அலுவல் தலைப்பின்கீழ் உரையாற்றினார் என்பதைக் குறிக்கும் வகையில் அடைப்புகளுக்குள் அது பற்றிய சுருக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு பொருள் தலைப்பின்கீழும் அடைப்புக்குறிச் சுருக்கங்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, (ஒ.பி.) என்பது ஒழுங்குப் பிரச்சினையையும், (க.ஈ.) என்பது கவன ஈர்ப்பையும், (சி.க.ஈ.) என்பது சிறப்புக் கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்பது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்பது அமைச்சரின் அறிக்கையையும், (வி.) என்பது மூல வினாவையும் அதற்கான விடையையும், (து.வி.) என்பது துணை வினாவையும் அதற்கான விடையையும் குறிக்கும். இவ்வட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ள சுருக்கங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

அ.	—	அமைச்சரின் அறிக்கை
அ.த.தீ.	—	அரசினர் தனித் தீர்மானம்
அ.தீ.	—	அரசினர் தீர்மானம்
அ.நி.	—	சட்டமுன்வடிவின் அறிமுக நிலை
அ.வி.	—	அரை மணி நேர விவாதம்
ஆ.இ.	—	ஆளுநர் இசைவு

ஆ.உ.	–	ஆளுநர் உரை
ஆ.செ.	–	ஆளுநர் செய்தி
ஆ.நி.	–	சட்டமுன்வடிவின் ஆய்வு நிலை
உ.பி.	–	உரிமைப் பிரச்சினை அல்லது உரிமை மீறல் பிரச்சினை
ஒ.தீ.	–	ஒத்திவைப்புத் தீர்மானம்
ஒ.பி.	–	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	–	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	–	கவன ஈர்ப்பு அறிக்கை
கு.கா.வி.	–	குறுகிய கால வினா
கு.வி.	–	குறுகிய கால விவாதம்
சி.க.ஈ.	–	சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention)
த.கோ.	–	தகவல் கோரல்
த.த.தீ.	–	தனி உறுப்பினர் தனித் தீர்மானம்
த.வி.	–	தன்னிலை விளக்கம்
து.மா.கோ.	–	துணை மானியக் கோரிக்கை
து.வி.	–	துணை வினா
மா.கோ.	–	மானியக் கோரிக்கை
மி.மா.கோ.	–	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
வ.செ.தி.	–	வரவு–செலவுத் திட்டம்
வி.	–	மூல வினா

சில குறிப்புகளைப் பொறுத்தவரையில், அவ்வாறு அடைப்புகளுக்குள் சுருக்கங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில், அக்குறிப்புகளே தேவையான விளக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "பெயர் அட்டவணை"யில் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பொருள் அட்டவணையில் வரும் பல்வேறு பொருள்களைப் பொறுத்தவரையில் அவை உரிய பொதுத் தலைப்புகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, "கல்விக் கூடங்கள்" என்ற பொதுத் தலைப்பின்கீழ் பள்ளிகள், கல்லூரிகள், பல்தொழில் பயிலகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை இடம்பெறுகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் பதின்மூன்றாவது கூட்டத் தொடர்

2010 மே 4 மற்றும் 5
(தொகுதி 86—எண்கள் 1 மற்றும் 2)

உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் — v-x

Governor and Council of Ministers — xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் — xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) — xxi-xxxi

அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்துதல் — *213-214*

அறிவிப்பு—

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் மணிப்பூர் சட்டப் பேவைத் தலைவருக்கு வரவேற்பு — *195*

சிறப்புக் கவன ஈர்ப்பு—

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல் — *41-60, 62, 63, 64-67*

பக்கங்கள்

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 61-64

கோவை, ஈரோடு, மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.வினர் கைது. 395-400

வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது 397

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 214-216, 576-577

மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டு 40-41

மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 6 — கால்நடை பராமரிப்பு, (கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன்வளத் துறை.

கோரிக்கை எண் 7 — மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

கோரிக்கை எண் 8 — பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

(கோரிக்கை எண் 6, 7, 8) 67-213, 400-455

கோரிக்கை எண் 21 — நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை 455-576

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-40

தமிழ்நாடு சட்டப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான
பதின்மூன்றாவது சட்டப் பேரவையின்
பதின்மூன்றாவது கூட்டத் தொடர்

2010 மே 4 மற்றும் 5

(தொகுதி 86—எண்கள் 1 மற்றும் 2)

பெயர் அட்டவணை

பக்கங்கள்

"அ"

அருள் அன்பரசு, திரு.—

சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயம், தட்டான்குளத்தைச் சுத்தப்படுத்துதல் (து.வி.) 25-26

அன்பரசன், திரு. தா.மோ.—

தொழிலாளர் நல வழக்குகள், விரைந்து முடிக்க மக்கள் நீதிமன்றங்கள் அமைத்தல் (வி.) 21-22

அன்பழகன், பேராசிரியர் க.—

